வரு.75 இல. 36 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
28பக்கங்கள் 100/-
தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
2023 செப்டெம்பர் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
September 10 Sunday, 2023

கருணை இல்லம் கோகுலம்
ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.
நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:
Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirsna Temple.
A/C Name :- ISKCON,Shift Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mabola, Wattala. Phone : 0112433325, Email: iskcon@slt.lk

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்
ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்
Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891
ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு – 13, தொலைபேசி:–011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk

/ Thinakaran.lk / ThinakaranLK













## சனல்–4 காணொளி ஊடாக பொய்யான குற்றச்சாட்டுகள்

**ஸாதிக் ஷிகான்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சனல்-4 தொலைக் காட்சி அண்மையில் வெளியிட்ட காணொளியின் பொய்யான குற்றச்சாட்டுகளை பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக மறுத்துள்ளது.

தேசத்தின் உண்மை, நீதி மற்றும் நல்வாழ்வுக் கான அரசாங்கத்தின் அசைக்க முடியாத உறுதிப் பாட்டை மீண்டும் வலியுறுத்துவதுடன், இலங்கை அரசாங்கத்தின் சார்பாக தனது மறுப்பை பாதுகாப்பு அமைச்சு உத் தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையத்தின் பணிப்பாளரும் பேச்சாளருமான கேர்ணல் நளின் ஹேரத்தின் கையொப்பத்துடன் வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது, "உலகையே உலுக்கிய கொடூரமான, இரக்கமற்ற தாக்குதலுக்கு முகங்கொடுத்து 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு

06

சனல்-4 இன் ஈஸ்டர் தாக்குதல் வீடியோ;

## குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய உயர் அதிகாரிகள் குழு



### பாராளுமன்ற குழுவையும் நியமிக்க ஜனாதிபதி தீர்மானம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சனல் - 4 அலைவரிசையில் ஒளிபரப்பான நிகழ்ச்சி தொடர்பில் முறையான விசார ணைகளை மேற்கொள்வதற்காக ஓய்வுபெற்ற மூன்று சிரேஷ்ட அரச

06

தேயிலை ஏற்றுமதியில் அதிக வருமானம்;

## சீனாவுக்கு அடுத்ததாக தரப்படுத்தலில் இலங்கை

### தலைவர் கணேஷ் தெய்வநாயகம் கருத்து



சர்வதேச ரீதியாக தேயிலை ஏற் றுமதி மூலம் அதிக அந்நிய செலா வணியை பெறும் நாடுகளில் சீனாவுக்கு அடுத்ததாக இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளதாக, தேயிலை ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் கணேஷ் தெய்வநாயகம் தெரிவித்தார். தேயிலை ஏற் றுமதியாளர்

06

அமைச்சரவை அனுமதியை உதாசீனம் செய்துவிட்டு

# அமைச்சருக்கு அறிவிக்காமல் ரயில் பெட்டி உற்பத்திக்கு தடை



### ரூ. 200 மில். செலவில் இறக்குமதி செய்யப்படும் ரயில் பெட்டி

### உள்ளூரில் உற்பத்தி செய்ய ரூ. 21 மில். மட்டுமே செலவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நான்கு வருடங்களுக்குள் 42 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை மீதப்படுத்தி ரயில் பெட்டி களை முழுமையாக புனரமைப்புக்கு உட்படுத் தும் வேலைத்திட்டமொன்றை TANTRI Trailers நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

எனினும், இத்தகைய நிறுவனமொன்று ரயில் பெட்டி புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற போதும், அதனுடனான ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு போக்குவரத்து அமைச்சின் தொழில்நுட்பப் பிரிவு பணிப்பாளர் நாயகத்தினால், ரயில்வே பொது முகாமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டு, வேறொரு ஒப்பந்தத்தின் கீழ் 29 ரயில் பெட்டி கள் திருத்தப்பட்டுள்ளதால், 5,200 மில்லியன் ரூபாவை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது.

தேசிய நிறுவனமான TANTRI Trailers நிறுவ னம் 200 ரயில் பெட்டிகளை ஒரு ரயில் பெட்டி 12 மில்லியன் ரூபா என்ற வகையில் முழுமை யாக புனரமைப்பு செய்துள்ளதுடன், அதனைய டுத்து மேலும் 100 ரயில் பெட்டிகளை முழுமையாக திருத்துவதற்கு

06

## உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த பவிஷ்ணாவுக்கு இந்தியத் தூதுவர் பாராட்டு



நுவரெலியா, கொட்டகலை பிரதேசத்தில் வசிக்கும் பவிஷ்ணா தனது மூன்றாவது வயதில் உலக நாடுகளின் 40 தலைவர்களினுடைய புகைப்படங்களை பார்த்து, அவர்களின் பெயர் களை ஒரு நிமிடத்தில் மிக வேகமாகக் கூறி உலக சாதனைப் புத்தகத்தில் (International Book Of World Record) தனது பெயரை பதிவு செய்து பெருமை சேர்த்துள்ளார். சிறுமி பவிஷ்ணாவை இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர்

06



06
கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி;

## அகழ்வில் அகழப்பட்ட பெண்கள் இருவரது முழுமையான எச்சங்கள்

## மாத்தளை வடிவேலனின் நூலுக்கு தமிழகத்தில் விருது

### ஒரு இலட்சம் ரூபா பரிசுத்தொகை





மாத்தளை வடிவேலனின் 'வல்லமை தாராயோ' என்ற சிறுகதைத்தொகுதி தமிழ்நாட்டில் மிகப்பெரிய அங்கீகாரத்தை பெற்றுள்ளது. இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களின்

06

இறைவரி திருத்த சட்டமூல வாக்கெடுப்பு;

## அரச தரப்பு எம்.பிக்களுக்கு விடுமுறை அனுமதி வழங்கியது ஏன்?

### ஆளும் கட்சி பிரதான அமைப்பாளர் விளக்கம்



இறைவரி திருத்தச் சட்டமூலத்தை பெரும்பான்மை வாக்குகளுடன் நிறை வேற்ற முடியுமென்று அரசாங்கம் ஏற் கெனவே உறுதியாக நம்பியிருந்ததால், அரசாங்கத்தரப்பு பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு அவர்களது வேறு சில அத்தியாவசியப் பணிகளுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டதாக, ஆளும் கட்சியின்

06

## மொரோக்கோவில் பாரிய நிலநடுக்கம்

### 920 பேர் வரையில் இதுவரை உயிரிழப்பு



வட ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மொரோக்கோவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காரணமாக இதுவரையில் 920 பேர் உயிரிழந்துள்ளதாக, அந்நாட்டு உட்துறை அமைச்சு

06

## டென்மார்க் நீதிமன்ற ஜூரராக தர்மகுலசிங்கம்

### இலங்கை தமிழருக்கு உயர் பதவி



டென்மார்க், வயன் நகரில் வாழும் புலம்பெயர் தமிழ ரும் சமூக செயற்பாட்டாளரு மான தருமன் தர்மகுலசிங்கம் வெஸ்டெர் லாண்ட் நீதிமன் றத்தின் ஜூரராக மூன்றாண்டு காலத்துக்கு நியமிக்கப்பட் டுள்ளார்.

டென்மார்க் சோஷல் டெமக்கிரட்டி கட்சியின் முக்கிய உறுப்பினரான தருமன் தர்மகுலசிங் கம், கடந்த 12 வருடங்களாக நீதிமன்ற

06

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## மனித நாகரிகத்துக்கு விரோதமான சிந்தனை!

இலங்கைத் தேசமானது இயற்கை வளங்களும், வனப்பும் நிறைந்த சிறிய குட்டித்தீவாக இருந்த போதிலும், இந்நாட் டில் ஐக்கியமும் அமைதியும் இன்னுமே தோன்றவில்லை. எமது நாடு அந்நியரிடமிருந்து சுதந்திரம் பெற்று முக்கால் நூற்றாண்டு காலமாகிவிட்ட போதிலும், இன, மத பேதங்க ளும் முரண்பாடுகளும் இன்னும் முடிவின்றித் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

இனவாதத்தை அடிப்படையாக வைத்து அரசியல் செய்யும் போக்கு இலங்கையின் அரசியல்வாதிகள் பலருக்கும் மாற்ற முடியாத பாரம்பரியமாகிப் போயுள்ளது. மாற்று இனங்கள் மீது வெறுப்பைத் தூண்டுவதன் ஊடாக, தனது இனத்திடமி ருந்து ஆதரவைப் பெருக்கிக் கொள்ளலாமென்று அரசியல் வாதிகள் பலர் எதிர்பார்க்கின்றார்கள். அவ்வாறான இனவாத அரசியலில் வெற்றி கண்டவர்களும் அநேகர் உள்ளனர்.

பல்லின மக்கள் வாழ்கின்ற இலங்கையில் மிக இலகு வான 'அரசியல் உத்தி' அதுவேயாகும். அரசியல்வாதிகளில் பலர் இனவாதத்தைத் தூண்டிக் கொண்டேயிருப்பதன் கார ணமாகவே, எமது மக்களின் உள்ளத்தில் ஐக்கியத்தையும் மனிதநாகரிகத்தையும் இன்னும் ஆழப்பதிக்க முடியாதி ருக்கின்றது. இனங்களுக்கிடையில் வெறுப்பும் வளர்ந்து கொண்டேயிருக்கின்றது.

06

சனல் -4 ஆவணப்படத்தின் குற்றச்சாட்டுகள்;

## சந்தேகநபர்களை உடனடியாக கைதுசெய்ய சம்பந்தன் கோரிக்கை

### சர்வதேச விசாரணைக்கு அவர்களை உட்படுத்தவும் வேண்டுகோள்



சனல்-4 ஆவணப்படத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சந்தேகநபர் கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், "இலங்கை யில் கடந்த 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில்

06

## ஊழல் ஒழிப்பு சட்டம் செப். 15 முதல் அமுலில்!

### அதிவிசேட வர்த்தமானி வெளியானது



ஊழல் ஒழிப்பு சட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமென்று அறிவிக் கப்பட்டுள்ளது. இது

06

சுற்றுலா வீஸாவில்

## தொழிலுக்கு செல்வது சட்டவிரோதமாகும்



சுற்றுலா வீஸா பெற்று தொழிலுக்கு அனுப்புவது சட்டவிரோதமான நடவடிக்கையாகுமென, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்தது. இது தொடர்பாக வெளிநாட்டு

06

## 'சிலுமின' செய்தி வெளியீடு உண்மைகளை அடிப்படையாக கொண்ட நியாயமான விமர்சனம்

'சிலுமின'வுக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் விதித்த தடை உத்தரவை நிராகரித்து நீதிபதி தெரிவிப்பு...

பக்கம் 13

## நோபர்ட் அயகமகே நாவலுக்கு தங்க புத்தக விருது



கடந்த 2022ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிறந்த சிங்கள நாவலுக்கான தங்க புத்தக விருதை நோபர்ட் அயகமகே எழுதிய 'குர ஹெடக்கி வியாகென' நாவல் வென்றது. 16ஆவது முறையாக இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பரிசளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் (08) பிற்பகல் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல்துறைத் தலைவர் பேராசிரியர் பிரனீத் அபயசுந்தர தலைமையில் நடைபெற்றது. *(படம்: துஷ்மந்த மாயாதுன்ன)*





# தாதியின் கவனயீனத்தால் கையை இழந்த சிறுமி!

## நாடெங்கும் தொடர்ச்சியாக இடம்பெறும் சுகாதாரத்துறை சீர்கேடுகள்

## ஒட்டுமொத்த வைத்தியத்துறை மீதும் சேறு பூசவேண்டாம்

### யாழ்ப்பாண வைத்தியசாலை மருத்துவ சங்க செயலாளர் வைத்தியர் மயூரன்

'எங்களுடைய இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது. வாழ்நாள் முழுவதும் இந்த வலியை நாங்கள் அனுபவித்தே ஆக வேண்டும். பல நாட்களாக காய்ச்சலால் அவதிப்பட்ட மகள் சற்று குணமாகி வருகையில் ஒரு சிறு தவறால் இன்று அவளின் எதிர்கால வாழ்க்கையே கேள்விக்குறியாகி விட்டது '

யாழ்.போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த போது ஏற்பட்ட தவறால் கை அகற்றப்பட்ட 08 வயது சிறுமி வைஷாலினியின் பெற்றோரின் ஆதங்கம் இது...

பொருளாதார நெருக்கடி, மருந்துகள் இன்மை, சத்திரசிகிச்சைகள் இடைநிறுத்தம், மருத்துவர்களின் வெளியேற்றம், இடப்பற்றாக்குறையென பெரும் நெருக்கடிகளை சுகாதாரத்துறை சந்தித்து வரும் இச்சந்தர்ப்பத்தில் இத்தகைய சம்பவங்கள் பெரும் வருத்தத்தையும் அச்சத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அதுவும் யாழ். போதனா வைத்தியசாலையில் இப்படியொரு சம்பவம் இடம்பெற்றதாக இதற்கு முன்னர் கேள்விப்பட்டதில்லை.

யாழ். போதனா வைத்தியசாலை, பல்வேறு பிரிவுகளுடன் வடமாகாண மக்களுக்கு பாரிய சேவைகளை முன்னெடுத்துவருகின்றது. ஏறத்தாழ 1.3 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் இவ் வைத்தியசாலையில் சேவையை பெற்றுக்கொண்டுள்ளனர்.

யுத்தம், கொவிட்19 பெருந்தொற்று போன்ற நெருக்கடியான காலங்களில் உயிரை பணயம் வைத்து வைத்தியர்கள், தாதியர்கள் சேவையாற்றினர்.

இத்தகையதொரு பின்னணியிலேயே துரதிஷ்டவசமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த 08 வயது சிறுமி வைசாலினியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். மல்லாகம் பிரதேசத்தைச் சேர்ந்த 08 வயதான வைஷாலினி குடும்பத்தில் மூத்த பிள்ளை. யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் மூன்றில் கல்விகற்கும் வைஷாலினி படிப்பிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குபவர். குறிப்பாக பரத நாட்டியத்தில் ஆர்வம் அதிகமாகவிருந்ததாக தெரியவருகின்றது.

வைஷாலினிக்கு கடந்த மாதம் ஆகஸ்ட் 22ஆம் திகதி திடீரென காய்ச்சல் ஏற்படவே பெற்றோர் அவரை வண்ணை மேற்கு பகுதியிலுள்ள வைத்தியரொருவரிடம் காட்டி மருந்து எடுத்துள்ளனர்.

எனினும் அவருக்கு காய்ச்சலின் தீவிரம் குறையாத காரணத்தால் அங்கிருந்த வைத்தியரின் ஆலோசனையின்படி மறுநாள் (24) யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் குழந்தைநல நிபுணரிடம் பெற்றோர் வைஷாலினியை காட்டியதுடன் மேலதிக சிகிச்சைகளுக்காக வைஷாலினி அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு வலது கையில் மணிக்கட்டின் வெளிப்புறத்தில் Cannula (கானுலா) போடப்பட்டு அதன் ஊடாக நோயெதிர்ப்பு மருந்தும் ஏற்றப்பட்டுள்ளது.

கானுலா (Cannula) என்பது பொதுவாக உடலினுள் ஏதாவது ஒன்றை உட்செலுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு சிறு உபகரணமாகும்.

வைஷாலினிக்கு அங்கு Cannula போடப்பட்டு மருந்து ஏற்றப்பட்ட போதும் எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை. எனினும் வைஷாலினிக்கு ஏற்பட்டிருந்த பற்றீரியா நோய் தொற்று காரணமாக தோல் சிவத்தல், உடலில் பருக்கள் தோன்றுதல், சிறுவீக்கம் போன்ற நோய் அறிகுறிகளும் ஏற்பட்டமையால் குழந்தை நல வைத்தியரின் ஆலோசனைக்கமைய கூடுதல் பராமரிப்புக்காக கடந்த மாதம் 25ஆம் திகதி இரவு தனியார் வைத்தியசாலையிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வைஷாலினி மாற்றப்பட்டார்.

இதனையடுத்து காய்ச்சல் ஓரளவு குணமடைந்து வருகையில் எதிர்பாராத விதமாக இடதுகையில் போடப்பட்ட கானுலாவினால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வந்த வைஷாலினிக்கு மணிக்கட்டுக்கு கீழே கையை இழக்கும் பரிதாப நிலை ஏற்பட்டது.

இதுதொடர்பில் தாய் தெரிவிக்கையில்,

' மகள் பற்றீரியா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தார். தோல் சிவத்தல், உடலில் பருக்கள் தோன்றுதல், சிறுவீக்கம் போன்ற பாதிப்புகளும் இருந்தன. இதனால் தான் கூடுதல் பாராமரிப்புக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 25ஆம் திகதி இரவு மாற்றப்பட்டார். மகளை பார்த்த குழந்தை நல வைத்தியரின் 12ஆம் இலக்க வாட்டில் அனுமதிக்கப்பட்டார். அவளுக்கு அன்றிரவு தனியார் வைத்தியசாலையில் வலது கையில் போடப்பட்டிருந்த கானுலா வழியாகவே மருந்து ஏற்றப்பட்டது. இதன்போது எந்தபிரச்சினையும் ஏற்படவில்லை. மருந்துகள் ஏற்ற காய்ச்சலும் படிப்படியாக குறைய தொடங்கியது. இதனையடுத்து

26ஆம் திகதி சனிக்கிழமை காலை இடதுகையின் மணிக்கட்டின் உட்பகுதியில் Cannula பொருத்தப்பட்டது. அதன்பின்னர் Saline உடன் மருந்தும் ஏற்றப்பட்டது.

Cannula மூடியை திறந்து மருந்து ஏற்ற முயற்சித்த ஒவ்வொரு வேளையிலும் இரத்தம் பாய்ந்து நிலத்தில் சிதறியது. எனக்கு சந்தேகம் ஏற்படவே கடமையிலிருந்த வைத்தியரிடம் (HO) கூறிய போதும் அது வழமை என விளக்கம் அளிக்கப்பட்டது.

சனிக்கிழமை காலையிலிருந்து Saline இல் மருந்து கலக்கப்பட்டு இடது கையில் போடப்பட்ட Cannula வழியாக ஏற்றப்பட்டு வந்தது. இதன்பின்னர் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எமது மகள் உறங்கிக் கொண்டிருந்த சமயத்தில் இரவு 12.00 மணிக்குச் செலுத்தப்படவேண்டிய Clindamycin என்ற மருந்தை வார்ட்டிலிருந்த தாதி இரவு 11.45 க்கு Saline இன்றி ஊசி மூலம் Cannula இனுள் நேரடியாக செலுத்தினார். மருந்து நேரடியாக Cannula ஊடாக ஏற்றப்பட்டவுடன் உறங்கிக் கொண்டிருந்த மகள் எழுந்து வலியால் துடிக்கத் தொடங்கினார்.

இதனையடுத்து கடமையிலிருந்த தாதியிடம் இது குறித்து தெரிவித்தேன். அவர் மருந்தின் தன்மை அப்படித்தான் என்று கூறிவிட்டார். தொடர்ந்தும் மகள் வலியால் துடித்தாள். நான் மறுபடியும் தாதியிடம் சென்று அறிவித்ததையிட்டு முதலில் நான் கூறிய தாதியும் மருந்தை ஏற்றிய தாதியும் வந்து மகளைப் பார்வையிட்டனர். இரு தாதிகளும் இணைந்து தனியே Saline ஐ Cannula ஊடாக ஏற்ற முயற்சித்த போதும் ஏற்ற முடியவில்லை.

இதனையடுத்து 28 ஆம் திகதி அதிகாலை 4.00 மணியளவில் வைத்திய அதிகாரியும் தாதியர்களும் வந்து பார்த்தபின்னர் இடதுகையில் போடப்பட்ட Cannula அகற்றப்பட்டது.

7.30 மணியளவில் Ward Round வந்த பெண் வைத்திய அதிகாரி ஒருவர் பிள்ளையின் கை வீக்கத்தை பார்த்து விட்டு பிள்ளையின் கைக்கு ஈரத் துணியால் ஒத்தடம் கொடுத்தார்.

பின்னர் காலை 10.00 மணியளவில் குழந்தைநல வைத்திய நிபுணர் வந்து பார்த்த போது கை குளிர்ந்து நீலமாகியிருந்தது. இதனையடுத்து இன்னுமொரு வைத்தியரை வரவழைத்து வந்து கையை பரிசோதித்து பார்த்துவிட்டு கையில் நாடித்துடிப்பு இல்லை என்பதையும் இரத்த ஒட்டத்தில் ஒட்சிசன் இல்லை என்பதையும் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தியதுடன் மேலதிக பரிசோதனைக்கு பணித்தார்.

அதற்கமைய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, மீண்டும் சத்திரசிகிச்சைக் கூடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இடது கையில் ஏற்பட்ட அதீத வலியைக் கட்டுப்படுத்துவதற்காக உணர்விழக்கச் செய்யும் ஊசி கையில் ஏற்றப்பட்டதாக கூறப்பட்டது.

அன்றைய தினம் இரவு 8.00 மணிக்கு மீண்டும் சத்திரசிகிச்சைக்காக மகள் கொண்டுசெல்லப்பட்டு கையில் அழுத்தத்தைக் குறைப்பதற்காக இழையத்தை வெட்டிச் செய்யப்படும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கையில் இரத்தக்கட்டி உருவாகி இரத்த ஓட்டம் தடைப்பட்டிருப்பதால் சத்திரசிகிச்சை செய்யப்படவிருப்பதாக கூறப்பட்டது. இரத்தக்கட்டியை கரைக்கும் Heparin எனப்படும் மருந்தும் தொடர்ச்சியாக ஏற்ற படவிருப்பதாக வைத்திய நிபுணரால் தெரியப்படுத்தப்பட்டது.

சத்திரசிகிச்சையின் பின்னர் எமது மகள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். அடுத்து வந்த இரு நாட்களும் மருந்து ஏற்றப்பட்டு வந்தது.

ஆயினும் இந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை என்பதோடு மகளின் கை பழைய நிலைக்குத் திரும்பவில்லை. மாறாக கையின் கறுப்பு நிறம் அதிகரித்துக் கொண்டு சென்றதோடு தொடர்ந்தும் குளிர்ந்த நிலையில் காணப்பட்டது.

இதனையடுத்தே 01.09.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிதீவிர சிக்சைப்பிரிவுக்கு வருகை தந்த பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் மேலதிக கிருமித்தொற்று நிலையையும் உயிராபத்தையும் தடுக்க எமது மகளின் இடது கை மணிக்கட்டுக்குக் கீழான பகுதி அகற்றப்பட வேண்டும் என தெரிவித்தார்.

இதன்பிரகாரம் அடுத்த நாளான செப்டெம்பர் 02ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் சத்திரசிகிச்சைக் கூடத்துக்கு எமது மகள் எடுத்துச் செல்லப்பட்டு இடது கை மணிக்கட்டின் கீழான பகுதி முற்றாக அகற்றப்பட்டது.

தாதியால் போடப்பட்ட Cannula சரியான முறையில் போடப்பட்டிருக்கவில்லை. மருந்து உரிய முறையில் உட்செலுத்தப்படவில்லை. Saline உடன் கலந்து ஏற்றப்படவேண்டிய மருந்து Cannula ஊடாக நேரடியாக உட்செலுத்தப்பட்டது. மருந்து அவ்வாறு நேரடியாக உட்செலுத்தப்பட்டதும் ஏற்பட்ட வலி மற்றும் தாக்கங்கள் குறித்து உடனடியாக தாதிக்கு அறிவித்த போதும் அலட்சியத்தாலும் கவனக்குறைவாலும் கையின் நிலை குறித்து உடனடியாக கவனத்தில் எடுக்கப்படவில்லை. இதற்கு வைத்தியசாலை நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும்.

இன்று எமது மகளின் எதிர்கால வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்டது.

வைத்தியசாலையில் தவறு நடந்துள்ளது என்பதை மகளை பரிசோதித்த வைத்தியர்கள் தெரிவித்த போதும் இதுவரை எழுத்து மூலம் சரியான காரணத்தை அறிவிக்கவில்லை. பொலிஸார், வைத்தியசாலை நிர்வாகம் என விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

எனவே எனது பிள்ளைக்கு ஏற்பட்ட இந்த நிலைமைக்கு நியாயம் கிடைக்கவேண்டும்.

விசாரணை முடிவில் கை அகற்றப்பட்டமைக்கான சரியான மருத்துவ காரணத்தையும் எழுத்து மூலம் அறியத்தர வேண்டுமென அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிக்கையில்,

உண்மையில் சிறுமி வைஷாலினியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டமை மிகவும் வேதனையான விடயமாகும். வைத்தியசாலையில் தவறு நடந்துள்ளது. எனினும் இதில் நடந்த தவறு என்ன? என்பதை இப்போதைக்கு சரியாக கூறமுடியாது. விசாரணைகளை மேற்கொள்ள வைத்திய நிபுணர்கள் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்தவுடனே எதையும் உறுதியாக கூறமுடியும்.

தீவிர காய்ச்சல் நிலைமைகளின் போது கானுலா Cannula மூலம் மருந்து ஏற்றப்படுவது வழமை. அதற்கமையவே அப்பிரிவுக்கு பொறுப்பான வைத்தியரின் அனுமதியுடனே தாதியால் கானுலா போடப்பட்டு மருந்து ஏற்றப்பட்டது. எனவே முழுமையான விசாரணைகளின் பின்னரே சரியான காரணத்தை கூறமுடியும். கையை அகற்றாது நிலைமைகளை சரிசெய்ய வைத்தியர்கள் பெரிதும் முயற்சிசெய்தனர்.

பல்வேறு வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் எதுவுமே பலனளிக்காத காரணத்தினால் தான் பெற்றோருக்கு நிலைமை விளக்கப்பட்டு அவர்களின் சம்மதத்துடன் மணிக்கட்டின் கீழான பகுதி அகற்றப்பட்டது. சிறுமி தற்சமயம் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார். அவர் தொடர்ந்து கண்காணிக்கப்படுவார் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் யாழ்ப்பாண வைத்தியசாலை மருத்துவ சங்க செயலாளர் வைத்தியர் மயூரன் தெரிவிக்கையில், சிறுமிக்கு ஏற்பட்ட இழப்பு ஈடுசெய்ய முடியாது. எனினும் இது திட்டமிட்டு செய்யப்பட்ட ஒன்றல்ல. யாழ். வைத்தியசாலை வரலாற்றில் இத்தகைய மூன்று சம்பவங்களே இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது. எனக்கு தெரிந்து இது முதல் சம்பவம். குற்றம்சாட்டப்பட்டுள்ள தாதி மருத்துவ சேவையில் 15 வருடகால அனுபவம் வாய்ந்தவர். சிறுமி கடும் நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தார். உடலில் சற்று வீக்கமும் இருந்துள்ளது. எனவே நாளத்தில் போடப்படப்பட வேண்டிய கானுலா தவறுதலாக நாடியில் போடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி சிறுமிக்கு இருந்த நோய்நிலைமை காரணமாக அவருக்கு உடலினுள் செலுத்தப்பட்ட மருந்தும் அதிக வீரியம் கொண்டது. இதனாலேயே பாதிப்பு அதிகமானது. மருந்தின் வீரியமும் கையை பாதிப்படைய செய்துள்ளது. ஒருவேளை தவறுதலாக நாடியில் கானுலா செலுத்தப்பட்டு வேறு வீரியம் குறைந்த ஏதேனும் மருந்துகள் உடலில் செலுத்தப்பட்டிருந்தால் இத்தகைய பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்காது.

இதுதொடர்பில் மூவர் அடங்கிய குழுவொன்றினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னரே எதையும் உறுதியாக கூறமுடியும். சம்பவத்துடன் தொடர்புடைய தாதி தற்சமயம் வேறொரு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். எனவே இந்த ஒரு சம்பவத்தை மட்டும் வைத்துகொண்டு ஒட்டுமொத்த வைத்தியத்துறை மீதும் சேறு பூசவேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். அதற்கமைய வைத்தியசாலை பணிப்பாளர், மற்றும் சிறுமி சிகிச்சை பெற்ற வார்ட்டில் கடமையிலிருந்த 06 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கடந்த (07) யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றதுடன் பெற்றோர் சார்பில் சம்பவத்துடன் தொடர்புடைய தாதி வெளிநாடு தப்பி செல்லாதவாறு பயணத்தடை விதிக்க வேண்டுமென நீதிமன்றில் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதற்கமைய சம்பவத்துடன் தொடர்புடைய தாதிக்கு நீதிமன்றம் பயணத்தடை விதித்துள்ளதுடன் வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மேலும் சிறுமியின் இடது கை, அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. சம்பவம் தொடர்பான ஆரம்பகட்ட விசாரணை அறிக்கை பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜீ.விஜேசூரியவினால் கோரப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் விசாரணையின் முடிவில் சம்பவத்துக்கான சரியான மருத்துவ காரணத்தை எழுத்து மூலம் அறியத்தர வேண்டுமெனவும் எதிர்காலத்தில் இவ்வாறான மருத்துவ அலட்சியம், தவறுகளால் உயிரிழப்புகள், பாதிப்புகள் ஏற்படா வண்ணம் மருத்துவ துறைச்சார்ந்தோர் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினர் வேண்டிநிற்கின்றனர்.



**வசந்தா அருள்ரட்ணம்**






# மு.கா ஸ்தாபகர் M.H.M அஷ்ரஃப் நினைவேந்தல் சாய்ந்தமருதிலா?

## சரிந்துபோன வாக்குகளை மீட்கும் முயற்சியா?

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் செப்–டெம்பர் 16 இல் மட்டும் நினைவுகூரப்படுகின்றவரல்ல. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் செயற்–பாட்டில் அவரது நினைவுகளும் பதிவுகளும் எப்போதும் மறையாதபடி நிலைத்திருந்தே வருகின்றது. ஆனபோ–தும் அவரை இழந்த செப்டெம்பர் 16 எனும் துயர் மிகுந்த இந்நாளை தலைவருக்குரிய நினைவேந்தல் நிகழ்வு–களோடு அர்த்தப்படுத்தி அடையாளப்படுத்துவதுக்குரிய உரிமையும் கடமையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள்ளது.**

இத்தகைய உரிமையோடும் பெருந்தலைவரின் இழப்பைச் சுமந்த உணர்வுகளோடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செப்டெம்பர் 16 ஐ வருடந்தோறும் தலைவரின் நினைவுதின நிகழ்வுகளோடு சிறப்பித்துவருகிறது. அந்தவகையில் 23ஆவது நினைவுதின நிகழ்வு இம்மாதம் 16 ஆம் திகதி சாய்ந்தமருதுவில் நடைபெறவிருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதைச்செய்தாலும் அதனை தாங்கமுடியாத பகை உணர்வுடன் அறிவுபூர்வமில்லாத கருத்துக்களையும் அடிப்படையில்லாத செய்திகளையும் வழக்கமாக எழுதுகின்ற எதிர்க்கட்சி முகாம்களிலுள்ள ஒருசிலர் அந்தப் பழக்கதோசத்தில் இம்முறை அதையே செய்தனர். சாய்ந்தமருதுவில் நடைபெறவிருக்கின்ற பெருந்தலைவரின் நினைவேந்தல் நிகழ்வினையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியல் இலாபத்திற்காக சரிந்துபோன வாக்குகளை மீட்பதற்காக நடத்துகின்றது என்ற அர்த்தமற்ற விமர்சனங்களைச் செய்கின்றனர்.

அவர்கள் குறிப்பிடுவதைப் பார்த்தால், இதற்கு முன்னரான பெருந்தலைவரின் 22 நினைவேந்தல் நிகழ்வுகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் நடத்தாது இருந்துவிட்டு இப்போதுதான் முதல் தடவையாக 23 வது நினைவேந்தல் நிகழ்வினை சாய்ந்தமருதுவில் நடத்தி தங்களது கட்சிக்கான பேராதரவையும் வாக்குகளையும் கொள்ளையடிக்க வருவதுபோல் தெரிகிறது.

ஆனால் இதுவரை ஸ்ரீலாங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெருந்தலைவரின் நினைவுதினத்தை அதற்குரிய மகத்துவங்களோடு உரிய நாளான செப்டம்பர் 16இல் எந்தக் காரணங்களுக்காகவும் ஒருநாள்கூட பிந்தாது அதேதினத்தில் வருடா வருடம் சிறப்பித்து வருகின்றது. ஒரு வருடத்தில் தற்போதுள்ள தலைவர் ரவூப் ஹக்கீம் அரசியல் பயணமாக வெளிநாடு செல்லவேண்டிய கட்டாய நிலையில். அவர் இல்லாமலும் தலைவரின் நினைவுதினம் அந்த நாளிலேயே சிறப்பித்து நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு வருடா வருடம் உரிய தினம் தவறாது நடைபெற்றுவரும் பெருந்தலைவரின் நினைவேந்தல் நிகழ்வு இலங்கை பூராகவும் பல ஊர்களிலும் நடைபெற்று வந்திருக்கின்றது. அந்தவரிசையில் இந்நினைவேந்தல் நிகழ்வு சாய்ந்தமருதுவில் நடைபெறுவதற்கு அடிப்படையான காரணகர்த்தா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் முழக்கம் மஜீட்.

பெருந்தலைவர் அஷ்ரஃப்பின் ஆரம்பகால அரசியல் பயணத்தோடு இணைந்து இன்று வரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்படும் முழுக்கம் மஜீட் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுகின்ற கட்சியின் தவிசாளர் சற்று உடல்நிலை தளர்ந்த நிலையில் உள்ளார். அவர் இம்முறை பெருந்தலைவரின் நினைவுதின நிகழ்வை சாய்ந்தமருதில் நடத்துங்கள் என்று கடுமையான மனவிருப்பத்தோடு வேண்டியதை ஏற்றுக்கொண்டு இந்நினைவுதினத்தை சாய்ந்தமருதில் நடத்தும் முடிவினை கட்சி எடுத்துள்ளதே தவிர வேறு எந்த அரசியல் இலாபமோ வாக்குத் தேடும் பஞ்சப்பட்ட நிலைமையோ அல்ல.

இவர்கள் கூறுவதுபோன்று, முஸ்லிம் காங்கிரஸ் தனக்கான வாக்குச் சரிவை ஈடுசெய்யும் அரசியல் இலாபத்துடன்தான் சாய்ந்தமருதில் இந்நினைவுதின நிகழ்வை ஏற்பாடு செய்கிறது என்றால், பெருந்தலைவர் அஷ்ரஃபின் நினைவு தினத்தை சாய்ந்தமருதுவில் நடத்திய ஒரே காரணத்துக்காக தங்களது ஒட்டுமொத்த வாக்குகளையும் முஸ்லிம் காங்கிரஸுக்கு போட்டாக வேண்டும் என்று அவ்வூர் மக்கள் உறுதிமொழி எடுத்து அள்ளிப் போட்டுவிடுவார்களா என்ன? அப்படி என்றால் இதற்கு முன்னரான நினைவுதின நிகழ்வுகள் நடத்தப்பட்ட 22 ஊர்களிலும் இந்நினைவேந்தல் நிகழ்வுக்குப் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு அந்த ஊர்மக்கள் ஒட்டுமொத்த வாக்குகளையும் மொத்தமாகப் போட்ட வரலாறு இருக்க வேண்டுமே! அப்படி இருந்தாலாவது முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் இலாபம் தேடி ஊர் ஊராக பெருந்தலைவர் அஷ்ரஃபின் நினைவுதின நிகழ்வுகளை நடத்திவருகிறது என்று கூறலாம். இது எதுவுமில்லாமல் முஸ்லிம் காங்கிரஸை எப்படியாவது விமர்சிக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறான அடிப்படையற்ற விமர்சனங்களைச் செய்பவர்கள் பெருந்தலைவரின் நினைவு தினத்தை சிறுமைப்படுத்துகிறார்கள் என்றே கூறவேண்டும்.

மேலும் இவ்வாறான அர்த்தமற்ற விமர்சனங்களைச் செய்கின்றவர்கள் தஞ்சம் கொண்டிருக்கின்ற கட்சிகளும் அக்கட்சித் தலைவர்களும் தேர்தல் காலப் பிரசாரங்களின் போது மேடைக்கு மேடை தாங்களும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அடிப்படையிலிருந்து வந்தவர்கள்தான், நாங்களும் பெரும் தலைவர் அஷ்ரஃபின் பாசறையில் வளர்ந்தவர்கள்தான் என்று பீராங்கிப் பிரசாரங்கள் செய்வார்கள். அப்படியென்றால் இத்தகைய அஷ்ரஃபின் பாசறையில் வளர்ந்து முஸ்லிம் காங்கிரஸின் அடிப்படையிலிருந்து வந்தவர்களுக்கு அத்தலைவரது நினைவுதினத்தை சிறப்பிக்க அதன் மகத்துவத்தை எடுத்தோத ஒரு செப்டெம்பர் 16வது நினைவுக்கு வருவதில்லையா? பெருந்தலைவரின் நினைவு தினம் முஸ்லிம் காங்கிரஸுக்கு மட்டும் சொந்தமானதா? அவரது பாசறையில் வளர்ந்த ஏனைய தலைவர்களின் கட்சிக்கு இந்த தேவை இல்லையா?

இவர்களுடைய தேவை எல்லாம் பெருந்தலைவரின் நினைவு தினத்தை வைத்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை வேண்டியபடி விமர்சிக்கும் தேவையற்ற வேலையை முழுமையாக நிறைவேற்றுவதுதான், மாறாக பெருந்தலைவர் அஷ்ரஃபின் நினைவு தினத்தில் தங்களுக்கும் பொறுப்புமிக்க தேவை உண்டு என்பதை அவர்கள் ஒருபோதும் நிறைவேற்றுவதில்லை.

சரி இவர்கள் கூறுவது போன்று முஸ்லிம் காங்கிரஸ் சாய்ந்தமருதில் செல்வாக்கு இழந்து வாக்குச் சரிவு கண்டிருக்கிறது அதனைச் சரி செய்யத்தான் பெருந்தலைவரின் நினைவேந்தல் நிகழ்வை சாய்ந்தமருதில் நடத்தப்படுகிறது என்றால், இந்த வாக்குச் சரிவு எந்தவகையில் முஸ்லிம் காங்கிரஸை பாதித்திருக்கிறது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கல்முனை மாநகர சபையின் ஆட்சியை சாய்ந்தமருதுவின் வாக்குகள் இல்லாமல் முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றி இருக்கிறது. மாத்திரமல்லாமல் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கல்முனைத் தொகுதியின் வேட்பாளராகப் போட்டியிட்ட எச்.எம்.எம்.ஹரீஸ் சாய்ந்தமருது மக்களின் பெரும் எதிர்ப்புக்கு மத்தியிலும் தனது வெற்றியை நிலைநாட்ட முடிந்திருக்கிறது. முடிவுகள் இவ்வாறு இருக்க, சாய்ந்தமருது வாக்குகளை மையப்படுத்தி முஸ்லிம் காங்கிரஸ் பெருந்தலைவரின் நினைவுதின நிகழ்வை சாய்ந்தமருதில் நடத்துகிறது என்று கூறுவது எவ்வளவு முட்டாள்தனமான வாதமாகும்.

ஆனாலும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு சாய்ந்தமருது மக்கள் எதிராக இருக்கிறார்கள் என்ற நோக்கில் அந்தக் கட்சியும் அதன் தலைமையும் அம்மக்களை ஒருபோதும் பார்ப்பதில்லை. முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மீது அடிப்படை உரிமையும் உறவும் சாய்ந்தமருது மக்களுக்குண்டு. பெருந்தலைவர் அஷ்ரஃப்பையும் அவரது அரசியல் பயணத்தையும் ஆரம்பத்தில் கல்முனை மக்களைவிடவும் அதிகமாக ஆதரித்து நின்றவர்கள் சாய்ந்தமருது மக்கள்தான்.

சாய்ந்தமருது மக்களின் இத்தகைய உறவுக்கும் உரிமைக்கும் ஈடாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, அம்மக்களின் நகரசபைக் கோரிக்கையினை நிறைவேற்றவேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது என்பதையும் நான் இங்கு பதிவு செய்கின்றேன். சாய்ந்தமருதுவின் நகரசபை கோரிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரம்தான் நிறைவேற்ற முடியும் என்பதும் தெளிவான முடிவாகத் தெரிகிறது.

இந்த உண்மை தெளிவாகத் தெரிந்தும், முஸ்லிம் காங்கிரஸை விமர்சனம் செய்கின்றவர்கள் எப்படியாவது சாய்ந்தமருது நகரசபையை முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நேர்மையான நோக்கில் ஒருபோதும் விமர்சிப்பதில்லை. மாறாக சாய்ந்தமருது நகரசபையை முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் பெற்றுக்கொடுத்து விடக்கூடாது என்ற பகை உணர்வுடன்தான் விமர்சிக்கிறார்கள், இதன்மூலம் சாய்ந்தமருதுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் நிலையான நிரந்தரமான பகையை ஏற்படுத்தி தாங்கள் சார்ந்த கட்சிகளுக்கான செல்வாக்கை அங்கு நிலைபெறச் செய்வதற்கே முயற்சிக்கிறார்கள். இந்த தந்திரத்தின் பின்னணியில்தான் தற்போது பெருந்தலைவரின் நினைவுதின நிகழ்வு சாய்ந்தமருதில் நடைபெறுவதையும் இப்படியானவர்கள் விமர்சித்து சாய்ந்தமருதுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்குமான பகையை இன்னும் மூட்டப் பார்க்கிறார்கள்.

பெரும்தலைவர் அஷ்ரஃபின் நினைவுதின நிகழ்வை சாய்ந்தமருதுவில் நடத்துவதில் முஸ்லிம் காங்கிரஸுக்கு எந்த அரசியல் இலாபமும் இல்லை. ஆனால் அதனை முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் இலாபத்துக்காக நடத்துகின்றது என்று விமர்சிப்பவர்கள்தான் அதன்மூலம் சாய்ந்தமருதுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் பகையை மூட்டும் அரசியல் இலாபத்தை அடையப்பார்க்கிறார்கள்.

பொதுவாக பெருந்தலைவரின் நினைவு தின நிகழ்வினை நடத்தி அரசியல் பிழைப்பு நடத்த வேண்டிய வங்குறோத்து நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதுமில்லை.

குறிப்பாக ஒரு அரசியல் கட்சியின் தலைவர் மரணித்தால் அவரது நினைவு தினம் அக்கட்சியினால் நிகழ்த்தப்படுவது அரசியல் வரலாற்றிலுள்ள மிக முக்கியமான ஒரு நடைமுறையாகும். இது நமது நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகளிலுள்ள வழக்கமாகவுமுள்ளது.

இவ்வாறான நினைவேந்தல் நிகழ்வுகள் மூலம் பெருந்தலைவரின் அரசியல் பங்களிப்புக்களையும் முஸ்லிம் சமூக அரசியலில் அவர் வகித்த வகிபாகத்தையும் இன்றுள்ள புதிய தலைமுறையினர் அறிந்துகொள்வதற்கு ஏற்றவாறு இந்நினைவுதின நிகழ்வுகளை முஸ்லிம் காங்கிரஸ் முழுமையாக ஏற்பாடு செய்து வேறு எந்த அரசியலும் இல்லாமல் பெருந்தலைவர் பற்றி மாத்திரமே இந்நாளை சிறப்பாக்கிக்கொள்கிறது.

இலங்கை முஸ்லிம்களின் உரிமைத்துவ அரசியல் அடையாளமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைத் தனிமரமாக நின்று தோற்றுவித்து, அதற்குத் தானே உரமாகி, உணர்வாகி உயிராகி இன்று அதை பெரும் தோப்பாக்கி எமக்களித்த எமது அரசியலின் தந்தை பெருந்தலைவர் அஷ்ரஃப் 2000 செப்டம்பர் 16 இல் இவ்வுலகைவிட்டுப் பிரிந்தாலும் என்றும் அவர் எம்மைவிட்டுப் பிரியாத உருவாகி, எப்போதும் முஸ்லிம் சமூகம் மறவாத முகமாகி, என்றும் அழியாத பெயராகி அவர் இம்மண்ணில் நிலைத்திருக்கிறார்.

இதுபோன்ற 23 வருடங்கள் மாத்திரமல்ல இன்னும் 200 வருடங்கள் கடந்து எத்தனை யுகங்கள் சென்றாலும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பரம்பரையில் வருகின்ற ஒவ்வொரு தலைமுறையும் தலைவர் அஷ்ரஃப் என்ற நாமத்தை உச்சரித்தே தங்கள் அரசியலை முன்னெடுக்க முடியும். இத்தகைய பெருமைக்கும் பெரும் மதிப்புக்கும் பெறுமதிக்குமுரிய பெருந்தலைவர் அஷ்ரஃப்பின் நினைவு தினம் என்பது முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நாளாகவே இருக்கிறதே தவிர, அவரை வைத்து அரசியல் செய்கின்ற ஒரு நாளாக இது இல்லை என்பதே உண்மையும் உறுதியுமாகும்.



நவாஸ் சௌபி

## Mrs Mary Philomena Chinniah (Navamalar)

### 30.07.1930 – 03.09.2023

### திருமதி மேரி பிலோமினா சின்னையா (நவமலர்)



*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கைகொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்"- (யோவான் 11:25-26)*

யாழ். சுண்டிக்குளி கோவில் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், கொழும்பு பொரளையை வதிவிடமாகவும், புரூணை நாட்டில் தற்காலிகமாக வசித்து வந்த திருமதி மேரி பிலோமினா சின்னையா (நவமலர்) 3ம் திகதி புரட்டாதி மாதம் 2023 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து (அராவி) சூசைப்பிள்ளை இராசம்மா சூசைப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற ஜோசப் மேக்பாலன் சின்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உயர்ஸ்தானிகர் மேன்மை மிகு கிளரென்ஸ் பெலீஷியன் சின்னையா, அன்றூ கிரேசியன் சின்னையா (UK), அல்பேர்ட் லக்ஸ்மன் சின்னையா (UK), பேராசிரியர் டெரென்ஸ் றோகான் சின்னையா (Brunei), வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் நேசமிகு தாயாரும், உயர்ஸ்தானிகர் மேன்மை மிகு ஷானி கல்யாணிரட்ன, பிறைடி சின்னையா, மனோரஞ்சி சின்னையா ஆகியோரின் அன்பு மாமியாரும், லெமுவல் தனுஷன் (Brunei), பெலீஷியா தனுஷயந்தியின் (Brunei) பிரியமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்ற மேரி ஜெர்மைன் பெர்டினண்ட் (அரியமலர்- Australia), காலஞ்சென்ற மேரி மக்டலின் மரியநாயகம் (அற்புதமலர் - Luxembourg) ஆகியோரின் இணைபிரியா சகோதரியுமாவார். மனஉறுதியும் கனிவும் கொண்ட இவரின் புனித ஆராதனைத் திருப்பலி 11/9/2023 காலை 9.00 மணிக்கு புரூணை Our Lady of Assumption கத்தோலிக்க தேவாலயத்தில் இடம்பெற்று பின்னர் தகன கிரிகைக்காக எடுத்து செல்லப்படும்.

கொழும்பு, யாழ்பாணத்தில் அன்னாரின் அஸ்திக்கான ஆராதனையும் தொடர்ந்து நல்லடக்கத்துக்குமான திகதியும் தகவல்களும் பின்னர் அறிவிக்கப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:- குடும்பத்தினர்**




# இலங்கைச் சுங்கம்

**இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின்போது நிகழும் சுங்க மோசடி தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்**

**உங்களால் வழங்கப்படும் சரியான தகவல்களுக்கு**

**பணப் பரிசுகள் வழங்கப்படும்**





- தடை மற்றும் வரையறுக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி / இறக்குமதி
- சுங்க வரி செலுத்தாத பொருட்களின் ஏற்றுமதி / இறக்குமதி
- சட்டவிரோத போதைப்பொருள் ஏற்றுமதி / இறக்குமதி
- தொல்லியல் பெறுமதியைக் கொண்ட பொருளின் ஏற்றுமதி
- அரியவகை தாவரம் மற்றும் விலங்குப் பகுதியின் ஏற்றுமதி / இறக்குமதி













**மேற்கூறப்பட்ட வகையிலான கடத்தல் மற்றும் தொடர்புடைய தகவல்கள் உள்ளதாயின் இலங்கைச் சுங்கத்தின் 24 மணி நேரமும் செயற்படும்**

**011 2471471**

**எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக எமக்கு அறிவித்து பெறுமதி வாய்ந்த தேசிய செயற்பாட்டின் பங்குதாரராகுங்கள்**

**தகவல் வழங்குபவர்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்**

மத்திய நுண்ணறிவுப் பிரிவு, இலங்கைச் சுங்கம், சுங்க இல்லம், இல. 10, பிரதான வீதி, கொழும்பு-11. மின்னஞ்சல்: ciu@customs.gov.lk

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்குப் பாராளுமன்றத்தில் காணப்படும் பெரும்பான்மையில் எவ்வித மாற்றமும் இல்லை. ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்தும் பலமான நிலையில் உள்ளமை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.**



**ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் காணப்படுகின்ற பெரும்பான்மையில் மாற்றமெதுவும் கிடையாது!**

# அரசின் பலத்தை மீண்டுமொரு தடவை நிரூபித்த நம்பிக்கையில்லா பிரேரணை!

பொருளாதாரரீதியில் இக்கட்டான நிலையில் இருந்த நாட்டை மக்கள் போராட்டங்களையடுத்து நெருக்கடியான வேளையில் பொறுப்பேற்ற ஜனாதிபதிக்கு பொதுஜன பெரமுன கட்சி முழுமையான ஆதரவு வழங்கி வருகிறது. கடந்த ஒருவருடத்தில் இந்த அரசாங்கம் மீதான பலம் பாராளுமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் நிரூபணமாகியிருக்கின்றது. இவ்வாறான நிலைமையில் மீண்டும் ஒருமுறை அரசாங்கத்தின் பலமான நிலைமை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை 40 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 73 வாக்குகளும், எதிராக 113 வாக்குகளும் அளிக்கப்பட்டதுடன், 38 பேர் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததுடன், ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமகி ஜன பலவேக உள்ளிட்ட பல எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பிரேரணை 45 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன ஆகியோரால் 2023 ஜுலை 2 ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.

இதில் பல்வேறு எதிர்க்கட்சிகள் மற்றும் கூட்டணிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருந்தனர். தற்போது சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு இதுவரை தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை என்றும், 'தரமற்ற' மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களை பொறுப்பற்ற முறையில் இறக்குமதி செய்ததன் காரணமாக சுகாதாரத் துறை பலவீனமடைந்து உயிரிழப்புகள் கூட ஏற்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

கொள்முதல் மற்றும் பதிவு செயல்முறைக்கு வெளியே தொடர்புடைய 'தரமற்ற' மருந்துகளை அவசரகால நிலை என்று கருதி அரசாங்கம் தொடர்ந்தும் நாட்டுக்குள் கொண்டு வருவதாகவும், இந்த நடவடிக்கை நாடு முழுவதும் உள்ள முக்கிய மருத்துவமனைகளில் பல உயிரிழப்புகளை ஏற்படுத்தியதாகவும் அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்து.

'மக்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பான சுகாதார சேவையைப் பாழாக்கும் வகையில் அமைச்சர் செயல்பட்டுள்ளார்' என்றும், இதன் மூலம் அரசியலமைப்பின் 53 ஆவது பிரிவின்படி அவர் அளித்த உறுதிமொழி மீறப்பட்டிருப்பதாகவும் அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு மூன்று நாட்கள் அவசியம் என எதிர்க்கட்சி விடுத்த வேண்டுகோளுக்கு அமைய கடந்த புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று நாட்கள் ஒதுக்கப்பட்டன. இம்மூன்று நாட்களும் இடம்பெற்ற முழுநாள் விவாதத்தின் இறுதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இலங்கையின் சுகாதாரத்துறை மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இழக்கப்பட்டு, அரசாங்க வைத்தியசாலைகளுக்குச் செல்ல அஞ்சும் நிலைமை ஏற்பட்டிருப்பதாக எதிர்க்கட்சியினர் விவாதத்தில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.



**அரச வைத்தியசாலை மருந்துகள் அவசரகால கொள்முதல் மூலம் வாங்கப்படவில்லை. இவை சாதாரண கொள்முதல் கீழ் வாங்கப்பட்டன. மருந்துகள் மூலம் கீழ்த்தரமான அரசியலை செயற்படுத்த எதிர்க்கட்சி முயற்சிக்கிறது' என்கிறார் அமைச்சர் கெஹலிய!**

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, "அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலங்கையின் சுகாதார சேவையை அழிக்க எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளும் முயற்சியானது குறுகிய அரசியல் இலக்குகளை அடைவதற்கான முயற்சிகள் என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது" என்றார்.

"பொய்யான தகவல்களை முன்வைக்கும் எதிர்க்கட்சிகளின் நோக்கத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் கூறும் மருந்துகள் அவசரகால கொள்முதல் மூலம் வாங்கப்படவில்லை. இது சாதாரண கொள்முதல் கீழ் செய்யப்பட்டது. மருந்துகள் மூலம் கீழ்த்தரமான அரசியலை செயற்படுத்த எதிர்க்கட்சி முயற்சிக்கிறது" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிப்பு! பிரேரணைக்கு ஆதரவாக 73 வாக்குகள், எதிராக 113 வாக்குகள். 38 உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை**

இலங்கையின் சுகாதாரத்துறை தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் இத்துறைமீதான மக்களின் நம்பிக்கை இழக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக கொவிட் தொற்றுநோய் பரவிய காலத்தில் எமது வைத்தியர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சுகாதாரத் துறை மீதும் மக்கள் முழுமையான நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். இந்தக் காலப் பகுதியில் சுகாதாரத்துறையின் அர்ப்பணிப்பான சேவையின் மூலமே நாட்டுக்கு ஏற்படவிருந்த பாரிய உயிரிழப்புக்கள் தடுக்கப்பட்டன.

சுகாதாரத் தேவைகளுக்கு மக்கள் தனியார் துறையினை நாடினாலும் இறுதியில் அரசாங்க வைத்தியசாலைக்குச் செல்வதையே வழமையாகக் கொண்டுள்ளனர். இருந்தபோதும் திட்டமிட்டுப் பரப்பட்டுள்ள அச்ச சூழ்நிலை காரணமாக அரசாங்க வைத்தியசாலைகளுக்கு மக்கள் செய்வதில் தயக்கம் காட்டுகின்றனர்.

மறுபக்கத்தில், அண்மைய காலப் பகுதியில் அரசாங்க வைத்தியசாலைகளில் ஏற்பட்ட ஒருசில உயிரிழப்புக்களே மக்கள் மத்தியில் இந்த அச்சம் ஏற்படக் காரணமாக அமைந்தன. எனவே, இந்த அச்சத்தைப் போக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. பக்கச்சார்பற்ற, சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகளை அரசாங்கம் வெளிக்கொணர வேண்டும். அதேநேரம், நாட்டில் நிலவும் பொருளாதார சூழ்நிலை காரணமாக பெரும்பாலான வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

இவ்வாறு துறைசார் நிபுணர்களின் வெளியேற்றம் இத்துறையை மென்மேலும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. இலங்கையின் இலவசக் கல்வியைப் பெற்று துறைசார் நிபுணர்களாக வரும் இவர்கள் நாட்டுக்கு சேவையாற்றாது வெளியேறிச் செல்வது எந்தளவுக்கு நியாயமானது என்ற கேள்வியும் எழுகிறது. இதுபோன்ற பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் சுகாதாரத்துறையில், மருந்துக் கொள்வனவு போன்ற விடயங்களில் வெளிப்படைத் தன்மையைப் பேண வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

உலகளாவிய ரீதியில் மருந்து மாபியாக்கள் இயங்கிவரும் நிலையில் இவ்விடயத்தில் அவதானமாக செயற்பட வேண்டியது அவசியமாகும்.

பி.ஹர்ஷன்...

---

**இந்திய நாட்டின் பெயரை எதிர்வரும் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரில் 'பாரத்' என்று மாற்றம் செய்வதற்கு மத்திய அரசு சட்டத்திருத்த மசோதா கொண்டுவர உள்ளதாக தகவல் பரவி வருகிறது.**




# தனது நாமத்தை மாற்றிக் கொள்ள தயாராகின்றதா இந்திய தேசம்?

இந்தியாவில் அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலில் ஆளும் பா.ஜ.கவை வீழ்த்தும் முனைப்பில் காங்கிரஸ், தி.மு.க உட்பட 26 கட்சிகள் இணைந்து 'இந்தியா' என்ற பெயரில் கூட்டணியை உருவாக்கி உள்ளன. இந்திய நாட்டின் பெயர் 'இந்தியா' என இருக்கும் நிலையில், அந்தப் பெயரிலேயே எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன.

இந்நிலையில் நேற்று 9 ஆம் திகதியும், இன்று 10 ஆம் திகதியும் தலைநகர் டெல்லியில் ஜி20 மாநாடு நடைபெறுகிறது. இம்மாநாட்டில் பங்கேற்கும் விருந்தினர்களுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு இரவு விருந்து வழங்கினார். இதற்கான அழைப்பிதழ் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த அழைப்பிதழில் President of India என்பதற்குப் பதிலாக 'President of Bharat' என அச்சிடப்பட்டுள்ளது. இது இந்தியாவின் பெயரை 'பாரத்' என மாற்ற மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சியின் முதல் நடவடிக்கை எனக் கூறப்படுகிறது.

இந்தியாவின் பெயரை 'பாரத்' என மாற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் பரவி வருகின்றன. அதன்படிதான் ஜனாதிபதியின் அழைப்பிதழில் President of Bharat என அச்சிடப்பட்டிருப்பதாக தகவல்கள் பரவி வருகின்றன.

அதேசமயம், இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றம் செய்வதற்கான சட்டத்திருத்த மசோதாவை மத்திய பா.ஜ.க அரசு எதிர்வரும் 18 ஆம் திகதி தொடங்கவிருக்கும் சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்யக் கூடுமென்று கூறப்படுகிறது.

இந்நிலையில்தான் தற்போது இந்தியாவின் பெயரை 'பாரத்' என மாற்றம் செய்ய வேண்டும் என்றால் எத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பது பற்றிய முக்கிய தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்தியாவை இப்போது இந்தியா என்றும் பாரத் என்றும் அழைக்கலாம். ஏனென்றால் இந்த இரண்டு பெயர்களும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய சூழலில்தான் மத்திய பா.ஜ.க அரசு இந்திய தேசத்துக்கு இந்தியா என்ற பெயருக்குப் பதிலாக பாரத் என்று பெயர் சூட்ட நினைத்தால் முதலில் அதுதொடர்பாக சட்டத்திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவின் அரசியலமைப்பு சட்டப்பிரிவு_1 இந்திய நாட்டை 'இந்தியா, அதுதான் பாரத்' என்று கூறுகிறது. இதனால் அரசியலமைப்பு சட்டம்_1 இல் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். இந்த சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்படும் பட்சத்தில், ஜனாதிபதி திரௌபதி முர்மு வழங்கும் ஒப்புதலுடன் அது சட்டமாக்கப்படும். இதையடுத்து இந்தியா என்பதற்கு பதில் பாரத் என்ற பெயரில் இந்தியாவை அழைக்க முடியும்.

மேலும் அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தையும் வெறுமனே செய்து முடித்து விட முடியாது. ஏனென்றால் அதற்கும் சில விதிகள் வரையறைக்கப்பட்டுள்ளன. அதாவது இந்திய அரசியலமைப்பின் 368 ஆவது பிரிவுதான் ஒரு அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தை எப்படி மேற்கொள்ள வேண்டும்? என்பதைக் கூறுகிறது.


On the occasion of G20 Summit

The President of Bharat
requests the pleasure of the company of
[redacted]
at Dinner
on Saturday, September 09, 2023 at 2000 hrs

RSVP
Protocol Section
Ministry of External Affairs
entn.protocol1@mea.gov.in
Tel.: 011-23088142/43

Venue
Multifunction Hall, Level-3,
Bharat Mandapam,
New Delhi.

Dress: Formal/National Dress

Along with confirming your presence by replying to this mail, it is requested to

**குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அனுப்பிய அழைப்பிதழில் 'இந்தியா' என்பதற்குப் பதிலாக 'பாரத்' என்ற சொல் இடப்பட்டதன் காரணம் என்ன?**

அதன்படி அரசியலமைப்புச் சட்டத்தை இரண்டு வழிகளில் திருத்தம் செய்ய முடியும். ஒன்று சாதாரண பெரும்பான்மை திருத்தம் (Simple Majority Amendment ). மற்றொன்று விசேட பெரும்பான்மை திருத்தம் ( Special Majority Amendment) என்பதாகும்.

இந்த இரண்டுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. அதாவது சாதாரண பெரும்பான்மை திருத்தம் என்பது சபையில் 50 சதவீத உறுப்பினர்களின் ஆதரவுடன் மேற்கொள்வது. இது இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவின் கீழ் புதிய மாநிலம், மாநிலங்களில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்வது உள்ளிட்டவற்றை மட்டுமே இதன்படி மேற்கொள்ள முடியும்.

மாறாக பிற சட்டத் திருத்தங்களுக்கு விசேட பெரும்பான்மைத் திருத்தம் என்பதுதான் பின்பற்றப்பட்டு வருகிறது. இது சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்படுவதில் இருந்து வேறுபாடானது. அதாவது தற்போது இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 1ஐ மாற்றம் செய்வது உட்பட பெரும்பாலான சட்டத் திருத்தங்கள் என்பது விசேட பெரும்பான்மை திருத்த முறையில்தான் நடக்கும். இந்த விசேட பெரும்பான்மைத் திருத்தம் என்பது நாடாளுமன்றத்தில்

66 சதவீதம் பேர் அதாவது 3 இல் 2 பங்கு உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கெடுத்து வாக்களிப்பில் பங்கேற்று மசோதா வெற்றி பெற வேண்டும்.

**இந்தியக் குடிமக்களில் பெரும்பாலானோர் 'பாரத்' என்ற பெயரையே விரும்புவதாக பா. ஜ. க தலைவர்கள் கருத்து**

இது நடந்தால் மட்டுமே இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றம் செய்வதற்கான இந்திய அரசியலமைப்பு சட்டம் 1 இல் திருத்தம் கொண்டு வர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்தியாவை பாரத் என்று பெயர் மாற்றும் யோசனைக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஆனால் எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுகளுக்கு மத்திய அரசிடமிருந்தோ அல்லது குடியரசுத் தலைவர் அலுவலகத்திடமிருந்தோ அதிகாரபூர்வமான பதில் எதுவும் வரவில்லை.

இது குறித்து காங்கிரஸ் கட்சி கூறுகையில், "ஜி20 மாநாட்டுக்கான விருந்தினர்களுக்கு குடியரசுத் தலைவர் அனுப்பிய அழைப்புக் கடிதத்தில் இந்திய குடியரசு என்ற வார்த்தைக்குப் பதிலாக 'பாரத் குடியரசு' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. 'INDIA' வைக் கண்டால் அவ்வளவு பயமா?" என்று வினவியுள்ளது.

இந்தச் சர்ச்சை குறித்து, மத்திய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் காங்கிரஸை விமர்சித்திருக்கிறார். "அவர்களுக்கு எல்லாவற்றிலும் பிரச்சினை இருக்கிறது. நான் அவர்களிடம் எதுவும் சொல்ல விரும்பவில்லை. நான் ஒரு பாரதக் குடிமகன். எனது நாட்டின் பெயர் பாரத். அது எப்போதுமே பாரத் என்றுதான் இருக்கும். இதில் காங்கிரஸுக்கு பிரச்சுனை என்றால் அதை அவர்கள்தான் தீர்த்துக்கொள்ள வேண்டும்" என்றார் அவர்.

அதேசமயம் பா.ஜ.க எம்.பியான சுஷில் மோதி, "அரசியலமைப்புச் சட்டத்தில் பாரதம், இந்தியா என இரண்டு பெயர்களும் உள்ளன. 75 ஆண்டுகளாக இந்திய ஜனாதிபதி என்று எழுதினால், இப்போது பாரத ஜனாதிபதி என்று எழுதுவதில் என்ன ஆட்சேபனை? 'இந்திய மாதா கி ஜெய்' என்று சொல்வதில்லை, 'பாரத் மாதா கி ஜெய்' என்றுதான் சொல்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "நான் பாரதத்தில் வசிப்பவன், பாரதத்தைப் பற்றிச் சொல்கிறேன் என்று ஒரு பிரபலமான பாடலும் உள்ளது. இது இராமர், கிருஷ்ணர் மற்றும் பரதன் என்ற பாரம்பரியத்தின் அடிப்படையில் வந்த பெயர். 'இந்தியா' என்ற பெயர் வெளிநாட்டினரால் வழங்கப்பட்டது. எவராவது பாரதம் என்ற பெயரைக் கண்டு எரிச்சல் அடைந்தால், அவர்கள் இந்தியா என்ற பெயரை வைத்துக் கொள்ளட்டும்" என்றார்.

பா.ஜ.க எம்.பி.யான ஹர்நாத் சிங் யாதவ் கூறுகையில் "நான் இந்தப் பிரசாரத்தை நடத்தவில்லை. முழு நாடும் இதை விரும்புகிறது. இந்தக் கோரிக்கை எல்லா மூலைகளிலிருந்தும் வருகிறது. எங்கள்

ஆர்.எஸ்.எஸ் தலைவரும் 'பாரத்' என்ற பெயரைப் பயன்படுத்த வேண்டுகோள் விடுத்துள்ளார்" என்றார்.

எஸ்.சாரங்கன்...

# "கொழும்பு இயன் மருத்துவ வாரம் – 2023"







மூட்டுவலி(Arthritis) மற்றும் பிற மூட்டுவலி தொடர்பான நோய்கள்" என்ற தொனிப்பொருளில் இவ்வருட உலக இயன் மருத்துவ தினத்துடன் இணைந்து கொழும்பு பல்கலைக்கழக இயன் மருத்துவ மாணவர் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்த "கொழும்பு இயன் மருத்துவ வாரம் 2023" நிகழ்ச்சித் தொடர் செப்டெம்பர் 2ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை ஒரு வார காலம் முழுவதும் பெரும் வெற்றியுடன் நடைபெற்றது.

"மூட்டுவலி மற்றும் பிற மூட்டு நோய்களுக்கான சிகிச்சைக்கான இயன் மருத்துவ கிளினிக்"

மற்றும் "முதுமையுடன் தொடர்புடைய நோய்களுக்கான கிளினிக்"

இந்த இரண்டு கிளினிக்குகளும் செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் UCFM கோபுரத்தின் 11வது மாடியில் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை இயன் மருத்துவ வல்லுநர்களின் வழிகாட்டுதலின் கீழ் இலவசமாக மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட பலருக்கு இந்த விலைமதிப்பற்ற செயலால் பெரும் நிவாரணம் கிடைக்கும் வாய்ப்பு கிடைத்தது.

அங்கு, மூட்டுவலி மற்றும் அதனுடன் வரும் நோய்களை பரிசோதித்து, அவர்களுக்கு சிகிச்சை அளித்தல், நோய் நிலைகளைத் தடுக்கும் முறைகள், முதுமையால் ஏற்படும் பிரச்னைகளுக்கு சிகிச்சை அளித்தல், அவற்றைக் கையாள ஆலோசனை, நோயைத் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய நல்ல அறிவுரைகள், வழங்கப்பட்டன.

மேலும், ஒரு இயன் மருத்துவரின் பங்களிப்பை ஊக்குவிப்பதாகவும் இருந்தது.

இதற்கு பெருமளவிலான மக்கள் பெரும் பங்களிப்பை வழங்கியதுடன் கொழும்பு இயன் மருத்துவ வாரம் 2023 பெரும் வெற்றியுடன் நிறைவடைந்தது.

**INTERNATIONAL DRIVING LICENCE**

Obtain Your International Driving Licence to Drive Overseas.

AA CEYLON Estd. 1904

Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk

## மொரட்டுவ பல்கலைக்கழகம்

### பல்கலைக்கழக அனுமதி – கல்வி ஆண்டு 2022/2023

### மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்காக விண்ணப்பம் கோரல்

(i) கட்டிடக்கலை பட்டம்
(ii) வடிவமைப்பு பட்டம்
(iii) நிலச்சீரப்பு கட்டிடக்கலை பட்டம்
(iv) ஆடையலங்கார வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி பட்டம்
(v) தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ பட்டம்

மேற்கூறப்பட்ட ஐந்து (05) பட்டதாரி கற்கை நெறிகளுக்கான தகுதிகாண் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரர்கள் அந்தந்த கற்கை நெறியின் கீழ் 2022/2023 கல்வி ஆண்டிற்காக பல்கலைக்கழக பிரவேசக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும். விண்ணப்பதாரர்கள் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் http://www.uom.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து குறித்த விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலையில் (Online) பூர்த்தி செய்தல் வேண்டும்.

இயைபுடைய விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகத்தின் (http://www.uom.lk) இணையதளத்திற்குப் பிரவேசித்து மேற்கூறப்பட்ட தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு பூர்த்தி செய்திருக்க வேண்டிய ஆகக் குறைந்த தகைமைகள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

நிகழ்நிலையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை (Online Application) இயைபுடைய ஆவணங்கள் சகிதம் 2023 ஒக்டோபர் மாதம் 03ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு முன் நிகழ்நிலை (Online) ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு admissions@uom.lk எனும் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தவும்.

**பதிவாளர்,**
**மொரட்டுவ பல்கலைக்கழகம்,**
**கட்டுபெத்த, மொரட்டுவ.**
**2023-09-05.**

## இலங்கைத் துறைமுக அதிகாரசபை

### அறிவித்தல்

### வருடாந்த / மூன்று வருட தனிநபர் அனுமதிப்பத்திரம் (RPU) – வழங்குதல் (2024 வருடம்)

கொழும்பு / காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்குப் பிரவேசிப்பதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அனுமதிப்பத்திரம் அலுவலகத்தினால் 2024ஆம் வருடத்திற்காக வழங்கப்படும் தனிநபர் அனுமதிப்பத்திரம் (RPU), 2024 ஜனவரி 01ஆம் திகதி முதல் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வருடாந்த அனுமதிப்பத்திரம் 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும் வகையிலும் மூன்று வருட அனுமதிப்பத்திரம் 2024-01-01ஆம் திகதி முதல் 2026-12-31ஆம் திகதி வரையான 03 வருடங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2024ஆம் வருடத்திற்கான அல்லது மூன்று வருட தனிநபர் அனுமதிப் பத்திரங்களை (RPU) பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் சகல அனுமதிப்பத்திரதாரிகள் தமது அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இயைபான ஆவணங்களை 2023-11-30ஆம் திகதிக்கு முன் கொழும்பு-01, லோட்டஸ் வீதிக்கு அண்மையிலுள்ள கெனல் முற்றவெளியில் அமைந்துள்ள வருடாந்த அனுமதிப்பத்திர அலுவலகதிற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அதேபோல், விண்ணப்பிக்கும் வருடாந்த மற்றும் மூன்று வருட அனுமதிப்பத்திரத்திற்கு நிகழ்நிலை (online) ஊடாக https://www.slpa.lk/port-colombo/online-entry-permits எனும் இணையத்தின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

தற்போது வழங்கப்பட்டுள்ள 2023ஆம் வருடத்திற்குச் செல்லுபடியாகும் வருடாந்த தனிநபர் அனுமதிப்பத்திரம் (RPU) 2023-12-31ஆம் திகதியின் பின் காலாவதியாகிவிடும் என்பதுடன் அனுமதிப்பத்திரதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வருடாந்த தனிநபர் அனுமதிப்பத்திரம் (RPU) 2024ஆம் வருடத்திற்காக புதுப்பிக்கப்படாவிட்டால் அன்றைய தினத்தின் பின் அவர்கள் துறைமுகத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியில்லை.

உரிய நேரத்தில் தமது அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் அவசியத்தன்மையை சகல வருடாந்த தனிநபர் அனுமதிப்பத்திரதாரிகளின் கவனத்திற்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொள்ளவும்.

0112389942, 0112483167, 0112483485.

**பணிப்பாளர் (பாதுகாப்பு),**
**பாதுகாப்புப் பிரிவு,**
**இலங்கைத் துறைமுக அதிகாரசபை.**
**2023.09.10ஆம் திகதி.**

## Abans – Diva Power சலவை புரட்சி




Diva Power உடன் இணைந்து சிறப்பு ஊக்குவிப்புத் திட்டமொன்றை தற்போது நடத்தி வருகிறது Abans. இதன் அடிப்படையில் அபான்ஸ் சலவை இயந்திரத்தை கொள்வனவு செய்பவர்களுக்கு Diva Power அல்லது washing liquid இலவசமாக வழங்கப்படும்.

அபான்ஸ் சலவை இயந்திரத்தை கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலவசமாக இந்த தயாரிப்பு வழங்கப்படுவதோடு, சீட்டிழுப்பு மூலம் தேர்வு செய்யப்படும் 2 நபர்களுக்கு ஒரு வருடத்திற்கு போதுமான Diva Power தயாரிப்புகள் இலவசமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புகழ்பெற்ற இரண்டு முன்னணி நிறுவனங்களான Abans மற்றும் Hemas Consumer Brands ஆகிய நிறுவனங்களுக்கு இலங்கை விற்பனை சந்தையில் மிகச்சிறந்த அங்கீகாரம் உள்ளது. இதன் அடிப்படையில் இந்நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில் பலதரப்பட்ட தயாரிப்புகளை விற்பனை சந்தைகளுக்கு அறிமுகம் செய்துள்ளன.

நேரத்தை சேமித்து வீட்டிலுள்ள ஆடைகள் மற்றும் துணிகளை மிகவும் சுலபமாக சலவை செய்வதற்காக, தற்காலத்தில் சலவை இயந்திரம் இன்றியமையாத ஒரு உற்பத்தியாகும். இலங்கை சந்தைகளில் உள்ள சலவை இயந்திரங்களில் அபான்ஸ் சலவை இயந்திரமே முன்னணியில் உள்ளது.

Abans Diva Power ஒத்துழைப்பில் வாடிக்கையாளர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை வழங்குவதோடு, அபான்ஸ் சலவை இயந்திரத்திலுள்ள நவீன தொழில்நுட்பம் மற்றும் Diva Power சலவை பவுடர் மற்றும் சலவை திரவத்திலுள்ள ஆடைகளை சலவை செய்யும் திறன் காரணமாக மிகச்சிறந்த சலவையை பெற்றுக்கொள்ள முடியும். மேலும், அபான்ஸ் சலவை இயந்திரத்திலுள்ள நீடித்துழைக்கும் திறன், மின்சார சேமிப்பு, நம்பகத்தன்மை மற்றும் சிறந்த செயல்திறன் வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த திருப்தியை தருகிறது. Diva Power சலவை பவுடர் மற்றும் சலவை திரவம் சந்தையிலுள்ள முன்னணி சலவை பவுடர்களில் ஒன்றாகும். இது ஆடைகளுக்கு நீண்டகால பாதுகாப்பை வழங்குகிறது.

## தாருல் உலூம் அல் – மீஸானிய்யாஹ் அரபுக் கல்லூரி

குருகொடை, அக்குரணை

### அல்குர்ஆன் மனனப்பிரிவிற்கும் இஸ்லாமிய கற்கைகள் பிரிவிற்கும் புதிய மாணவர்கள் அனுமதி

- அல்குர்ஆன் மனனப்பிரிவிற்கு 2024ஆம் ஆண்டில் தரம் 6, 7 இல் கற்கக்கூடிய அல்குர்ஆனை சரளமாக ஓதத்தெரிந்த மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.
- இஸ்லாமிய கற்கைகள் பிரிவிற்கு 2024ஆம் ஆண்டில் தரம் 9 இல் கற்கக்கூடிய அல்குர்ஆனை சரளமாக ஓதத்தெரிந்த மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.

நேர்முகப்பரீட்சை அல்குர்ஆன் மனனப்பிரிவிற்கு 05.11.2023 ஞாயிறு காலை 9.30 மணிக்கும், இஸ்லாமிய கற்கை பிரிவிற்கு 12.11.2023 ஞாயிறு காலை 9.30 மணிக்கும் கல்லூரியில் நடைபெறும்.

முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி கல்வித்தகைமைகள் பற்றிய விபரங்களுடன் 01.11.2023 திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும் அல்லது நேர்முகப் பரீட்சை திகதியன்று நேரடியாக கல்லூரிக்கு எடுத்து வரவும்.

0770288559, 0772791755

**The Secretary,**
**Dhaarul Uloom Al-Meezaniyah**
**Kurugoda, Akurana.**

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வியாழக்கிழமை 2023.09.07
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5230 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,602,448.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 5 6 5 6 3 2

தன நிதானய — தேதி 2023/09/07 — சீட்டிழுப்பு இலக்கம் 1260 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,663,982.40
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 23 54 69 77 — விஷேசட ஆங்கில எழுத்து T
Double Chance இலக்கம் 11220

Lucky 7 — திகதி 07.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0056
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 9 0 7 8 6 4
L7 இலக்கம் 1 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,671,396.96

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3472 — சீட்டிழுப்பு திகதி 2023.09.07 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,196,166.40
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 16 20 27 68 — விசேட எழுத்து F
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 36128

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1578 — 07/09/2023 — 71099
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 406,886,656.00
ஆங்கில எழுத்து S — சுப்பர் இலக்கம் 02 — வெற்றி இலக்கங்கள் 01 02 04 46
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

ராசி சப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-09-07 — சீட்டிழுப்பு இலக்கம் 539 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,296,102.40
வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 10 30 34 51 — விசேட இலக்கினம் கன்னி

## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

Uva Wellassa University

### மாணவர் அனுமதிகள்

### கல்வியாண்டு - 2022/2023

### உளச்சார்புப் பரீட்சை

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி 2022/ 2023 கையேட்டின் பிரிவு 1.2 இன் படி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு 2022/ 2023 கல்வியாண்டுக்கான அனுமதியைப் பெற ஆகக் குறைந்த தகமைகள் கொண்டுள்ளவர்களிடமிருந்து மேற்படி கல்வியாண்டிற்கான பின்வரும் பட்டப்பயில் நெறிகளுக்கு உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணினி விஞ்ஞானமும் தொழிநுட்பமும்
- கைத்தொழில் தகவல் தொழிநுட்பம்
- முயற்சியாண்மையும் முகாமைத்துவமும்
- விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்

விண்ணப்பித்த கற்கை நெறிக்கேற்ப உளச்சார்பினை பரீட்சிப்பதற்காக இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் நடைபெறும். ஒவ்வொரு கற்கை நெறிக்குமான குறைந்தபட்ச தகமைகள் 2022/2023 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக பட்டப்பயில் நெறிகளுக்காக அனுமதிக் கையேட்டின் (க.பொ.த. (உ/த) 2022 பரீட்சையை அடிப்படையாக கொண்டது) 2.2.8.14, 2.2.8.15, 2.2.8.16 மற்றும் 2.2.8.18 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் 2023 செப்டம்பர் 20 அன்று அல்லது அதற்கு முன்னர் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் (https://www.aptitude.uwu.ac.lk/) இணையவழி (online) ஊடாக தங்களது விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இணையவழி விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களை நீங்கள் பதிவேற்ற வேண்டியது கட்டாயமாகும்:

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி பதுளை கிளையின் கணக்கிலக்கம்: 78166821 இற்கு இலங்கை வங்கியின் ஏதாவதொரு கிளையின் ஒரு பரீட்சைக்கு ரூபா. 1000/- வீதப்படி வைப்பு செய்யப்பட்ட பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச் சீட்டு. (தயவுசெய்து பற்றுச் சீட்டின் ஒரு பிரதியை உங்களுடன் வைத்துக் கொள்ளவும்). இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. [உ+ம்: நீங்கள் இரண்டு பாடங்களுக்கு பரீட்சை எழுத விரும்பினால், கட்டணம் ரூபா 2,000/- (2 x 1,000/-) செலுத்த வேண்டும்]

உளச்சார்புப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தகுதியானவர்களுக்கு மின்னணு முறை மூலம் அனுப்பப்படும்.

எல்லா கற்கை நெறிகளுக்குமான பரீட்சை விண்ணப்பங்களையும் அதனுடன் தொடர்புடைய பரீட்சைக் கட்டணத்துடன் ஒரே விண்ணப்பப்படிவத்தில் அனுப்பவும்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேண்டப்பட்ட பரீட்சைத் தாளின் எண்ணிக்கையை விட குறைவாக இருப்பின் பரீட்சாத்தியின் முன்னுரிமை ஒழுங்கிற்கு அமையவே கவனத்தில் கொள்ளப்படும்.

உளச்சார்பு பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களும் அதற்காக ஒதுக்கப்பட்ட இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. உங்களுக்கு மிகவும் வசதியான பரீட்சை நிலையங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

| பரீட்சை நிலையம் | பரீட்சை நிலைய இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| யாழ்ப்பாணம் | 02 |
| கண்டி | 03 |
| மாத்தறை | 04 |
| பதுளை | 05 |
| அநுராதபுரம் | 06 |
| மட்டக்களப்பு | 07 |
| குருணாகலை | 08 |

விண்ணப்பதாரிகள் தெரிவு செய்த பரீட்சை நிலையங்களை சில நேரங்களில் ஒதுக்க முடியாமல் போனால், அதற்கு பதிலாக வேறு பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்படும்.

**பதிவாளர்**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**
**பஸ்ஸறை வீதி**
**பதுளை**

**தொலைபேசி : 055-2226622/ 055-3561752**
**தொலைநகல் : 055-2226633**
**வெப்தளம் : www.uwu.ac.lk**

**06 செப்டம்பர் 2023**

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி;

# அகழ்வில் அகழப்பட்ட பெண்கள் இருவரது முழுமையான எச்சங்கள்

## சட்டத்தரணி கே.எஸ்.நிரஞ்சன் தெரிவிப்பு

**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் நேற்று முன்தினம் (08) மூன்றாம்நாள் இடம்பெற்ற அகழ்வாய்வு நடவடிக்கைகளின் போது, விடுதலைப் புலிகள் அமைப்பினுடைய பெண் போராளிகளினுடையதெனக் கருதப்படும் இரண்டு மனித எச்சங்கள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன.

அம்மனித எச்சங்களுடன் பெண்களின் உள்ளாடைகளும் பச்சை நிற முழு நீளக் காற்சட்டைகளும் மீட்கப்பட்டதுடன், அவற்றில் இலக்கங்கள் இடப்பட்டிருந்தன. அவற்றுடன் துப்பாக்கி ரவைகள் இருந்தன. கடந்த 06ஆம் திகதி கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், மூன்றாம்நாள் அகழ்வாய்வு நடவடிக்கைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பாக அகழ்வுப் பணியில் இணைந்திருந்த சட்டத்தரணி கே.எஸ். நிரஞ்சன் கருத்துத் தெரிவித்த போது,

"ஏற்கெனவே இனங்காணப்பட்ட மனித எச்சங்களில் இரண்டு மனித உடல்களின் எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், இந்த இரண்டு மனித எச்சங்களும் விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் போராளிகளுடையதாக இருக்கலாமென்று நம்பப்படுகின்றது. அத்தோடு, அகழ்வாய்வு நடவடிக்கைகளின் போது எடுக்கப்பட்ட ஆடைகளில் இலக்கங்களும் இடப்பட்டுள்ளன. முதலாவது மனித எச்சத்தின் பச்சை நிற நீளக் காற்சட்டையில் 3204 என்ற இலக்கமும், முழு நீளக் கையுடைய மேற்சட்டையும், 3174 இலக்கமுடைய



பெண்களின் உள்ளாடையும் மார்புக் கச்சையும் மீட்கப்பட்டுள்ளது.

இரண்டாவது மனித எச்சம் மீட்கப்பட்டுள்ள போது அதில் பச்சை நிறக் முழு நீளக் காற்சட்டையும், முழுநீளக் கையுடைய மேற்சட்டையும், 1564 இலக்கமுடைய உள்ளாடையும், மார்புக் கச்சையும் எடுக்கப்பட்டது.

இதேவேளை, இரண்டு மனித எச்சங்களுடனும் துப்பாக்கி ரவைகள் இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

மேலும், அவ்வாறு ஆடைகளில் இலக்கங்கள் மாத்திரமே பொறிக்கப்பட்டுள்ளதுடன், கறுப்பு நிற நூலினாலேயே ஆடைகளில் இலக்கங்கள் பொறிக்கப்பட்டுள்ளன" எனத் தெரிவித்தார்.

அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்களும் தடயப்பொருட்களும் பொதியிடப்பட்டு, சட்ட வைத்திய அதிகாரியால் பகுப்பாய்வுகளுக்காக எடுத்து செல்லப்பட்டுள்ளன. அகழ்வாய்வு இடம்பெற்ற இடத்தில் தொல்லியல் ஆய்வாளர் பரமு புஷ்பரட்ணம், யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி, சட்டத்தரணி ரனித்தா ஞானராசா, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், தடயவியல் பொலிஸார், வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் இராமலிங்கம் சத்தியசீலன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், கொக்குத்தொடுவாய் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி.சிவகுரு ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

## லிந்துலையில் மலையகம் -200 நிகழ்வு




குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு உதவி செய்யும் வகையில் மலையகம் 200 நிதியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி முற்பகல் 11.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை லிந்துலை சரஸ்வதி பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக நுவரெலியாவுக்கு பொறுப்பான தகுதிகாண் அதிகாரி ஆர்.எம்.என்.ரத்நாயக்க, சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் தலாவாக்கலை கிளை முகாமையாளர் அசங்க, மக்கள் வங்கியின் பிரதி முகாமையாளர் என்.பிரியதர்சினி, கௌரவ அதிதிகளாக அக்கரகந்த தமிழ் வித்தியாலய அதிபர் துரைசிங்கம், லிந்துலை ரோயல் கல்லூரி அதிபர் மாலதி, பேயார் பீல்ட் பாடசாலை அதிபர் கருப்பண்ணன் ராமராஜ் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். இந்நிகழ்வில் விசேட உரையை வணக்கத்துக்குரிய பொகவந்தலாவை ராகுல தேரர் ஆற்றவுள்ளார். நிகழ்வின் இணைப்பாளராக திலகேஸ்வரனும் திட்டப் பொறுப்பாளராக திருமதி தினேஷ் செயற்படவுள்ளனர்.







### இவ்வாரம் வெளிவரவில்லை

வாரமஞ்சரியில் வாராவாரம் வெளிவரும் தொடர்களான, 'படித்ததும் பகர்வதும்' மற்றும் 'திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்' எனும் தொடர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் இவ்வாரம் வெளிவரவில்லை. _ ஆர்_

### சீனாவுக்கு அடுத்ததாக...

சங்கத்தின் தலைவராக மீண்டும் தெரிவாகியுள்ள கணேஷ் தெய்வநாயகம் இது தொடர்பாக மேலும் தெரிவித்த போது, தேயிலைக் கலவை தொழில்நுட்பத்தில் தனித்துவத்தை இலங்கை தொடர்ந்து பேணுவதால், சர்வதேச சந்தையில் சிறப்பான இடத்தை பெற்றுள்ளதாகத் தெரிவித்தார். ஒரு கிலோகிராம் இந்திய தேயிலையின் ஏற்றுமதிக் கட்டணம் 3.58 அமெரிக்க டொலர்களாகவும் கென்யாவின் ஏற்றுமதிக் கட்டணம் 2.60 அமெரிக்க டொலர்களாகவும் இருக்கையில், இலங்கை தேயிலையின் சராசரிக் கட்டணம் 5.10 டொலர்களாக திகழ்வது வரவேற்கத்தக்க விடயமெனவும், அவர் மேலும் தெரிவித்தார். தொடர்ச்சியான முயற்சி, சர்வதேச தடைகளிலிருந்து வெளியேறுதல் மற்றும் நவீன தன்மையை அறிமுகப்படுத்தல் போன்ற காரணிகளால், இந்தச் சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### ஊழல் ஒழிப்பு சட்டம்...

தொடர்பாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளார். இந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமே 15ஆம் திகதி முதல் இது அமுலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொழிலுக்கு செல்வது...

வேலைவாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தது.

சுற்றுலா வீஸா வாயிலாக சர்வதேச நாடுகளுக்கு தொழில்வாய்ப்புக்காக சென்று பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பட்சத்தில், எவ்வித பொறுப்பையும் வேலைவாய்ப்பு பணியகம் ஏற்றுக் கொள்ளாதெனவும், அப்பணியகம் அறிவித்துள்ளது.

அத்துடன், தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கையர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்வது மிகக் கட்டாயமாகுமெனவும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, சுற்றுலா வீஸாவில் ஓமானுக்குச் சென்று பல்வேறு சித்திரவதைகளை அனுபவித்து வந்த ஒருவர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உதவியுடன் இலங்கைக்கு மீண்டும் அழைத்து வரப்பட்டு, நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில், பாதிக்கப்பட்டவரின் மனைவி அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து அந்நபர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார். மேலும், இவரை சுற்றுலா வீஸா மூலம் தொழிலுக்கு அனுப்பிய மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

### மாத்தளை வடிவேலனின்...

வாழ்கையின் அவலங்களை மிக யாதார்த்தமாக சித்தரிக்கும் இலக்கியத் தொகுப்பாக இந்த சிறுகதைத்தொகுதி தமிழ் அறிஞர்கள் மத்தியில் பெரும் பாராட்டை பெற்றுள்ளது. இந்த அங்கீகாரத்துக்கு அடையாளமாக 'தாய்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தலைவர் முனைவர் டாக்டர் குமார் இராஜேந்திரன் விசேட இலக்கிய விருதாக மாத்தளை வடிவேலனின் 'வல்லமை தாராயோ' என்ற சிறுகதைத்தொகுப்புக்கு (இலங்கை ரூபா) ஒரு இலட்சம் ரூபா விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (முழுமையான செய்தி பக்கம்10 இல்)

### டென்மார்க் நீதிமன்ற...

ஜூரர் பதவி வகித்து வந்ததுடன், அவருக்கு இந்தப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. டென்மார்க்கின் மிகப்பெரிய வழக்குகளை விசாரிக்கும் மன்றமாக வெஸ்டெர் லாண்ட் நீதிமன்றம் திகழ்கின்றது. இவ்வாறானதொரு முக்கியமான நீதிமன்றத்தில் தமிழர் ஒருவர் ஜூரர் பதவிக்கு நியமனமாகியுள்ளமை உலகத் தமிழருக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாகும்.

டென்மார்க்கின் அரசியல், சமுதாயம், கலை, இலக்கிய வரலாற்றில் பல காத்திரமான பணிகளை செய்துவரும் தர்மகுலசிங்கம், டெனிஸ் மொழியின் அற்புதமான படைப்புகளை படைத்த 'அனசன்' கதைகளை தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கியுள்ளார்.

அத்துடன், 2002ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவர் தலைமை தாங்கிய லயன் நகர கலை இலக்கிய மன்றம், இலங்கைக்கு சமாதான பயணத்தை மேற்கொண்டு, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவரையும் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீதித்துறையில் நீண்டகால அனுபவமுள்ள தர்மகுலசிங்கம், டென்மார்க்கில் நீதியின் பாதையில் தமிழர்கள் பயணிக்கிறார்கள் என்பதற்கு சிறந்த முன்னுதாரணமாக விளங்கி வருகிறார். சிறுபராயம் முதல் இடதுசாரி கொள்கையை பற்றிப் பிடித்த அவர், இன்றும் அதே பாதையில் பயணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சந்தேகநபர்களை உடனடியாக...

இடம்பெற்ற தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளென 'சனல் 4' ஆவணப்படத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சந்தேக நபர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும்.

அவர்கள் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்" என்றார்.

அத்தோடு, "உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம். அந்த மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பாக இற்றைவரையில் என்ன விசாரணை நடந்தது? என்ன முன்னேற்றம் நடந்தது? என்று எவருக்கும் தெரியாமல் உள்ளது. அந்தத் தாக்குதல் சம்பந்தமாக பல சந்தேகத்துக்குரிய விடயங்கள் வெளிவந்திருக்கின்றன. 2019ஆம் ஆண்டில் ஆட்சி அதிகாரத்தை பிடிக்கவே அந்தத் தாக்குதல் ஒரு தரப்பால் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளதென்ற பொதுவான கருத்து நிலவுகின்றது.

இதைத்தான் 'சனல் 4' தொலைக்காட்சி பல ஆதாரங்களுடன் சர்வதேசத்துக்கு படம் பிடித்துக் காட்டியுள்ளது. இது தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கருத்தும் பல தரப்பினராலும் தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றது.

உள்நாட்டில் நடைபெற்ற விசாரணைகளில் எந்தவித முன்னேற்றமும் இல்லாதபடியால், சர்வதேச விசாரணை வேண்டுமென்று பல தரப்பினரும் வலியுறுத்துகின்றமை நியாயமான கோரிக்கையாகும்.

இந்த விடயத்தில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அடங்கிய சர்வதேச சமூகம் மிகவும் அக்கறை செலுத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

### மொரோக்கோவில்...

தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.8ஆக பதிவாகியதுடன், இந்த நிலநடுக்கத்தால் முதலில் 296 பேர் உயிரிழந்ததாகவும், முன்னதாக அந்நாட்டு அரசாங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

மராகேஷுக்கு தென்மேற்கே 71 கிலோமீற்றர் (44 மைல்) தொலைவிலுள்ள ஹை அட்லஸ் மலைகளில் 18.5 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டதாக, அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்நாட்டு உள்ளூர் நேரப்படி 23:11 மணிக்கு (இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 3:40) நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் பாதிப்புகள், உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கப்படலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய...

அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை அமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

பொலிஸ், சட்ட மாஅதிபர் திணைக்களம் மற்றும் சிவில் சேவையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தக் குழு நியமிக்கப்படவுள்ளது.

பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், குழுவின் பிரதிநிதிகள் நியமனம் ஜனாதிபதியின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சனல் 4 வெளிப்படுத்திய விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளளார்.

இந்தக் குழுவுக்கான பிரதிநிதிகளை நியமிக்கும் பொறுப்பு ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அமைச்சருக்கு அறிவிக்காமல்...

ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 50 பெட்டிகளை முழுமையாக திருத்தியுள்ள அந்த நிறுவனம், பின்னர் நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 சூழ்நிலை காரணமாகவும் டொலரின் பெறுமதி அதிகரிப்பினால் ஏற்பட்ட உற்பத்திச் செலவுகள் அதிகரிப்புக் காரணமாகவும் ரயில் பெட்டிகளுக்காக பெற்றுக்கொள்ளும் கட்டணத்தை அதிகரிக்கப் போவதாக வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதற்கிணங்க ஒரு ரயில் பெட்டியை முழுமையாக திருத்துவதற்கு 21 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளதுடன், அதனை பெற்றுக்கொடுப்பதற்காக போக்குவரத்து, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி சமர்ப்பித்துள்ள அமைச்சரவை பத்திரத்துக்கும் அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த வருடம் ஜனவரி 14ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடிதத்தில், நிதி அமைச்சர் என்ற வகையில் அவர் வழங்கிய அனுமதி தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிலையில் நிதி அமைச்சரினால் அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள திட்டம் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு தெரியாமல் 50 ரயில் பெட்டிகளில் 21 ரயில் பெட்டிகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அந்த நடவடிக்கையை நிறுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சின் தொழில்நுட்பப் பிரிவு பணிப்பாளர் நாயகத்தினால் ரயில்வே பொது முகாமையாளருக்கு கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில், தற்போது உலக சந்தையின் விலை நிலைவரப்படி இந்தியாவிலிருந்து மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டியை இறக்குமதி செய்வதனால் ஒரு ரயில் பெட்டியை கொள்வனவு செய்வதற்கு 162 மில்லியன் ரூபா செலவாகும். அத்துடன் கப்பல் கட்டணம், சுங்கக் கட்டணம், துறைமுகக் கட்டணம் ஆகியவற்றுடன் சேர்த்து அது 180 மில்லியனாக அமையும். அதேவேளை, சீனாவிலிருந்து இவ்வாறு ஒரு ரயில் பெட்டியை கொள்வனவு செய்வதனால் 233 மில்லியன் ரூபா செலவாகும்.

அந்த வகையில், பொதுவாக 200 மில்லியன் பெறுமதியான ரயில் பெட்டியொன்றை 21 மில்லியன் ரூபாவுக்கு முழுமையாக புனரமைப்பு செய்வதற்கு இரண்டு வருட முழுமையான பொறுப்புடனான தேசிய நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், அந்த ஒப்பந்தத்தை இவ்வாறு சீர்குலைத்துள்ளமை ஏற்க முடியாது.

இதனால் புதிய ரயில் பெட்டிகளை கொள்வனவு செய்வதனால் அரசாங்கத்துக்கு பெருமளவு செலவை ஏற்க வேண்டி வரும். நாட்டில் தற்போது ரயில் பெட்டிகள் எண்ணிக்கை மிகக் குறைவாக காணப்படுவதால், பல ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன், கொழும்பிலிருந்து தலைமன்னார், மாத்தளை, பெலியத்தவரை சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயில்கள் மற்றும் கடுகதி ரயில்கள் பலவும் இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், தந்த்ரி நிறுவனம் தற்போது மூன்று ரயில் பெட்டிகளை தேசிய ரீதியில் உற்பத்தி செய்யும் திட்டம் தொடர்பான யோசனையை முன்வைத்துள்ளதுடன், அதன் மூலம் அரசாங்கத்துக்கு பாரிய நிதியை மீதப்படுத்திக்கொள்ள முடியுமென்பது குறிப்பிடத்தக்கது.

## எங்கள் கருத்து

# மனித நாகரிகத்துக்கு விரோதமான சிந்தனை!

'எனது மதம் ஒன்றுதான் உலகில் உண்மையானது' என்றும், 'எனது மதமே உலகில் உயர்வானது' என்றும் ஏராளமானோர் முட்டாள்தனமாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் தங்களது மதத்தை முதன்மைப்படுத்தியவாறு திட்டமிட்டு காரியங்களை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான போக்கு மற்றைய மதத்தினருக்கு வெறுப்பையும் வன்மத்தையும் உருவாக்குவது தவிர்க்க முடியாததாகின்றது.

மதங்கள் விடயத்தில் மக்கள் உள்ளங்களில் எத்தனை தூரம் வன்மம் உள்ளதென்பதை சமூக ஊடகங்களைப் பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும். மற்றைய மதநம்பிக்கைகளைத் தூற்றுவதையே சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரில் பலர் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவ்வாறானவர்களை 'மதவெறியர்கள்' என்பதை விட 'மதநோயாளிகள்' எனக் கூறுவதே பொருத்தமாகும்.

மதம் என்பது உண்மையானதா அல்லது உண்மைக்குப் புறம்பானதா என்ற விவாதமெல்லாம் எமக்கு அவசியமற்ற சங்கதியாகும். அது எவ்வாறாவது இருந்துவிட்டுப் போகட்டும்! மதத்தைக் கடைப்பிடித்தொழுகுவதும், மதத்தை விட்டு நீங்கியிருப்பதும் அவரவரது தனிப்பட்ட சௌகரியம். அந்த விவகாரத்தில் மற்றவர் தலையிடுவது அடுத்தவரின் அடிப்படை உரிமையை மீறுகின்ற செயலாகிறது.

மனிதகுலம் ஆண்டாண்டு காலமாகப் பின்பற்றி வருகின்ற அவரவர் மதநம்பிக்கைகளை மற்றொரு தரப்பினர் நிந்தனை செய்வது அடுத்தவரின் சொந்த விடயத்தில் தலையிடுவதற்கு ஒப்பானதாகும்.

அனைத்து மதங்களும் நற்போதனைகளையே எடுத்துரைக்கின்றன. 'நமது மதமே உயர்ந்தது. நமது மதத்தை வளர்ப்போம், மற்றையவற்றைத் தாழ்த்துவோம்' என்று எம்மதமும் கூறவில்லை. அவ்வாறிருக்கையில் மக்கள் மத்தியில் மதரீதியிலான மதத்தை வளர்ப்பது மனித நாகரிகத்துக்கு விரோதம்!

### அரச தரப்பு எம்.பிக்களுக்கு...

பிரதான அமைப்பாளர் அலுவலகம் தெரிவித்தது. லொஹான் ரத்வத்த, திஸ்ஸகுட்டி ஆராச்சி, ஜகத்குமார, நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் அரசாங்கக் கட்சி அலுவலகத்தில் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்திருந்தனர். தாங்கள் பாராளுமன்றத்துக்கு மிக அருகிலேயே இருப்பதால், வாக்களிப்பில் பிரச்சினை ஏற்பட்டால், விரைவில் வரலாமென்றும் அறிவித்திருந்ததாகவும், ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

மஹிந்த ராஜபக்ஷ, ஹரின் பெர்னாண்டோ, ஜனக பண்டார தென்னகோன், கீதா குமாரசிங்க ஆகியோர் சுகயீனமடைந்துள்ளதாகவும், ஆளும் கட்சி அலுவலகத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்துக்கு திகதி நிர்ணயிக்கப்படுவதற்கு முன்னரே மேலும் 5 எம்.பி.க்கள் வெளிநாடு செல்ல அனுமதி பெற்றுள்ளனர். அவர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாததால் பாதிப்பில்லையென்பதால் அவர்களை மீள அழைக்கவில்லை

சமல் ராஜபக்ஷ, விதுர விக்கிரமநாயக்க, தம்மிக்க பெரேரா, திலும் அமுனுகம, மர்ஜான் ஃபலீல் ஆகிய உறுப்பினர்களே வெளிநாடு சென்றுள்ளனர். இருப்பினும், இறைவரி திருத்தச் சட்டமூலத்தை 45 மேலதிக வாக்குகளால் அரசாங்கம் நிறைவேற்ற முடிந்ததாக, ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 7ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இறைவரி (திருத்த) சட்டமூலத்துக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடந்த 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் அனுமதி வழங்கினார். இதன்படி, செப்டெம்பர் 8ஆம் திகதி முதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### உலக சாதனை புத்தகத்தில்...

கோபால் பாக்லே கடந்த 6ஆம் திகதி பாராட்டியதுடன், சாதனைப் பதக்கத்தை அணிவித்து, சான்றிதழையும் வழங்கி வைத்தார். சிறுமி பவிஷ்ணா, செந்தில்குமார் ரேவதி தம்பதியினரின் புதல்வியாவர். உலக சாதனைப் புத்தக நிறுவனம், சிறுமியின் திறமையையும் அதீத நினைவாற்றலையும் பரிசீலனை செய்து, உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்து சாதனைச் சிறுமியாக தமது இணையத்தில் வெளியிட்டது.

கடந்த மார்ச் மாதம் இதற்காக விண்ணப்பித்த போது, ஏப்ரல் மாதம் சாதனை படைத்த சிறுமியாக அறிவித்து இவருக்கான இலச்சினை, பதக்கம் மற்றும் சான்றிதழ் என்பன அனுப்பி வைக்கப்பட்டன.

### சனல்4 காணொளி ஊடாக...

தாக்குதலில் குழந்தைகள் மற்றும் வெளிநாட்டவர்கள் உட்பட கிட்டத்தட்ட 270 அப்பாவி உயிர்கள் கொல்லப்பட்டதுடன், இலங்கை மற்றும் சர்வதேச சமூகம் அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருந்தது.

இந்தப் பேரழிவையடுத்து இலங்கை அரசாங்கம், அதன் சட்ட அமுலாக்கப் பிரிவினர், பாதுகாப்புப்படைகள் மற்றும் சர்வதேச புலனாய்வு அமைப்புகள் விரிவான விசாரணைகளை ஆரம்பித்தன.

பல ஆண்டுகளாக உள்ளூர் மற்றும் சர்வதேச விசாரணைகள், சஹ்ரான் ஹாஷிம் தலைமையிலான ஐ.எஸ்., ஐ.எஸ். ஐச் சேர்ந்த குழு உறுப்பினர்களே இந்த பயங்கர அனர்த்தத்தின் காரணகர்த்தாக்கள் என்பதை தொடர்ந்து சுட்டிக்காட்டியுள்ளன.

எவ்வாறாயினும், 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 5ஆம் திகதி பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட சமீபத்திய ஆவணப்படத்துக்கு உறுதியுடனும் பொறுப்புடனும் பதிலளிக்க பாதுகாப்பு அமைச்சு விரும்புகிறது.

இந்த ஆவணப்படம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பழியை இராணுவப் புலனாய்வு பிரிவு மற்றும் இலங்கையின் தேசிய புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே மீதும் அப்பட்டமாக மாற்ற முயற்சிக்கிறது.

36 ஆண்டுகளாக தேசத்துக்கு சேவையாற்றிய அர்ப்பணிப்புள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரிக்கு எதிராக தாக்குதலை திட்டமிட்டு, குண்டுதாரிகளுக்கு உதவியதாக தொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை பாதுகாப்பு அமைச்சு வன்மையாகக் கண்டிக்கிறது. மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் அமைச்சர், ஆலோசகராக 2016 டிசெம்பர் முதல் 2018 டிசெம்பர்வரை பணியாற்றினார். அவர் 2019 ஜனவரி 3ஆம் திகதி இந்தியாவுக்குச் சென்று புதுடில்லியில் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் கற்கையை முடித்து விட்டு, 2019 நவம்பர் 30ஆம் திகதி இலங்கைக்கு திரும்பினார்.

சனல் 4 வீடியோ ஆவணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் இந்த அதிகாரி இலங்கையில் இருக்கவில்லை. மேலும், கூறப்பட்ட காலப்பகுதியில் (டிசெம்பர் 2016 முதல் நவம்பர் 2019வரை), இந்த அதிகாரி நாட்டின் உளவுத்துறை மற்றும் பாதுகாப்புத் துறையில் பணியமர்த்தப்படவில்லை. அல்லது அந்தத் துறைகளில் அவர் எந்த உத்தியோகபூர்வ பொறுப்புகளையும் வகிக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதிகள் எவரும் எச்சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தின் சம்பள பட்டியலில் இருந்ததில்லை என்பதை பாதுகாப்பு அமைச்சு மீண்டும் வலியுறுத்துகிறது.

எனவே, பாதுகாப்பு அமைச்சு இந்தக் குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுப்பதுடன், இத்தகைய தீங்கிழைக்கும் மற்றும் ஆதாரமற்ற விடயமொன்றை வெளியிட்டதற்காக சனல் 4 மீது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து, இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் உண்மையை வெளிக்கொணர்வதில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளன.

உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களால் நடத்தப்பட்ட வெளிப்படையான வசதியளித்து விசாரணைகளை எளிதாக்குவதன் மூலம் அவை அவ்வாறு செய்யப்பட்டன. குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாத எதிர்ப்பு புலனாய்வுப்பிரிவு மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு (PCoI) ஆகியவற்றின் விசாரணைகள், தாக்குதலுக்கான தீவிரவாதக் குழுவின் பொறுப்பை தொடர்ந்து உறுதிப்படுத்தியுள்ளன.

மேலும், தேசிய பாதுகாப்புக்கான துறைசார் மேற்பார்வைக்குழு தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்மொழிவதில் முக்கிய பங்காற்றியுள்ளது.

அவுஸ்திரேலிய ஃபெடரல் பொலிஸ் (AFP) மற்றும் அமெரிக்காவிலுள்ள ஃபெடரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன் (FBI) ஆகியவற்றால் நடத்தப்பட்ட விரிவான விசாரணையும் அமெரிக்க நீதித்துறையின் தீர்ப்புகளும் உள்ளூர் விசாரணைகளின் கண்டுபிடிப்புகளை உறுதிப்படுத்தியுள்ளன என்பதை அடிக்கோடிட்டுக் காட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

சர்வதேச புலனாய்வு அமைப்பின் இந்த உறுதியான ஒப்புதல் விசாரணைகளின் துல்லியம் மற்றும் நேர்மையை மேலும் உறுதிப்படுத்துகிறது. தொடர்ச்சியான மற்றும் உண்மையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சனல் 4இன் தூரநோக்கற்ற மற்றும் மோசமான நடத்தையானது முரண்பாடுகளை விதைப்பதன் மூலம் இலங்கை சமூகத்தின் கட்டமைப்பை சீர்குலைப்பது மட்டுமல்லாமல், அவர்களின் நேர்மையையும் பொறுப்பையும் உறுதியுடன் நிலைநிறுத்தியவர்களின் நற்பெயரையும் பாதுகாப்பையும் பாதிக்கிறது.

பாதுகாப்பு அமைச்சு கருத்துச் சுதந்திரத்துக்கு மதிப்பளித்து, புலனாய்வு பத்திரிகை துறையின் முக்கியத்துவத்தை பறைசாற்றும் அதேவேளை, அவர்களின் ஆதாரமற்ற, தீங்கிழைக்கும் மற்றும் மோசமான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளால் ஏற்படும் எதிர்பாராத செயல்கள் அல்லது விளைவுகளுக்கு சனல் 4 பொறுப்பேற்க வேண்டும் என்று நாங்கள் உறுதியாக வலியுறுத்துகிறோம்.

ஆவணப்படம், இலங்கை அரசாங்கத்தின் சார்பாக பாதுகாப்பு அமைச்சு இந்த பொய்யான குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக நிராகரிப்பதோடு, உண்மை, நீதி மற்றும் தேசத்தின் நல்வாழ்வுக்கான அரசாங்கத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்துகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் அரங்கம்

அர்ஜுன்



# அடுத்த ஐந்து வருட காலத்துக்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் சந்திப்பு

**நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஒன்றிணைய வேண்டும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து எமக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருந்தாலும், அதற்குள் கருத்து மோதல்கள் இருப்பதாகத் தெரிகிறது. இத்தகவலில் உண்மை உள்ளதா?**

பதில்: இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு குறிப்பிடத்தக்க ஆணையை வழங்கியிருந்தனர். இது 154 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலாக மொழிபெயர்க்கப்பட்டது. அவர்களில் ஒரு சிறுதொகையினர் தற்போது சுதந்திரமாக செயற்படும் அதேவேளையில், பெரும்பான்மையானவர்கள் அரசாங்கத்துடன் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். இந்த உறுப்பினர்களிடையே கருத்தியல் வேறுபாடுகள் தோன்றலாம், ஆனால் அவர்கள் கூட்டு அர்ப்பணிப்புடன் அரசாங்கத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதில் உறுதியாக உள்ளனர்.

**நாட்டில் 2022 மே மாதம் 9 இல் நடந்த மோசமான வன்முறைகளையடுத்து அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க**

**கே: உண்மையில், அத்தகைய ஒற்றுமை பாராளுமன்றத்திற்குள் இருந்தால், உங்கள் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு வெளியே ஏன் விமர்சிக்கின்றனர்?**

பதில்: யார் என்ன சொன்னாலும் நாங்கள் அனைவரும் ஒன்றுகூடியே அவரை இந்தப் பதவிக்கு கொண்டுவந்தோம். 2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க மீது முதலில் நம்பிக்கை வைத்து அவரை பிரதமராக நியமித்தவர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த முடிவு தவறானது என எப்போதாவது நிரூபிக்கப்பட்டதா?

**கே: ஆனால் அவர் எந்த ஆணையும் இல்லாத ஜனாதிபதி என்று பலர் குற்றம் சாட்டுகிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: ஒரு ஜனாதிபதி பதவியில் இருந்து விலகினால் அல்லது அவரது பதவிக்காலம் முடிவதற்குள் மரணமடைந்தால் பிறிதொருவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும் என்பதை சட்டம் தெளிவாகக் கூறுகிறது.

எனவே அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி ஒருவரை நியமித்துள்ளோம். பாராளுமன்றத்தில் இப்படி நடப்பது இது முதன் முறையல்ல. அவருக்கு மக்கள் ஆணை இல்லாவிட்டாலும், மக்களால் வாக்களிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் வாக்களிக்கப் பட்டார். நாங்கள் மக்களின் பெரும்பான்மை ஆணையை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம்.

**கே: இருந்தபோதும் உங்கள் சொந்தக் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் கூட தற்போதைய ஜனாதிபதி நேரடியாக மக்களின் ஆணையைப் பெற்றிராதவர் எனக் கூறி வருகின்றனர். இது பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

பதில்: ஜனாதிபதியை அடுத்து வருகின்ற ஜனாதிபதிக்கு சட்டம் எந்த வரம்புகளையும் விதிக்கவில்லை. அவர் ஜனாதிபதியின் அல்லது நிறைவேற்று அதிகாரத்தின் கடமைகளைத் தொடர வேண்டும். எந்தவொரு ஸ்திரமின்மையையும் தடுக்கும் வகையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை நாட்டின் ஸ்திரத்தன்மை மற்றும் தொடர்ச்சியை உறுதிப்படுத்த, அவருக்கு சட்டம் விரிவான அதிகாரத்தை வழங்குகிறது.

**கே: இருந்தாலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க ஜனாதிபதிக்கு உரிமை உள்ளதா?**

பதில்: 13 ஆவது திருத்தம் தொடர்பான கருத்தாடல் காரணமாக அவர் இவ்வாறு குற்றம் சாட்டப்படுகிறார்.

ஒரு பிரகடனம் என்பது நாம் செல்லும் பாதைக்கான ஒரு வழிகாட்டியே ஆகும். பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 13 ஆவது திருத்தம் குறித்த ஜனாதிபதியின் முயற்சிக்கு முரணான எதுவும் இல்லை. இன மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதற்கான எமது உறுதிப்பாட்டை வெளிப் படுத்தியுள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தம் தொடர்பான தனது கண்ணோட்டத்தைப் பகிர்ந்துள்ளார். நாமும் எங்கள் முன்மொழிவுகளை முன் வைப்போம். இந்த யோசனைகளை கவனமாக ஆராய்வதன் மூலம், நமது நாட்டின் பிரச்சினைகளுக்கு மிகவும் பொருத்தமான மற்றும் பயனுள்ள தீர்வைக் கண்டறிவதில் நாம் பணியாற்றலாம்.

**கே: உங்கள் அறிக்கைகள் ஜனாதிபதிக்கு விசுவாசமானதாக இருக்கின்றன என்ற நிலைப்பாடொன்று தெரிவிக்கப்படுகிறது. இதுபற்றி நீங்கள் கூற விரும்புவது என்ன?**

பதில்: ஆம் நான் விசுவாசமானவன். பிரசன்ன ரணதுங்க எப்பொழுதும் நேரடியாகவும் மனசாட்சிப்படியும் பேசுவார். இந்த நாட்டின் குடிமகனாகவும், அரசியல்வாதியாகவும் நான் அவருக்கு நன்றி கூறுகிறேன். மே 9, 2022 இல் நடந்த மோசமான நிகழ்வுகளுக்குப் பிறகு நாடு எழுச்சியில் இருந்தது. நாட்டின் நிர்வாகமும் பாதுகாப்பும் சரிந்தன. ஜூலை 9 இற்குப் பிறகு நாட்டையே முழுவதுமாக மாற்றிவிட்டார். வன்முறையை நிறுத்தி அமைதியைக் காத்தார்.



**கே: முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தப் பணியில் தோல்வியடைந்தார் என்று கூறுகிறீர்களா?**

பதில்: ஆம். அதனால்தான் நான் உட்பட பலரது வீடுகளுக்கு கட்டுக்கடங்காத கும்பல் தீ வைத்தது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வீதியில் கொடூரமாகக் கொல்லப் பட்டார். பொதுச்சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பாதுகாப்பு நிலைமையை உருவாக்கவே அவர் நியமிக்கப்பட்டார். ஆனால் அவரால் அதைச் செய்ய முடியவில்லை. ஆனால் அவர் நாட்டில் மரியாதைக்குரிய நபர் என்பதால் அதற்காக அவரை நான் விமர்சிக்க மாட்டேன். நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட போரை முடிவுக்குக் கொண்டுவர பாதுகாப்பு செயலாளராக அவர் கடுமையாக உழைத்தார். நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கொழும்பை அபிவிருத்தி செய்து அழகுபடுத்தினார். அவரது முயற்சிகள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்டன.

பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்த கொவிட் 19 தொற்றுநோயைத் தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலைக்கு அவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பல்ல. ஆனால், அரசியல் முதிர்ச்சியடையாத தலைவரான அவர் இரசாயனஉரத் தடை, ஒரே இரவில் இயற்கை உரத்துக்கு மாறுதல் போன்ற தவறான முடிவுகளை எடுத்தார். எந்தவொரு அரசாங்கமும் அல்லது தலைவரும் சமீபத்திய காலங்களில் எடுக்கப்பட்ட மிகவும் தீங்கு விளைவிக்கும் முடிவுகளில் அது ஒன்றாகும். அவர் திறமையான நிர்வாக அதிகாரி, ஆனால் அரசியலில் தோல்வியடைந்தார்.

**கே: வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஒரு சிறப்புத் திறமையைக் கொண்டிருந்தார் என்று நீங்கள் சொல்கிறீர்களா?**

பதில்: நிச்சயமாக. அவரது அரசியல் நிபுணத்துவம் மற்றும் அங்கீகாரம் இதில் பெரும் பங்கு வகித்தது.

**கே: அண்மையில் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். தங்கள் கருத்து என்ன?**

பதில்: அது அவருடைய தனிப்பட்ட பார்வையா அல்லது அவர் ஒரு நிகழ்ச்சி நிரலா அல்லது வேறு காரணத்திற்காக மட்டும் பேசினாரா என்பது எனக்குத் தெரியாது. அவர் சுமத்தியுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும் நான் மறுக்கிறேன். அவை முற்றிலும் பொய்யானவை.

**கே: நீங்கள் கூறுவது போல் பிரதமராகவோ அல்லது ஜனாதிபதியாகவோ வருவதற்கான கனவு காணவில்லை என்று கூறுகிறீர்களா?**

பதில்: விதி நம்மை எங்கு அழைத்துச் செல்லும் என்று கணிக்க முடியாது. நான் எனது பயணத்தை தொடர்வேன். எனது நிலை என்ன என்பதை மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும். நான் ஒருபோதும் அந்தஸ்தையோ பதவிகளையோ தொடரவில்லை. சரியான நேரத்தில் என்னைத் தேடி வந்தார்கள். எனது அரசியல் பயணம் அதே வழியில் தொடரும்.

**அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மக்களால் வாக்களிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் வாக்களிக்கப்பட்டு அவர் நியமிக்கப்பட்டார். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சட்டம் விரிவான அதிகாரத்தை வழங்கியுள்ளது**

---



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# அடுத்த புரட்சிக்கான பாய்ச்சலுக்கு வேகமாக தயாராகும் இந்திய தேசம்!

அயலவரின் ஆயத்தம் குறித்து கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம். பொருளாதார ரீதியிலும், சமூக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் அண்டைய நாடான இந்தியா எடுக்கும் முடிவுகள் இலங்கையின் இருப்பை தீர்க்கமாகப் பாதிக்கும் காரணிகளாகும். வளர்ச்சித் திட்டத்தை மற்றொரு சவாலான இடத்திற்குக் கொண்டு சென்றுள்ள இந்திய வல்லுநர்கள், சுதந்திரம் பெற்ற நூறு ஆண்டுகளுக்குள் இந்திய சமூகத்தை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்வதை இலக்காகக் கொண்டுள்ளனர். அதில், 2047 ஆம் ஆண்டு வரை தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து துறைகளில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி, போக்குவரத்து, தகவல் தொடர்பு, விவசாயம், பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, ஈ நிர்வாக அரசு, ஈவர்த்தகம் என்பவற்றுடன் கணினி வலையமைப்புடன் புத்தாக்கங்களும் இந்த பத்து துறைகளாக அடையாளம் காணப் பட்டுள்ளன. உலக பொருளாதாரத்தில் இந்தியா ஐந்தாவது இடத்தில் இருந்து தற்போது மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் துணிச்சலுடன் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரோக்கியமான மக்கள்தொகை மற்றும் அதிக ஆயுட்காலம் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட இந்திய ஆட்சியாளர்கள் தற்போது காணப்படும் தனிநபர் வருமானத்தை 2047 ஆம் ஆண்டுக்குள் 2,400 டொலரிலிருந்து 20,000 டொலராக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

முதல் பத்துத் துறைகளில் முதலிடத்தில் உள்ள எரிசக்தித் துறை குறித்து இந்தியாவின் கவனம் தீவிரமாக செலுத்தப்பட்டுள்ளது. நாட்டின் மசகு எண்ணெயில் 85 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. 2030 ஆம் ஆண்டளவில், புதைபடிவ வலுசக்தி 45 சதவீதமாகக் குறைக்கப்பட்டு பசுமைத் துறைக்கு மாற இந்தியா முனைகிறது. சூரிய வெப்பம், காற்று, எதனோல் மற்றும் ஹைட்ரஜன் வலுசக்தி மூலங்களில் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. மின்உற்பத்தி செய்வதோடு சர்வதேச சந்தையை பசுமை எரிசக்தி மையமாகத் திறக்க, தனியார் துறைக்கு முதலீட்டுக்கு வாய்ப்பளிக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

பலவித குறைந்த விலையிலான உற்பத்தி செயன்முறைகள் காரணமாக, இந்தியாவில் ஒரு யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான செலவு இலங்கையுடன் ஒப்பிடுகையில் மூன்றில் ஒரு பங்காகும். ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க இலங்கை ஒரு ரூபாய் செலவழிக்கும் போது இந்தியாவில் விலை முப்பது சதமாகும். அது கைத்தொழில்கள், வணிகங்கள் மற்றும் பொதுநுகர்வோருக்கு பெரும் நன்மையாகும்.

அதிக எரிபொருள் ஆற்றலைப் பயன்படுத்தும் வாகனங்களை மின்சக்தியில் இயங்க மாற்றுவது போக்குவரத்தை நெறிப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. ரயில்கள் மின்மயமாக்கப்படும். ஒவ்வொரு பெரிய நகரிலும் மின்சார பஸ்களை இயக்குவதற்கான திட்டமும் உள்ளது. எரிவாயு அல்லது மின்சாரத்தில் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் மட்டுமே இப்போது புதுடில்லிக்குள் பிரவேசிக்க முடியும். இன்னும் ஆறு ஆண்டுகளில் இந்தியாவில் பயன்படுத்தப்படும் மொத்த கார்களில் 30 சதவீதம், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் 80 சதவீதம் முழுவதுமாக மின்சாரத்தில் இயங்கும் வகையில் உருவாக்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாநிலமும் டீசல் அல்லது பெட்ரோல் வாகனத்தை எத்தனை ஆண்டுகள் பயன்படுத்தலாம் என்பதை நிர்ணயித்துள்ளன. ஒரு பெற்றோல் வாகனம் அதிகபட்சம் பதினைந்து ஆண்டுகள் ஆகும். டீசல் வாகனத்தின் ஆயுட்காலம் பத்து ஆண்டுகள் மட்டுமே. அவ்வாகனங்கள் காலம் முடிந்த பிறகு அழிக்கப்படும். புதிய வாகனங்கள் வாங்குபவர்களுக்கு மின்சார வாகனங்கள் வாங்க வரிச்சலுகை வழங்கப்படுகிறது.

தகவல் தொடர்புத்துறையும் முன்னேற்றம் கண்டு வருகிறது. தகவல் தொடர்பு நோக்கங்களுக்காக தரவு செலவில் உலகிலேயே மிகக் குறைந்த இடம் இந்தியா என்று கூறப்படுகிறது. அமெரிக்காவை விட கட்டணங்கள் முப்பத்து மூன்று சதவீதம் குறைவு. ஐந்தாம் தலைமுறை தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் முதலீடு செய்து வரும் இந்தியா, அதை விட நூறு மடங்கு வேகமான ஆறாவது தலைமுறை தொடர்பை விரைவில் அறிவிக்கப் போவதாக தெரிவித்துள்ளது.

பத்து வருட திட்டத்தில் விவசாயத்துக்கு தனி இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதிக மக்கள் தொகை கொண்ட விவசாயிகளைக் கொண்ட நாடான இந்தியா உணவுப் பாதுகாப்பில் முழுக் கவனம் செலுத்தி வருகிறது. உயிரி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. இரசாயன உரம் மற்றும் இயற்கை உரம் ஆகிய இரண்டு துறைகளும் சமமாக ஊக்குவிக்கப்பட்டு, விளைபொருட்களுக்கு பௌதிக விலை நிர்ணய முறை உள்ளது. அறுவடைக்குப் பிந்திய சேதத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காலநிலை அறிக்கை, மண்ணின் தரத்தை அளவிடுவதற்கு விவசாயிகள் நவீன முறைகளை பயன்படுத்துகிறார்கள். ட்ரோன் இயந்திரங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதோடு, டிரோன்களை திருத்தும் தொழில்நுட்ப அறிவை பெண்களுக்கும் கற்பிக்க பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில், இலங்கை தற்போது எதிர்நோக்கி வருகின்ற பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியிலிருந்து விடுபட்டு விரைவான அபிவிருத்திக்குள் நுழைவதற்கான உத்திகள் அவசியம். உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டும். தற்போதுள்ள காலாவதியான கட்டமைப்பில் இருந்து விலகி புதிய அம்சங்களுக்கு செல்ல வேண்டிய அவசியமுள்ளது.

2048 ஆம் ஆண்டளவில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் யோசனை உள்ளது. அரசாங்கம் இந்த இலக்கை நோக்கி நகர்கிறது என்ற எண்ணம் அடிக்கடி வெளிப்படுத்தப்படுகிறது. சமூக பேதங்களைக் களைந்து ஒற்றுமையை உருவாக்க வேண்டும். இனம், மதம், அரசியல் கட்சி பேதங்கள் எனப் பிரிந்து கிடக்கும் ஒரு சமூகத்தை ஒரு இலக்கை நோக்கி செலுத்த கணிசமான முயற்சி எடுக்க வேண்டும்.

அரசியல் அமைப்பு மற்றும் அரசியல் தலைவர்களின் எதிர்ப்பே இங்கு தடையாக உள்ளது. பொதுமக்கள் தங்கள் தலைவர்களை நம்புவதில்லை. வாக்குகளை வெல்வதற்காக பெரும் வாக்குறுதிகளை அளிப்பதோடு ஒவ்வொரு அரசியல்வாதியும் அதிகாரத்திற்காகவும் மகிழ்ச்சிக்காகவுமே சிரமப்படுகிறார்கள் என மக்கள் நம்புகிறார்கள்.

தங்களின் எதிர்காலம் குறித்த தெளிவில்லாத நிலைமையால் இலங்கையர் பலர் வேறு நாட்டிற்குச் சென்றாவது உழைக்க வேண்டும் என்ற முடிவை எடுப்பதாகத் தெரிகிறது. திடமான திட்டங்கள் இல்லாமல் நாட்டை உருவாக்க முடியாது. கடந்த முப்பது ஆண்டுகளில் ஏராளமான திட்டங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் தலைவர்கள் ஆற்றும் கொள்கை அறிக்கைகள், வரவு செலவு கணக்குகள் மற்றும் உரைகளில் இந்த அம்சங்களை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். கடனில் மூழ்கியதன் காரணமாக, கடனை செலுத்தும் சமூகமாக இலங்கை மாறியுள்ளது. புரட்சிகரமான முடிவை எடுக்க வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை
## பதவி வெற்றிடம்
## தலைமைச் சமையற்காரர்

மேலேயுள்ள பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்விசார் தகைமைகள்:** **(அ)** பின்வருவன அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன்

**அனுபவம்:** ஆறு பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

i. சிங்களம்/தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

அத்துடன்

**(ஆ)** தேசிய தொழிற்பயிற்சி தகைமையில் 4 ஆம் மட்டத்தில் அல்லது மேற்பட்ட தகைமையை சான்று பகருவதற்கான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் பாடசாலையொன்றில் ஒரு வருடம் அல்லது மேற்பட்ட காலத்திற்கு ஹோட்டல் முகாமைத்துவம், ஹோட்டல் செயற்பாடு, விருந்தோம்பல் முகாமைத்துவம் அல்லது நிகரான ஏனைய கற்கைநெறியொன்றை முழுநேர கற்கைநெறியாக பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

**(இ)** அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டலொன்றில் உரித்தான துறையில் ஆகக் குறைந்தது 2 வருட அனுபவம்.

**வயது:** 35 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** **சம்பளக் குறியீடு எம்என் 1 – (2016) தரம் 111.**
ரூபா 36,640 – 10 x 405 - ரூபா 40,690/-

மேலேயுள்ள சம்பளத்திற்கு மேலாக அங்கீகரிக்கப்பட்ட அனைத்து படிகளும் வழங்கப்படும்.

**வேலைவாய்ப்பு நியதிகள்:** நிரந்தரமானது. அத்துடன் சேமலாப நிதிய அடிப்படையிலும் அமைந்திருக்கும்.

அரசாங்க சேவையில் பதவிகளை வகிக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்கள் பணியாற்றும் திணைக்கள தலைமையூடாகவே நேரடியான பிரதியொன்றுடன் அனுப்புதல் வேண்டும். தெரிவு செய்யப்படின் விண்ணபதாரியானவர் விடுவிக்கப்படுவார் என்ற உத்தரவாதக் கடிதம் விண்ணபத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

நியமனமொன்றை வழங்குதல்/ வழங்காதிருத்தல் என்பதற்கான உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபையானது கொண்டுள்ளது.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும்.

**2023 செப்டம்பர் 25 ஆம் திகதியன்று** அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியை வந்தடையும் வகையில் விண்ணபதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை முழுமையான சுயதரவு மற்றும் உறவினரல்லாத இரு (2) பரிந்துரையாளர்களின் பெயர்களுடன் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**
**02.09.2023.**

# AMANA
TAKAFUL INSURANCE
LIFE

எமது எதிர்கால வளர்ச்சி மற்றும் வெற்றியில் பங்கு வகிப்பதற்கு எமது நிறுவனத்துடன் இணைய ஊக்கமுள்ள, திறமை படைத்த மற்றும் முடிவுகளை எடுக்கும் திறன் கொண்ட தனிநபர்களை நாம் தற்போது தேடி வருகிறோம். நாம் உற்சாகமான பயணம் ஒன்றின் வாயிலில் உள்ளோம்!

வர்த்தக வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்குவது மற்றும் வரம்புகளுக்கு அப்பால் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் உடைய கீழுள்ள தகைமைகளை கொண்டவர் என நீங்கள் நம்பினால் விண்ணப்பியுங்கள். இது நீங்கள் எதிர்பார்க்கும் தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பமாக இருக்கக் கூடும்.

## வங்கிக் காப்புறுதி (Banca Assurance) முகாமையாளர் - ஆயுள் (கிழக்கு மாகாணம்)

**பொறுப்புகள்**

ஆட்சேர்ப்பு, மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றில் நிரூபிக்கப்பட்ட திறன்களுடன், வர்த்தக முடிவுகள்/ விற்பனை இலக்குகளின் அடைவை நோக்கி வங்கிக் காப்புறுதி பிரிவை தமது உச்சத்தை நோக்கி வழிநடத்தும் ஒரு தொழில்முறையாளராக இருத்தல் வேண்டும்.

- வர்த்தக KPI (முக்கிய செயல்திறன் காட்டி) இனை பூர்த்தி செய்வதற்கு இடத்தின் வருவாயை அதிகரித்தல், விற்பனை இலக்கு/ நோக்குகளின் மேம்பாடு மற்றும் அடைவு, வாடிக்கையாளர் சேவை வழங்கலுக்கு பொறுப்பாக இருத்தல்.
- வளங்கள், ஊழியர் ஆட்சேர்ப்பு (வங்கி நிறைவேற்றுனர்கள்) மற்றும் அவர்களுக்கான பயிற்சிக்கு பொறுப்பாக இருத்தல்.
- எமது வங்கி கூட்டாளர்களின் வாடிக்கையாளர்களுக்கு தரமான காப்புறுதி ஆலோசனை வழங்கல் மற்றும் விற்பனைக்கு பின் சேவை வழங்கல். வங்கி மற்றும் நிறுவனத்திற்கு இடையில் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு நேரத்திற்கு சேவை வழங்குவதை உறுதி செய்தல்.
- புதிய உற்பத்தி அறிமுகங்கள் பற்றி தெரிந்திருப்பதோடு விற்பனைக் குழு உறுப்பினர்களின் செயல்திறனை மேம்படுத்துவதை உறுதி செய்தல்.

**தொழில் விபரக்குறிப்பு**

- SLIM / CIM அல்லது தொடர்புடைய துறையில் பட்டம்/ தகைமைகள்
- இதனையொத்த திறன் ஒன்றில் குறைந்தது 5 அண்டுகள் தளப் பதிவை நிரூபித்தல் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.
- சிறந்த பேச்சுவார்த்தை திறனுடன் வலுவான வாடிக்கையாளர் சேவை அணுகுமுறை
- விற்பனை செயல்திறன் அளவீடுகளைப் புரிந்துகொண்டு பகுப்பாய்வு செய்யும் திறன்
- வலுவான தொடர்பாடல் மற்றும் குழு முகாமைத்துவ திறன்கள்
- பணியமர்த்தப்பட்ட பிராந்தியத்திற்குள் பரந்த அளவில் பயணம் செய்யும் விருப்பு

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும். இந்த விளம்பரம் வெளியாகி 7 நாட்களுக்குள் 2 உறவினர் அல்லாத பரிந்துரையாளர்களின் விபரத்துடன் **careers@takaful.lk** மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது சுயவிபரக் கோவையை அனுப்பவும்.

**Amana Takaful Life PLC 660 1/1, Galle Road, Colombo 03.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

### பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்
### தேயிலை ஆராய்ச்சி சபை
## வெற்றிடங்கள்

01. **பிரதி ஆராய்ச்சிப் பணிப்பாளர் (உற்பத்தி) - (01 பதவி)**
**DEPUTY DIRECTOR RESEARCH (PRODUCTION)**
02. **கணக்காளர் - (02 பதவிகள்)**
**ACCOUNTANT**
03. **பெறுகை அதிகாரி - (01 பதவி)**
**PROCUREMENT OFFICER**
04. **பரிசோதனை அதிகாரி - (05 பதவிகள்)**
**EXPERIMENTAL OFFICER**
05. **விரிவாக்கல் அதிகாரி - (01 பதவி)**
**EXTENSION OFFICER**

தலவாக்கலையிலுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

## 01. பிரதி ஆராய்ச்சிப் பணிப்பாளர் (உற்பத்தி)
## DEPUTY DIRECTOR RESEARCH (PRODUCTION)

**கடமை விபரம்**
தேயிலை பயிர்ச்செய்கை குறித்த ஆராச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குதல், அமுலாக்கல் மற்றும் கணக்காணித்தலுக்கு பொறுப்பு கூறுதல்.

**தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் முதலாம் வகுப்பு சகிதம் நான்கு வருட சிறப்புப் பட்டமொன்று அல்லது விஞ்ஞானம் / விவசாயத்தில் இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு அல்லது பொறியியல் பட்டம் அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் ஒரு கலாநிதிப் (PhD) பட்டம்.

மற்றும்

முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது பதினாறு (16) வருட காலம் ஆராய்ச்சி அல்லது விரிவாக்கல் அனுபவம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் முகாமைத்துவ அனுபவம் இதில் எட்டு (08) வருட காலம் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னராவும் மற்றும் இரண்டு (02) வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுடன் இருத்தல் வேண்டும்.

மற்றும்

ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் பல்வகை ஒழுக்கக் குழுக்களுக்கு தலைமை தாங்குதல் மற்றும் வழிநடாத்துவதற்கு நிரூபிக்கப்பட்ட இயலுமை இருத்தல் வேண்டும். மனிதவளம் மற்றும் ஏனைய வளங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் வினைத்திறனுடனான முகாமைத்துவம் தொடர்பான அனுபவம் மேலதிகத் தகைமையாகும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பொறியியல் அல்லது விஞ்ஞானம் / விவசாயத்தில் இரண்டாம் வகுப்புப் பிரிவில் நான்கு வருட சிறப்புப் பட்டமொன்று மற்றும் இயைபுடைய துறையில் கலாநிதிப் பட்டம் மற்றும் பிரிவுத் தலைவர் / முதன்மை ஆராய்ச்சி அலுவலராக நான்கு (04) வருட காலம் திருப்திகரமான சேவையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

பொறியியல் அல்லது விஞ்ஞானம் / விவசாயத்தில் பட்டமொன்றுடன் இரண்டு (02) வருட கால பட்டப் பின்படிப்ப ஆராய்ச்சிப் பட்டம் அத்துடன் இயைபுடைய துறையில் கலாநிதிப் பட்டம் மற்றும் பிரிவுத் தலைவர் / முதன்மை ஆராய்ச்சி அலுவலராக நான்கு (04) வருட காலம் திருப்திகரமான சேவையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் பல்வகை ஒழுக்கக் குழுக்களுக்கு தலைமை தாங்குதல் மற்றும் வழிநடாத்துவதற்கு நிரூபிக்கப்பட்ட இயலுமை இருத்தல் வேண்டும். மனிதர்கள் மற்றும் ஏனையவற்றை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் வினைத்திறனுடனான முகாமைத்துவம் தொடர்பான அனுபவம் மேலதிகத் தகைமையாகும்.

**சம்பள அளவுத் திட்டம்:**
HM 1-3 (2016) ரூபா . 86,865 – 15 x 2,270 – ரூபா 120,915.00 மாதாந்தம்.

**வயது:** 35 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் ஊடாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

## 02. கணக்காளர்
## ACCOUNTANT

**கடமை விபரம்**
சிரேஷ்ட கணக்காளருடன் கலந்தாலோசித்து நிறுவனத்தின் அனைத்து நிதி செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு பொறுப்பு கூறல்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவக (ICASL) இடைநிலை மட்ட தகைமை அல்லது பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் (CIMA) இடைநிலை மட்ட தகைமை அல்லது சான்றிதழ் பெற்ற மற்றும் கூட்டுரு கணக்காளர்கள் (ACCA) இடைநிலை மட்ட தகைமை அல்லது முகாமைத்துவம் அல்லது வர்த்தகத்தில் நான்கு (04) வருட கௌரவ பட்டதாரிப் பட்டம்.

மற்றும்

மேற்கூறப்பட்ட தகைமைகளை பெற்ற பின்னர் அரசாங்க திணைக்களமொன்றில்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது கீர்த்திவாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**குறிப்பு:** கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கியல் சூழல் அனுபவம் தனித்துவமான அனுகூலமாகும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**
முகாமைத்துவம் அல்லது வர்த்தகத்தில் பட்டதாரிப் பட்டமொன்று அல்லது கணக்கியலில் தேசிய உயர் டிப்ளோமா.

மற்றும்

உரித்தான துறையில் கனிஷ்ட முகாமையாளர் வகுதியின் I ஆம் தரத்திலுள்ள உரித்தான பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட அனுபவம்.

**சம்பள அளவுத்திட்டம் :**
MM 1-2 (2016) ரூ. 54,550 - 10x1,375 - 15x1,910 - ரூ.96,950.00 மாதாந்தம்

**வயது :** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேச்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம்.

## 03. பெறுகை அதிகாரி
## PROCUREMENT OFFICER

**கடமை விபரம்:**
சிரேஷ்ட கணக்காளர்/கணக்காளரின் மேற்பார்வையின் கீழ், ஆகுசெலவுகள், தரம், காலம், பொருட்கள் மற்றும் சேவைகளின் உறுதித்தன்மை ஆகியவற்றை பரிசீலனை செய்து அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நடைமுறைகளுக்கமைவாக அனைத்து பண்டங்கள் மற்றும் சேவைகளின் பெறுகைக்கு பொறுப்பாகவிருத்தல்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முகாமைத்துவம் அல்லது வர்த்தகத்தில் பட்டதாரிப் பட்டம் அல்லது கணக்கியலில் தேசிய உயர் டிப்ளோமா அத்துடன் அரசாங்க திணைக்களமொன்றில்/ கூட்டுத்தாபனமொன்றில்/ சபையொன்றில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வழங்கல்கள் வேலையில் ஒரு (01) வருட பட்டப்பின் தகைமைப் பட்ட அனுபவம் அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றில் நிறைவேற்றுநர் தர பதவி அனுபவம்.

மற்றும்

வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவத்தில் ஒரு (01) வருட சான்றிதழ் கற்கைநெறி.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் வகுதியில் Iஆம் தரத்தில் ஐந்து வருட (05) இயைபான மற்றும் திருப்திகரமான சேவை.

**சம்பள அளவுத்திட்டம் :** JM 1-2 (2016) ரூபா 43,355/- 10x755 - 18 x1,135 ரூபா 71,335.00 மாதாந்தம்.

**வயது :** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேச்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** எழுத்து மூலப் பரீட்சை மற்றும்/அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்.

## 04. பரிசோதனை அதிகாரி
## EXPERIMENTAL OFFICER

**கடமை விபரம்:**
ஆராய்ச்சி அதிகாரி (RO) / சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி (SRO) / முதன்மை ஆராய்ச்சி அதிகாரி (PRO) என்பவர்களின் மேற்பார்வையின் கீழ் விசேடத்துவத் துறைகளின் தரவுகளை வழங்குதல் மற்றும் திட்டமிடல் மற்றும் ஆராச்சி அமுலாக்கத்திற்கு உதவுதல்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / விவசாயம் / தேயிலை தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்த்தல் / பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் ஒரு இளமாணிப் பட்டம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்: (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பெற்றிருத்தல்
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் வகுதியில் (MA 2-2) தொழில்நுட்ப அதிகாரியாக (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) குறைந்தபட்சம் எட்டு வருட (08) திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:**
MA 4 (2016) ரூபா 37, 970- 10x 755 - 15x930 - 5x1,135 – 65, 145.00 மாதாந்தம்.

**வயது :** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேச்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** எழுத்து மூலப் பரீட்சை மற்றும்/அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்.

## 05. விரிவாக்கல் அதிகாரி
## EXTENSION OFFICER

**கடமை விபரம்:**

ஆலோசனை அதிகாரி / சிரேஷ்ட ஆலோசனை அதிகாரி / முதன்மை ஆலோசனை அதிகாரி என்பவர்களின் மேற்பார்வையின் கீழ் தேயிலை மற்றும் அதுசார்ந்த விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத சேவைகளின் ஒருங்கிணைப்பு தொடர்பான அனைத்து விரிவாக்கல் / ஆலோசனை பணிகளிலும் கலந்துகொள்ளல்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / விவசாயம் / தேயிலை தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்த்தல் / பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் ஒரு இளமாணிப் பட்டம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்: (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பெற்றிருத்தல்
2. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் வகுதியில் (MA 2-2) தொழில்நுட்ப அதிகாரியாக (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) குறைந்தபட்சம் எட்டு வருட (08) திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:**
MA 4 (2016) ரூபா 37, 970- 10x 755 - 15x930 - 5x1,135 – 65, 145.00 மாதாந்தம்.

**வயது :** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேச்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** எழுத்து மூலப் பரீட்சை மற்றும்/அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்.

**ஏனைய நன்மைகள்:**

i. இருப்பிட வசதி (முழுமையாக தளபாடமிடப்பட்ட விடுதி) வழங்கப்படும் அல்லது இருப்பிடத்திற்கான பதிலீட்டுப் படியொன்று வழங்கப்படும்.
ii. நிறுவனத்தின் மருத்துவத் திட்டத்தின் நடைமுறையிலுள்ள மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.
iii. சேமலாப நிதி: தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி சம்பளத்தின் 10%ஐ ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்யும்படி வேண்டப்படுவதுடன் நிறுவனமானது 15% (வீதத்தைச்) செலுத்தும். மேலும் நிறுவனமானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% வீதத்தையும் பங்களிப்புச் செய்யும்.
iv. வீட்டுத் தொழிலாளர்கள் (பிரதி ஆராய்ச்சிப் பணிப்பாளர் (உற்பத்தி) பதவிக்கு இது பிரயோகிக்கப்படும்)
v. தேயிலை ஆராய்ச்சி நிறுவன ஊழியர்களுக்கு ஏற்புடைத்தான ஏனைய நன்மைகளும் வழங்கப்படும்.

பதவிகள் நிரந்தரமானவை. பிறப்புச் சான்றிதழின் பிரதி, இயைபுடைய கல்வி மற்றும் ஏனைய தொழில்சார் தகுதிகள், சேவைச் சான்றிதழ்கள், அறிவியல் இதழ்களில் வெளியீடுகள் மற்றும் புதுமையான திறன்கள், நிர்வாக மற்றும் நிர்வாகத் திறன்கள் ஆகியவற்றுடன் முழுமையான சுய தரவை வழங்கும் விண்ணப்பம் மற்றும் விண்ணப்பதாரரின் திறன்களை மதிப்பிடக்கூடிய உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் சகிதம் சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவ்வாறான நிறுவனத் தலைவறூடாகவே அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறான தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு இது வழிவகுக்கும்.

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து google வடிவத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களை பதிவேற்றம் செய்யவும். 2023 செப்டெம்பர் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் ஆதார ஆவணங்களை கீழே கையொப்பமிட்டவருக்கு தபால் மூலம் அனுப்பவும். மேலும் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

**பணிப்பாளர் - பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**




# நம்பிக்கையில்லாப் பிரேரணையும் நம்பிக்கையளிக்கும் உண்மைகளும்

லோரன்ஸ் செல்வநாயகம்

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிற்கு எதிராக பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரேரணைக்கு எதிராக 113 வாக்குகளும் ஆதரவாக 73 வாக்குகளும் அளிக்கப்பட்டு 40 மேலதிக வாக்குகளால் அந்த நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாகவே வாராவாரம் சும்மா இருந்தவன் வாய்க்கு அவல் கிடைத்தாற் போல ஒவ்வொரு விவகாரம் சமூகத்தில் பேசப்படும் விவகாரமாக இருந்து வந்துள்ளது. அவை சமூக ரீதியான முரண்பாடுகளுக்கும் அரசியல் ரீதியான முரண்பாடுகளுக்கும் வழி வகுத்து வருவதையும் குறிப்பிட முடியும்.

அந்த வகையில் தேசிய விளையாட்டுப் போட்டி ஒன்றின் ஆரம்ப நிகழ்வில் நாட்டின் பிரபல பாடகி தேசிய கீதத்தை தவறாக பாடினார் என்ற விவகாரம் சமூகத்தில் பெரிதாக பேசப்பட்டது.

அவருக்கு எதிராக குரல்கள் எழுந்தன. கல்விமான்கள், மதத் தலைவர்கள், நாட்டையும் தேசிய கீதத்தையும் நேசிப்பவர் மத்தியிலிருந்தும் அதற்கு கடுமையான எதிர்ப்புகள் கிளம்பிய நிலையில் குறித்த பாடகிக்கு எதிராக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டன.

அதேபோன்று பௌத்த மதத்துக்கு அவதூறாக கருத்துக்களை முன் வைத்தார் என்ற குற்றச்சாட்டில் கிறிஸ்தவ மத போதகர் ஒருவருக்கு எதிராக விமர்சனங்களும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு ஓரிரு வாரங்களாக அது சமூகத்தில் பேசு பொருளாக அமைந்ததை குறிப்பிட முடியும்.

அதனைத் தொடர்ந்து குருந்தூர் மலை விவகாரம், திருகோணமலையில் விகாரை அமைக்க மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் எழுந்த எதிர்ப்புகள், அது தொடர்பில் பல்வேறு தரப்பினாலும் முன் வைக்கப்பட்டு வந்த சாதக, பாதகமான கருத்துக்கள் சமூகத்தின் பேசு பொருளாக அமைந்தன.

அதனையடுத்து ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பந்தமான செனல்4 காணொளி வெளியிடப்பட்டமை நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அது தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் விமர்சனங்களும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அது தொடர்பில் தேசிய ரீதியில் மட்டுமின்றி சர்வதேச ரீதியான விசாரணைகளையும் முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்றத்திலும் வெளியிலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் நாட்டின் நீதித்துறைக்கு பொறுப்பான அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

சர்வதேச விசாரணை ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது என்பதையும் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எவ்வாறாயினும் அரசாங்கம் அதனை முற்றாக நிராகரித்துள்ளது. அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்பு அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் செனல் 4 பொய்யாக சுமத்தப்படும் குற்றச்சாட்டு என்றும் அதனை முழுமையாக அரசாங்கம் நிராகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்து விவகாரங்களும் அண்மைக் காலமாக பாராளுமன்றத்தில் பேசப்பட்டும், விமர்சிக்கப்பட்டும் ஆளும் எதிர்க் கட்சியின் முரண்பாடான கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் உட்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இத்தகையதொரு பின்னணியிலேயே நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடு, தரமற்ற அல்லது தவறான மருந்துகள், ஊசி மருந்துகள் வழங்கப்பட்டதால் ஏற்பட்டதாக கூறப்படும் மரணங்கள் தொடர்பில் சமூகத்தில் பல்வேறு கருத்துக்களும் விமர்



சனங்களும் துறை சார்ந்த மற்றும் பொது அமைப்புக்கள் ஊடாகவும் முன் வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த விவகாரங்கள் தொடர்பில் பாராளுமன்றத்திலும் வெளியிலும் விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அது தொடர்பில் மூன்று நாள் விவாதத்தை பாராளுமன்றத்தில் கோரியிருந்ததுடன் கடந்த வெள்ளிக்கிழமையோடு அந்த விவாதம் முடிவடைந்து அதற்கான வாக்களிப்பு அன்றைய தினம் நடைபெற்றது.

மிகவும் பரபரப்பாக இடம் பெற்ற இறுதி நாள் விவாதத்தையடுத்து அந்த பிரேரணையை அரசாங்கம் தோற்கடித்தது.

இந்த வாக்களிப்பின் போது ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜேவிபி, சுயாதீனமாக செயல்படும் எதிரணி, கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கை யில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். எனினும் சுயாதீன எதிரணி எம்பிக்களான அதாவுல்லா, ஏ,எச்.எம் பௌசி, அலி சப்ரி ரஹீம், நிமல் லான்சா, லலித் வர்ண குமார ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர். அத்துடன் சபையில் இடம் பெற்ற வாக்களிப்பில் 30 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. விவாதங்களின் போது, எதிர்க் கட்சிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளை அது தொடர்பில் முன்வைத்து, சுகாதார அமைச்சரே அதற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் பதவி விலகுவது சரி என்றும் எதிர்த்தரப்பில் இருந்து கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

அந்த வகையில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிற்கு எதிராக நாட்டு மக்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் வகையில், பாரிய கையெழுத்து வேட்டையொன்றையும் ஐக்கிய மக்கள் சக்தி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுத்தது.

கொரோனா வைரஸ் பரவல், அதனையடுத்து நாட்டில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடி, டொலர் தட்டுப்பாடு, அரசாங்கத்தினால் புதிதாக கொண்டுவரப்பட்ட வரிக் கொள்கை காரணமாக டாக்டர்கள், விசேட மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரத்துறை சார்ந்தவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளமை என பாரிய நெருக்கடி நிலையிலும் அரசாங்கம் அனைத்தையும் சவாலாக ஏற்று நாட்டு மக்களுக்கான இலவச சுகாதார சேவையை சாத்தியமானதாக முன்னெடுத்து வந்துள்ளது என்ற கருத்துக்களை ஆளும் கட்சியினர் இந்த விவாதத்தின் போது முன் வைத்தனர்.

அதேபோன்று மருந்து இறக்குமதியில் ஏற்பட்டதாக கூறப்படும் மோசடிகள், கொரோனா சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானம், மருந்துகள் அல்லது தவறான ஊசிகள் வழங்கப்பட்டதால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பலர் உயிரிழந்துள்ளனர் என்பதாக முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுகளும் எதிர்க்கட்சிகளின் விவாதங்களின் போது முக்கியமானதாக அமைந்தன.

சில குற்றச்சாட்டுகள், குறைபாடுகள் அரசாங்கத்தின் சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அதனை நிவர்த்தி செய்வதற்கு அனைவரும் இணைந்து உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமே தவிர, அதற்காக சுகாதார அமைச்சரை பதவி விலக்குவது தீர்வாக அமையாது என்றும் ஆளும் கட்சியினர் சபையில் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி, நிதி நிலைமைகளை நோக்கும்போது இத்தகைய சிறு சிறு குறைபாடுகள் காணப்படுவது இயல்பு என்றும் சில ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் தெரிவித்தனர். நாட்டின் தற்போதைய நிலையை தெளிவு படுத்தியும் சுகாதார அமைச்சரின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் தொடர்பிலும் அரசாங்கத்தின் சார்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய சிறந்த உரையொன்றை இந்த விவாதத்தில் ஆற்றினார்.

சுகாதாரத்துறை பிரச்சினைகளை அரசியல் நோக்கத்துடன் பார்க்க வேண்டாம் என்பதே அவரது உரையின் சாராம்சமாக அமைந்தது. அந்த உரை பின்வருமாறு:

சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளை அரசியல் நோக்கத்துடன் பார்க்கக்கூடாது. அரசாங்கமானது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் கல்வி, மற்றும் சுகாதார துறைகளுக்கு பாரிய அளவில் நிதியினை ஒதுக்கி வருகின்றது. அந்த வகையில் கடந்த வருடம் மாத்திரம் அரசாங்க வைத்தியசாலைகளில் 53 இலட்சத்திற்கும் அதிகமானோர் சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளனர். சிரேஷ்ட அரசியல்வாதியான துறை சார்ந்த அனுபவமுள்ள அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நெருக்கடியான காலப்பகுதி ஒன்றிலேயே சுகாதார அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றார்.

சுகாதாரத் துறை சேவை கட்டமைப்பில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை அரசாங்கம் ஒருபோதும் மறுக்கவில்லை. எனினும் நெருக்கடியான சூழலிலும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. சுதந்திரத்தின் பின்னர் ஆட்சியிலிருந்த சகல அரசாங்கங்களும் இலவச சுகாதார சேவையை பலப்படுத்துவதற்கு பொறுப்புடன் செயற்பட்டுள்ளன என்பதை வெளிப்படையாக குறிப்பிட முடியும்.

(17ஆம் பக்கம் பார்க்க)


## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

"வாழ்க்கையை மாற்றியமைக்கும் கற்றல் அனுபவத்திற்காக"



கட்டண அடிப்படையில் / கட்டணமின்றி தினவரவு மாணவர்களுக்கான பட்டப்படிப்பு கற்கை நெறிகள் 2023 / 2024 (முழுநேரம்)

கட்டண அடிப்படையில் / கட்டணமின்றி பட்டப்படிப்பை தொடர்வதற்கு பொருத்தமான தகைமையுடைய பரீட்சாத்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - இரத்மலானையில் வழங்கப்படுகின்ற கற்கை நெறிகள்

| பட்டப்படிப்பு கற்கை நெறி (கட்டண அடிப்படையில்) | காலம் | க.பொ.த உ / தரம் |
|---|---|---|
| **பாதுகாப்பு மற்றும் உபாய கற்கைப் பீடம்** | | |
| விஞ்ஞானமாணி உபாய கற்கை மற்றும் சர்வதேச உறவுகள் பட்டம் | 03 வருடங்கள் | எந்தவொரு பிரிவும் |
| **பொறியியல் பீடம்** | | |
| விஞ்ஞானமாணி பொறியியல் பட்டம் (சிறப்பு)<br>• Aeronautical Engineering<br>• Biomedical Engineering<br>• Civil Engineering<br>• Electrical & Electronics Engineering<br>• Electronics & Telecommunication Engineering<br>• Mechanical Engineering<br>• Mechatronics Engineering<br>• Naval Architecture & Marine Engineering<br>• Building Services Engineering<br>Pathway programme (2+2) with the University of Massey, New Zealand for Bachelor of Engineering (Hons) Degree Majoring in Electronics and Computer Engineering or Mechatronics Engineering after evaluation of two years of the KDU programme. (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) | 04 வருடங்கள் | கணிதம் |
| **சட்டப்பிரிவு** | | |
| சட்டமாணிப்பட்டம் | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/ வணிகம் அல்லது *கலை பிரிவு *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| **முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் பீடம்** | | |
| விஞ்ஞானமாணி முகாமைத்துவ மற்றும் தொழிநுட்பவியல் பட்டம் | 03 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம் |
| விஞ்ஞானமாணி முறைசார் செயற்பாட்டு வழங்கல் முகாமைத்துவ பட்டம் | 03 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/ கணிதம்/வணிகம் |
| விஞ்ஞானமாணி சமூக விஞ்ஞானப் பட்டம் | 03 வருடங்கள் | எந்தவொரு பிரிவும் |
| விஞ்ஞானமாணி தரவு அறிவியல் தொடர்பாடல் பிரயோகப்பட்டம் | 03 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/ வணிகம்/ தொழிநுட்பம் / *கலை பிரிவு *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| பிற மொழிகளைப் பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்டம் (TESOL) | 03 வருடங்கள் | எந்தவொரு பிரிவும் |
| **கணனி பீடம்** | | |
| விஞ்ஞானமாணி கணனி பட்டம் (சிறப்பு) (CSSL FULLY ACCREDITED) | 04 வருடங்கள் | கணிதம் / அல்லது வேறு* *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி மென்பொருள் பொறியியல் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் / அல்லது வேறு* *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி கணனி பொறியியல் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் / அல்லது வேறு* *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி தரவு அறிவியல் மற்றும் வணிகப்பகுப்பாய்வு (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் |

| பட்டப்படிப்பு கற்கை நெறி | காலம் | க.பொ.த உ / தரம் |
|---|---|---|
| **இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்** | | |
| தாதிய விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) (கட்டண/கட்டணமின்றி) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதம் |
| இயன் மருத்துவ விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் அல்லது *கணிதம் *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் அல்லது *கணிதம் *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| கதிர் வீச்சியியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் அல்லது *கணிதம் *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| கதிர் வீச்சு சிகிச்சை விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் அல்லது *கணிதம் *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| மருந்தகவியல் விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *உயிரியல் விஞ்ஞானம் அல்லது *கணிதம் *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| **தொழிநுட்ப பீடம்** | | |
| கட்டிட சேவை தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல் தொழிநுட்பமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *கணிதம் அல்லது தொழிநுட்பவியல்* (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| கட்டுமான தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல் தொழிநுட்பமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *கணிதம் அல்லது தொழிநுட்பவியல்* (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| உயிர் மருத்துவ உபகரணங்கள் அமைப்பு தொடர்பான தொழிநுட்பமாணி பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *கணிதம் அல்லது தொழிநுட்பவியல்* *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி பிரயோக உயிரியல் பட்டம் (BBST) | 04 வருடங்கள் | *கணிதம் அல்லது தொழிநுட்பவியல்* (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| **குற்றவியல் நீதி பீடம்** | | |
| விஞ்ஞானமாணி குற்றவியல் பட்டம் (சிறப்பு) | 03 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/ வணிகம் அல்லது கலைப்பிரிவு |

சூரியவெவ தெற்கு வளாகத்தில் நடைபெறும் கற்கை நெறிகள்

| பட்டப்படிப்பு கற்கை நெறி (கட்டண அடிப்படையில்) | காலம் | க.பொ.த உ / தரம் |
|---|---|---|
| **சூழலியல் மற்றும் இடம்சார்ந்த அறிவியல் பீடம்** | | |
| வாஸ்த்து விஞ்ஞானமாணி பட்டம் (சிறப்பு) | 05 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/வணிகம் அல்லது கலைப்பிரிவு (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி அளவியல் பட்டம் (சிறப்பு) (ACCREDITED BY IQSSL) Pathway programme [2+2] with the Western Sydney University, Australia for the Bachelor of Construction Management (Honours) degree | 04 வருடங்கள் | கணிதம் அல்லது வேறு* *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| விஞ்ஞானமாணி அளவியல் விஞ்ஞான பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | கணிதம் அல்லது வேறு* *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |
| தொழில்துறை மற்றும் சேவை தர முகாமைத்துவப் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/வணிகம் அல்லது கலைப்பிரிவு |
| சொத்து மற்றும் முதலீட்டு முகாமைத்துவப் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | எந்தவொரு பிரிவும் |
| **கணனி பீடம்** | | |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பப் பட்டம் (சிறப்பு) (CSSL FULLY ACCREDITED) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/வணிகம் அல்லது கலைப்பிரிவு |
| விஞ்ஞானமாணி தகவல் முறைமையியல் பட்டம் (சிறப்பு) (CSSL FULLY ACCREDITED) | 04 வருடங்கள் | உயிரியல் விஞ்ஞானம்/கணிதம்/வணிகம் அல்லது கலைப்பிரிவு |
| **தொழிநுட்ப பீடம்** | | |
| விஞ்ஞானமாணி தகவல் தொழிநுட்பம் மற்றும் தொடர்பாடல் பட்டம் (சிறப்பு) | 04 வருடங்கள் | *கணிதம்/உயிரியல் விஞ்ஞானம்*/தொழிநுட்பம் *(நிபந்தனைகளுக்கு உட்பட்டது) |

• 2021 / 2022 இல் க.பொ.த உயர்தரத்திற்கு தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
• 2022, 2023 இல் கேம்ரிச் மற்றும் எடெக்சல் உயர்தரத்திற்கு தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

புலமைப்பரிசு வழங்கப்படுவது
* Z புள்ளி (Z Score) பெற்ற மாணவர்கள் 1.8 மற்றும் அதற்கு மேல் விஞ்ஞானமாணி பொறியியல், இளமாணி கட்டிடக்கலை மற்றும் பொறியியல் தொழில்நுட்ப பட்டப்படிப்புகளுக்காக
* ஒவ்வொரு A/L பரீட்சையிலும் 1 முதல் 10 ஆம் இடங்களுக்கு இடையில் இடம் பெற்ற அனைத்து பிரதேச தரவரிசையில் G.C.E A/L தோற்றுவித்த மாணவர்கள். *நிபந்தனைகளுக்கு உட்பட்டது



• தெற்கு வளாகம் சூரியவெவயில் பதிவுசெய்யப்பட்ட மாணவ மாணவியர்களுக்கான தங்குமிட தங்குமிடம் நியாயமான விலையில் வழங்கப்படும்.

மடிக்கணனிக்கான காசோலை (பதிவு செய்யும் அனைத்து மாணவர்களுக்கும்)

i5 LKR 125,000 | i7 LKR 175,000 *நிபந்தனைகளுக்கு உட்பட்டது

கற்கைநெறி கட்டணங்களுக்கான வங்கிக் கடன் வசதிகள் செய்து தரப்படும்.

1. 2023 ஜீலை மாதத்தில் நடைபெற்ற திறன் தேர்வில் சித்திபெறாத விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம்.
2. தகுதித் திறன் தேர்வில் இருந்து தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களின் பெயர்கள் KDU இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அவர்கள் குறித்த பட்டப்படிப்புக்கு மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை.

உங்களது தகைமைகளை பரீட்சிப்பதற்கும் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு https://kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள்

பரீட்சாத்திகள் ஒன்லைன் (Online) மூலமாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க பிரவேசியுங்கள் - https://kdu.ac.lk

2023 செப்டெம்பர் 17 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

பதிவாளர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலான, 10390, இலங்கை.

தொலைபேசி : +0112635039, 0112632028, 0112635268, 0112638656 நீட்டிப்பு : 459, 460
மின்னஞ்சல் : kdudayscholar@kdu.ac.lk

# தூக்கியெறியப்பட்டார் தயாசிறி ஜயசேகர

## வெளிச்சத்துக்கு வந்த தயாசிறி ஜயசேகர, மைத்திரிபால சிறிசேன அணிகளுக்கிடையிலான நிழல் யுத்தம்

கருணாகரன்

**நாட்டின் அரசியற் பொருளாதாரச் சிக்கல்கள் வரவரக் கூடிக்கொண்டு போகின்றன. ஒரு பக்கத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான அழைப்பை விடுத்துக் கொண்டிருக்கிறார். நாடும் தேசிய அரசாங்கம் ஒன்றுக்கான அவசியத்திலேயே உள்ளது. தேசிய அரசாங்கத்தின் கடப்பாடுகளாக இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பது, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது. இவை இரண்டும் மிகமிகமிகமிக முக்கியமானவையாகும். இவற்றினால்தான் இலங்கை இன்று உலக அரங்கில் தலைநிமிர முடியாமல் உள்ளது. உள் நாட்டிலும் நெருக்கடிப்பட்டுக் கொண்டிருக்கிறது.**

ஆகவே தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தே தீரவேண்டும். அல்லது அதற்கிணையான ஒரு அரசியல் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும். இது மிகமிக அவசியமானது. இல்லையெனில் இப்போதைய நிலையையும் விட நாடு மேலும் மோசமடையும்.

ஆனால், அப்படியான சகுனமோ சந்தடியோ காணப்படவில்லை.

பதிலான நிலைமைகள் வேறு கோணங்களில் மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் விதமாகவே நடந்து கொண்டிருக்கின்றன.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் என்று சொல்லிக் கொண்டே இனமுரண்பாட்டை அதிகரிக்கும் வகையிலான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அல்லது அவ்வாறான எதிர்க்குரல்கள் எழும்பொழுது அதைக் கண்டும் காணாதிருக்கிறது அரசாங்கம் என்று ஒரு குற்றச்சாட்டுச் சொல்லப்படுகிறது. இனரீதியான முரண்பாடுகளுக்கு உடன்பாடளிக்க முடியாது என்று ஜனாதிபதி கடுந்தொனியில் சொன்னாலும், நடைமுறையில் அதற்கு எந்த மதிப்பும் அளிக்கப்படுவாதகக் காணவில்லை.

அடுத்தது, தேசிய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதாகச் சொல்லும் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையும் பொருளாதார நடவடிக்கைகளும் மேலும் அதனை அதிகரிக்கும் விதமாகவே உள்ளது. அதை எரிபொருள் விலையேற்றம் தொடக்கம் வேலைவாய்ப்பின்மை, நாட்டை விட்டு வல்லமையாளர்கள் வெளியேறுவது வரையில் காண முடியும்.

இவை ஒரு புறமிருக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தயாசிறி ஜயசேகர தூக்கி எறியப்பட்டிருக்கும் விவகாரம் கட்சிக்குள்ளும் வெளியிலும் எத்தகைய தாக்கங்களை உண்டாக்கியிருக்கின்றன என்று பார்க்கலாம். தயாசிறி பொதுச்செயலாளர் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டுள்ளார் என்பது மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை வழங்கியது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன. மிக நிதானமாகச் சிந்தித்துத்தான் அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பாரா என்பது கேள்வியே! எப்படியோ இப்போது மைத்திரிபால இந்தக் கடுமையான தீர்மானத்தை எடுத்துள்ளார். மைத்திரிபால சிறிசேன இந்தத் தீர்மானத்தை எடுத்தாலும் அதற்கான மறைமுகக் காரணம், ராஜபக்ஷவினரும் என்பதுதான் அரசியல் நோக்கர்களின் அபிப்பிராயம்.





தயாசிறியைப் பகைத்துக் கொண்டு பொதுஜனபெரமுனவோடும் ஜனாதிபதியேடும் நெருங்க வேண்டிய அவசியம் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏன் ஏற்படுகிறது? முன்னரைப்போல கட்சிக் கட்டமைப்பு, அதன் கொள்கை, அதன் பயண வழி, அதற்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்படுதல் என்ற உயரிய அரசியற் பண்பும் இலட்சிய நோக்கும் இப்போதில்லை. இன்றைய நோக்கு என்பது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுதல் என்பதாகி விட்டது. ஆகவே தற்போதிருக்கும் அரசாங்கத்துடன் இணைந்து பெறக்கூடியதைப் பெற்று விட வேண்டும் என்று கருதப்படுகிறது. அடுத்தது, அதிகாரத்தில் இருந்து பழக்கப்பட்டதன் வழியாக அதிகாரமற்ற நிலையில் அரசியற் பணிகளை முன்னெடுக்க முடியாது. என்பதால் எப்படியோ எந்த வழியிலாவது அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். அல்லது அதிகாரத் தரப்புகளோடு இணைந்து நிற்க வேண்டும் என்று கருதுவது.

இவையே மைத்திரிபாலவை தயாசிறிக்கு எதிரான புள்ளியில் நிறுத்தியுள்ளன.

இதேவேளை இதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் என்ன தொடர்பு? என்று யாரும் கேட்கலாம். தயாசிறியே அதைச் சொல்கிறார். "அரசாங்கத்தின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே தனக்கு இந்த அநீதி இழைக்கப்பட்ட"தாக. மேலும் அவர் சொல்கிறார், "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருக்கும் சிலர் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட விரும்புகிறார்கள். இதனை நான் கடுமையாக எதிர்க்கிறேன். கட்சியை மிக நெருக்கடியான சூழலில் இருந்து காப்பாற்றி வந்திருக்கிறேன். அந்தப் பொறுப்பு எனக்குண்டு. ஆகவே அதை நோக்கியே நான் செயற்படுவேன். இதனைப் புரிந்து கொள்ளாமல் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன செயற்படுகிறார். எதிர்த்தரப்புகளான பொதுஜன பெரமுனவும் ஐ.தே.கவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்தவே விரும்புகின்றன. அதற்கு நாம் இடமளிக்க முடியாது" என்று.

தொடக்கத்திலிருந்தே பொதுஜன பெரமுனவையும் ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் எதிர்த்துக் கொண்டேயிருக்கிறார் தயாசிறி.

பொதுஜன பெரமுனவும் ஐ.தே.கவும் இணைந்து ஆட்சி நடத்துவது ஒன்றும் புதியதோ ரகசியமானதோ இல்லை. ஆனால், இதில் எப்படி மைத்திரிபால சிறிசேனவும் அவருடைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கொள்ள முற்படுகின்றன என்பதே கேள்வி. அப்படியென்றால் ஜனாதிபதியின் அழைப்பைப் பகிரங்கமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொண்டு தேசிய அரசாங்கத்தை உருவாக்கக் கோரலாம். அப்படி அதை அமைக்கலாம்.

ஆனால், அப்படி ஏதும் நிகழவில்லை. இங்கே நிகழ்வதெல்லாம் திரைமறைவு நிகழ்வுகளும் ஏற்பாடுகளும் அதற்கான பேரங்களும்தான்.

இதனால்தான் பிரச்சினைகளும் பிளவுகளும் உண்டாகின்றன. இந்தப் பிரச்சினைகளாலும் பிளவுகளாலும் கட்சிகள் தமது தலையை,கட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்கே முழுமையாகப் பயன்படுத்தும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. நாட்டையும் மக்களையும் குறித்துச் சிந்திப்பதற்கான அவகாசத்தைத் தடுத்து விடுகின்றன.

இது சிங்களக் கட்சிகளுக்குள் மட்டும்தான் நிகழ்கிறது என்றில்லை. தமிழ்க்கட்சிகளுக்குள்ளும் தாராளமாக நடக்கிறது.

எனவே அதிகாரத் தரப்புகள் இதை ஒரு பொறிமுறையாகவே வைத்துக் கொண்டு சித்து விளையாடுகின்றன.

இதை விளங்கிக் கொண்டோ விளங்காமலோ செயற்படுகிறார் மைத்திரிபால சிறிசேன என்றே கருத வேண்டியுள்ளது. ஏனென்றால் தயாசிறி சொல்வதைப் போல எந்த நிபந்தனையும் இல்லாமல், வழங்கப்படும் உத்தரவாதங்களுக்கு எந்த உறுதிப்பாடும் இல்லாமல் அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட முடியாது என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரையில் சரிதான். காரணம், அரசாங்கத்தில் இப்போதும் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருப்பது பொதுஜன பெரமுனதான். பொதுஜன பெரமுனவுடன் எந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணக்கப்பாட்டைக் கொள்ள முடியும்? அப்படி இணக்கப்பாட்டைக் கொண்டாலும் அது கட்டுக்குள் அடங்காத ஒன்று. ஆகவே இதைப் புரிந்து கொள்ளாமல் வெறுமனே நம்பிக்கையின் அடிப்படையில் கைகளைப் பிணைத்தால் அதன் தீர்மானங்களின்படியே மைத்திரிபாலவும் சுதந்திரக் கட்சியும் செயற்பட வேண்டியிருக்கும்.

பொதுஜன பெரமுனவோடு இணைந்து செயற்பட முடியாது. அப்படிச் செயற்படுவதற்கான நியாய ரீதியான கனிவோ சூழ்நிலை அவசியங்களோ இன்னும் ஏற்படவில்லை. ஆகவே இந்த நிலையில் பெரமுனவுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்பட முயற்சிக்குமானால் அது சுதந்திக் கட்சியையே கடுமையாகப் பாதிக்கும். இதனைச் சரியாகக் கணிப்பிட்டுள்ளார் தயாசிறி. கட்சிக்குள்ளிருக்கும் அபிலாசைப் பிராணிகளை தயாசிறி உள்ளே கடுமையாக எச்சரித்தும் அவர்களுடன் கடுமையாக மோதியும் வந்திருக்கிறார் என உள்வீட்டுத் தகவல்கள் உண்டு.

எந்த நிலையிலும் விட்டுக் கொடுப்புகளற்றவராகவும் கட்சி ரீதியாக இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டவராகவும் தயாசிறி கருதப்படுகிறார். ஆகவே இதற்கு எதிரான ஒரு சூழல் கட்சிக்குள் இருக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. இதனை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கையாள்கின்றன எதிர்த்தரப்புகள், எதிர்த்தரப்புகளின் வலைக்குள் சிக்கி விட்டார் மைத்திரிபால சிறிசேன என்று கருதப்படுகிறது.

இதேவேளை தயாசிறியோ தன்னைத் தூக்கியெறிந்ததை அப்படியே ஏற்றுக் கொண்டு ஒதுங்கிப் போகவுமில்லை. வெளியே நின்று புலம்பவுமில்லை. அவர் அப்படியான ஆளுமையுமல்ல. இதனால் அவர் நீதிமன்றத்தை நாடியுள்ளார். இதற்கமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் என்ற அடிப்படையில் தயாசிறி ஜயசேகரவின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கு கட்சி எடுத்த தீர்மானத்தை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மறுத்துள்ளது.

அத்துடன், தயாசிறி ஜயசேகர வகித்து வந்த கட்சியின் செயலாளர் நாயகமாக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட சரத் ஏக்கநாயக்கவுக்கு எதிராகவும் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியின் அரசியலமைப்புக்கு முரணான வகையில் தனது கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்தியமைக்கு எதிராகவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தயாசிறி ஜயசேகர சமர்ப்பித்த முறைப்பாட்டின் ஆரம்பக்கட்ட பரிசீலனைக்கு அமைய கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதானகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஆகவே நிலைமை மேலும் சிக்கலடைந்துள்ளது. இதனால் நெருக்கடிக்குள்ளாகியிருப்பவர் தயாசிறி ஜயசேகர என்பதையும் விட மைத்திரிபால சிறிசேன என்றே சொல்ல வேண்டும். கூடவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும்தான். இதுவரையும் கட்சிக்குள் நிலவிவந்த தயாசிறி ஜயசேகர – மைத்திரிபால சிறிசேன என்ற இரு அணிகளுக்கிடையிலான நிழல் யுத்தம் இப்பொழுது வெளிப்படையாக நிகழத் தொடங்கியுள்ளது.

இதனால் உடனடிப் பயனைப் பெறவுள்ளவை பொதுஜனப் பெரமுனவும் ஐ.தே.கவும்தான். அடுத்த நிலையில் சஜித் பிரேமதாசவின் தேசிய மக்கள் சக்தியும் ஜே.வி.பியும்.

அடுத்தொரு தேர்தலை எதிர்நோக்கியுள்ள சூழலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நடக்கும் இந்த உள்வெடிப்புகள் அதனைக் கடுமையாகப் பாதிக்கும். அதன் தாக்கம் நாட்டின் அரசியற் தலைவிதியிலும் பாதிப்பை உண்டாக்கும்.

இலங்கை அரசியற் கொந்தளிப்புகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. சனல் 4 இன்னொரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டுள்ளது. இதுவும் அரசாங்கத்துக்கு இன்னொரு புதிய தலையிடியே.

## தமிழகத்தில் இலக்கிய விருது பெறும் மாத்தளை பெ. வடிவேலன்

மாத்தளை வடிவேலனின் "வல்லமை தாராயோ" என்ற சிறுகதை தொகுதி தமிழ் நாட்டில் மிகப்பெரிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களின் வாழ்கையின் அவலங்களை மிக யாதார்த்தமாக சித்தரிக்கும் இலக்கிய தொகுப்பாக இந்த சிறுகதை தொகுதி தமிழ் அறிஞர்கள் மத்தியில் பெரும் பாராட்டை பெற்றுள்ளது. இந்த அங்கீகாரத்திற்கு அடையாளமாக "தாய்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தலைவருமான முனைவர் டாக்டர் குமார் ராஜேந்திரன் விஷேட இலக்கிய விருதாக மாத்தளை வடிவேலனின் "வல்லமை தாராயோ" என்ற சிறுகதை தொகுப்புக்கு இலங்கை நாணயத்தில் ஒரு இலட்சம் ரூபாய் விருது வழங்கி கௌரவிக்க உள்ளார்.

மலையக மக்களின் வாழ்க்கையை தமிழக மக்களுக்கு எடுத்துச் சொல்லும் சிறந்த சிறுகதை நூலாக இலங்கையில் வெளிவந்த "வல்லமை தாராயோ" என்ற தொகுதி இடம்பெறுகின்றது என்று புகழ் பூத்த ஊடகவியலாளரும், துக்ளக், குமுதம், ஜெயா, விஜய் தொலைக்காட்சி நிறுவனத்தில் பணியாற்றியவரும் தற்போது "தாய்" சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியருமான தமிழகத்தின் மிகச் சிறந்த நடுவர்கள் குழுவைச் சேர்ந்த மணா தெரிவித்துள்ளார்.



மாத்தளை வடிவேலன்



டாக்டர் குமார் ராஜேந்திரன்

லண்டனில் இருந்து பேராசான் மு.நித்தியானந்தன் இந்த தொகுதிக்கு வழங்கிய முன்னுரை, மாத்தளை வடிவேலனின் எழுத்தாற்றலை தமிழக வாசகர்களுக்கு கொண்டு செல்வதில் பெரும் வெற்றி பெற்றுள்ளது. பதிப்பாளரும் எழுத்தாளருமான எச்.எச்.விக்கிரமசிங்கவின் (மாத்தளை செல்வா) பெரும் முயற்சியில் தொகுக்கப்பட்டு, கலை ஒளி முத்தையா பிள்ளை ஞாபகார்த்தக்குழு இந்நூலை வெளியிட்டுள்ளது.



கிழக்குப் பல்கலைகழக தமிழ் கற்கைகள் துறை மாதாந்த இலக்கிய நிகழ்வில் பேராசிரியர் சி.சந்திரசேகரன் தலைமையில் அறிமுகம் செய்தது, மாத்தளை வடிவேலனுக்கு மற்றுமொரு கௌரவம் ஆகும்.

சாரல் நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்', டாக்டர் குமார் ராஜேந்திரன் அனுசரணை வழங்கிய சி.வி. வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும்', மு. நித்தியானந்தனின் 'மலையக சுடர் மணிகள்', 'மலையக இலக்கியம் சிறுமை கண்டு பொங்குதல்'. மாத்தளை வடிவேலனின் 'வல்லமை தாராயோ' ஆகிய நூல்கள் வரிசையில் இலங்கையில் புகழ் பூத்த எழுத்தாளர் சாலிய குணவர்த்தன சிங்கள மொழியில் மொழி பெயர்த்த 14 சிறுகதைகளை, மத்தளை மலரன்பன் தமிழில் மொழி பெயர்த்த "அமைச்சர்களின் முகம்" என்ற பிறமொழி சிறுகதைகளும், "தெளிவத்தை ஜோசப் கதைகள்" 59 கதைகள், 557 பக்கங்களில் விரைவில் வெளிவர இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் டிசம்பர் மாதம் நடைபெற இருக்கும் 'மலையகம் 200' முழுநாள் ஆய்வரங்கில் மாத்தளை வடிவேலனின் ஒரு இலட்ச ரூபாய் இலக்கிய விருதினை தமிழக பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்க உள்ளார்.

தினகரன் வாரமஞ்சரி

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

வர்த்தகம்

207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

077438169 கண்டியில் ஹோட்டல், தோட்டம், வீடு, வெற்றுக் காணி, வியா பாரஸ்தலம் கொள்வனவு செ ய்வதற்கும், விற்பதற்கும். 0777282147. 052211

வேலைவாய்ப்பு

320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

எமது ஹோட்டலுக்கு அனுபவமுள்ள ரொட்டி பாஸ்மார்/ ரைஸ் அன்ட் க றி பாஸ்மார் உடன் தேவை. ஆசிரி ஹோட்டல் கம்பஹா (கூடுதல் சம்பளம்) 0768039890/ 071 6205828 056905

325 தொழில்துறை பொது

கொழும்பு தொட்டலங்க சேதவத்த பாதையிலுள்ள பேக் தொழிற்சாலை நிறுவனத்திற்கு க.பொ.த. சா/த பரீட்சையில் சித்தியுடன் கணனியில் கணக்கிடல் செய்யும் கொழும்பு புறநகரிலுள்ள ஆண்/ பெண் ஆகியோருக்கு வேலையு ண்டு. சம்பளம் நேர்முகப் பரீட்சையில் தீர்மானிக்கப்படும். 0777106502, 0740327786. 052301

காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

மாலபே சந்திரிக்கா குமாரதுங்க மாவத்தைக்கு அருகாமையில் 52 பேர்ச்சில் இரு மாடி வீடு மற்றும் 2 அனெக்ஸ், நீச்சல் தடாகம், 4 குளியலறைகள் ஆ கிய ன விற்பனை க்குண்டு. 480 இலட்சம் (48 மில்லியன்) தொடர்புகளுக்கு தில்ருக் 0777696886, 0717696885 056514

617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கடவத்த எல்தெனிய 1KM அதிவேக நெடுஞ்சாலை பிரவேசம் 20 பேர்ச் காணி வீட்டுடன். 4/ 2 படுக்கையறைகளுடன் விசாரணைகள் 0773913224, 0112970238 056557

ராகம தேவத்த வீதி, சியம்பலாகஹவத்தவில் அமைந்துள்ள சிக்கலற்ற உறுதியுடன் 21 பேர்ச் காணி விற்பனைக்கு. தேவத்த பெசிலிகா சேர்ச் இற்கு 500M. ராகம நகரிற்கு 3 KM. கட வத்த அதிவேக பிரவேசத்திற்கு 3 KM. ஒரு பேர்ச் விலை ரூ. 525, 000/ அழையுங்கள். 0777900715 / 0767128098/ 071 3853930 / 071 9970504 056718

வத்தளை, எலகந்த வீடு விற்பனைக்கு 300 இலட்ச ம். பேசித்தீர்க்கலாம். 0742609373 056695

வத்தளை, மாபோல, கட்டியாவத்த வீதி மேல் மாடி வீடு 04 படுக்கையறை, 02 கார் கராஜ், 03 சுற்று மின்சாரம். 10 பேர்ச் காணி 2900 சதுர அடி, அதிகூடிய குடியிறுப்பு, பாதுகாப்பான அமைவிடம் 38 மில்லியன். 0773058967 055960

621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி கிரிபத்கும்புற ஆடம்பர வீடு விற்பனைக்கு. தூய உறுதி 4 படுக்கையறைகள் மற்றும் ஊழியர் படுக்கையறை, 3 குளியலறைகள் ஊழியர் வசதிகள் வேறாக, 5950 சதுர அடி நான்கு மாடி. வீடு (AC / Hot Water, Solar) விற்பனைக்கு. உரிமையாளர் வெளிநாடு செல்கிறார். 0775423453 தரகர்கள் வேண்டாம். சிங்களம், ஆங்கில மொழிகளில் அழையுங்கள். 056091

623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

மனோரம்மிய காட்சிகளைக் கொண்டு குளிர்ச்சியான மலை நாட்டின் சுகத்தை அனுபவிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக சிறந்த வர்த்தக மற்றும் குடியிறுப்பு காணித் துண்டுகள் 100. ஒரு காணித்துண்டு 25 இலட்சம். விசேடக் கழிவுகளுடன் வட்டி இன்றி தவணைக்கொடுப்பனவு. அழையுங்கள் சிரிபெல லேன்ட்ஸ் 0702484848 057078

ஹட்டன் நகருக்கு அருகில் 10 பேர்ச் கொண்ட பெறுமதியான காணித் துண்டுகள் 1000 விற்பனைக்கு. குழாய் நீர் மற்றும் மூன்று சுற்று மின்சாரத்துடன் ஓர் காணித்துண்டு 25 இலட்சம். தவணைக் கொடுப்பனவு மற்றும் விசேட கழிவுகளுடன் உங்களது காணி இன்றே ஒதுக்கிக்கொள்ள சிரிபெல லேன்ட்ஸ். 0702484848 057075

636 வீடு சொத்து யாழ்ப்பாணம் மாவட்டம் விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரில் 46 பேர்ச் காணி கே.கே.எஸ் வீதியிலிருந்து 100 மீற்றர் வண்ணார் பண்ணையில் விற்பனைக்கு. 1 பேர்ச் 1.8மி. தொடர்பெண் k drange@hotmail.com. 074186762. 054065



# இலங்கை வங்கி

## பெறுமதி வாய்ந்த ஆதனங்கள் விற்பனைக்கு

| ஆதன இலக்கம் | நகரம் | ஆதனம் | ஆதனத்தின் தன்மை | அளவு |
|---|---|---|---|---|
| 511 | ரணால | முன்னாள் சின்டெசி லிமிடெட் 606ஜ, ஸ்ரீசுமண மாவத்தை, நவகமுவ, ரணால எனும் முகவரியில் அமைந்துள்ள 'கொஸ்ஹேனவத்த' எனும் ஆதனம்பாரபந்தச் சான்றிதழ் உள்ளது. | காணி மற்றும் தொழிற்சாலை வளாகம் | 9 ஏக்கர் 01 ரூட் 17.0 பேர்ச் |

மேற்படி ஆதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து (கொள்வனவாளர்களிடமிருந்து மட்டும்) விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படும் 50,000.00 ரூபாயை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் வைப்புச் செய்வதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை 2023-09-25ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை "PROP/06/2023" மற்றும் ஆதன இலக்கம் குறிப்பிடப்பட்ட உறையினுள் இட்டு 2023-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். 2023-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும் கேள்விகளைத் திறக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை இலங்கை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு: தயவு செய்து வார நாட்களில் தொடர்புகொள்ளவும்:**

முகவரி: **இலங்கை வங்கி**
**பெருநிறுவன அறவிடல் - கையகப்படுத்தப்பட்ட ஆதனங்கள் பிரிவு,**
**3வது மாடி, தலைமை அலுவலகம்,**
**இலங்கை வங்கிச் சதுக்கம்,**
**இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.**

தொலைபேசி: உதவிப் பொது முகாமையாளர் (பெருநிறுவன அறவிடல்) - 011-2203410 / 011-2386080
சிரேஷ்ட முகாமையாளர் - 011-2321170 / 011-2203429 / 076-9627068
உதவி முகாமையாளர் - 011-2203470 / 0718418898

மின்னஞ்சல்: mgrforeclosed@boc.lk

**"www.boc.lk" எனும் இணையதளத்தில் விசேட அறிவித்தல் பகுதியின் கீழுள்ள கையகப்படுத்தப்பட்ட ஆதன விற்பனையைப் பார்க்கவும்.**

1975 BOC CALL CENTRE www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067


අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
දිවයිනේ අඩුම මිල
ගණන් යටතේ
විවිධ වර්ණයෙන්
විවිධ හැඩයෙන්
යුක්තව ඔබට
අවශ්‍ය ණණකමින්.
දකුණු කොරියාවෙන්
ආනයනය කරන ලද
(Zinc Aluminium Sheet) රු.175/- සිට
වැහිපිලි සහ සෙවිලි
0777 394 679 | 070 663 33 88

APARTMENT BUILDING FOR SALE
KALUBOWILA
HOSPITAL ROAD FACING
14.5 PERCH
FOR STOREY WITH SIX APARTMENTS BUILDING AND 9.5 PERCH BARE LAND
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814

PELIYAGODA
WAREHOUSE FOR SALE
40 perches 10000 sq. feet ample parking 40 feet container access, water, electricity staff washroom LABOURER, security room all facilities
Contact : 0712 791 881

YEAR END STOCK CLEARENCE
EXPORT QUALITY SUMMER HATS





FOR INQURIES
0777 265 485
0712 832 027
YASH
YASH HAT LANKA (PVT) LTD.
EXPORT PROCESSING ZONE, BIYAGAMA, MALWANA
INQURIES@YASHHAT.COM
WWW.YASHHAT.COM

ARIYARATHNE CONSTRUCTIONS
අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම් දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයක
ලංකාවේ අඩුම මිල
අමානෝ වහල, කාප්ප වහල, විදුරු වහල, විනිවිද වහල, සහ කැනපි
සියලුම ඇලුමිනියම් වැඩ
WAREHOUSE CONSTRUCTION
ගේට්ටු, අත්වැල් නවීන විලාසිතාවේ ග්‍රිල්,
Polycarbonate
අමානෝ පිලි 0.47 (mm)
විශ්වාසයෙන් වගකීමෙන් හා උසස් නිමාවෙන්...
0777 24 23 19/ 0711 24 23 19
senakaariyarathne@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/Ariyarathne Constructions

Land For Sale
RATMALANA
24.1 P Square Land
Facing Attidiya Road,1 km to Galle Road
Title of deeds established by District Courts.
No Brokers.
Contact : 0777 788 732

SWINBURNE UNIVERSITY OF TECHNOLOGY
STUDY IN AUSTRALIA
EMBARK ON YOUR ACADEMIC JOURNEY THIS OCTOBER WITH SWINBURNE UNIVERSITY!
Discover Your Passion, Choose Your Program
- Bachelor of Business
- Bachelor of Computer Science
- Bachelor of Information and Communication Technology
- Bachelor of Cybersecurity
- Master of Business Administration
- Master of Business Information Systems Master of Information Technology (Professional Computing)

Contact Us
RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES
No: 351/1 Duplication Road, Colombo 03, Sri Lanka.
+94 11 5300 110
colombo@rimigrations.com
www.rimigrations.com
( MARA Number 1463863)

FAST FREE INSPECTION ACTION
கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு
LEEMEKA PEST SOLUTIONS
Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
Leemaka Industries (Pvt)Ltd.
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

CHEFF SCHOOL
THE BEST TRAINING CENTER IN COLOMBO
DIPLOMA IN COOKERY
DIPLOMA IN BAKING PASTRY
International Diploma recognized all over the world
3 MONTHS & 6 MONTHS
WORK EXPERIENCE GIVEN
best opportunity to get foreign Jobs
CONTACT US ON WHATSAPP
+94 77 914 4219

வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

VAT, SVAT மற்றும் வரி திரும்பல்களுக்கான சேவைகள் ONLINE e - சேவைகள
உள்நாட்டு இறைவரித் திணைக்கள இணையத்தளத்தில் உள்நுழைந்து VAT, SVAT மற்றும் வரி திரும்பல்களுக்கான படிவங்களை பூர்த்தி செய்து Online ஊடாக சமர்ப்பித்தல்
கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீடல்கள் (Quick Books)
Credit Voucher follow up E-mail:q.contra@yahoo.com
Q Contra - Accounting Consultants
இலங்கையில் கணக்கியலில் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனம்
இல. 88/24, வேகந்த வீதி, கொம்பனித் தெரு, கொழும்பு - 02.
தொடர்பு : 0777892966

DIESEL GENERATOR FOR SALE
WE ARE A BOI EXPORT MANUFACTURING COMPANY LOCATED IN BIYAGAMA. WE HAVE PLANNED TO SELL OUR GENERATOR ON AN URGENT BASIS.





PRICE 5.2M
- 150 KW / 187 KVA
- Voltage 230 / 400 V
- Sound proof
- Running Hrs. – 13 Hrs.
- Brand - RUIFENG
- COO – China
For more information please contact
Sanjeewa - 0777 265 485
Sachini - 0712 832 027

RANGE ROVER
QUALITY USED PARTS
IMPORTED FROM EUROPE
Less than 1/2 PRICE
CALL € USED CAR PARTS
HOTLINE 077 724 2711

තාර දැමීම
සියළුම අමුද්‍රව්‍ය සමග
පාර කැඩිලද ? විසඳුම අපෙන්
ඔනෑම වර්ගයක තාර විකිණීමට ඇත.
දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයකට ප්‍රවාහනය කර දෙනු ලැබේ
කර්මාන්ත ශාලා, හෝටල් රෙපෙයාර් කිරීම සහ පින්තාරු කිරීම
තාර දැමීම, කාපට් කිරීම, බොරළු යොදා පාරවල් සකස්කිරීම, වී වේලන කමත් තාර දැමීම, බෝක්කු සහ කාණු සකස් කිරීම, ඉන්ටර්ලොක් ගල් ඇතිරීම.
APSARA GLOBAL HOLDINGS
ඔබගේ නිවසේ හෝ ආයතනයේ සියලු ඉදිකිරීම් එකම තැනකින්...
දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයකට පැමිණ සිදුකරදෙනු ලැබේ.
0778 383 834
Email. asankasameera417@gmail.com

ELDERLY CARE SERVICE
AT JEEWAKA PRIVATE HOSPITAL, NO. 37, HORANA ROAD, PADUKKA.
LOCATION - PADUKKA, 30KM AWAY FROM COLOMBO





- Surrounded by Natural vegitation, clean environment and away from the dusty and polluted life style.
- Large rooms with attached Bathrooms, all meals provided with supplements. Nursing care 24 hours.
- Daily visits by Doctor, FREE OF CHARGE
- Specialist medical Consultation visit at short notice.
- AMBULANCE SERVICE.
- 24 Hours Emergency care Government & Private hospital in the vicinity, if any advanced treatment is required.
- Short & Long stays
- Full Package (Per day) starting from Rs. 2500.00 upwords
- Managed by well trained Medical specialist and professional staff from Jeewaka Private Hospital Padukka & Medical Director is a Consultant Physician with specialized training in elderly care, who has worked in UK as an Elderly care consultant

For more information contact : 0777 328 242, 0778 901 222
JEEWAKA PRIVATE HOSPITAL PADUKKA - 0112 859 157 Web: jeewakaprivatehospital.lifegroup.lk


## வாரமஞ்சரி BUDGET adz

## போட்டோ குறும் விளம்பரம்



Mercedes Benz 2017 – C-180, 70,000km, Seat Heater, Paddle shift, Leather electric memory seats, 18.5 Million. Price Negotiable. 0773922655
kub-1



Micro Rhino 2013, Registered in 2017, 7 Seater, Dual AC, Rs. 2,450,000/-. 0763065024
kum-1



Nissan Atlas GL-xxxx, 1996, TD 25 engine, in running condition, Just low, Power steering, Price 1,450,000/-, No finance, Minuwangoda. 0761643477
kun-1



Discovery4 HSE, luxury premium package, All luxury options, 360 Camera view, Rotary gear, Sunroof, TV+Media, in excellent condition. 0773446648
kud-1


Advertise Here
வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# மூளைசாலிகளின் பெருமளவிலான வெளியேற்றம்; கடுமையான எதிர் நடவடிக்கைகள் பலன் தருமா?

**இலங்கையிலிருந்து மருத்துவ நிபுணர்கள் சொல்லாமல் கொள்ளாமல் நாட்டை விட்டு ஓடுகிறார்கள் என்றும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் சுகாதாரத் தரப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

மருத்துவ நிபுணர்கள் மட்டுமன்றி மருத்துவ துணைச் சேவைகளைச் சேர்ந்த நிபுணர்களும் அதிகளவில் வெளியேறி வருவதால் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் மாத்திரமன்றி தனியார் மருத்துவமனைகளிலும் ஆட்பற்றாக்குறை ஏற்பட ஆரம்பித்துள்ளது. இவ்வாறு வெளியேறுபவர்கள் இப்போது புதிதாகப் பட்டம் பெற்று வந்த மருத்துவர்கள் அல்லர். மருத்துவத்துறையில் நிபுணத்துவமும் நீண்டகால அனுபவமும் திறமையும் கொண்டவர்கள். அவர்களின் வெளியேற்றம் நாட்டின் அரசாங்க சுகாதாரத்துறையை மாத்திரமன்றி தனியார் துறை மருத்துவ சேவைகளையும் ஆட்டங்காண வைத்திருக்கிறது. ஏற்கெனவே ஆஸ்பத்திரிகளில் சந்தேகத்திற்கிடமான வகையில் ஏற்பட்ட உள்நோயாளிகளின் மரணங்கள் தரமற்ற மருந்துகள், தரமற்ற கருவிகள் என்று அரசாங்க சுகாதார சேவைகளின் தரம் குறித்த சந்தேகங்களும் கேள்விகளும் எழுப்பப்பட்டு வரும் நிலையில், மருத்துவ துறைசார்ந்த நிபுணர்களின் வெளியேற்றம் மருத்துவ மனைகளின் முக்கிய பிரிவுகளை முடக்கி மூடவைத்திருக்கிறது. அரச மருத்துவமனைகளில் ஏற்பட்ட மரணங்கள் மருந்துகளின் தரம் மற்றும் மருத்துவ சேவைகளின் தரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது சர்வ சாதாரணமாக ஆஸ்பத்திரிகளுக்கு பக்கத்தில் தான் மலர்ச்சாலைகளும் இருக்கும் என்றும் நோயாளிகள் மரணிப்பது சகஜம் தான் என்றும் அதிகாரத் தரப்பிலிருந்து பதிலளிக்கப்பட்டது. அதேபோல் ஆரம்பத்தில் மருத்துவர்களின் வெளியேற்றம் குறித்து கேள்வி எழுப்பப் பட்டபோதும் கூட மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதும் திரும்ப வருவதும் சாதாரணமாக நடப்பது தான் என்றும் போனவர்களுக்குப் பதிலாக புதிதாக மருத்துவ அதிகாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் பதிலளிக்கப்பட்டது. ஆனால் இவ்வாறு பதிலளித்தவர்கள் எவரும் தமக்கு நோய் வந்தால் இலங்கையில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சென்று படுப்பவர்கள் அல்லர். மாறாக சிங்கப்பூரில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சென்று சிகிச்சை பெறுபவர்கள். சொந்த நாட்டின் சுகாதாரத்துறை மீது அவ்வளவு நம்பிக்கை அவர்களுக்கு. ஆகவே சாதாரண பொதுமக்கள் நம்பியிருக்கும் இலவச மருத்துவ வசதியின் தரம் குறித்த கரிசனைகள் இவர்களுக்கு இருக்குமென எதிர்பார்க்க முடியாது. சாதாரண காய்ச்சல் தொடக்கம் சிக்கலான புற்றுநோய்மருத்துவம் வரையில் அரசாங்கத்தையே நம்பியிருக்கும் வறியமக்கள் எங்கே போய் முறையிடுவார்கள்? யாரிடம் உதவி கேட்பார்கள்? சமூக ஊடகங்களைத் திறந்தால் மருந்துகளையும் மருத்துவ உபகரணங்களையும் பெறுவதற்காக பொது வெளியில் கையேந்தி உதவி கேட்கும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பரோபகாரிகள் சிலர் உதவினாலும் கூட ஏற்பட்டுள்ள சிக்கலை சமாளிக்க அவை போதுமானதல்ல. நோய்வாய்ப்பட்ட பொதுமக்கள் தனியார் மருத்துவ சேவைகளை நாடிச் செல்லும் அளவுக்கு அவற்றின் கட்டணங்களும், அவர்களால் எட்டக் கூடிய மட்டத்தில் இல்லை. தவித்த முயல் அடிப்பதும் தாராளமாக நடக்கிறது.

மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதும் வருவதும் வழமையாக நடப்பது தான் என்று நம்மை நாமே சமாதானப் படுத்திக் கொண்டாலும் கூட இப்போது மட்டும் ஏன் மிகப்பெரிய எண்ணிக்கையில் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது. இந்தக் கேள்விக்குரிய உண்மைக் காரணங்களை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதை விடுத்து மக்களின் வரிப் பணத்தில் இலவசக்கல்வி கற்ற மருத்துவர்கள் நன்றி கெட்டவர்களாக தமக்கு உதவிய மக்களையும் நாட்டையும் விட்டு ஓடுகிறார்கள் என்று கடுமையான விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. அத்தகையவர்களைக் கறுப்புப் பட்டியலில் போட வேண்டுமென்றும் அவர்களுக்கு செலவழித்த பணத்தை வழக்குப்போட்டு அவர்களிடமிருந்து அறவிட வேண்டுமென்றும் கடும் தொனியில் மிரட்டல் விடப்படுகிறது. ஒரு மருத்துவர் பட்டம் பெற்று தனது பயிற்சிக்காலத்தின் பின்னர் 5 வருடங்கள் நாட்டில் வேலை செய்தாலே அந்த வைத்தியரை உருவாக்க அரசாங்கம் செலவழித்த தொகையை விடக் கூடுதலான சர்வதேச பெறுமதியிலான மருத்துவ சேவையை அவர் சமூகத்திற்கு வழங்கிவிடுகிறார். அதன் பின்னர் அவர் நாட்டில் எவருக்கும் கடனாளி இல்லை. இலவசக் கல்வியால் படித்தவர் என்று அவரை உளவியல் பிளாக் மெயில் பண்ண முடியாது. அதன் பின்னர் அவர் இந்த நாட்டில் இருப்பதும் வெளியேறுவதும் அவரது தனிப்பட்ட விருப்பம். அதை எவரும் குறை சொல்லவோ தடுக்கவோ முடியாது. இலவசக் கல்வியால் படித்தாய் அதனால் இங்கேயே கிடந்து உழல வேண்டும், என்று கூற எவருக்கும் உரிமையில்லை. அரசாங்கம் இலவசக் கல்வியை எல்லோருக்கும் தான் வழங்கியது. அவர்களில் வெகுசிலர் மட்டுமே உயர்ந்த மட்டங்களை எட்டுகிறார்கள். ஒருவரது திறமையும் அர்ப்பணிப்பும் கடும் உழைப்பும் அவரது முன்னேற்றத்திற்கு காரணமாகிறது. அப்படி இல்லை இலவசக்கல்விதான் காரணமென்றால் இலவசக் கல்வி கற்ற அத்தனைபேரும் நிபுணர்களாக மாறியிருக்க வேண்டுமே? ஏன் அவ்வாறு இல்லை? மறுபுறம் நாட்டில் மரியாதையுடன் நிம்மதியாக தாமும்



தமது சந்ததியும் வாழக்கூடிய உகந்த சூழல் இருந்தால் அவர்கள் ஏன் தாம் பிறந்த நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்? ஒரு நாளில் பெரும்பகுதியை ஓய்வின்றி மருத்துவ சேவை செய்து பெற்ற தமது வருமானத்தில் கிட்டத்தட்ட அரைப்பங்கிற்கும் மேல் நேர்வரியாகவும் நேரில் வரியாகவும் செலுத்த அதில் ஒரு குறித்த தரப்பினர் உண்டு குடித்து சொகுசாக வாழும் நிலையில் எதிர்காலம் என்ற ஒன்றே கேள்விக்குறியாக இருக்க நிலைமைகள் சீர்திருந்தும் என்ற நம்பிக்கை அறவே அற்றுப் போன விரக்தி நிலையில் அவர்கள் வெளியேறுவதில் என்ன தவறு?. அவர்கள் செல்லும் நாடுகளில் அதிக வரி செலுத்தினாலும் அதன் பயன்களை அவர்களும் முழுச்சமூகமும் அனுபவிக்கமுடியும். உழைக்கும் போது அதிக வரி செலுத்தினாலும் ஓய்வு காலத்தில் அரசாங்கம் அவர்களை வசதியுடன் கவனிக்கிறது. ஓய்வுகாலம் என்பது நிம்மதியாகவும் மரியாதையாகவும் கழிகிறது. இலங்கையில் அவ்வாறு ஒரு விடயத்தைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா? கடைசியில் எல்லாம் முடிந்து இறந்துபோவது கூட இலங்கையில் செலவு கூடிய விடயமாகவும் கடினமான காரியமாகவும் இருக்கிறது.

இப்போது இலங்கையில் வரிசெலுத்தும் ஒருவர் நோய்வாய்ப்பட்டால் வரிசெலுத்தியவர் என்பதற்காக அரசாங்கம் அவரை இலவச சிறப்பு மருத்துவ வசதி வழங்கிக் கவனிக்குமா? அரசாங்க ஆஸ்பத்திரியில் பத்தோடு பதினைந்தாக அல்லவா போய்க்கிடக்க வேண்டும்? ஒருநாடு நாகரிகமடைந்து வருகிறது வெளிப்படைத்தன்மையுடன் அரசாங்கம் இயங்குகிறது. தான் செய்பவற்றுக்கு அது பொறுப்புக் கூறுகிறது. சமூக பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை பொறுப்பாகக் கவனிக்கிறது. நிகழ்காலத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தாலும் எல்லோரும் சேர்ந்து மீட்டெடுக்கலாம் என்ற எதிர்காலம் குறித்த நம்பிக்கையும் ஒருவருக்கு இருக்குமாயின் அவர் நாட்டை விட்டு ஓடமாட்டார். அந்த நாட்டின், அரசாங்கத்தின் மீது முற்றாக நம்பிக்கை இல்லாத கையறு நிலை ஏற்படும் போதே படித்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் நாட்டைவிட்டு வெளியேறத் தீர்மானிப்பர். மருத்துவத்துறை சார்ந்தவர்கள் மாத்திரமன்றி மத்தியவங்கி ஊழியர்கள், எந்திரிகள், முகாமையாளர்கள், பல்கலைக்கழக கல்வியாளர்கள் உள்ளடங்கலாக எவரால் எல்லாம் வெளியேற முடியுமோ அவர்கள் எல்லாம் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இன்னொரு கொடுமை என்னவென்றால் தாமே சிரமப்பட்டுத் தேடி வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் பெற்று கலாநிதிப் பட்டப் படிப்பு உள்ளிட்ட உயர் படிப்புக்காக வெளிநாடு செல்பவர்களிடம் மூன்று கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய பிணைப்பத்திரத்தை நீட்டுகிறார்கள். நல்ல வருமானம் உள்ள உத்தியோகத்தர்கள் சிலர் அதற்குப் பிணைக் கையெழுத்துப் போடவேண்டும். அத்தகைய பெரிய தொகைக்கு யார் பிணை நிற்பார்? அப்படி மிகப் பெரிய தொகையை பிணையாகக் கொடுத்து ஒருவர் வெளிநாட்டில் படித்துவிட்டு மீண்டும் திரும்பிவர இங்கே அப்படி என்ன கிடக்கிறது? ஆதலால் உயர்படிப்புக்காகப் போகிறவர்கள் இப்போது தாம் வகிக்கும் பதவிகளை இராஜிநாமா செய்துவிட்டுப் போகிறார்கள்.

தாம் செல்லும் நாட்டில் ஆரம்பத்தில் சாதாரண தொழில்களைச் செய்ய நேரிட்டாலும் எதிர்காலத்தில் மரியாதையான ஒரு வாழ்வு கிட்டும் என்ற நம்பிக்கையில் இப்போது இங்கே வகிக்கும் உயர் பதவிகளைத் தூக்கியெறிந்துவிட்டுச் செல்கின்றனர்.

வெளிநாடு செல்லும் நிபுணர்கள் மற்றும் புலமையாளர்களின் மீது கடுமையாக நடந்து அவர்களைக் கட்டுப்படுத்தலாம் என்று நினைக்கலாம். ஆனால் அது சாத்தியப்படுமா?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

## ஜி-20 புதுடில்லி மாநாடு;

# மேற்கு-கிழக்கு பொருளாதார இழுபறியின் மையமாகிறதா?

**உலக அரசியலின் அதிகாரத்துக்கான போட்டியானது கூட்டுக்களை பலப்படுத்துவதிலும், நிறுவனங்களை கட்டமைப்பதிலும் தங்கியுள்ளது. கூட்டுப் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் கொள்கையிலும் வல்லரசுகளது வலு தங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அந்த வரிசையில் ஜி–20 முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பாக விளங்குகிறது.**

ஜி20 நாடுகளது தலைவர்களுக்கான மாநாடு இந்தியாவின் தலைமையில் புதுடில்லியில் நிகழ்ந்து வருகிறது.(09,10.09.2023) இந்த மாநாட்டுக்கு இந்தியா தலைமை தாங்குவதனால் மேற்குலக அதிகார சக்திகளும் கீழைத்தேச அதிகாரம் மிக்க நாடுகளும் கலந்து கொள்வதில் கவனம் கொண்டுள்ளன. ஆனால் இதில் ரஷ்யா மற்றும் சீனத் தலைவர்கள் கலந்து கொள்ளாததே அதிக குழப்பங்களை தந்துள்ளதாக தெரிகிறது. இக்கட்டுரையும் மேற்கு, கிழக்கு இழுபறியின் மையமாக ஜி20 காணப்படுகிறது என்பதை தேடுவதாக அமையவுள்ளது.

இந்தியா தலைமை தாங்கும் ஜி20 நாடுகளின் மாநாட்டுக்கு வளர்ச்சியடைந்த மேற்கு நாடுகள் அதிக முக்கியத்துவம் கொடுத்துவருகின்றன. குறிப்பாக அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலைவர்கள் வருகை தந்துள்ளனர். இதில் இந்தியாவின் நீண்ட நட்பு நாடான ரஷ்யாவும் அதிக முரண்பாடும் போட்டியுமுள்ள நாடான சீனாவின் தலைவர் கலந்து கொள்ளாமையும் கவனத்தை அதிகம் பெற்றுள்ளது. இந்தியா தனது பண்பாட்டையும் பாரம்பரியங்களையும் வெளிப்படுத்தும் அதேநேரம் உலகளாவிய அதிகாரத்துக்கான வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதாரம் சார்ந்த விடயங்களுக்கும் மாநாட்டின் பின்னரான உடன்படிக்கைகளுக்கும் திட்டமிட்டுள்ளது. அதுமட்டுமன்றி சீனாவுடனான இராஜதந்திர உறவினைப் பற்றிய உரையாடலை முதன்மைப்படுத்தத் திட்டமிட்டது. ஆனால் தற்போது அத்தகைய சீனாவின் பங்கினை சீனப்பிரதமர் லீ கியாங் கலந்து கொண்டு வழங்கப் போவதாக சீன வெளியுறவு அமைச்சு மாவோ நிங் அறிவித்துள்ளார். இரு நாட்டுக்குமான இராஜதந்திர உறவுக்கான ஒருமித்த கருத்தினை எட்டுவதுடன் சீனா எப்போதும் இந்தியாவுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளதெனவும் இரு நாட்டின் உறவின் வளர்ச்சிக்கு உதவுமெனவும் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேநேரம் ரஷ்யாவின் தலைவர் மீதான குற்றவியல் நீதிமன்றத்தின் நடவடிக்கை மற்றும் உக்ரைன் மீதான போர் என்பன ரஷ்ய ஜனாதிபதி புட்டின் ஜி20 மகாநாட்டில் கலந்து கொள்வதை தவிர்க்க காரணமாக அமைகிறது. அண்மையில் தென்னாபிரிக்காவில் நிகழ்ந்த பிறிக்ஸ் மகாநாட்டிலும் புட்டின் கலந்துகொள்ளாமை கவனத்திற்குரியதாகும். இதற்கான வலுவான பின்னணியானது இந்தோனேசியாவின் தலைநகரான பாலியில் நிகழ்ந்த ஜி20 மகாநாட்டில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை கண்டித்து கூட்டுத் தீர்மானத்தை முன்னெடுக்க எடுத்த முயற்சியே அடிப்படையானது. அதனை இந்தியா முழுமையாக மறுத்ததோடு தற்போதுவரை ரஷ்யாவின் நடவடிக்கையை இந்தியா கண்டிக்கவில்லை என்பதே அமெரிக்கா உட்பட்ட மேற்குலகத்தின் நடவடிக்கையின் அதிருப்தியாக உள்ளது. புதுடில்லி மகாநாட்டில் புட்டினுக்கு பதிலாக ரஷ்ய வெளியுறவு அமைச்சரே கலந்து கொள்வார் என ரஷ்யா அறிவித்துள்ளது.

ஜி20 மாநாடு இந்தியாவின் தலைமையில் நிகழும் போது இரு பிரதான நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளாமைக்கு பல காரணங்கள் முன்வைக்கப்படுகிறது. அத்தகைய அம்சங்களை விரிவாக நோக்குவது அவசியமானது.

ஒன்று, மேற்கு அதிகார சக்திகளுக்கும் மேற்கு அல்லாத அதிகார சக்திகளுக்குமான முரண்பாட்டின் வடிவமாக இதனை விளங்கிக் கொள்ள வேண்டும். சீனா கீழைத்தேச அதிகார சக்தியின் மைய நாடாக உள்ளதனால் மேற்குலகத்திற்கான பொருளாதார வாய்ப்புகளை தடுக்கவே முனைகிறது. காரணம் மேற்கின் பொருளாதா வாய்ப்புக்கள் கீழைத்தேசத்தின் வளங்களிலேயே தங்கியுள்ளது என்பதை மையப்படுத்தியே சீனா நகருகிறது. இன்றைய பொருளாதாரத்தின் பிறப்பு சந்தையிலும் வர்த்தகத்திலுமே தங்கியுள்ளது. அதுவே நிதிச்சந்தையையும் முதலீடுகளையும் சாத்தியமாக்குகின்றது. இதனை தடுப்பதில் சீனாவின் அக்கறை அதிகமாக உள்ளது. அதனைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கீழைத்தேசத்தின் ஆதிக்கத்தை பொருளாதாரத்தில் நகர்த்த முடியுமென சீனா கருதுகிறது. இதனையே வோஷிங்டனில் இயங்கும் தென் ஆசியாவுக்கான வில்சன் நிலையத்தின் பணிப்பாளர் மைக்கல் குகில்மன் குறிப்பிட்டுள்ளார். அவரது வாதம் மேற்கு, மேற்கு அல்லாத அதிகார சக்திகளுக்கிடையிலான உடைவாகவும் இவை இரு பிரிவுகளாக மாறுகின்றன எனவும் விவாதிக்கின்றார். பொருளாதார ரீதியில் இரு முகாம்கள் கட்டமைக்கப்படுகின்றன என்கிறார். இதனால் இந்த மகாநாடு தொடங்குவதற்கு முன்பே தோல்வியடைந்து விட்டதாகவும் இதற்கான அடிப்படையில் உக்ரைன் மீதான ரஷ்யப் போர் காரணம் எனவும் குறிப்பிடப்படுகிறது. இதனால் உணவுப் பாதுகாப்பு, கடன் பரிமாற்றம், காலநிலைக்கான உலகளாவிய ஒத்துழைப்பு போன்றன பாதிப்பை எட்டியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

இரண்டு, இதில் இந்தியாவின் நிலைப்பாடே அதிக முரண்பட்டதாக உள்ளது. இந்தியா எப்போதும் நடுவுநிலை என்ற போலியான கொள்கையை முதன்மைப்படுத்திக் கொள்ள முயலுகிறது. அது ரஷ்யாவுடனும் அமெரிக்காவுடனும் சமமான வெளியுறவைக் கொள்வதாக கூறிக்



கொண்டாலும் அடிப்படையில் ரஷ்யாவின் நட்பு நாடாகவே இயங்குகிறது. இந்தியாவின் முரண்பாடான கொள்கையினால் மேற்கு நாடுகள் இந்தியாவை அதிகம் பயன்படுத்திக் கொள்ளவும் சீனாவுக்கு எதிராக அணி திரட்டவும் முனைவதைக் காணக் கூடியதாக உள்ளது. இதில் இந்திரா காந்தியை தவிர இந்தியாவை ஆட்சி செய்த தலைமைகளும் பலவீனமான கொள்கையைக் கொண்டவர்களாகவே உள்ளனர். அதாவது தெளிவான வெளியுறவுக் கொள்கையைக் கொண்டிராத போக்கொன்றை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அணி சேராமை, நடுவுநிலமை, அகிம்சை மற்றும் சமாதானம் எனக் கூறிக் கொண்டு பிராந்திய மட்டத்தில் பல படையெடுப்புக்களையும் போர்களையும் மேற்கொண்டுள்ளது என்பது அதன் கொள்கை மீதான குழப்பத்தை தருகிறது. அவ்வாறே மேற்குடனான மற்றும் கிழக்கு நாடுகளுடனான வெளிறவு கொள்கை அமைந்துள்ளது. மேற்கு இந்தியாவை முன்னிறுத்தியே கீழைத்தேசத்தின் வளர்ச்சியையும் இருப்பையும் குலைத்து வருகிறது என்ற விமர்சனம் நியாயமானதாகவே தெரிகிறது. அது மட்டுமல்ல அதன் போக்கு கீழைத்தேசத்தை மட்டுமல்ல இந்தியாவையும் அதன் பலம்வாய்ந்த வளர்ச்சியையும் தடுக்கிறது. இந்திரா காந்தியை படுகொலை செய்த வல்லரசுடன் இந்திய ஆளும் வர்க்கம் கைகோர்த்து செயல்படுகிற நிலை இந்தியாவின் வளர்ச்சிக்கானதா அந்த நட்புறவு என்ற கேள்வி தர்க்க ரீதியானதே. இந்தியச் சந்தையை வைத்துக் கொண்டு வல்லரசுகளும் மேற்கு நாடுகளும் தமது பொருளாதாரத்தை பலப்படுத்திக் கொள்கின்றன.

மூன்று, இந்திய ரஷ்ய நட்புக்கு பின்னரும் அமெரிக்கா இந்தியாவுடனான நட்புறவை பாதுகாத்து வருகிறது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்கு பின்னரும் அமெரிக்க இந்திய நெருக்கம் ஆரோக்கியமானதாகவே உள்ளது. அப்படியாயின் அமெரிக்கா உக்ரைனுக்கு விசுவாசமாக செயல்படுகிறதா? அல்லது இந்தியாவுக்கு சாதமானதாக இயங்குகிறதா? அல்லது தனது நலனில் கவனம் கொண்டு இந்தியாவையும், உக்ரைனையும் பயன்படுத்துகிறதா? என்ற கேள்விகள் நியாயமானதாகவே தெரிகிறது. போருக்கு உக்ரைன், பொருளாதாரத்துக்கு இந்தியா என்ற விதியை அமெரிக்கா பின்பற்றுவதாகவே தெரிகிறது. அமெரிக்காவுடன் இந்தியா கூட்டுவைத்திருப்பதால் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சியடைகிறது என்ற விவாதமும் உண்டு. அது எந்தளவுக்கு நியாயமானதாக உள்ளது என்பது இந்திய வெளியுறவுதுறை அமைச்சர் ஜெய்சங்கரது வெளியீடுகளிலிருந்து கண்டு கொள்ள முடிகிறது. அவ்வாறே மேற்கு, இந்திய நட்புறவு என்பது தனித்து பொருளாதாரத்துடன் நிறைவடைவதல்ல. அதனிடம் தெளிவான அரசியல் உள்நோக்கமும் உண்டு அதனை நிறைவேற்றவே இந்தியா பக்கம் மேற்கு செயல்படுவது போல் விளங்குகிறது. அதில் ஒன்றாகவே ஜி20 மாநாட்டின் முக்கியத்துவமாகும். நான்கு, மைக்கல் குகில்மன் குறிப்பிடுவது போல் புதுடில்லி மாநாடு மேற்கு நாடுகளின் செல்வாக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. ஆனால் சீனாவினதும், ரஷ்யாவினதும் தலைமைகள் இல்லாத போதும் அதன் அடுத்தகட்டத் தலைவர்கள் கலந்து கொள்வது அதிக நெருக்கடியை மேற்கு நாடுகளுக்கு ஏற்படுத்தும் என எதிர்பார்க்க முடியும். குறிப்பாக உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா மீதான அழுத்தம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. அல்லது மேற்கு அதனை தவிர்த்து செயல்படவும் முனையலாம். காரணம் மேற்கு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்ள முனையலாம்.

எனவே ஜி20 மகாநாடு இந்தியாவின் தலைமையில் நிகழும் போது அதன் விளைவுகளை மேற்கு தனதாக்க முயலலாம். அதற்கான வாய்ப்பும் அதிகமானது. சீனா, ரஷ்யாவின் தலைமைகளின் நிலைப்பாடு மேற்கை நிராகரிப்பதாக அமையுமே அன்றி இந்தியாவை நிராகரிப்பதாக அமைய வாய்ப்பு குறைவானது. காரணம் இந்தியா, ரஷ்யா, சீனா என்பன புதிய நாணயத்தையும் பொருளாதார திட்டமிடல்களையும் ஏற்கனவே பிரயோகிக்க தயாராகிவிட்டன. மீண்டும் இந்தியா டொலரில் தனது ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை சாத்தியப்படுத்த விளையாது. இந்தியாவுக்கு தற்போது கிடைத்துள்ள புவிசார் பொருளாதார இயங்குதிறனை கட்டிவளர்க்கவே விரும்பும். இது கீழைத்தேச நாடுகளுக்கு இலாபகரமான செய்முறையாகவே அமையும்.



# ஜெனீவா கூட்டத்தொடர் நெருங்கும் போது இலங்கையை இலக்கு வைக்கும் மேற்குலகம்!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 45 வெளிநாட்டவர்கள் உள்ளடங்கலாக 269 பேர் உயிரிழந்ததுடன், 500 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் குறித்து உள்நாட்டில் பல்வேறுமட்ட விசாரணைகள் நடத்தப்பட்டு, சஹரான் என்பவர் தலைமையிலான இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பு இந்தத் தாக்குதலை நடத்தியதாக முடிவுகள் வெளியிடப்பட்டிருந்தன.**

சர்வதேச கொடிய பயங்கரவாத இயக்கமான ஐ. எஸ் என்ற அமைப்பின் சித்தாந்தங்களில் ஈர்க்கப்பட்டே சஹரான் என்பவர் தலைமையிலான பயங்கரவாதக் குழுவினர் இத்தாக்குதலை நடத்தியதாக அவ்வேளையில் பரபரப்பான தகவல்கள் வெளிவந்தன.

இந்தத் தாக்குதல் குறித்த விரிவான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அவ்வப்போது கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்த நிலையில், பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட சனல் 4 என்ற அலைவரிசை கடந்த சில நாட்களுக்கு முன்னர் வெளியிட்டுள்ள ஆவணப் படம் அரசியல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக ராஜபக்ஷக்களை ஆட்சிக்குக் கொண்டுவரும் நோக்கில் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அந்த ஆவணத்தில் தோன்றும் ஒரு சில நபர்கள் கூறிய கருத்தே அரசியல் பரபரப்புக்கு வழிவகுத்துள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தனுடன் இணைந்து செயற்பட்டவரும், அவரின் ஊடகப் பேச்சாளராக செயற்பட்டவருமான அசாத் மௌலானா என்ற நபரே சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படத்தில் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்.

இத்தனை காலம் மௌனமாக இருந்த அவர், தற்போது இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதன் காரணம் என்ன என்ற கேள்வி இவ்விடத்தில் நியாயமாக எழுகின்றது.

அவருக்குப் பின்புலத்தில் ஏதேனும் தூண்டுதல்கள் உள்ளனவா அல்லது அவர் தற்போது வாழ்கின்ற நாட்டிலிருந்து எதனையாவது எதிர்பார்க்கின்றாரா என்ற வினாக்களும் எழுகின்றன.

அரசாங்க மட்டத்திலும் இவ்வாறான சந்தேகங்கள் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலருக்கு உள்ளன.

ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமான உயர் மட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரி தற்கொலைக் குண்டுதாரி சஹரான் உள்ளிட்டவர்களை நேரில் சந்தித்ததாகவும், ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாகவும் அசாத் மௌலானா என்ற நபர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இருந்தபோதும் தன்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை மறுத்திருக்கும் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன், அசாத் மௌலானா சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தமது அமைப்பிலிருந்து வெளியேறி வெளிநாடொன்றில் அரசியல் தஞ்சம் கோரியிருப்பதாகக் கூறியுள்ளார்

இத்தனை காலத்துக்குப் பின்னர் அஸாத் மௌலானா திடீரென்று இவ்வாறான கருத்துகளை வெளியிட்டிருப்பதானது அவர் மீதான சந்தேகங்களை ஏற்படுத்துவதாக அரசியல் முக்கியஸ்தர்கள் பலரும் கூறுகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து நடத்தப்பட்ட விசாரணைகள் பற்றி பலரும் பல்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், மீண்டுமொரு சுயாதீன விசாரணை அவசியமென்று கூறுவோரும் அரசியல் தரப்பில் உள்ளனர்.

இருந்தபோதும், உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்து ஏற்கனவே பலமட்ட விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. குறிப்பாக விசேட பாராளுமன்றக் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தி அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி, விசேட ஜனாதிபதி விசாரணைக் குழுவொன்றும் விசாரணைகளை நடத்தி ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

அத்துடன், தாக்குதல்களைத் தடுக்கத் தறவியமையால் மனித உரிமை மீறப்பட்டுள்ளது என உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தனை குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற பின்னணியில் சனல் 4 என்ற இந்த ஆவணப்படத்தை வெளியிட்டிருப்பதன் பின்னணி பற்றி இலங்கை உட்பட சர்வதேச ரீதியில் புத்திஜீவிகள் பலரும் வேறுபட்ட கோணத்தில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட இந்தத் தொலைக்காட்சி இதற்கு முன்னரும் இலங்கை குறித்த விசேடமாக இறுதி யுத்தம் தொடர்பான ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளது. 'த கில்லிங் ஃபீல்ட்' என்ற தலைப்பில் இதற்கு முன்னர் வெளியிட்டிருந்த ஆவணப்படம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததுடன், அது இலங்கைக்கு எதிராக வேண்டுமென்று தயாரிக்கப்பட்ட ஆவணப் படம் என இலங்கைத் தரப்பினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் உள்ள புலிகள் இயக்க ஆதரவு புலம்பெயர் சமூகத்தினர் இலங்கைக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு சனல் 4 தொலைக்காட்சியைப் பயன்படுத்தி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர போன்ற பலர் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

அதுமாத்திரமன்றி, தன்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுத்துள்ளார். ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகிய பின்னர் முதன் முதலில் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ, தன்னைப் பதவிக்குக் கொண்டு வரும் நோக்குடன் இவ்வாறான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை முற்றாக மறுப்பதாகவும், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே உடன் தான் எந்த தனிப்பட்ட ரீதியான தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லையென்றும் கூறியுள்ளார்.

தான் பாதுகாப்புச் செயலாளர் பதவியிலிருந்து விலகி ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வரையில் சுரேஷ் சாலேயுடன் தனக்கு எந்தத் தொடர்பும் இருக்கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியான கருத்துக்கள் இவ்வாறு இருக்கின்ற நிலையில், மார்ச் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் இலங்கைக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் இவ்வாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஜெனீவா நகரில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர்கள் நடைபெறும் இந்த இரண்டு மாதங்களிலேயே அதிகமாக இவ்வாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சனல் 4 தொலைக்காட்சியின் இந்த ஆவணப்படமும் செப்டெம்பர் மாதம் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரை இலக்குவைத்த ஒன்றாக பார்க்கப்படுகிறது. குறிப்பாக யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெரும்பாலும் இவ்விரண்டு மாதங்களும் இலங்கை சர்வதேச மட்டங்களில் பேசுபொருளாகியுள்ளது. ஜெனீவாவில் மேற்குலக நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான தீர்மானம் மேற்கொள்ளப் படவுள்ள நிலையில் சனல் 4 இவ்வாறான ஆவணப்படத்தை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை விவகாரத்தில் நடுநிலையுடன் செயற்படவில்லையென அரசாங்கம் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளது. தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன 2021 மார்ச் மாதம் ஐநா மனித உரிமைகள் பேரவையில் வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் கலந்துகொண்டிருந்தபோது ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி உட்பட பல நாடுகளால் இலங்கை மீது முன்வைக்கப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் உண்மையை மறைத்து அரசியல் நோக்கத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

'பல வருடங்களாக, மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் கூறி, எமது நாட்டுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து எச்சரிக்கையாக இருந்தோம். எமது அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தை செயற்படுத்துவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கம் இவ்வாறான பல சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், அதனைப் புறக்கணித்து, ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் பலதரப்பட்ட முறைகளில் எம்மீது தொடர்ச்சியாக குற்றம் சுமத்துவது நியாயமானது அல்ல' என அப்போது வெளிவிகார அமைச்சராகவிருந்த தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன கூறியிருந்தார்.

கடந்த கால அனுபவங்களுக்கு அமைய சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படம் இலங்கைக்கு எதிரான மற்றுமொரு பிரசாரமாகப் பார்க்கப்பட்டாலும், இதில் கூறப்படும் விடயங்கள் இலங்கையில் பரபரப்பை ஏற்படுத்தியே உள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

# சிலுமின செய்தி: உண்மையை அடிப்படையாகக் கொண்டது என நீதிமன்றம் உத்தரவு

கிரிக்கெட் என்பது விளையாட்டு ரசிகர்களால் போற்றப்படும் ஒரு விளையாட்டாகும். அதனால்தான் அவர்கள் தமது அன்றாட அனைத்துப் பணிகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு கிரிக்கெட் போட்டிகளைப் பார்த்து ரசிக்கவும், கிரிக்கெட் வீரர்களை அதீதமாக நேசிக்கவும் செய்கிறார்கள். இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடன் தொடர்புடைய அனைவரும் மரியாதையுடனும், பக்தியுடனும், நேர்மையுடனும் செயல்படுவார்கள் என விளையாட்டு ரசிகர்கள் உறுதியாக நம்புகின்றனர். எனவே, இதனுடன் சம்பந்தப்பட்ட எவருடையதும் தவறுகளும், பலவீனங்கள் மற்றும் முறைகேடுகளையும் காண்பதற்கு அவர்கள் விரும்புவதில்லை.

கிரிக்கெட் ரசிகர்களின் அந்த எண்ணங்களை உண்மையாக்கும் வகையில் செயற்படும் தரப்பினரிடையே ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் உயர்ந்த இடத்தைப் பெறுகிறார்கள்.

தாம் அறிந்து கொள்வதற்கும் மற்றும் ஏனையவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்துவதற்கும் ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் இருக்கும் உரிமையினை அரசியலமைப்பும், உள்நாட்டு வெளிநாட்டு பல வழக்கு தீர்ப்புக்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்ட உத்தரவு ஒன்று கடந்த 6ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதானவால் வாசிக்கப்பட்டது.

அது சிலுமின பத்திரிகையின் ஊடகவியலாளர் பௌஸ் மொஹமட் மற்றும் லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்திற்கு எதிராக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் உப தலைவரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த முறைப்பாடு தொடர்பில் பரிசீலித்ததன் பின்னரேயாகும்.

சிலுமின பத்திரியிலும், அதன் இணைய தளத்திலும் வெளியான செய்தி ஒன்றுக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஸம்மி சில்வா மற்றும் உப தலைவர் ரவின் விக்ரமரத்ன ஆகியோரால் ஒரு பில்லியன் ரூபாய் இழப்பீடு கோரியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த ஜூலை 26ம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முறைப்பாட்டுத் தரப்பினரால் விடயங்கள் முன்வைக்கப்பட்டன. இதனைப் பரிசீலித்த நீதிமன்றம் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மற்றும் அதன் அதிகாரிகள் தொடர்பான விடயங்கள் மற்றும் அறிக்கைகளை வெளியிடுவதற்கும், பகிரங்கப்படுத்துவதற்கும் சிலுமின பத்திரிகை, www.silumina இணையத் தளம் மற்றும் இவற்றுடன் தொடர்புடைய சமூக ஊடக கணக்குகளுக்கும் தடை உத்தரவுகளை பிறப்பித்தது.

இந்த தடை உத்தரவு சிலுமின பத்திரிகை, www.silumina.lk இணையத்தளம் மற்றும் பிரதிவாதிகளால் முன்னெடுத்துச் செல்லப்படும் அனைத்து சமூக ஊடக கணக்குகளுக்கும் உரித்துடையவாறு பிறப்பிக்கப்பட்டிருந்ததோடு பின்னர் இரண்டு வழக்கு விசாரணைகளின் போது இந்த தடை உத்தரவு நீடிக்கப்பட்டது.

பின்னர் லேக் ஹவுஸ் நிறுவனத்தால் கடந்த ஜூலை மாதம் 25ம் திகதி இந்த தடை உத்தரவு மற்றும் வழக்குக்கு எதிராக முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே நிராகரிக்குமாறு அதில் கோரப்பட்டிருந்தது. இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தொடர்பில் தமது பத்திரிகை மூலம் கட்டுரை பிரசுரித்தது பொதுமக்களின் நலனுக்கான உண்மைகளை வெளிப்படுத்துவது மாத்திரமே என இதில் சுட்டிக்காட்டப்பட்டது. பொதுமக்களின் உண்மைகளை அறியும் உரிமைக்காக நியாயமான தீர்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தக் கட்டுரைகள் வெளியிடப்பட்டதாக அந்த ஆட்சேபணை மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இது தவிற முறைப்பாட்டாளர்களுக்கோ அல்லது வேறு எவருக்குமோ பாதிப்பை ஏற்படுத்தும் எந்த நோக்கமும் அதில் இருக்கவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2022ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இருபதுக்கு 20 (T20) உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்திய கிரிக்கெட் அணி மற்றும் அது தொடர்பில் முன்வைக்கப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஐவரடங்கிய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

முறைப்பாட்டாளர்களால் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட கட்டுரை விளையாட்டுத் துறை அமைச்சரால் நியமிக்கப்பட்ட முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜனி வீரவர்தன தலைமையிலான குழுவின் அறிக்கையின் அடிப்படையில் வெளியிடப்பட்டதாக முறைப்பாட்டாளர்களின் ஆட்சேபணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளர்களினால் கோரப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு தொடர்பில் அவர்கள் முன்வைத்த விடயங்கள் மற்றும் பிரதிவாதிகளின் ஆட்சேபணைகளை பரிசீலித்ததன் பின்னர் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிப்பது தொடர்பான உத்தரவு கடந்த 6ம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்டது.

இதன் போது 14 பக்க தீர்ப்பை அறிவித்த மாவட்ட நீதிபதி சந்துன் விதான, பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் மற்றும் ஊடகவியலாளர் பௌஸ் மொஹமட் ஆகியோருக்கு எதிரான வெற்றி கொள்ளக் கூடிய வழக்கை தாக்கல் செய்வதற்கு முறைப்பாட்டுத் தரப்பினர் தவறிவிட்டனர் என்று சுட்டிக் காட்டினார்.






எனவே இதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்குவதற்குத் தீர்மானித்து முறைப்பாட்டாளர்களால் கோரப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவு வழங்குவதை நிராகரிப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்தது.

மக்களால் பெரிதும் மதிக்கப்படும் விளையாட்டின் நிர்வாகக் கட்டமைப்பால் கடைப்பிடிக்கப் பட வேண்டிய உயர் மட்டத்திலான நிதி ஒழுக்கம் தொடர்பாகவும் மற்றும் அந்த நிதி ஒழுங்குகளுடன் தொடர்புடைய முறைகேடுகள் தெடர்பான விடயங்களை வெளிப்படுத்தியும் குறித்த செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளதாக இந்த உத்தரவுடன் தொடர்புடைய தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ள குசல சரோஜனி குழுவின் முன் சாட்சியளிப்பதற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ஆஜராகவில்லை என அந்த உத்தரவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

“இருபதுக்கு 20 உலக கிண்ணப் போட்டியில்” கலந்து கொண்ட அதிகாரிகளான ஜயந்த தர்மதாச, ரவி விக்ரமரத்ன, சுஜீவ கொடலியத்த, கிரிஷாந்த கபுவத்த, ஜனக பத்திரன, திலக் வாத்துஹேவா, சமந்த தொடம்வல, பிரியந்த அல்கம, பந்துல திஸாநாயக்க, ரியர் அட்மிரல் நிஷாந்த டி சில்வா, நளின் அபோன்சு ஆகிய அதிகாரிகளுடன், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் கணக்கு அறிக்கைகளை பரிசீலிப்பதற்காக அதன் பிராதான நிதி அதிகாரி மஹேஷ் கமகே ஆகியோர் சாட்சியமளிப்பதற்காக குறித்த குழு அழைத்திருந்ததாகவும் அதன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் அவர்கள் அந்த குழுவின் முன் சாட்சியமளிக்க ஆஜராகவில்லை என்றும், சாட்சியமளிப்பதிலிருந்து அவர்கள் விலகியிருந்ததாகவும் மாவட்ட நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியங்கள் கட்டளைச் சட்டத்தின் 114 (ஈ) பிரிவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் தமக்குப் பாதகமான சூழ்நிலை உருவாவதைத் தடுக்கும் நோக்கத்திலேயே சாட்சியமளிப்பதை அவர்கள் புறக்கணிக்கணித்திருந்ததாகத் தெரிகிறது என்பது நீதிமன்றத்தின் கருத்து என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

“இருபதுக்கு 20 போட்டி” யுடன் தொடர்புடைய வரவு செலவுகள் தொடர்பில் சுயாதீன கணக்காய்வினை மேற்கொள்வதற்கும், அந்த கணக்காய்வின் அடிப்படையில், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிதி முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் குற்றவியல் சட்ட விதிகளுக்கு அமைய குற்றப் பத்திரிகையை சமர்ப்பிப்பதற்கும், விளையாட்டுச் சட்டத்தின் 32(அ), (ஆ), (ஏ) ஆகிய பிரிவுகளின் பிரகாரம் செயற்படுவதற்கு விசாரணை அறிக்கையின் தீர்வுகளைக் குறிப்பிட்டு குறித்த விசாரணைக் குழு அமைச்சருக்கு பரிந்துரையினைச் சமர்ப்பித்துள்ளமை நீதிமன்றத்தின் கவனத்தைப் பெற்றுள்ளது.

அந்த சூழ்நிலையின் அடிப்படையில், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாக செயல்பாடுகள் தீவிரமான கேள்விகளுக்கு உள்ளாகியிருப்பதை இந்த முடிவு காட்டியுள்ளது.

பிரதிவாதிக்கு எதிராகத் தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக விடயங்களை முன்வைத்த முறைப்பாட்டுத் தரப்பினர், தாம் நியமிக்கப்படும் போது மிகக் குறைந்த பெறுமானத்தில் இருந்த இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் கணக்கு மீதி 2022ம் ஆண்டளவில் 6 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். அதேபோன்று அடுத்த சில ஆண்டுகளுக்காக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் மூலம் 24 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த விடயங்களை பரிசீலித்து நீதிபதி, சர்வதேச கிரிக்கெட் பேரவையில் அங்கம் வகிக்கும் நாட்டுக்கு வழங்கப்படும் பங்களிப்பு நிதியின் அடிப்படையில் மாத்திரம் இந்த செயல்முறையை நியாயப்படுத்த அந்த அமைப்பால் முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

நெல்கா மெதகெதர
தமிழில்: எம்.எஸ்.முஸப்பிர்

# அமைதி எங்கே?

நுஸ்ஹா அஸீம்

ஆண்டாண்டு காலமாக
அகிலம் முழுவதும்
தேடிய தேக்கம் இது!!

---

பிரபஞ்சம் முழுவதும்
பிரமிக்க படைத்தவன்
அமைதியை எங்கு
படைத்தானோ?

---

பிறப்பு முதல்
இறப்புவரை
அல்ல
ஏன் இறந்த
பின்னும் தேடும்
ஒற்றைச் சொல் இது!!

---

பணத்தையும் பாசத்தையும்
கண்டுபிடித்த எனக்கு
அமைதியை
காண முடியவில்லையே??

---

இறைவன் இயற்கையும்
மனிதன் செயற்கையும்
படைக்கையில்
அமைதியை எங்கு
படைத்தானோ??

---

கடல் ஓரத்திலும்
கன்னியர் மடத்திலும்
தேடினேன்..
அண்ட வெளியிலும்
ஆழ் கடலிலும்
அலைந்தேன்
அமைதி புலப்படவில்லை..

---

தேடித் தேடி அலைந்த
எனக்கு ஒன்று
புரிந்தது...
வாழும் போது கிடைக்காத
அமைதி ஒற்றை உயிர்
பிரியும் போதாவது
கிடைக்குமோ...

---

சென்றவர் கூட திரும்பி
வந்து சொல்லலேயே...
விடை காண முடியாதே
வினா ஆகி விட்டதே....

# மீண்டும் காதல் செய்வோம்

பொத்துவில் அஜ்மல்கான்



மீண்டுமொரு முறை
காதல் செய்வோம்
மீண்டெழா துயரங்களை
மறந்து.

---

ஏழ்மைக்குள் பூத்த
காதல் அகிலம்
பேச மறந்து
போகிறது இன்பங்களைச்
சுமந்து.

---

குப்பைகளைக் கொண்டு
அலங்கரித்து காட்சி
தருகிறது அழகியவள்
அலங்காரமில்லாது அடி
வைத்துப் போன
பாதை வழிகள்
எங்கும்.

---

நம் காதலை
கொண்டாட வித
விதமாய் உணர்விடுக்கு
பிறருக்கு உபத்திரமில்லாது
போனதாலின்று.

---

அழகு புன்னகையோடு
அகிலங்கள் யாவும்
அதிர்ந்து போக
அழகியவள் அம்மாவானால்
பிச்சைக்காரியென பெயர்
கொண்டு.

---

பணமில்லாது போனாலும்
பிணமான பின்பு
இடமுண்டென அழுது
சிரிக்கிறோம் இந்த
வாழ்வில் தினமும்.

# தகுதியான தமிழ் வானம்

ஜே.வஹாப்தீன்
றமீஸ் அப்துல்லா சேர்



கபடம் தெரியாத காற்று
யார் வாசலுக்கும்
குப்பைகளைக் கொண்டு சேர்ப்பதில்லை.

---

முன்னே நடக்க விட்டு
பின்னே புழுதி அள்ளி வீசி
பிடரி முறிப்பதில்லை.
மண்ணள்ளி வீசியவன்
புழுக்கத்தால் பதறினாலும்
புன்னகையோடு
ஆறுதல் கொடுத்து வீசிக்கடக்கும்
நான் விரும்பும் காற்று.

---

என்னைப்போல்
எத்தனையோ மாணாக்கரின்
முகவரிக்கு காரணமான
முதல் பேராசிரியர்.
தகுதி பெற்ற
தவிசுப்பேராசிரியர்.
இன்று
சிரேஷ்ட பேராசிரியராகி
சிறப்புச் சேர்த்த மாசற்ற காற்று.

---

இலக்கிய அதிதியாகி
பூங்காவனங்களை
இலங்கைவனமெங்கும்
பூக்கவைத்த காற்றுக்கு
பூக்களால் மாலைசூடட்டும்
காலம்.

---

விளம்பரமில்லாது
விளைச்சல்களோடு கைகுலுக்கும்
நமது வளாகத்துக்காற்றின்
பெயர் கேட்டு
உளைச்சல் கொண்டோரின்
உதவாத சொற்களுக்காய்
இந்த காற்று
கல்லாகி இறுகி கிடந்ததாய்
ஒருபோதும் காணவில்லை.

---

ஓடும் ஆறுகளில் இது
ஓவியம் வரையும்
பாயும் அலைகளில் இது
பல ஆய்வுகள் காணும்
பூக்களில் இது
புதக்கவியை தேன் செய்யும்
தென்கிழக்கெங்கும்
தோளில் சுமந்து
ஆய்வுரை நிகழ்த்தும்.

---

அணிந்துரைகளால்
தமிழ் நூல்களை
அழகு செய்து
இலக்கியத்தின் முகவரி வரைந்த காற்றுக்கு
கனிவான வாழ்த்துக்கள்.

---

பலநூறு மாணவர்களை
நட்சத்திரங்களாக்கி
மின்ன வைக்கும்
தகுதி பெற்ற தமிழ் வானமே
கபடமில்லாது
என் வாழ்த்துக்களும் சேரட்டும்.




# ஆச்சரிய தேசம்

செ.இஸ்ஸத்,
ஏறாவூர்.



ஈழமாம் இலங்கா தீபமாம்
இரத்தினத்தின் சொத்தெனப்
பல பெயர்கள் உண்டாம்.
நாலினம் வாழ்ந்திடும்
தேசமாய் ஆனதால்
கொடியிலும் நிறங்கள் உண்டாம்.

---

வளங்களும் நிலங்களும்
கொட்டிய செல்வமும்
கொழுத்தன வளர்ந்து நின்றாம்
நிலத்திலே சுவனமாய்
நினைத்திடத் தோணவும்
முத்தெனப் புனைவும் உண்டாம்.

---

கடல்வளம் சூழவும்
மலைவளம் மத்தியும்
நிலவளம் நெடுகிலும் உண்டாம்
படைபலம் சேர்ந்ததை
பகைவர்கள் ஆண்டதைக்
கொள்ளையர் சேர்த்தனர் அது அரசியலாம்.

---

ஓரினம் பெரிதென இங்கு
ஓங்கிய கைகளால்
பிரிவினை பலதும் உண்டாம்.
நேரிய போக்குகள்
நாசமாய்ப் போனதால்
சோற்றுக்குப் பஞ்சமும் உண்டாம்.

---

அதிகார இருக்கையில்
ஆட்களை மாற்றியும்
அடையாத மாற்றமும் உண்டாம்.
புதிராகப் பற்பல
படிப்புகள் கொண்டதன் பல
படித்திறன் கண்டது உயர்வாம்.

---

ரொட்டியும், மார்புக் கச்சையும்,
உள்ளணி ஆடையும்
கருத்தடை செய்வதும் இங்குதான்...
படித்தோர் கண்ணிலும்
பிரிவினை உருத்திய
பார்வைகளும் இங்குதான் உண்டாம்...

---

இதை...
வெள்ளையன் ஆண்டதும்
கொள்ளைகள் செய்ததும்
விடுதலை பெற்றிட முன்பாம்
கள்வர்கள் பதுக்கியும்
வளங்களை அழித்ததும்
அதிகார ஆட்சியில் ஒன்றாம்.

# கண்ணீர் (சு)வாசம்

அஜி அஜந்தன்
மருக்காரம்பளை



வடுக்களால் தீப்பிடித்து
அனல் விட்டு
எரிந்துகொண்டிருக்கும்
இருதயத்தின் ஓசைகளை
செவிசாய்க்க நாதியற்று
சாலையோரம் நடக்கும்
அனாதைக் கிழவன் நான்

---

கந்தல் ஆடையிலே
சிந்தி விழும் வியர்வையும்
பொருக்குப் படிந்த தோலும்
சுருக்கு விழுந்த வயிறும்
வரண்டு போன தேகமும்
வற்றிப்போன பார்வையும்
இன்னும் கூடவே என்
வயோதிப அடையாளமாக

---

மேகத்தின் கண்ணீரையும்
வானத்தின் சோகத்தையும்
நிசப்தத்தின் தனிமையையும்
பாதையின் நீளத்தையும் தினம்
அளந்து செல்கின்றேன்
வெறும் நடைபிணமாக

---

குற்றம் ஏதும் செய்யவில்லை
குறை நிறையும் கூறவில்லை
பெற்று வளர்த்ததற்காய்
பெருவழியில் நிற்கின்றேன் உன்
இல்லம் முழுவதும்
எல்லாம் இருந்தும்
இரக்கக் குணம் மட்டும்
இல்லையோ என் மகனே

---

உண்ணத்தான் உணவில்லை
உறங்க ஒரு இடமுமில்லை
சொல்லியழ யாருமில்லை என்
சோகமது தெரியவில்லை
இரப்பை கூட பசியால்
நொருங்கிப்போகிறது
கட்டடச் சாலையிலே என்
மனமும் கசங்கித்தான் போகிறது

---

சாலையோரமெல்லாம் உன்
சாயலை தேடுகின்றேன்
பேரூந்தின் ஜன்னல்களில் என்
பேரன்களை பார்க்கின்றேன்
மாலையில் வருவாயோ
எனை அழைக்க
காலையில் வருவாயோ
ஆலையில் பூத்த பூவாய்
என்னுள்ளம்
அகப்பட்டுப் போனதடா

---

சின்ன இந்த ஜீவனுள்ளே
சிதறிக்கடக்கும் எண்ணங்கள்
உன்னை வந்து சேராதடா இந்த
ஊமை நெஞ்சம் புரியாதடா
சிதைந்து நான் எரிகையிலே
சிந்திப்பாய் என் மகனே
இன்று நான் நாளை
நீயாகவிருக்கலாம்



# என் ஆசான்

முகம்மது முகைதீன் நௌபீக்
தோப்பூர்

நடைபயிலத் தெரியாமல்
அழுகையை விடாமல்
தாயின் விரல்விடத்
தைரியமில்லாமல்
வகுப்பறையில் அமர
முதன் முதல் கண்ட
மனிதத்தின் முழு உருவம்
என் ஆசான்

---

பென்சில் பிடிக்க விளங்காமல்
கொப்பியை தலைகீழாய்
தமிழ்த் தாய்எழுத்தை
உருக்குலைத்து உருக்குலைத்து
கொன்று குவித்த போது
எழுத்தை உயிர்ப்பிக்க
வைத்தியம் செய்த
வைத்திய ஞானி
என் ஆசான்

---

என் எழுத்தையும்
என் சொல்லையும்
தன் வார்த்தை எனும்
உளி கொண்டு
செதுக்கிய ஓய்வற்ற சிற்பி
என் ஆசான்

---

என் இலட்சியக் கனவை
தன் இலட்சியமாய்
சிந்தையில் சுமந்து
இலக்கை இலகுவாய் எட்ட
வியர்வை உதிரம் சிந்தி
ஆனந்த மழையில்
நனைந்தவர்
என் ஆசான்

---

உடல் எடை குறைந்து
நரை முடி ஏற்று
தோல் சுருங்கி
நடை தள்ளாடியும்
அறிவில் ஆரோக்கியமாய்
மாணாக்களை படுகுழியிலிருந்து
ஏற்றி விடும் ஆணழகன்
என் ஆசான்

---

ஓய்வினை அறுபதில்
மனமில்லாமல் ஏற்று
தன் சேவையில் கண்ட
மாணாக்கனின் உயர்வினை
ஓய்வூதியமாய் எண்ணி
தினமும் மனமகிழும்
என் ஆசான்

---

இன்றைய இளம் ஆசான்கள்
மனதளவிலும் சேவையிலும்
சோர்வடைந்து வயோதிபர்களாய்
மாணாக்கரின் உள்ளத்தில்
வேரூன்றி வாழ்வது தான்
எம் சமுதாயத்தின் இளம்
வேர்கள் அறுவதற்கு காரணம்

---

தாய் போல் அன்பையும்
தந்தை போல் அறிவையும்
நண்பன் போல் அக்கறையும்
உறவு போல் உதவியையும்
என்றும் செய்திடுவோம்
எதிர்கால தலைமுறைக்காய்.




முகம்மது முகைதீன் நௌபீக்
தோப்பூர்

உன்னுள் பயணிக்கும்
குருதியின் வேகம் தான்
உன் நிலைப்பு என்பதை நீ
அறிவாயோ

---

நீர் விழும்
உயரம் தான் மின்சாரம்
என்பதை நீ
அறிவாயோ

---

உருவில் சிறிதெனினும்
எறும்பின் சுறுசுறுப்பு
தன் சேமிப்பு என்பதை நீ
அறிவாயோ

---

புலியின் வேகம் தான்
தன் பசி போக்கும்
சக்தி என்பதை நீ
அறிவாயோ

---

புறாவின் முயற்சி தான்
வேகப்பறவை என்னும்
புகழாரம் என்பதை நீ
அறிவாயோ

---

மயிர்க்கொட்டியின்
உரு மாற்றம் அழகிய
வண்ணத்துப் பூச்சி
என்பதை நீ அறிவாயோ

---

மானிடா நீ மட்டும்
சோம்பேறியாய் இருப்பதை மாற்று
பல வேடம் பூண்டு முயற்சியுடன்
வேகமாய் உச்சம் தொடு வாழ்வில்

# வாப்பா

ஜமீல்

தனது இறக்கைகளில்
குஞ்சுகளை இடுக்கி
திரிந்த காலங்களை விடவும்
வாழ்வின் மீதான சுமைகளடங்கிய
பொதிகளையே கைகள் காய்ப்புற
காவித் திரிந்தார் வாப்பா

---

பறவைகளைப் போன்று
நாளைகள் பற்றி
ஒரு போதும் கவலயுற்றது கிடையாது

---



நம்பிக்கையினை மட்டுமே சுமந்து
அடை மழையும்
கோடை வெயிலுமான
காலங்களை கடந்து சென்றார்

---

எங்களது இரவு வானத்தின்
பிரகாசமாய் மின்னும் ஒற்றை விண்மீனாகவும்
எறிக்கும் அம்புலியாகவும்
விடியலின் பரிதியாகவும் ஒளிர்ந்தார்

---

எங்களது கனவுகளை
அவரே கண்டார்
எங்களது எதிர்காலத்தை
அவரே வரைந்தார்
எங்களது எண்ணங்களை
அவரே செப்பனிட்டார்

---

உம்மா கடும் கண்டிப்பாகவிருந்த
அனேக தருணங்களில்
வாப்பாவின் மடியில்தான் தஞ்சமடைவோம்

---

காட்பாறுபோல் துயர் பெருக்கெடுத்தாலும்
பேரிடியே தலையில் விழுந்தாலும்
மனம் தளராது கம்பீரமாக இருப்பதில்
அவருக்கு நிகர்
அவராகவே திகழ்ந்தார்

---

உம்மா நீரிழப்பால் மரணித்தபோது
தனதுலகமே பறிபோனது போல்
இருண்டதோர் அறையில்
உடைந்து போய் கிடந்தார்

---

ஆனபோதும் தனது கர்வத்தையும்
இறுமாப்பையும் செருக்கையும்
யாருக்காகவும் விட்டுக் கொடுக்காமல்
விடலைப் பராயத்தில் கழிப்புற்ற
அதே வாழ்க்கையினை
இப்போதும் வாழ்ந்து
காட்டு அரசன் போன்று கர்ஜிக்கிறார்

---

இடைக்கிடை உம்மாவினதும்
பிள்ளைகளினதும் பிரிவுத் துயரில்
மூழ்கிக் கரையாமலில்லை

---

இப்போதும் வாப்பாவின்
ஆதி காலத்து
சிமினி விளக்கிலிருந்து சிந்திய
ஒளியின் இழைகள்தான்
எங்களது இருளை
வாசித்துக் கொண்டிருக்கிறது

# செந்தாழம் பூவாய்...



Dr ஜலீலா முஸம்மில்

கால்களால் உதடுகளில் முத்தமே கவரிமானே...
கந்தர்வ அழகில் கொள்ளை போனேனே..
மழலை இன்பம் மண்ணில் பெற்றேனே...
மகவே உன்னை மடியில் ஏந்தினேனே...

---

சின்னச் சிரிப்பில் சொர்க்கம் தெரியுதடா...
சிந்தையில் மின்னல் தோன்றி மறையுதடா...
கண்மணி உந்தன் மென்மையில் குழைந்தேன்...
காலங்கள் தோறும் சிணுங்களில் குலைந்தேன்...

---

சித்திரமாய் வாழ்வில் சேர்ந்திட்ட அழகே...
சரித்திரங்கள் படைக்க தோன்றிட்டாய் மகனே...
செந்தாழம் பூவாய் மலர்ந்தாய் கண்ணா...
நல்சேதிகள் தருவேன் உலகில் பொன்னே...

# மறைந்தும் மறையாத ஆளுமை



மறைந்தும் மறையாத ஆளுமை

இவ்வுலகில் பல மனிதர்கள் வாழ்ந்துவிட்டு சென்றாலும் நாம் அவர்கள் அனைவரையும் ஞாபகம் வைத்திருப்பதில்லை. அது இவ்வுலக வழக்கமாகும். ஆனால் அவர்களுள் முத்துக்களாக மிளிர்ந்துவிட்டு சென்ற ஒரு சிலரை மக்கள் மறப்பதில்லை. அவர்கள் அவ்வாறு காலம் கடந்தும் மக்கள் மனதில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பதற்கான காரணம் அவர்களது செல்வங்களோ அல்லது அதிகாரங்களோ அல்ல. மாறாக அவர்கள் எதிர்கால சந்ததியினருக்காக எடுத்துக்காட்டாக வாழ்ந்து மறைந்தமையேயாகும்.

இத்தகைய மனிதர்களுள் களுத்துறை மாவட்டத்தின் பேருவளை மண் பெற்றெடுத்த முத்தாகிய மொஹமட் அப்துல் பாக்கீர் மாக்கார் என்ற நேர்மையினதும் கடமையுணர்வினதும் முழு உருவமாகத் திகழ்ந்த அரசியல் மகானைப் பற்றிப் பேசியே ஆகவேண்டும்.

இவர் 1917ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி பேருவளை மருதானையில் பிறந்தார். பின்னர் கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். இலங்கை மண்ணுக்கு பெரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய இஸ்லாமிய மறுமலர்ச்சித் தலைவர்களுள் ஒருவரான டீ.பி.ஜாயாவை ஆசானாகக் கொண்டவராவார்.

ஸாஹிராக் கல்லூரியில் தனது கல்வியை முடித்துக் கொண்டு அதே கல்லூரிக்காக சிலகாலம் பணியாற்றிவிட்டு இலங்கை சட்டக் கல்லூரிக்கும் தேர்வாகினார். 1950ஆம் ஆண்டு பட்டம் பெற்று வெளியான அவர் 1942ஆம் ஆண்டு 2ஆம் உலகப் போர் காலத்தில் இலங்கை குடியுரிமைப் பாதுகாப்புப் படையில் இணைந்து சேவையாற்றினார். இதற்காக இந்தியாவுக்குச் சென்று பயிற்சி பெற்றார். போரின் பின்னர் அவர் சட்டத்துறைக்கான தனது பணியை ஆரம்பித்தார்.

அவருடைய அரசியல் பணி பேருவளை நகரசபையிலிருந்தே ஆரம்பித்தது. 1960ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக பேருவளைத் தொகுதியில் போட்டியிட்டு 9339 வாக்குகள் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தேர்வானார். அதிலிருந்து பல பதவிகளை வகித்த அவர் 1977 முதல் 1978 வரை பிரதி சபாநாயகராகவும் 1978 முதல் 1983 வரை சபாநாயகராகவும் பதவி வகித்தார். இக்காலப்பகுதியில் அவர் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில் பதில் ஜனாதிபதியாகவும் கடமையாற்றியிருக்கிறார். அக் காலங்களில் பாராளுமன்றத்தை மிகச் சரியாக வழிநடத்திய சிறந்த சபாநாயகராக அவர் திகழ்ந்தார். பின்னர் 1983 முதல் 1988 வரை அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராகவும், 1988 இலிருந்து 1993 வரையிலான காலப்பகுதியில் தென்மாகாண சபையின் ஆளுநராவும் பணிபுரிந்தார்.

மொஹமட் அப்துல் பாக்கீர் மாக்கர், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் சம்மேளனத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றினார். அத்தோடு ஈராக் மற்றும் நட்புறவு சங்கத்தின் தலைவராக அவரது இறுதி நாள்வரை செயலாற்றியிருக்கிறார்.

இறுதியாக 1997ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி தேசமான்ய முஹம்மத் அப்துல் பாக்கீர் மாக்கார் தனது 80ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்.

தேசமானிய பாக்கீர் மாக்கார், தனிப்பட்ட சுயலாபத்துக்காகவும் வேறு குறுகிய நோக்கங்களுக்காகவும் அரசியலில் ஈடுபட்டவரல்ல. அதற்கு மாற்றமாக பல்லினங்களைக் கொண்ட இந்த நாட்டின் எல்லா இனத்தவர்களும் சம உரிமையோடும் அந்தஸ்தோடும் வாழ வேண்டும் என்பதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். தனது செயற்பாடுகள் குறித்து மறுமையில் இறைவனுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற தூய எண்ணத்தோடும் நீதியாகவும் நேர்மையாகவும் தனது அரசியல் வாழ்விலும் நடந்து கொண்டவர். தனக்காக வாக்களித்த வாக்களிக்காத அனைவரோடும் ஊர்மக்களோடும் சேர்ந்து அழகிய முறையில் வாழ்ந்து காட்டிய ஒரு சிறந்த முன்மாதிரி மிக்க அரசியல் தலைவராவார்.

பேருவளை நகரசபையின் நகரபிதாவாக பணியாற்றுகின்ற காலப்பகுதியிலும் அவர் நகர சபைக்கு சொந்தமான கணக்கு வழக்குகளிலும் பொதுச் சொத்துக்களிலும் மிக நேர்மையாக நடந்து கொண்டவர். மக்களுக்கு சேவையாற்றுவதையே தமது முதற்பணியாக கொண்ட அவர் அதிக வேலைப்பழுவுக்கு மத்தியிலும் இறைவனுக்கும் தனக்கும் இருக்கின்ற தொடர்பு அறுபடாது பார்த்துக் கொண்டவர்.

புராணக் கதைகளில் கூறப்படும் செங்கோலாட்சி புரிந்த மன்னர்களைப் போன்று தாம் வகித்த பதவிகளில் நெறிதவறாமுறையில் சிறப்புப் பணியாற்றிய இவர் தமது சுய நலத்தையும் சுய இலாபத்தையும் மாத்திரம் இலக்காகக் கொண்டு அரசியலில் ஈடுபடுகின்ற அரசியல்வாதிகளிலிருந்தும் வேறுபட்டு நிற்கும் தகுதியான ஒருவரே அப்துல் பாக்கீர் மாக்கார்.

சமகாலத்தில் இத்தகைய இலட்சியமிக்க அரசியல்வாதிகளின் தேவையை இந்தநாட்டு மக்கள் கவனத்திற்கொள்வது அவர்களது கடமையும் பொறுப்புமாகும்.

**எம்.எச்.எம்.இஹ்ஸான்,**
**எம்.ஏ.ஆயிஷா ஷஹானி**
**12 கலைப்பிரிவு**
**அல்பாஸியதுல் நஸ்ரியா**
**முஸ்லிம் பா.ம.வி.**





சுவிஸ்லாந்து அகடெமி ஓஃப் ஆட்ஸ் நடனப்பள்ளி இயக்குநர் "நாட்டிய கலைமணி" திருமதி வாணி சர்மாவின் மாணவி கேதாரணி இரத்தினகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு பிஷப்ஸ் கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது.
இந்நிகழ்விற்கு கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் உடுவை எஸ். தில்லைநடராஜா பிரதம விருந்தினராக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் சிற்பக் கலைச்சுடர் செ. கீர்த்திவர்மனும் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கின்றனர்.




# வீறு நடைபோடும் சவுதி அரேபியா

டிஜிட்டல் தொழிநுட்பம் இத்தசாப்த காலத்தில் ஏற்படுத்தியிருக்கின்ற பாரிய புரட்சி வர்ணிக்க முடியாதது!. எங்கு பார்த்தாலும் டிஜிட்டல்மயம். தரமான, துல்லியமான சேவைகள் வேண்டுமாயின் டிஜிட்டல் சேவையை நாடியே ஆக வேண்டும் என்ற மனப் பதிவு மக்கள் மனங்களிலே ஏற்பட்டிருப்பதை மறுக்க முடியாது. டிஜிட்டல் புரட்சியின் முக்கிய சாதனையாக செயற்கை நுண்ணறிவு என்ற அத்தியாயம் பரிணமித்திருக்கின்றது. சகல துறைகளிலும் கால்பதிக்கும் இந்த செயற்கை நுண்ணறிவு என்ற இந்த புதுமையை நோக்கி எல்லா நாடுகளும் பயணிக்க ஆரம்பித்து விட்டன.

இந்த வகையில் சவுதி அரேபிய அரசும் இந்த துறையில் முன்னேறவும் தனது மக்களுக்கு தரமான சேவையை வழங்கவும் தலைப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. உதாரணமாக அண்மையில் சவுதி அரேபிய அரசு அறிமுகப்படுத்திய தானியங்கி டிஸ்பென்சரியைக் குறிப்பிடலாம். நோயாளிகள் தமக்குத் தேவையான மருந்துகளை இந்த தானியங்கி மருந்து விநியோகக் கருவியில் பெற்றுக் கொள்ள முடியும். நாள் பூராக சேவையில் இருக்கும் இவ்வியந்திரம் நூற்றுக் கணக்கான மருந்துகளை சேமித்து வைக்கும் திறன் கொண்டது. மருந்துச் சிட்டையில் காணப்படும் பார்கோட்டை உள்ளீடு செய்வதன் மூலம் பயனாளிகள் தமக்குத் தேவையான மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும். கெப்சூல் வடிவத்தில் அமையப் பெற்றிருக்கும் இந்த மருந்து விநியோகக் கருவி உலகில் முதலாவது என்ற பெருமைக்குரித்தானது.

இவ்வாறாக, சவுதி அரேபியாவின் சாதனைகள் நீண்டு செல்கின்றன. இரு புனிதஸ்தலங்களின் சேவகர் மன்னர் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சுஊத் மற்றும் முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான ஆல் சுஊத் போன்றோரின் தூரநோக்கு சிந்தனையின் அடிப்படையில் உருவாகிய 2030 தூரநோக்கு வேலைத் திட்டத்தின் பலனாகவே சவுதி அரேபியா இவ்வாறான முன்னேற்றங்களை அண்மைக் காலமாகக் கண்டுவருகின்றது. தமது சக்தியை உணர்ந்து அதனை செயற்படுத்துவதனூடாக பொருளாதாரத் துறையில் பாரிய புரட்சியைக் காணமுடியும் என்பது அந்த தூர நோக்கு வேலைத் திட்டத்தின் கருப் பொருளாகும்.

முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் ஆல் சுஊத், 2018ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கான தனது பயணத்தின்போது சிலிக்கன் பள்ளத்தாக்கில் கைச்சாத்திட்ட பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் பயனாகத் தற்போது கூகிள் நிறுவனம் தனது க்ளவுட் சேவைகளுக்கான தரவு மையமொன்றினை சவுதியில் ஆரம்பித்துவைக்கும் பணிகளைத் தொடங்கியிருக்கின்றது. எதிர்வரும் நவம்பர் மாத இறுதியில் இந்நிலையம் திறந்து வைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

க்ளவுட் சேவைகளுக்கான அதிகரித்துவரும் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 2030ஆம் ஆண்டளவில் சந்தை வாய்ப்புக்கள் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயரும் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில், சவுதி அராம்கோவின் தொழில்நுட்ப சேவைகளுக்கான மூத்த துணைத் தலைவர் அஹ்மத் அல்சாதி கூறியதாவது, "தரவுகள் முக்கிய பங்கு வகிக்கும் உலகில், நாங்கள் வாழ்கிறோம். அவற்றைப் பாதுகாக்க, பாதுகாப்பான உட்கட்டமைப்பை நிறுவனங்கள் வழங்குவது அவசியமாகும். அத்தோடு இவ்வாறான சேவைகளிலிருந்து உச்ச பயனை அடைந்து கொள்ளும் முகமாக நிறுவனங்கள் இற்றைப்படுத்தப் பட வேண்டியது அவசியம். எமது தாயகத்திற்கு Google கிளவுட்டைக் கொண்டு வருவது தற்காலத்திலும் எதிர்காலத்திலும் சிறந்த பலன்களை வழங்கும். இதற்கான ஒப்புதலை அளித்தமைக்காகத் தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். இந்த முன்மாதிரியான முயற்சி, எமது நாட்டின் வணிகத் துறையில் பாரிய முன்னேற்றங்களைக் கொண்டுவரும் என நான் நம்புகின்றேன்".

கூகுள் கிளவுட்டின் தலைமை நிர்வாக அதிகாரி தோமஸ் குரியன், கூகுள் கிளவுட்டைப் பயன்படுத்தி நிறுவனங்கள் தங்கள் டிஜிட்டல் சேவைகளை நவீனமயமாக்கவும், துரிதப்படுத்தவும் உதவ நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், புதுமையான கூகுள் கிளவுட் தீர்வுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் உலகளாவிய வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும். சவுதி அரேபியாவில் உள்ள நிறுவனங்கள் நுகர்வோருக்கு சிறப்பாக சேவை செய்ய உதவும் என தான் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தின் மூலமான, கூகுள் கிளவுட் பிளாட்ஃபார்ம் பிராந்தியங்களின் உலகளாவிய வலையமைப்பில் சேர்ந்துகொள்ளும் என்ற பெருமையைப் பெறுகின்றது சவுதி அரேபியா. இதன் மூலமாக வாடிக்கையாளர்கள் பல தரப்பட்ட சர்வதேச தரத்திலான சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். செயற்கை நுண்ணறிவு, புத்தி சாதுர்யமான தகவல் பகுப்பாய்வுகள், பாதுகாப்பு, தரவு மேலாண்மை, செயலிகளை நவீனமயமாக்கல், போன்ற சேவைகளை உதாரணமாகக் கூறலாம்.

சவுதி அரேபியாவின் தம்மாம் நகரில் இயங்கவிருக்கும் இந்நிலையமானது அரபு உலகிலும் மத்திய கிழக்கிலும் முதன்மையானது என்பது குறிப்பிடத்தக்கது.



**மௌலவி**
**எம்.எம்.முஹம்மது றபீஸ் கபூரி (M.A)**
**அதிபர், சுமையா மகளிர் அரபுக் கல்லூரி கிண்ணியா**

# அழுதவர் மனம் இப்போ கொஞ்சம் ஆறும் போல

எப்படி ஆச்சோ
இப்படி இன்று.
எங்கே மறைந்தது
கிடந்து போனது?

சுதந்திரம் தந்து
போன நாடு
காட்டம் காட்டி
ஆவணம் சொல்ல.

நடந்தவை இது
உரை உறுதியாக.
மறைத்து வைத்தவை
கிழறிப் போட்டது.

அதிர்ந்து போனது
ஆட்டம் போட்ட
நாயகர் மனங்கள்
இன்று திகைத்து.

எங்கே கிடந்தது
இவ்வளவு நாளும்?
மறைந்து மறைத்து
காத்தது திறந்ததோ?

உறவை பிரித்து
உயிரை குடித்து
உள்ளம் கலங்கிட
உறைய வைத்தவர்.

உறைந்து போனது
கண்டு கொண்டார்.
மனதில் மகிழ்வு மலர
மனம் சிரிக்க கண்டேன்.

எப்படி இப்படி
பிழைப்பு நடத்திட
எண்ணித் துணிந்து
காலம் கடந்தாரோ?

சேனல் நான்கு
வாய்ப் பேச்சில்
இருந்தாலும் இனி
மூச்சு வாங்கும்.

சேர்ந்து கொன்ற
கூட்டம் இன்றும்
சேர்ந்து கொண்டது.
தப்பித்துப் போக.

காலம் மாறிய
நேரம் இதுவோ?
வாழ்வு வட்டம்
நினைவு மீளும்.

போரில் வீழ்ந்தால்
வீரன் என்போம்.
சதியில் சிக்கி
சீரழிந்தால் போதும்.

எள்ளி நகையாடி
திட்டித் தீர்த்து
வஞ்சம் கொட்டி
வசைபாடி போவர்.

எத்தனை பெரிய
நன்மையைத் தானும்
கொட்டி வந்து நீ
நன்மை செய்தாலும்.

சற்றே சிறு தீமை
சிந்தை செய்தாலும்
தவறென புரியாது
தட்டி விட்டு போகும்.

இத்தனை பெரிய
தப்புக்கும் உண்டோ
தப்பிக்கும் வழியும்
இந்த உலகில் தான்.

திட்டித் தீர்த்து
கடந்து போகும்
மக்கள் கூட்டம்
இந்த நாட்டில் வாழ.

திட்டம் போட்டு
வெட்டிக் கொள்ள
பார்த்து கடந்து
பக்கம் போகுமோ?

விட்ட தவறு இப்போ
தேடிய சொத்தை
சொர்க்கம் கொள்ள
தட்டிப் போகிறதே!

நிம்மதி தொலைத்து
வாழும் ஒரு வாழ்வை
வரமாகத் தந்து போக
அழுதவர் மனம் ஆறும்

அன்புடன் நதுருசி

# 'தொன்மாவிலங்கை' பரதநாட்டிய அரகேற்றம்





அபிநயக்ஷேத்திரா நடனப்பள்ளி இயக்குனர் காலசூரி' திவ்யா சுஜேனின் மாணவியும் நடராஜா திலீபன், திருமதி காயத்திரி திலீபன் தம்பதியரின் புதல்வியுமான காவியா திலீபனின் 'தொன்மாவிலங்கை' பரதநாட்டிய அரகேற்றம் கடந்த சனிக்கிழமை செப்டம்பர் 02ஆம் திகதி மாலை 5.30 க்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக 'கலாநிதி' ராஜ்குமார் பாரதி கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக நாட்டிய கலாகேந்திரா இயக்குநர் 'கலாநிதி' கிருஷாந்தி ரவீந்திரா, கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபர் மீனலோஜினி இதய சிவதாஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடாத்தும் (சுபாவித கீ) எனும் இசை நிகழ்ச்சி (8) வெள்ளிக்கிழமை காலை கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர் சுபாஷினி தெமடகொட முன்னிலையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமரையும் மாணவிகளையும் பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

# பாரதியின் படைப்புகளை முதன்முதலில் உலகுக்கு வெளிக்கொண்டு வந்தவர் விபுலாநந்த அடிகளார்

'எனது கொள்ளுத் தாத்தா சுப்பிரமணிய பாரதியாரின் பெயரை 'மகாகவி' என்று முதன்முதலில் உலகத்துக்கு உச்சரித்தவர் இலங்கையின் கிழக்கு மண் பெற்றெடுத்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரேயாவார். பாரதியின் ஆக்கங்களை முதன்முதலில் உலகத்துக்கு எடுத்துக்காட்டிய பெருந்தகையும் சுவாமி விபுலானந்த அடிகளார் தான்.

இவ்வாறு மட்டக்களப்புக்கு வருகை தந்த எட்டயபுரத்து முண்டாசுக் கவிஞன், பாட்டுக்கொரு புலவன், புதுமைக் கவிஞன் சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரன் கலாநிதி ராஜ்குமார் பாரதி தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு சில தினங்களுக்கு முன்னர் வருகை தந்த ராஜ்குமார் பாரதி, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் மகளான தங்கம்மாவின் புதல்வி லலிதா பாரதிக்கு மகனாகப் பிறந்தவர். ராஜ்குமார் அவர்கள் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் பொறியியலாளரும் இந்தியாவின் பிரபல கர்நாடக இசைக் கலைஞரும் பின்னணிப் பாடகரும் ஆவார்.

அவர் தனது வாழ்க்கையில் முதன் முறையாக மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். அவருக்கு இங்கு பாரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவருக்கு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திலும், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவனத்திலும், கல்லடி இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்திலும் பெருவரவேற்பளிக்கப்பட்டது.

அவரை கல்லடி இராமகிருஷ்ண மடத்தில் தினகரனுக்காக நான் சந்தித்து சிறிது நேரம் அளவளாவினேன்.

**கேள்வி:** மட்டக்களப்பு மண்ணில் காலடி பதித்த போது உங்களுக்கு ஏற்பட்ட உணர்வு எவ்வாறு இருந்தது?

**பதில்:** இந்த மண் சுவாமி விபுலாநந்தர் அவதரித்த மண் அல்லவா! அவர் பிறந்து வளர்ந்த இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்த பொழுது ஒருவித புத்துணர்ச்சியும் மகிழ்ச்சியும் எனக்கு ஏற்பட்டது. விபுலானந்த சுவாமிகள் எனது கொள்ளுத் தாத்தா பாரதிக்கு அளித்த மாபெரும் கௌரவத்தை நான் நினைத்துப் பார்க்கிறேன்.

முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரை நினைவு கூருமுகமாக, நன்றி கூருமுகமாக நான் முதல் தடவையாக இங்கு வருகை தந்திருக்கின்றேன். எனது வாழ்க்கையில் இன்று மறக்க முடியாத நாள். மிகவும் சந்தோஷமாக உள்ளது. உண்மையிலேயே பாரதியாரை இன்றும் இலங்கை மக்கள் இத்துணை



நேசிக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் அவரது படைப்புகள்.

**கேள்வி:** பாரதிக்கும், விபுலாநந்த அடிகளாருக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றி சிறிது கூற முடியுமா?

**பதில்:** பாரதியின் படைப்புகளை உலகுக்கு வெளிக்கொணர்ந்தது விபுலாநந்த சுவாமிகளே யாவார்.

இந்த உண்மை இன்றைய தலைமுறையினர் பலருக்குத் தெரியாது. பாரதியார் ஒரு புதுமைக் கவிஞர், ஒரு நூற்றாண்டின் சிறந்த சிந்தனையாளர். அவர் கவிதைகளை எழுதிக் குவித்தார். ஆனால் அவரது படைப்புகள் வெளியுலகுக்குத் தெரியவரா மலேயே இருந்தன. அவ்வாறான புதுமைக் கவிஞனின் அரிய படைப்புகளை தமிழுலகுக்கு, உலகின் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தவர் சுவாமி விபுலாநந்தர் என்பதை நான் பெருமையாக இங்கு கூறுகின்றேன்.

'பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியார்' என்று



அன்று தொடக்கம் இன்று வரை பேசப்பட்டு வருகின்ற எனது கொள்ளுத் தாத்தாவின் பெயரை முதன் முதலில் 'மகாகவி' என்று உச்சரித்தவர் சுவாமி விபுலானந்தர். எனவே அவரது நாமத்திலே இயங்கும் இந்தக் கல்வி நிறுவனத்திற்கு வருகை தந்து உரையாற்றியதையிட்டு மிகவும் சந்தோஷம் அடைகின்றேன்.

**கேள்வி:** பெண் விடுதலைக்காக அக்காலத்திலேயே உரத்துக் குரல் கொடுத்த புதுமைக் கவிஞன் பாரதி என்பதில் பெண் குலம் பெருமை கொள்கின்றது. இலங்கைக்கு வருகை தந்துள்ள நீங்கள் எமது பெண்களுக்கு ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?

**பதில்:** இலங்கையில் பெண் ஆளுமைகள் பலருடன் உரையாடும் வாய்ப்பு எனக்



குக் கிடைத்தது. பாரதி கண்ட புதுமைப் பெண்கள் பலரை நான் இங்கு சந்தித்தேன். இங்குள்ள பெண்கள் பலர் நவீன சிந்தனையும் ஆளுமையும் கொண்டவர்களாக விளங்குகின்றார்கள். அவர்களையிட்டு பெருமைப் படுகின்றேன். பாரதி இன்று உயிருடன் இருந்திருந்தால் இங்குள்ள பெண்கள் பலர் குறித்து மகிழ்ச்சியடைந்திருப்பார்.

இவ்வாறு பாரதியாரின் கொள்ளுப்பேரன் கலாநிதி ராஜ்குமார் பாரதி தினகரனுக்கான சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்லடி இராமகிருஷ்ண மிஷன் இல்லத்திற்கு வருகை தந்த கலாநிதி ராஜ்குமார் அவர்களை பாரதி இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் வரவேற்றார்.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அடிகளார் அழகியல் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி, பேராசிரியர் சி. மௌனகுரு, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, காரைதீவு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றார்கள்.

இல்ல மாணவர்களுடன் அளவளாவிய கலாநிதி ராஜ்குமார் பாரதியாரின் பாரதியார் பாடல்களை நினைவுகூர்ந்தார்.

இதேவேளை மகாகவி பாரதியாருடைய கொள்ளுப்பேரன் கலாநிதி இராஜ்குமார் பாரதி மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்திற்கும் விஜயம் செய்தார்.

செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி(நாளை) பாரதியாரின் நினைவு நாளாகும். இதனை முன்னிட்டே கலாநிதி ராஜ்குமார் பாரதி மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் மாபெரும் நிகழ்வு இடம்பெற்றது. அந்நிகழ்வுக்கு ஆன்மீக அதிதியாக சுவாமி நீலமாதவனானந்தஜீ மஹராஜ், முன்னிலை அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா, பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், சிறப்பு அதிதியாக பேராசிரியர் சி. மௌனகுரு ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில் பாரதியாருடைய கவி வரிகளில் உருவாக்கப்பட்ட பாடல்களுக்கு இசையூட்டப்பட்டு இசை ஆற்றுகைகளாகவும் நடன ஆற்றுகைகளாகவும் இடம்பெற்றன.

அத்தோடு, மஹாகவி பாரதியாருடைய கொள்ளுபேரனாகிய கலாநிதி ராஜ்குமார் பாரதி அவர்களின் மட்டக்களப்பு வருகையைத் தடம்பதிக்கும் முகமாக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் முன்னால் அமைந்துள்ள பிரதான வீதியில் சுவாமி விபுலானந்தரினால் ஆராய்ச்சி செய்யப்பட்ட யாழ் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ராஜ்குமார் பாரதிக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவினால் கௌரவம் வழங்கப்பட்டது. மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

- புதுமைக் கவிஞன் சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப்பேரன் கலாநிதி ராஜ்குமார் பாரதி மட்டக்களப்பு மண்ணில் வைத்து பெருமிதம்!
- 'பாரதி கண்ட புதுமைப் பெண்களை இலங்கையில் நான் சந்தித்தேன்'

**வி.ரி.சகாதேவராஜா**
காரைதீவு குறூப் நிருபர்

# Customs தரும் கஷ்டம்

## வர்த்தக அடிப்படையிலான பணமோசடி அச்சுறுத்தலைத் தடுக்க புதிய உடன்படிக்கை



**AGS. சுவாமிநாதன் சர்மா**
பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்

வர்த்தக அடிப்படையிலான பணமோசடி (Tradebased money laundering (TBML)) அச்சுறுத்தலைத் தடுக்க ஏனைய நாடுகளில் செயற்படும் ஒத்த நிறுவனங்களுடன் இலங்கையின் சுங்கத் திணைக்களம் உடன்படிக்கையில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தக அடிப்படையிலான பணமோசடிகளை கண்டறியும் ஒப்பந்தம் சமீபத்தில் அவுஸ்திரேலியாவுடன் (Australia) கையெழுத்தான நிலையில், மாலைதீவு மற்றும் ரஷ்யாவுடனும் இதே போன்ற ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், தகவல் பரிமாற்றம், பணமோசடி செய்பவர்களைக் கண்டறிதல் மற்றும் வரி ஏய்ப்பு ஆகியவற்றைக் கண்டறிய இலங்கை சுங்கத் திணைக்களம் அண்மையில் இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தத் தகவல் பகிர்வு மற்றும் கண்டறிதல் தொடர்பில் இங்கிலாந்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதேவேளை இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சிறப்பு வருவாய் அதிரடிப் படையினர் நடாத்திய சோதனையில் இருந்து, கடந்த ஆறு மாதங்களில் 1.1 பில்லியன் ரூபாய் சேகரிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் 2022ஆம் ஆண்டு முழுவதும் 1.1 பில்லியன் ரூபாய் மட்டுமே வருமானமாக சேகரிக்கப்பட்டதாகவும் இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வர்த்தக அடிப்படையிலான பணமோசடி (TBML) என்பது சர்வதேச வர்த்தக அமைப்பு மூலம் தங்கள் சட்டவிரோத நடவடிக்கைகளின் வருமானத்தை சட்டப்பூர்வமாக்க குற்றவாளிகளால் பயன்படுத்தப்படும் ஒரு முறையேயாகும். உண்மையான நிதி ஆதாரத்தை மறைத்து அவை சட்டபூர்வமானதாக மாற்றியமைக்க விலைப்பட்டியல் போன்ற வர்த்தக பரிவர்த்தனைகளை கையாளுதல் இதில் அடங்கும்.

வர்த்தக அடிப்படையிலான பணமோசடி (TBML) என்பது குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்ற ஒரு முறை. சர்வதேச வர்த்தக பரிவர்த்தனைகளைக் கையாள்வதில் முறையான வர்த்தகத்தின் முகப்பைப் பராமரிக்கும், அதே வேளையில் கணக்கில் காட்டாத பணத்தை எல்லைகளுக்குள் நகர்த்துவதை உள்ளடக்குகிறது. உலகளாவிய நிதி அமைப்பைக் குறைமதிப்பிற்கு உற்படுத்தும் திறன் மற்றும் குற்றச் செயல்களை நிலைநிறுத்துவதற்கு வசதியாக இருப்பதால் உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கு TBML ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

நிதிக் குற்றங்களைத் தடுக்க உலகளாவிய மற்றும் உள்ளூர் கட்டுப்பாட்டாளர்கள் உலகளவில் நிறுவப்பட்டுள்ளனர். மேலும் இந்தக் கட்டுப்பாட்டாளர்கள் கொள்கைகளை உருவாக்குகின்றனர். பணமோசடி எதிர்ப்பு (AML) என்பது குற்றவாளிகளின் நிதிக் குற்றங்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை உள்ளடக்கியது. வர்த்தக அடிப்படையிலான பணமோசடி என்பது வழக்கமான பணமோசடி எதிர்ப்பு ((AML) Anti Money Laundering) நடவடிக்கைகளின் இருப்பிட அமைப்பின்கீழ் செயற்படுகிறது.



வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் மூலம் நிதியை நகர்த்துவதற்கான பாரம்பரிய முறைகளைப் போலன்றி TBML ஆனது சர்வதேச வர்த்தகத்தின் சிக்கலைப் பயன்படுத்தி சட்டவிரோத நிதியின் மூலத்தையும் இயக்கத்தையும் மறைக்கின்றது. குற்றவாளிகள் வர்த்தகப் பரிவர்த்தனைகளைக் கையாள்வதில் சரக்குகளை மற்றும் பொருட்களை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ மதிப்பிடுகின்றனர். இது பொருட்களின் கூறப்பட்ட மதிப்புக்கும் அவற்றின் உண்மையான மதிப்புக்கும் இடையே பொருந்தாத தன்மையை உருவாக்குகிறது. இந்த முரண்பாடு, முறையான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் போது நிதியை பரிமாற்ற அனுமதிக்கிறது.

வர்த்தக அடிப்படையிலான பணமோசடியின் (TBML) பொதுவான நுட்பங்கள் பின்வருமாறு அமைகின்றது. பொருட்களுக்கு அதிக/குறைவான விலைப் பட்டியல் தயாரித்தல்: குற்றவாளிகள் எல்லைகளுக்குள் அதிகப்படியான நிதியை நகர்த்துவதற்காக விலைப்பட்டியலில் உள்ள பொருட்களின் மதிப்பை அதிகமாகக் குறிப்பிடுகின்றனர். மாறாக, மற்ற தரப்பினருக்கு இரகசியமாக பணத்தை அனுப்புவதற்கான மதிப்பை அவர்கள் குறைத்து மதிப்பிடலாம்.

சரக்குகளை/ பொருட்களை தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் சித்தரித்தல்: குற்றவாளிகள், உண்மையில் கொண்டு செல்லப்படுவதை விட வேறு வகையான சரக்குகளை கப்பல் ஆவணங்களில் அறிவிக்கலாம். இது பொருட்களின் மதிப்பைக் குறைத்து அல்லது அதிகமாகப் புகாரளிப்பதற்கான வாய்ப்பை உருவாக்குவதுடன் இது சட்டவிரோத நிதி பரிமாற்றங்களுக்கு வழிவகுக்கின்றது.

**பொய்யான/ தவறான கப்பல் ஆவணங்களைப் பயன்படுத்துதல்:** மோசடியான விலைப்பட்டியல்கள் மற்றும் பிற கப்பல் ஆவணங்கள் முறையான வர்த்தகத்தின் தோற்றத்தை உருவாக்கப் பயன்படுத்தப்படும் அதேநேரம் நிதி இரகசியமாக மாற்றப்படுகின்றது.

**இல்லாத பொருட்களுக்கான பரிவர்த்தனைகளை உருவாக்கல்:** இந்த "பண்டம் ஷிப்மென்ட்கள்" நிதிப் பரிமாற்றங்களை நியாயப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. நடைமுறையில் அவை கண்டுபிடிக்கக் கடினமாக இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

வர்த்தக அடிப்படையிலான பணமோசடி (TBML) காரணமாக உலகளாவிய நிதி அமைப்புக்கு, பாதுகாப்புக்கு மற்றும் பொருளாதாரத்துக்கு ஒரு பன்முக அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

**பொருளாதார தாக்கம்:** TBML வர்த்தக புள்ளிவிவரங்களை சிதைத்து, பணம் செலுத்தும் சமநிலையை பாதிக்கும். இதன் காரணமாக பொருளாதார குறிகாட்டிகளின் துல்லியத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது.

**சட்டவிரோத நிதியுதவி:** போதைப்பொருள் கடத்தல், மனித கடத்தல் மற்றும் பயங்கரவாதம் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளின் வருமானத்தை சட்டபூர்வமாக மாற்றியமைக்க குற்றவியல் நிறுவனங்கள் TBML ஐப் பயன்படுத்துகின்றன.

வளங்களின் பயன்பாட்டினை வலுவிழக்கச் செய்கின்றது: TBMLக்கு அரசாங்கங்கள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கணிசமான ஆதாரங்கள்/ வளங்கள் தேவையாக இருப்பதனால் இது மற்றைய முக்கியமான சட்ட அமுலாக்க நடவடிக்கைகளிலிருந்து கவனத்தைத் திசை திருப்புகிறது.

**பணமோசடி தடுப்பு (AML) அமைப்புகளில் காணப்படும் பலவீனம்:** வர்த்தக பரிவர்த்தனைகளின் சிக்கலான தன்மை மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் வெளிப்படைத் தன்மை இல்லாததால் பாரம்பரிய AML அமைப்புகள் TBMLக்கு எதிராக குறைவான செயற்திறன் கொண்டவையாக உள்ளன.

சர்வதேச வர்த்தகத்தின் நுணுக்கங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் அதன் திறன், அதன் நிகழ்வைக் கண்டறிந்து தடுப்பதற்கான விரிவான நடவடிக்கைகளின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. அரசாங்கங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஒத்துழைக்க வேண்டும். மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பின்பற்ற வேண்டும் மற்றும் TBMLஇல் ஈடுபடும் குற்றவாளிகள் பயன்படுத்தும் தந்திரங்களை விட ஒரு படி மேலே இருக்கத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் மட்டுமே இந்த இரகசிய அச்சுறுத்தலின் அலைகளைத் தடுத்து உலகளாவிய நிதிய நிலப்பரப்பின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க முடியும்.

TBMLஐ எதிர்த்துப் போராடுவதற்கு அரசாங்கங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு இடையே அதிகப்படியான செயற்பாடுகள் தேவைப்படுகின்றன. அவற்றில் சில பின்வருமாறு காணப்படுகின்றன.

**மேம்படுத்தப்பட்ட விடாமுயற்சி:** வர்த்தக பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தல், ஆவணங்களின் நம்பகத்தன்மையை சரிபார்த்தல் மற்றும் அசாதாரண வடிவங்களைக் கண்டறிய மேம்பட்ட பகுப்பாய்வுகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட கடுமையான விடாமுயற்சி செயன்முறைகளை நிதி நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும்.

**தகவல் பகிர்வு/ பரிமாற்றம்:** நாடுகள், சட்ட அமுலாக்க முகவர் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இடையே மேம்படுத்தப்பட்ட தகவல் பகிர்வு மேற்கொள்வதன் மூலம் சந்தேகத்திற்குரிய வர்த்தக பரிவர்த்தனைகளை மிகவும் திறம்பட அடையாளம் காண உதவும்.

**மேம்பட்ட தொழில்நுட்பங்கள்:** சங்கிலி இணைப்பு/ தொடரேடு (block chain), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் அதிகப்படியான தகவல் பகுப்பாய்வு (big data analytics) போன்ற தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பு வர்த்தக பரிவர்த்தனைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் கண்டறியும் தன்மையை மேம்படுத்துகின்றது. மேலும் குற்றவாளிகள் கணனியை அனுமதியற்ற முறையில் ஊடறுப்பதனை மற்றும் கையாள்வதனை கடினமாக்குகின்றது.

வர்த்தக அடிப்படையிலான பணமோசடியை (TBML) முறியடிக்க இலங்கை அரசாங்கம் பல புதிய சட்டங்களையும் ஒப்பந்தங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இலங்கை அரசாங்கம் அமுல்படுத்தும் புதிய சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் எவ்வாறு அமைகின்றன என்பதனை பார்ப்போம்.

பணமோசடித் தடுப்புச் சட்டம் Prevention of Money Laundering Act (PMLA), 2022இல் PMLA பற்றிய குறிப்பிட்ட விதிகளைச் சேர்க்கும் விதமாக புதிதாக இந்தச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளைப் புகாரளிக்க நிதி நிறுவனங்கள் மற்றும் பிற வணிகங்களுக்கு PMLA தேவைப்படுகின்றது. மேலும் இது TBML வழக்குகளை விசாரிக்கவும் வழக்குத் தொடரவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கின்றது.

இலங்கை சுங்கச் சட்டம் TBML ஐக் கண்டறிந்து விசாரிக்கும் சுங்க அதிகாரிகளின் திறனை வலுப்படுத்துவதற்காக 2022இல் திருத்தப்பட்டது. தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்கள் TBML உடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பொருட்களை பறிமுதல் செய்யும் அதிகாரத்தை சுங்க அதிகாரிகளுக்கு வழங்குகின்றது. மேலும் வர்த்தகர்கள் தங்கள் பரிவர்த்தனைகள் பற்றிய கூடுதல் தகவல்களை வழங்க வேண்டும் என்கின்ற அதிகப்படியான சட்ட மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அமெரிக்கா பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தம் Sri LankaUnited States Mutual Legal Assistance Treaty (MLAT). இது 2022இல் கையொப்பமிடப்பட்டது. TBML வழக்குகளை விசாரிப்பதற்கும், விசாரணை செய்வதற்கும் அமெரிக்க அதிகாரிகளிடம் இருந்து உதவி கோரவும் உதவியைப் பெறவும் இலங்கை அதிகாரிகளை MLAT அனுமதிக்கின்றது.

இந்தப் புதிய சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் TBMLக்கு எதிரான இலங்கையின் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சிப்படியாகும். நாட்டின் AML/ CFT கட்டமைப்பை வலுப்படுத்தவும் வர்த்தகப் பரிவர்த்தனைகள் மூலம் பணப் பரிமாற்றம் செய்வதை குற்றவாளிகளுக்கு மேலும் கடினமாக்கவும் இவை உதவும்.

இந்தப் புதிய சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு மேலதிகமாக இலங்கை அரசாங்கம் TBMLஐ எதிர்த்துப் போராடுவதற்கு பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இவற்றில் பின்வருவன அடங்கும்:

வணிகங்கள் மற்றும் நிதி நிறுவனங்களிடையே TBML பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

சுங்க அதிகாரிகள் மற்றும் பிற சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு TBML கண்டறிதல் மற்றும் விசாரணை குறித்து பயிற்சி அளித்தல்.

TBML இல் தகவல் மற்றும் உளவுத்துறையைப் பகிர்ந்து கொள்ள சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுதல்.

"IGNORANCE OF LAW IS NO EXCUSE" என்கின்றது சட்டம். ஆகவே, நடைமுறையில் உள்ள சட்டங்களினை தெரிந்து, முழுமையாக அறிந்திருந்து அதன்படி செயற்படுதல் ஒவ்வொரு நாட்டு மக்களுடைய கடமையுமாகும். இலங்கை அரசாங்கம் TBML மற்றும் பிற வகையான நிதிக் குற்றங்களை எதிர்த்துப் போராட உறுதிபூண்டுள்ளது. இலங்கையில் புதிய சட்டங்கள், உடன்படிக்கைகள் மற்றும் காலத்திற்குக் காலம் அரசாங்கம் மேற்கொண்டு வரும் ஏனைய நடவடிக்கைகள், குற்றவாளிகளுக்குக் கடினமான சூழலை உருவாக்குகின்றது

# கோழி இறைச்சியின் விலை குறைகிறது

## டிசெம்பரில் ரூ. 1,100க்கு விற்பனையாகும்

கோழி இறைச்சியின் விலையைக் குறைக்க கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்தமைக்கமைய, தற்போது 1,250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியை டிசெம்பர் பண்டிகைக் காலத்தில் 1,100 ரூபாவுக்கு விற்பனை செய்ய வாய்ப்புள்ளதாக, அச்சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார். வர்த்தக அமைச்சருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, கோழி இறைச்சியின் விலை தொடர்பாக இவ்வாறு இணக்கப்பாடு எட்டப்பட்டது. இது தொடர்பாக தெரிவித்த கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர,

இந்த விடயம் தொடர்பாக வர்த்தக அமைச்சருடன் கலந்துரையாடியதுடன், உற்பத்திச் செலவையும் கணக்கிட்டு கொடுத்தோம். இந்நிலையில், சில உடன்பாடுகளுக்கு வந்தோம். தற்போது நாட்டில் இறைச்சி தட்டுப்பாடு இல்லை. சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் அதிகபட்ச திறனில் உற்பத்தி செய்கின்றனர்.

ஆகையால், எதிர்வரும் மாதங்களில் இறைச்சி தட்டுப்பாடு ஏற்படாது. டிசெம்பருக்குள் உற்பத்தித் திறன் அதிகரித்து, உபரியாக இருக்குமென்று நம்புகிறோம். இந்நிலையில், இறைச்சி விலை மேலும் குறையும். அத்துடன், எங்களுக்கு உற்பத்தியை தொடர அரசு அனைத்து சலுகைகளை வழங்கியுள்ளது. விலை 1,100 ரூபாவை எட்டுமென நம்புகிறோம். சோளமே பெரிய பிரச்கினையாக உள்ளது. இலங்கைக்கு கொண்டு வந்தால் சோளத்தை முழுமையாக உணவுக்கு பயன்படுத்தலாம். அப்போது உற்பத்திச் செலவை குறைக்கலாம். பண்டிகைக் காலத்தில் இந்த விலையை விட குறைவாக எங்களுக்கு கொடுக்க முடியும்" எனத் தெரிவித்தார்.

## நம்பிக்கையில்லாப்...

*(09ஆம் பக்கதொடர்)*

2016ஆம் ஆண்டு 629 ஆக காணப்பட்ட அரச வைத்தியசாலைகளின் எண்ணிக்கை தற்போது 648 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதை இதில் குறிப்பிட முடியும்.

அத்துடன் 1992ஆம் ஆண்டு காலப்பகுதியில் 1 இலட்சம் பேருக்கு 19 டாக்டர்கள் என்ற ரீதியில் சேவையில் இருந்தார்கள். அந்த எண்ணிக்கை 2002 ஆம் ஆண்டு 1 இலட்சத்துக்கு 44 டாக்டர்களாகவும், 2021ஆம் ஆண்டு 1 இலட்சத்துக்கு 101 டாக்டர் கள் என்ற நிலையிலும் அந்த எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த நாடுகளோடு ஒப்பிடும் போது இலங்கையில் இலவசசேவைகளுக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது.

செல்வந்தர்களும், ஏழைகளும் இலவச மருத்துவ சேவையில் சமமாக மதிக்கப்படுகிறார்கள்.2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் 71 இலட்சம் பேர் அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுள்ளார்கள்.

அதே போன்று 2020 ஆம் ஆண்டு 63 இலட்சத்துக்கும் அதிகமானோரும், 2022ஆம் ஆண்டு 53 இலட்சம் பேருக்கு அதிகமானோரும் அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

அந்த வகையில் தனியார் மருத்துவத் துறையை விட அரச மருத்துவ சேவையையே நாட்டு மக்கள் முழுமையாக நாடுகிறார்கள். 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலும் அதிக நிதி சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அவசர தேவை என்ற அடிப்படையில் ஏனைய அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட மானியத்தில் இருந்தும் 5 வீதம் அறவிடப்பட்டு சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சுகாதார சேவை தொடர்பில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் விவாதத்தின் போது ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், தவறான மருந்துகள் அல்லது தரமற்ற மருந்துகள் வழங்கப்படுகின்றன என குறிப்பிடப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலாக, "ஒவ்வொரு ஊசி மருந்தையும் சுகாதார அமைச்சர் தமக்கு செலுத்திப் பார்த்தா முடிவெடுக்க முடியும்" என நியாயம் கற்பிக்க முனைந்ததை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எவ்வாறினும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டு அண்மைக்காலமாக சமூகத்தில் பேசு பொருளாக இருந்த அந்த விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. சுகாதாரத் துறையை மீண்டும் மக்களின் முழுமையான நம்பிக்கைக்கு பாத்திரமானதாக கட்டியெழுப்புவதில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியது முக்கியம் என்பதே எமது தாழ்மையான கருத்து.

---

YOUR FAMILY CHANNEL · PRIME TV CATCH THE REFLECTION · digital WE THINK INDEPENDENT

## சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு
## பொது முகாமையாளர் பதவி
## வெற்றிடத்தை பூர்த்தி செய்தல்

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பில் வெற்றிடமாகியுள்ள பொது முகாமையாளர் பதவிக்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. குறித்த பதவி வெற்றிடம் தொடர்பான விபரங்கள் 2023.09.10ம் திகதி Sunday Observer பத்திரிகையிலும் www.topjobs.lk மற்றும் www.itn.lk இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2023.09.30 ஆகும்.

**சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு,**
**விக்கிரமசிங்கபுர,**
**பத்தரமுல்லை.**
**2023.09.05**

---

විවසාය නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

Funded by The European Union

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு

**IDA கடன் இல.** CR 5873 LK /TF- B5382 **செயற்றிட்ட அடையாள இலக்கம்: P156019**

## பெறுகை அறிவித்தல்

### 17 செயற்றிட்ட கொத்தணிகளுக்கு ஆறுமாத காலத்திற்குள் 17 விவசாயிகள் நிறுவனங்களுக்கு (பொதுப் பட்டியலிடப்படாத நிறுவனங்கள்) வியாபாரத் திட்டங்களை உருவாக்குவதற்கு சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்

**பெறுகை இலக்கம்: : LK-MOA-PMU-365209-NC-RFB**

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து (IDA) பல்வேறு நாணயங்களில் 125.00 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமமான கடனையும், விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்காக (ASMP) 25 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமமான ஐரோப்பிய ஒன்றியத்தின் மானியத்தையும் பெற்றுள்ளது. இதில் 58.63 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கமத்தொழில் அமைச்சிற்கு (MOA) ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் சுமார் 5.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விவசாயிகளின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுக்கான முதலீடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் நிறுவனங்களை நிலைநிறுத்துவதற்கும், ஒவ்வொரு விவசாய நிறுவனங்களுக்கும் ஒரு வருடத்திற்கு செயலக சேவைகளை வழங்குவதற்கும் ஒரு குறுகிய கால சேவை வழங்குநரை பணியமர்த்த கமத்தொழில் அமைச்சு அந்தத் தொகையின் சில பகுதியைப் பயன்படுத்த விரும்புகிறது. www.asmp.lk/advertisement இணையதள முகவரியில் தரப்பட்டுள்ள குறிப்பு விதிமுறைகளை (TOR) பார்க்கவும்

17 விவசாயிகள் நிறுவனங்களுக்கு 17 வியாபாரத் திட்டங்களை உருவாக்குவதற்கு சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்துவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், திட்ட பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| விபரம் | ஆவணக் கட்டணம் ரூபா | மீளளிக்கப்படும் வைப்பு / விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 17 செயற்றிட்ட கொத்தணிகளுக்கு ஆறு மாத காலத்திற்குள் 17 உழவர் நிறுவனங்களுக்கு (பொதுப் பட்டியலிடப்படாத நிறுவனங்கள்) வியாபாரத் திட்டங்களை உருவாக்குவதற்கு சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்<br>பெறுகை திட்ட குறிப்பீட்டிலக்கம்: LK-MOA-PMU-365209-NC-RFB | 4500.00 | 200,000.00<br>(விலைக் கோரல் பிணை முறி செயற்றிட்டப் பணிப்பாளர், விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், கமத்தொழில் அமைச்சிற்கு முகவரியிடப் பட்டிருத்தல் வேண்டும்) |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கோரல் இடம்பெறும்.
4. ஆர்வமுள்ள தகுதியுடைய விலைமனுதாரர்கள் கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம், பெறுகை நிபுணரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு 2023.09.11ஆம் திகதி தொடக்கம் 2023.10.03ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் கொள்வனவு செய்யலாம். (தொடர்பிலக்கம்: 0714961603/0777804550)
5. விலைக்கோரலுக்கு முந்திய சந்திப்பு விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் செயற்றிட்ட அலுவலகம், 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் 2023 செப்டெம்பர் 20ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.

**சேவை வழங்குநரின் தகைமை மற்றும் அனுபவம்:**

- சேவை வழங்குநர், விவசாயத் தொழில்நுட்பம், சந்தை இணைப்புகள், வணிகத் திட்டமிடல் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி ஆகியவற்றுடன் தொடர்புடைய துறைகளில் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 10 வருட அனுபவம் கொண்ட நன்கு நிறுவப்பட்ட ஸ்தாபனம் அல்லது நிறுவனமாக இருக்க வேண்டும்.
- பரந்த அளவிலான தொழில்நுட்ப பரிமாற்ற திட்டங்களில் அனுபவம் மற்றும் விவசாயத்தில் சந்தை இணைப்புகளை நிறுவுதல்
- நிறுவனங்களை உருவாக்குவதிலும் அவற்றை நிர்வகிப்பதிலும் அனுபவம்.
- விதிமுறைக் குறிப்பின் (TRO) பிரகாரம் சேவை வழங்குநர் நிபுணத்துவம் வாய்ந்த துறைகளில் நன்கு அனுபவம் வாய்ந்த நிபுணர்களைக் கொண்ட குழுவை நியமிக்கும் நிலையில் இருக்க வேண்டும்.
- விலைமனுதாரர்கள் நிறுவனப் பதிவாளரினால் வழங்கப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**தேர்வுசெய்யும் மூலப் பிரமாணங்கள்:**

i) இதனையெத்த சேவையை வழங்கிய அனுபவம்
ii) வேலையைச் செயல்படுத்துவதற்கான வேலைத் திட்டம் மற்றும் முறை.
iii) முக்கிய ஊழியர்களின் அனுபவம், திறன்கள் மற்றும் திறன்கள்: நிபுணர்களின் இருப்பு மற்றும் அவர்களின் தகுதி.
iv) வாடிக்கையாளர் குறிப்பு- வாடிக்கையாளரின் தொடர்பு விவரங்களுடன் மேற்கொள்ளப்படும் பணி.
(அனுபவங்கள் துணை ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும்)

A. செயற்திட்டத்தின் சிறாப்பருக்கு ரொக்கப்பணமாக 4500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பின்வரும் முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம்.

B. முறையாக பூர்த்தி செய்த விலைமனுக்களை 2023 ஒக்டோபர் 03ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் 2023 ஒக்டோபர் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என இரு தொகுதிகளுடன் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அவை இரண்டும் இரு கடித உறைகளில் வெவ்வேறாக உள்ளிடுதல் வேண்டும் என்பதோடு முறையே மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்விரு கடித உறைகளையும் ஒற்றை கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் LK-MOA-PMU- 365209-NC-RFB என்ற ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

**மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:**
**தலைவர் - செயற்றிட்ட பெறுகைக் குழு**
**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்**
**கமத்தொழில் அமைச்சு,**
**இல.: 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.**
**www.asmp.lk**

---

## பொது அறிவித்தல்

### குறைந்தபட்ச தேவையாக இளமாணி மட்டத்திலான பட்டம் ஒன்றுடன் இலங்கையில் பல்கலைக்கழக கட்டமைப்புக்குள் பிரத்தியேக உடற்கூற்று மருத்துவத்திற்காக World Physiotherapy (உலக உடற்கூற்று மருத்துவம்) ஆதரவு

இலங்கையில் அடிப்படை உடற்கூற்று மருத்துவக் கல்வி தரமற்றதாகவும் டிப்ளோமா மட்டத்திலான அங்கீகாரம் பெறாத நிகழ்ச்சிகளின் போர்வையில் பயிற்சி நிறுவனங்களையும் கொண்டதாக தற்போதைய நிலை இருப்பதோடு இதற்கு அவசர தீர்வு தேவைப்படுவதாக உலக உடற்கூற்று மருத்துவ அமைப்பு உறுதியாக நம்புகிறது. முக்கிய முன்னுரிமை அளிக்கப்பட்டு இந்த விடயத்தை கையாள வேண்டியுள்ளது. இவ்வாறான ஒரு கீழ் மட்டத்திலான தரத்துடன் சிகிச்சைக்கு பிரவேசிப்பது, உடற்கூற்று மருத்துவத் துறையில் நிறுவப்பட்ட சர்வதேச கல்வித் தரங்களில் இருந்து இலங்கை படிப்படியாக வேறுபடுவதாக உள்ளது.

இந்த தரத்தில் குறைந்த கல்வியை வைத்துக்கொண்டு சிகிச்சைக்கு செல்வது போதிய பராமரிப்பு இல்லாததால் பாதிக்கக் கூடிய நோயாளிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்கும் கணிசமான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக உள்ளமை இதனை விடவும் தீர்க்கமானதாகும். இது தொடர்புடைய அனைவரதும் முதன்மையாக அக்கறைக்கு உரித்தான ஒன்றாக இருப்பதில் சந்தேகம் இல்லை.

ஒரு முக்கியமான சுகாதார தொழில்முறையாக உடற்கூற்று மருத்துவம் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவதிலும் ஒட்டுமொத்த நலனிலும் முக்கிய பங்காற்றி வருகிறது. உலக உடற்கூற்று மருத்துவ அமைப்பானது உடற்கூற்று மருத்துவத்துறையை மேம்படுத்துவது மற்றும் சுகாதாரம் மற்றும் நலனில் உலகளாவிய ரீதியில் பங்களிப்புச் செய்வதில் அர்ப்பணிப்புடன் உள்ளது. உடற்கூற்று மருத்துவ ஆராய்ச்சி, கல்வி மற்றும் சிகிச்சையில் தீவிரமாக தரநிலைகளை மேம்படுத்துவதற்கு உடல் உடற்கூற்று மருத்துவ அமைப்பு செயற்பாட்டு ரீதியில் ஆதரவை அளிக்கிறது. இலங்கை உடற்கூற்று மருத்துவ சமூகம் (SLSP) 2003 தொடக்கம் உலக உடற்கூற்று மருத்துவ அமைப்பின் பெருமைக்குரிய அங்கத்துவத்தை கொண்டிருப்பதோடு, இந்த அமைப்பானது இலங்கையில் உள்ள உடற்கூற்று மருத்துவ தொழில்முறைக்கான ஒரே அதிகாரம்பெற்ற பிரதிநிதியாகவும் ஏற்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள மாணவர்களுக்கு உயர்தரமான உடற்கூற்று மருத்துவ கல்வியை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, கற்கையை வழங்கும் எந்த ஓர் உயர் கல்வி நிறுவனமும் கட்டாயம் முன்னணி போதனா வைத்தியசாலை அல்லது வைத்தியசாலைகளின் கூட்டமைப்பு ஒன்றுடன் கூட்டிணைவது அவசியமாகும். இந்த கூட்டிணைவு மூலம் பட்டப்படிப்பு கற்கையில் மிக ஆரம்பத்தில் இருந்து தொடங்கும் வகையில் நான்கு ஆண்டுகள் பட்டப்படிப்பு கற்கை முழுவதும் வைத்தியசாலையை தளமாகக் கொண்ட மருத்துவ சிகிச்சை பயிற்சி வசதியை நிறுவ முடியுமாக இருக்கும்.

இலங்கை மக்கள் முகம்கொடுக்கும் ஆபத்துகளில் இருந்தே பிரதானமாக அச்சம் ஏற்படுகிறது. இந்த அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களின் போதுமான மற்றும் தகுதியுடைய பயிற்சி பெறாத நபர்கள் பாதுகாப்பற்ற அல்லது தீங்கு விளைவிக்கக் கூடிய உடற்கூற்று சிகிச்சைகளை வழங்கக் கூடும் என்பதே தற்போதுள்ள உண்மையான கவலையாக உள்ளது. இந்த நிலை பொதுமக்களின் நலனுக்கு கணிசமான அச்சுறுத்தலாக உள்ளது.

**திரு ஜொனதன் க்ருகர்**
**தலைமை நிறைவேற்று அதிகாரி**

**ரசிக எல். ஜயகொடி**
**செயலாளர்**
**இலங்கை உடற்கூற்று மருத்துவ சமூகம்**

---

## இலங்கை துறைமுக அதிகாரசபை

### துறைமுகம் சார்ந்த தொழில்துறைகள்/ வர்த்தக முயற்சிகளுக்காக ஒலுவிலில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் நீண்ட கால குத்தகைக்கான விலைமனுவுக்கு முன் தகைமைக்கான ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு

**(ICB No: SLPA/DEV/Oluvil/EOI-01)**

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் (GOSL) துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சின் இலங்கை துறைமுக அதிகாரசபையானது (SLPA) கொழும்பு துறைமுகம் (துறைமுகம்) மற்றும் இலங்கையில் ஏனைய சரக்கு கையாளும் கடல் துறைமுகங்களின் மேம்பாடு, பராமரிப்பு, செயற்பாடு மற்றும் துறைமுக மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்கு திருத்தப்பட்ட 1979 இன் 21 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது.
2. இலங்கையில் உள்ள அனைத்து துறைமுகங்களுக்கான அரச அதிகாரம் பெற்ற நிறுவனமாக SLPA இருப்பதோடு, அது பிராந்திய துறைமுகங்களில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு திட்டமிட்டுள்ளது. அவைகளில் ஒன்றாக, நாட்டின் கிழக்கு துறைமுகத்தின் எதிர்கால பொருளாதார அபிவிருத்தியில் ஒலுவில் துறைமுகம் முக்கிய பங்கு வகிப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
3. இந்த ஆர்வ வெளிப்பாட்டு அழைப்பானது (EOI) முன் தகைமை கட்டத்தில் இருப்பதோடு ஒதுக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களில் துறைமுகம் சார்ந்த தொழில்துறைகள்/ வர்த்தக முயற்சிகளுக்காக ஒலுவிலில் உள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களை நீண்ட கால குத்தகையில் வழங்குவதற்கு முதலீட்டாளர் ஒருவரை தேர்வு செய்வதற்கான நடைமுறைக்கான முதல் படியாகும்.
4. ஒலுவில் துறைமுகத்தின் மீன்பிடி துறைமுகத்தை கடற்றொழில் அமைச்சுக்கு வழங்க வாக்குறுதி அளிக்கப்பட்டிருப்பதோடு SLPA விடம் இருக்கும் வர்த்தக துறைமுகத்திற்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் முதலீட்டு வாய்ப்புகளுக்காக குத்தகைக்கு விடப்படவுள்ளது. முதலீட்டு வாய்ப்புக்கு உள்ள மொத்த காணி அளவு 25.2 ஹெக். என்பதோடு ஒவ்வொன்றும் $220m^2$ பகுதியுடன் தங்குமிடக் கட்டிடங்களும் $240 m^2$ பகுதியுடன் ஒரு கட்டிடமும் $550m^2$ பகுதியுடன் மற்றொரு கட்டிடமும் $1440 m^2$ பகுதியுடன் பயிற்சி நிலையமும் முதலீட்டு வாய்ப்புக்காக குத்தகைக்கு விடப்படவுள்ளன.
5. முன் மொழிவை சமர்ப்பிப்பதற்கு முன் தகைமைக்காக ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து ஒலுவில் துறைமுக பகுதிக்கான முதலீட்டு வாய்ப்புகளுக்கு சிறப்பு திட்ட மதிப்பீட்டு குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.
6. முன்மொழிவு கோரிக்கையின் நடைமுறை அடிப்படையில் முன் தகைமை விண்ணப்பங்கள் தேர்வுசெய்யப்படும். மேலும், இலங்கை துறைமுக அதிகாரசபை, தலைமை பொறியிலாளரின் (அபிவிருத்தி) அலுவலகத்தில் குறிப்புக்காக மாதிரிப் பிரதி கிடைக்கப்பெறும். (குறிப்பு 1 ஐ பார்க்க).
7. ஆர்வமுடைய தரப்புகள் 2023.09.12 ஆம் திகதி தொடக்கம் 2023.10.23 ஆம் திகதி வரை 10.00 - 16.00 மணிக்கு இடையே சாதாரண வேலை நாட்களில் கீழுள்ள குறிப்பு-01இல் உள்ள முகவரியில் EOI ஆவணத்தை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
8. கீழ் வரையறுக்கப்பட்டிருக்கும் காலத்தில் அனைத்து பொருத்தமான வரிகளுடன் ரூபா பத்தாயிரம் (ரூபா 10,000.00) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழுள்ள குறிப்பு-2 இல் உள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து எந்த ஒரு ஆர்வமுடைய தரப்பினாலும் EOI ஆவணங்களுக்கான அழைப்பின் முழு தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
9. பெறுகை நேர அட்டவணை பின்வருமாறு

| | நிகழ்ச்சி | திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|
| a. | EOI ஆவணத்திற்கான அழைப்பு வழங்கல் | 2023.09.12, 10.00 மணி தொடக்கம் 2023.10.23, 12.00 மணி வரை | குறிப்பு-1 |
| b. | EOI இற்கு முந்திய சந்திப்பு | 2023.09.22, 10.00 மணி | குறிப்பு-2 |
| c. | EOI ஆவணத்திற்கான அழைப்பின் தெளிவுக்காக விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடைய தரப்புகளுக்கான கடைசி திகதி | 2023.10.03 | |
| d. | EOI ஆவணத்திற்கான அழைப்புக்கு தெளிவுகளை வழங்குவதற்கு SLPA வுக்கான கடைசி திகதி | 2023.10.10 | |
| e. | EOI இனை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு | 2023.10.24, 14.00 மணி | குறிப்பு-2 |
| f. | EOI திறப்பது | 2023.10.24, 14.00 மணி | குறிப்பு-2 |

**குறிப்பு-1:**
தலைமை பொறியியலாளர் (அபிவிருத்தி), இலங்கை துறைமுக அதிகாரசபை
45, லெய்டன் பெஸ்டியன் வீதி, கொழும்பு 1, இலங்கை
தொ. இல. +94 (0) 112483153, தொலைநகல் இல. +94 (0) 112424543, மின்னஞ்சல் முகவரி: cedev@slpa.lk

**குறிப்பு-2:**
செயலாளர், துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு
இல.19, சைத்யா வீதி, கொழும்பு 01.

10. EOI இனை தயாரிப்பது மற்றும் சமர்ப்பிப்பதுடன் தொடர்புபட்டு ஆர்வமுடைய தரப்புகளுக்கு ஏற்படும் எந்த ஒரு இழப்பு அல்லது செலவுகளுக்கும் SLPA பொறுப்பேற்காது.

**தலைவர்**
**விசேட திட்ட மதிப்பீட்டு குழு**
**(ஒலுவில் துறைமுகப் பகுதிக்கான முதலீட்டு வாய்ப்புகள்)**
**10.09.2023**

## இலங்கை சனநாயக, சோஷலிச குடியரசு அரசாங்கம்

### சுகாதார அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

| | |
|---|---|
| திகதி: | 2023-09-10 |
| கடன்/மானிய இல. மற்றும் தலைப்பு | கடன் இல. 3727 SRI - சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்திட்டம் |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | HSEP/PIU/CP/W12-P1/01/RB-2/2022/மிகுதி வேலைகள் சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் (HSEP) கீழ் கண்டி மாவட்டத்தில் 1 எண்ணிக்கையான DH இன் புதுப்பித்தல் நிர்மாணங்கள் |
| தொகுதிகள் (Lots) | LOT E. அம்பகஹபெலெஸ்ஸ DHC |
| விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் | 2023-10-11 |

1. சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கிரயச் செலவிற்காக இலங்கை சனநாயக, சோஷலிச குடியரசு அரசாங்கமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) நிதியுதவியைப் பெற்றுள்ளது. இந்நிதியின் ஒரு பகுதியானது மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள அங்கத்துவ நாடுகளும் இவ்விலைமனுக்கோரலில் பங்குபெற்றலாம்.

2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள மாவட்ட வைத்தியசாலைகளுக்கு வசதிகளை மேம்படுத்தல் உட்பட நிர்மாணங்கள் மற்றும் பூர்த்தியாக்கல் போன்ற வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சின் செயலாளர் அலுவலகத்தின் கீழ் (வேலை கொள்வோர்), கொழும்பு-08, இல. 3/19, கின்சி வீதி, சுகாதார முறைமைகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின், செயற்றிட்டப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| பொதி இல. | புதுப்பித்தல் வேலையின் பெயர் |
|---|---|
| LOT E | அம்பகஹபெலெஸ்ஸ DHC |

3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை வழிகாட்டிகளுக்கமைவாக ஒரு கடித உறையுடன் ஒற்றைக் கட்ட செயல்முறைக்கமைய திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நாடுகளுக்கு திறக்கப்பட்டுள்ளன.

4. பின்வரும் தகைமைகளுடன் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மட்டும் இந்த விலைமனுக் கோரலில் பங்குபற்றலாம்.

**அ. நிதியிடல்**

(i) முன்னைய நிதியில் ஆற்றுகை – விலைமனுதாரரின் தற்போதைய நிதி நிலைமையை விபரப்படுத்துவதற்காக கடந்த ஐந்து (5) வருடங்களுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். (i) பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் - கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் (ii) பங்குதாரர் மற்றும் தனியுரிமை - கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி திரும்பல் கடிதம் சகிதம் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் / பட்டயக் கணக்காளர்களினால் சான்றுபடுத்திய நிதி அறிக்கைகள்.

(ii) **சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு** – விலைமனுதாரரின் (பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள் உட்பட) ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வானது (பின்வரும் அட்டவணையைப் பார்க்க) நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது கடந்த ஐந்து (5) வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படும்)

| பொதி இல. | புதுப்பித்தல் வேலையின் பெயர் | இல. ரூபா (மில்லியன்) |
|---|---|---|
| LOT E | அம்பகஹபெலெஸ்ஸ DHC | 171.41 |

(iii) **நிதியிடல் வளம்** - விலைமனுதாரர் (ஏற்புடையதாக இருந்தால் - பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள்) கீழே காட்டப்பட்டுள்ள வகையில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒப்பந்தங்களின் (Lot) நிதியியல் கடப்பாட்டு பொறுப்புகள் தவிர்த்து இந்த ஒப்பந்தத்திற்கான மொத்தத் தேவைப்பாடாக அல்லது அதிகமாகக் கொண்டிருத்தல் வேண்டும். (கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படும்)

| பொதி இல. | புதுப்பித்தல் வேலையின் பெயர் | இல. ரூபா (மில்லியன்) |
|---|---|---|
| LOT E | அம்பகஹபெலெஸ்ஸ DHC | 24.64 |

**ஆ. அனுபவம்**

(i) இதனையொத்த தன்மை மற்றும் அளவுடனான ஒப்பந்தங்கள் - விலைமனுதாரர் (பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள் உட்பட – ஏற்புடையதானால்) இதனையொத்த உத்தேச வேலைகளில் கடந்த 5 வருடங்களில் திருப்திகரமாக அல்லது போதுமான அளவில் ஒப்பந்தக்காரராக அல்லது இணை பங்குதாரராக அல்லது உப ஒப்பந்தக்காரராக ஆகக்குறைந்தது ஒரு ஒப்பந்தத்தையாவது சித்திகரமான முறையில் பங்குபற்றி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழும் பங்குதாரரின் பங்கேற்பு மதிப்பு அதிகமாகவிருத்தல் வேண்டும்.

| பொதி இல. | புதுப்பித்தல் வேலையின் பெயர் | இல. ரூபா (மில்லியன்) |
|---|---|---|
| LOT E | அம்பகஹபெலெஸ்ஸ DHC | 68.56 |

(ii) ஒரு விலைமனுதாரர் பல வெற்றிகரமான (குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கணிசமான பதில்களைப் பெறும்) விலைக்கோரல்களைச் சமர்ப்பித்தால், விலைமனுதாரரின் திறன் மதிப்பீட்டுக் கொள்ளளவை மதிப்பீடு செய்வதற்கு பின்வரும் தேவைப்பாடுகளை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

- சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு
- நிதியியல் வளங்கள்
- ஒதுக்கப்பட வேண்டிய உபகரணங்கள்
- களமிறக்கப்பட வேண்டிய ஆளணியினர்

முழுமையான மூலப் பிரமாணத் தகைமைகள் விலைமனு ஆவணங்களில் விபரப்படுத்தப்பட்டுள்ளன.

5. மேலதிக தகவலைப் பெறுவதற்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிப்பதற்கும் விலைமனுதாரர்கள் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**செயற்றிட்ட பொறியியலாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு,**
**சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம்,**
**இல. 106, பல்லேகம வீதி, அம்பிட்டிய,**
**கண்டி, இலங்கை.**
**மின்னஞ்சல் : Procurement.piucp@gmail.com,**
**தொலைபேசி: 081-3154700,081-2203336 மற்றும் தொலைநகல் : 081-2203336**

6. ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றை நிறைவேற்றல் வேண்டும்.

- ஆரம்ப சுகாதார பராமரிப்பு அலகுகளின் புதுப்பித்தல் வேலைக்கு விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்குமாறு மேற்படி முகவரிக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்தல்.
- இலங்கைப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக பின்வரும் 08ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை (இலங்கை ரூபாயில்) 2023-10-10ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் செலுத்தல் வேண்டும்.
- இந்தப் பணக் கொடுப்பனவை 2023-10-10ஆம் திகதி வரையில் வங்கி வரைவாக இலங்கை, அம்பிட்டிய, இல. 106, பல்லேகம வீதி, சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் **0084189233** கணக்கிலகத்திற்கு அல்லது ரொக்கப் பணமாக வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் செலுத்துதல் வேண்டும் அல்லது கண்டி, இலங்கை வங்கி, அதிமேற்தரக் கிளையின் **0084189233** கணக்கிலகத்திற்கு நேரடியாக வைப்புச் செய்தல் வேண்டும்.

7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் வேலைக் கொள்வோரால் 2023-09-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி, இல. 163, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதாரத் திணைக்களம் - மத்திய மாகாணம், கூட்ட அறையில் இடம்பெறும். சகல விலைமனுதாரர்களும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு திட்டவட்டமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

8. உங்கள் விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு:

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**மத்திய மாகாணம்,**
**இல. 163, சங்கராஜ மாவத்தை, கண்டி.**

எனும் முகவரிக்கு 2023-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெறப்பட்ட வங்கி உத்தரவாதத்துடன் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விலைமனுப் பிணை முறியொன்றுடன் அனுப்புதல் வேண்டும். இந்தப் பிணை முறியானது விலைமனு படிவத்தின் 4ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள வடிவில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் **''செயற்றிட்டப் பணிப்பாளர், சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம்''** எனும் பெயரில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

| பொதி இல. | புதுப்பித்தல் வேலையின் பெயர் | விலைக்கோரல் பிணை முறித் தொகை (இல. ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|---|
| LOT E | அம்பகஹபெலெஸ்ஸ DHC | 1,300,000.00 | 18,000.00 |

9. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். சமுகமளித்திருக்கும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் இறுதி வேளையின் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும்.

10. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு பிணை முறியானது விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 148 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

11. விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கிரயச் செலவுகள் அல்லது செலவினங்களுக்கு மத்திய மாகாண சபையின் சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டாது.

12. உள்நாட்டு விலைமனுதாரர்கள் ஒப்பந்தம் கையளிக்கப்படுவதற்கு முன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) இயைபுடைய தரம் மற்றும் வகுதியின் கீழ் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

**தலைவர் / செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம்,**
**இல. 3/19, கின்சி வீதி,**
**கொழும்பு 08, இலங்கை.**
**2023-09-10ஆம் திகதி.**

---

### விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு

### சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கொழும்பு-13, சுகததாச விளையாட்டரங்கு விளையாட்டுக்கள் ஹோட்டல் சமையலறைக்கான உத்தேசிக்கப்பட்ட புதுப்பித்தல்கள்

**[Contract No.: SNSCA/PRO 384/2023]**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் **7.7 மில்லியன் ரூபா** ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் ''கொழும்பு-13, சுகததாச விளையாட்டரங்கின் விளையாட்டுக்கள் ஹோட்டலின் சமையலறைக்கான உத்தேசிக்கப்பட்ட புதுப்பித்தல்களுக்காக'' தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து **சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர்** முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

நிருமாணக் காலப்பகுதியானது **91 நாட்களாகும்.**

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில். ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் **CIDA** தர முன்னுரிமையானது 04/2016(iv) என்ற இலக்கத்தையும் 03/2020 என்ற திகதியையும் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறும் தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிட நிர்மாண துறையில் **சி-8, சி-7 அல்லது சி-6** ஆகிய தரங்களில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு செய்யப்பட்டு இந்தப் பதிவானது விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். மேலும், பதிவானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**''விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது (பிசிஏ-3) விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-03 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகையானது வழங்கப்பட மாட்டாது''.**

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை **சுகததாச வெளியரங்கு விளையாட்டரங்கு, நிருவாக கட்டிடம், பெறுகைப் பிரிவு, பெறுகை அலுவலகரிடமிருந்து** பெற்று எந்தவொரு வேலை நாளிலும் அதே முகவரியில் **மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்** விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். தொடர்பிலக்கங்கள் பின்வருமாறு: 011-2445677, தொலைநகல்: 011-2445675

5. **2023.09.12 ஆம் திகதியிலிருந்து 2023.10.02 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக **இரண்டாயிரத்து ஐந்நூறு (2500 ரூபா மற்றும் பெசேவ)** ஆகியவற்றை செலுத்திய பின்னர், சுகததாச வெளியரங்கு விளையாட்டரங்கு, நிருவாக கட்டிடம், பெறுகைப் பிரிவு, பெறுகை அலுவலகருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. **2023.10.03 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கணக்குப் பிரிவு, நிருவாக கட்டிடம், சுகததாச வெளியரங்கு விளையாட்டரங்கு** என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் சுகததாச வெளியரங்கு விளையாட்டரங்கு, நிருவாக கட்டிடம், பெறுகைப் பிரிவில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்

7. விலைமனுக்கள் அவைகளை திறப்பதற்காக நிருணயிக்கப்பட்ட திகதியிலிருந்து **77** நாட்கள் காலப்பகுதிக்கு அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள பாங்கிலமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- விலைமனுக்கோரல் ஆவணத்தின் **09 ஆம் பிரிவில்** அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
- **சுகததாக தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் தலைவரின்** பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
- **115,500.00 ரூபா** தொகைக்கானதாகவிருத்தல்.
- **2024 சனவரி 22 ஆம் திகதியன்று வரையும்** செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்
- அட்டவணையின் **ITB Clause 16.0 இல்** குறித்துரைக்கப்பட்டவாறு முகவராண்மைகள் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.

9. **கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, சுகததாச உள்ளரங்கு விளையாட்டரங்கின் விளையாட்டுக்கள் ஹோட்டலில் 2023 செப்டம்பர் 20 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக் கூட்டமானது நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

**தலைவர்,**
**சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை,**
**த.அ. பெட்டி 2211, ஆர்தர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-13.**

---

## தொழிற்பயிற்சியின் ஊடாக

### அங்கீகரிக்கப்பட்ட தொழில் வல்லுநராக முன்னோக்கிச் செல்வதற்கு வலதுகுறைந்த இளமையான உங்களுக்கும் வாய்ப்பு.....

# சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் செயற்படும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு

கேட்கும் / பேசும் / பார்க்கும் / உடல் / அறிவுசார் / தலமீசியா / வலிப்பு / மனநலக் குறைவு மற்றும் பல்வேறு ஊனம் சகிதம் தமது தேவைகளை தனித்து செய்துகொள்வதற்கான இயலுமை உள்ள 16 – 35 வயதுள்ள திருமணமாகாத இளைஞர் யுவதிகள்

**வாகன பொறிமுறை, உணவு தொழில்நுட்பம், பத்திக், தையல், கனனி, கைப்பணி உட்பட 25 கற்கை நெறிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்.**

## எம்மிடம் உங்களுக்கு

- இலவச பயிற்சி வாய்ப்பு
- பயிற்சியின் இறுதியின் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- இலவச உணவு, பானம், தங்குமிட வசதிகள்
- ஒரு நாளைக்கு 150.00 ரூபா வீதம் நாளாந்த கொடுப்பனவு
- பயிற்சியின் முடிவில் தொழிற்பயிற்சி வாய்ப்பு
- சுய தொழிலொன்றைச் செய்வதற்குத் தேவையான பயிற்சி அல்லது பயிற்சிக்கு இயைபான தொழில் வாய்ப்பு

❖ வதிவிடப் பயிற்சியின் பின் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சகிதம் தொழில் வாய்ப்பு

❖ விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 2023 ஒக்டோபர் 10

❖ விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு உங்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்தின் சமூக சேவைகள் அதிகாரியை இன்றே சந்திக்கவும்.

**விசாரணை:**
**011-2187042**
(சேவைப் பிரிவு - சமூக சேவைகள் திணைக்களம்)
www.socialservices.gov.lk
assdirservice.dss@gmail.com

**சமூக சேவைகள் திணைக்களம்**
**இரண்டாம் தளம், இரண்டாம் கட்டம்,**
**செத்சிறிபாய,**
**பத்தரமுல்லை.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# பதவி வெற்றிடம்

## பிரதிப் பணிப்பாளர் பதவி

மேலேயுள்ள பதவிக்காக விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**தகைமைகள்** : இலங்கை மருத்துவ பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட MSc (மருத்துவ நிருவாகம்) பட்டப்படிப்பில் ஐந்து (05) வருட தகைமையை பூர்த்தி செய்திருப்பதுடன் 08 வருட செயற்பாடுடைய சேவையை பூர்த்தி செய்த மருத்துவ அலுவலகரொருவர்.

**வயது** : 35 வயதிற்கு குறைவாகவில்லாமலும் 50 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** : மாதாந்தம் 118,800.00-12x3645-162,540.00 ரூபா

சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த படிகளும் வழங்கப்படும்.

பதவிக்கான நியதிகள்: நிரந்தரமானதும் சேமலாப நிதிய அடிப்படையிலுமானது

அரசாங்க சேவையில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களின் தலைமைகளுடாகவே அனுப்புதல் வேண்டுமென்பதுடன் பிரதியொன்றை நேரடியாகவும் அனுப்பலாம்.

நியமனமொன்றை வழங்கல்/ வழங்காதிருத்தல் ஆகியவற்றிற்கான உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சபையானது தன்னகத்தே கொண்டுள்ளது.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை முழுமையான சுயதரவு மற்றும் இரு (02) உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்களுடன் கீழேயுள்ள முகவரிக்கு 2023.09.25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# வெற்றிடங்கள்

## இருதய மயக்க மருந்து நிபுணர் பதவி

### (Post of Consultant Cardiothoracic Anaesthetist)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் முன்கூட்டிய இருதய நிலையம் ஆண்டுக்கு 500 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட சத்திர சிகிச்சைகளைச் செய்யும் உயர்ந்த நிலை மற்றும் அதிகளவான வயது வந்தோருக்கான இருதய சத்திர சிசிக்சைகளை மேற்கொள்ளும் இலங்கையின் முன்னணி இருதய நிலையங்களில் ஒன்றாகும். மேலும் இது 12 ICU படுக்கைகளையும் மற்றும் 06 HDU படுக்கைகளையும் கொண்டுள்ளது. வெற்றிகரமான அபேட்சகர் Cardio Thoracic ICU/HDU என்பவற்றுக்குப் பொறுப்பு இருதய சத்திர சிகிச்சை நிபுணராகப் பணியாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே மேற்படி துறையில் உள்ள அனுபவம் மேலதிக தகைமையாக இருக்கும்.

**தகைமைகள்** : மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் (PGIM) சான்றிதழ் அல்லது சபைச் சான்றிதழ் சலுகைகளைக் கொண்டவர் தகுதியைப் பெறுவர். மயக்க மருந்து வழங்குவதில் விசேடத் பயிற்சி / அனுபவம் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயது** : விண்ணப்பதாரர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைவானவர்கள் இல்லாத பட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டோர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு கவனம் செலுத்தப்படும்.

**சம்பள அளவு** : ரூபா 118,800-12x3645-162,540/- மாதாந்தம். மேற்படி சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத் துறையினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளும் மற்றும் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்:** நிரந்தரம் (50 வயதிற்குக் குறைவானவர்கள்) மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனக் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2023-09-25ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
2023-09-05.

## சுகாதார அமைச்சு

SPMC

# இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

## பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2024

**2024 ஆம் வருடத்தில்** கீழே குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்ய விரும்பும் அரசாங்க திணைக்களங்கள், அரசாங்கத்திற்கு உரித்தான வியாபார நிறுவனங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உள்ளூர் முகவர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், வியாபார அமைப்புக்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனைத்து விண்ணப்பங்களும் இந்த அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும்.

### A – வழங்க வேண்டிய பொருட்கள்

01. அலுவலக காகிதாதிகள் மற்றும் கணனி காகிதாதிகள்
02. மின்சார உபகரணங்கள்
03. இலத்திரனியல் உபகரணங்கள்
04. கட்டிட பொருட்கள் மற்றும் கனரகப் (ஹாட்வெயார்) பொருட்கள்
05. உருக்குத் தளபாடங்கள்
06. அலுவலக உபகரணம் (கணனிகள் போன்றன)
07. கணனி மென்பொருள் (Computer Software)
08. உள்நாட்டு மென்பொருள் மற்றும் இணையதள வடிவமைப்பு (Local Software & Website Creators)
09. ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
10. ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள்
11. Plastic containers, plastic spoons, corks,screw & press-on-caps and waddings (food grade)
12. பொலித்தீன், பொலித்தீன் பைகள், அச்சடிக்கப்பட்ட செலுலோஸ் பிலிம்கள், அச்சடிக்கப்பட்ட அலுமினிய பொயில், அலுமினிய பைகள்
 மற்றும் அச்சடிக்கப்பட்ட ஸ்சிரிங் ஸ்லீவ்ஸ் (shrink sleeves) (உணவு தரம்)
13. பீவீசீ பொயில்கள் / பீவீ டீசீ பொயில்கள்
14. பீவீசீ ஒட்டும் டேப்கள்
15. பொதியிடுவதற்கான ஒட்டும் பசை
16. சீருடைகள் மற்றும் மேஸ்கள் போன்றனவற்றிற்கான துணிப் பொருட்கள்
17. துவாய்கள் (பெரியது மற்றும் சிறியது)
18. காலணிகள் - கறுப்பு மற்றும் வெள்ளை (கன்வெஸ்)
19. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
20. டயர்கள் மற்றும் டியூப்புக்கள்
21. V பெல்டுக்கள் (Vbelts)
22. நியுமட்டிக் உதிரிப்பாகங்கள் (Pneumatic spares)
23. தீயணைப்பு இயந்திரங்கள், பாதுகாப்பு உபகரணங்கள், காஸ் முகமூடிகள் (goggles) இறப்பர் கையுறைகள் (rubber gloves)
24. துணி கையுறைகள் (cloth gloves) , துணி முகக் கவசங்கள் (cloth masks) போன்றன.
25. சவர்க்காரம், சுத்திகரிப்பான்கள் மற்றும் சுத்திகரிப்புப் பொருட்கள் (தும்புத் தடிகள், மொப்கள், சலவைத் தூள்கள், teepol போன்றன)
26. பால் மா, தேயிலை, பிஸ்கட்கள் போன்றன
27. சீனி (உணவு தரம்) அதி சுத்தமான சுத்திகரிக்கப்பட்ட சீனி (மருந்து உற்பத்திக்காக)
28. சமைக்கப்பட்ட உணவு வழங்குநர்கள் (மதிய உணவு, காலை உணவு மற்றும் இரவு உணவு)
29. ஈதைல் மதுசாரம் 96%
30. மருந்தாக்கல் மூலப் பொருட்கள் (தற்போது கையிருப்பு வைத்திருக்கும் வழங்குநர்கள்)
31. Pharmaceuticals Reference standards
32. சிலிக்காஜொல் தனி பெக்கேற் (individual schets) மற்றும் சிலிக்கா ஜெல் பெக்கெற் ரோல் வடிவில்.
33. அச்சடிக்கப்பட்ட நெளிவுள்ள பெட்டிகள்
34. அச்சடிக்கப்பட்ட அட்டைப் பெட்கள்
35. அச்சடிக்கப்பட்ட பொருட்கள் (லேபல்கள், சிறிய பிரசுரங்கள், ஸ்டிக்கர்கள் போன்றன)
36. வெல்டிங் உபகரணம் மற்றும் துணைப்பாகங்கள்
37. வளிச்சீராக்கிகளுக்கான உதிரிப்பாகங்கள்
38. இயந்திராதிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
39. துருப்பிடிக்காத வெள்ளியிரும்பு போல்டுக்கள் மற்றும் நட்டுக்கள் (Stainless steel bolts & nuts)
40. பெயாரிங்குகள் (Bearings)
41. Oil seal & "O" rings
42. மோட்டார் கார்களுக்கான பட்டரிகள்
43. அச்சடிக்கப்பட்ட அலுமினியம் பொயில்கள் (Printed Aluminum foils)
44. அச்சுப்பொறி ரிபன்கள், டோனர்கள், கார்ட்ரிச்கள் (Toner/cartridges)
45. ஆய்வுகூட Reagents மற்றும் கண்ணாடிப் பொருட்கள்
46. ஸ்டிக்கர் லேபல் ரோல்

### B – வழங்க வேண்டிய சேவைகள்

01. மோட்டார் வாகன திருத்தவேலைகள்
02. வாகனங்களை சேவிஸ் செய்தல்
03. வாகன தகர வேலைகள், ஸ்பிரே நிறப்பூச்சு, body நிர்மாணம் மற்றும் upholstery வேலைகள்
04. கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள்
05. பொருட்களை போக்குவரத்து செய்தல்
06. பயணிகள் போக்குவரத்து
07. வேன்கள், லொறிகள், கார்கள் போன்றவற்றை வாடகைக்கமர்த்துதல்
08. சுங்கப் பொருட்களை அகற்றல் மற்றும் அனுப்புதல் (clearing and forwarding)
09. காப்புறுதி
10. களஞ்சியப்படுத்துவதற்காக கொள்கலன்களை வாடகைக்கமர்த்துதல்
11. மின்சார நிறுவல்கள் மற்றும் திருத்தவேலைகள்
12. குழாய்கள், வடிகாலமைப்பு மற்றும் அதுசார்ந்த சேவைகள்
13. தொழிலாளர் ஒப்பந்தங்கள்
14. தச்சு வேலை மற்றும் பான்ரி கப்போட் வேலைகள்
15. சீருடைகளைத் தைத்தல்
16. அச்சு வேலைகள் மற்றும் புத்தகம் கட்டுதல்
17. வருடாந்த அறிக்கைகளை வடிவமைத்தல் மற்றும் அச்சடித்தல்
18. பாதுகாப்பு மற்றும் தீயணைக்கும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
19. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
20. மத்திய வளிச்சீராக்கி முறைமை, ஸ்பிலிட் வகை வளிச்சீராக்கிகள் மற்றும் குளிர்சாதனங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள்
21. வாகன வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
22. ஆய்வுகூட உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
23. மோட்டார் ரீவைண்டிங்
24. உருக்கு கட்டமைப்புகள், வேல்டிங், இயந்திர பாகங்களை நிரப்புதல் மற்றும் fitting வேலைகள்
25. கணனிகள் மற்றும் துணைப்பாகங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
26. மின்னியல் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
27. இலத்திரனியல் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
28. தராசுகளின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
29. கட்டிடங்களுக்கு நிறப்பூச்சு பூசுதல்
30. பீடை ஒழிப்பு வேலைகள்
31. சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவைகள்
32. வாடகைக்கு களஞ்சியசாலை வழங்குதல் (இரத்மலானைக்கு அருகாமையில்)
33. அலுமினியக் கட்டமைப்பாளர்கள்
34. இரும்பு மற்றும் துருப்பிடிக்காத வெள்ளை இரும்பு வேலைகள்
35. சிவில் மற்றும் குழாய் வேலைகள்
36. காலை உணவு மற்றும் மாலை தேநீர் வேளைக்கான சிற்றுண்டிகளை வழங்குதல்

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. வியாபாரப் பெயர் மற்றும் முகவரி :
2. பதிவிலக்கம் மற்றும் திகதி :
3. உரிமையாளர்களின் பெயர் மற்றும் முகவரி :
4. நீங்கள் பதிவு செய்ய விரும்பும் அம்சம் :
5. தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி. :
6. வங்கியின் பெயர் மற்றும் கணக்கிலக்கம் :
7. 2023 ஆம் ஆண்டில் சேவை வழங்கப்பட்ட கம்பனிகள், அரசாங்க திணைக்களங்கள், நியதிச்சட்டசபைகள்/ கூட்டுத்தாபனங்களின் பட்டியல் :
8. கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படும் கடன் வசதி :

காலஎல்லை : …………………….. பெறுமதி :………………………..

திகதி: ........................................ கையொப்பம்: ........................................ பதவி: ……………………………

அனைத்து விண்ணப்பங்களையும் தாங்கி வரும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களை பதிவு செய்தல்-2024'' என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2023 நவம்பர் 03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவரை வந்தடையச் செய்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் ஒவ்வொரு அம்சத்திற்கும் பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 (ஆயிரம்) ரூபாவை **"அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்"** என்ற பெயரில் வழங்கப்பட்ட காசோலை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு பொருள் / சேவை வகைக்காகவும் வெவ்வேறான விண்ணப்பப் படிவங்களை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அவைகளை ஒரே கடிதவுறையில் இட்டு அனுப்பலாம்.

மேலதிக விபரங்கள் ஏதுமிருப்பின், **திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 2637574/ 2635353).**

**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல.: 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள தோட்டம், இரத்மலானை.**

## கைத்தொழில் அமைச்சு

# இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

## பதவி வெற்றிடங்கள் - தலைமை அலுவலகம் / புல்மோட்டை பொறித்தொகுதி

முழுமையாக அரசுக்குரித்தான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. சந்தைப்படுத்தல் முகாமையாளர் - (Marketing Manager)**
**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**

**வெற்றிடம் நிலவும் இடம்: பிரதான அலுவலகம் - (01 பதவி)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட பட்டம்

மற்றும்

பட்டத்தைப் பெற்றுக்கொண்தன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் நிதித் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (JM 1-2) இயைபுடைய விடயத்துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**02. சிவில் பொறியியலாளர் - (Civil Engineer)**
**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**

வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி - 01 பதவி

வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கல்வி / தொழில்சார் தகைமைகள்

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் (சிவில்) பட்டத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

பட்டத்தைப் பெற்றுக்கொண்தன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

(2) சிவில் வேலைகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்திறனில் (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தோச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (JM 1-2) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

MM-1-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள குறியீட்டு இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10, 1,910x15 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**கொடுப்பனவுகள் மற்றும் அனுகூலங்கள்**

01. பொதுத் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட 7800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி
02. மாதாந்த உணவுக் கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
03. மாதாந்த வரவு ஊக்குவிப்பு கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
04. மாதாந்தம் 4,000.00 ரூபா கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (புல்மோட்டை பொறித்தொகுதியில் சேவையாற்றுபவர்களுக்கு மட்டும்)
05. மாதாந்த உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்படும் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு
06. 5,000.00 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு
07. 15,000.00 ரூபாவிற்கான பொறியியலாளர்களை தடுத்து வைத்தல் கொடுப்பனவு (சிவில் பொறியியலாளர் பதவிக்கு மட்டும்)
08. 02/2022 ஆம் இலக்க அரச வியாபார சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பாடல் பற்றுச்சீட்டுகளைச் செலுத்துதல்
09. 05/2017ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயற்பாட்டு சேவை காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.
10. திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட 1800.00 ரூபா மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு.

**அனுகூலங்கள்**

01. வருடாந்த உற்பத்தியை ஊக்கப்படுத்தும் கொடுப்பனவு
02. வருடாந்த போனஸ்
03. சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ விடுதி மற்றும் வெளியக சிகிச்சைக்கான காப்புறுதி பாதுகாப்பு
    i. ஒரு வருடத்துக்கு 200,000.00 ரூபாவுக்கான மருத்துவ விடுதிக் காப்புறுதி பாதுகாப்பு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    ii. ஒரு வருடத்துக்கு 20,000.00 ரூபாவுக்கான வெளியக சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    iii. ஒரு வருடத்துக்கு 5,000.00 ரூபாவுக்கான பற்சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
04. நிலையான (நிச்சயிக்கப்பட்ட) எல்லையில் மருத்துவச் செலவு வழங்கப்படும்.
    i. இரண்டு வருடத்திற்கு ஒரு முறை 12,000.00 ரூபாவுக்கான கொடுப்பனவு (மருத்துவ நிபுணர் கட்டணம், மருத்துவ பரிசோதனைக் கட்டணம், மூக்குக் கண்ணாடி மற்றும் செவிப்புல உபகரண செலவுகளுக்காக)
    ii. மகப்பேற்றிற்காக இரண்டு வருடத்திற்கொருமுறை 12,000.00 ரூபா கொடுப்பனவு.
05. இதற்குப் புறம்பாக நிரந்தர ஊழியர்களுக்கான ஏனைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உண்டு.
06. ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பாக ஊழியரினால் 10% மற்றும் நிறுவனத்தினால் 15% மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு நிறுவனம் பங்களிப்புச் செய்யும்.

**பொது நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் விடயங்களை செவ்வனே நிறைவேற்றுவதுடன், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குத் தேவையான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் மொத்த உழைப்பில் இருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி (Pay as you earn Pay Tax) அறவிடப்படும்.

அரசாங்க சேவை / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டசபைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பத்தை தமது திணைக்களம் / நிறுவனத்தின் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பும்போது உங்களின் கையொப்பத்துடன் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் சகல சான்றிதழ்களினதும் புகைப்படப் பிரதியுடன் அனுப்புதல் வேண்டும். (முறையாக சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

உங்களால் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு ராஜகிரிய, சரண மாவத்தை, இல. 341/21ல் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் தலைவருக்குக் கிடைக்கும் வகையில் 2023 செப்டெம்பர் 23ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/21, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

## ஜெனீவா கூட்டத்தொடர்... *(13ஆம் பக்கத் தொடர்)*

அதிலும் இச்சம்பவத்தினால் பாதிக்கபட்டவர்களின் உறவினர்கள் மத்தியில் இது தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொழிற்சங்க உறவுகள் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய கூறியுள்ளார். இது தொடர்பில் தற்போது அமைச்சரவை அங்கத்தவர்கள் மத்தியில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இது குறித்து ஜனாதிபதி விஷேட கவனம் செலுத்தியுள்ளார். இவ்வாறான சர்வதேச விசாரணையின் ஊடாக பகிரங்கப்படுத்தப்படும் விடயங்கள் ஊடாக இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நியாயம் கிடைக்கப்பெறும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இதேபோன்றதொரு கோரிக்கையையே கொழும்பு மறைமாவட்ட ஆயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் முன்வைத்துள்ளார். தாக்குதல்கள் நடைபெற்றதிலிருந்தே சுயாதீன சர்வதேச விசாரணைகளை அவர் கோரிவரும் நிலையில், சனல் 4 தொலைக்காட்சியின் வெளியீட்டை அடுத்து அவர் மீண்டும் ஒரு முறை இந்தக் கோரிக்கை முன்வைத்துள்ளார். இந்த ஆவணப்படத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களில் பெரும்பாலானவை ஏற்கனவே இலங்கையில் நடத்தப்பட்ட விசாரணைகளில் புலப்பட்ட தகவல்களாகவே இருக்கின்றன. அரசியல் ரீதியாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக் குறித்தே விசாரணை நடத்தப்பட வேண்டும். இருந்தபோதும், இந்தக் ஆவணப்படத்தை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு அரசியல் கட்சிகள் தமது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்திருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. இதனை வைத்து அரசியல் செய்யாது இதன் உண்மை குறித்து சுயாதீன விசாரணையொன்றை நடத்துவதே பயங்கரவாதத் தாக்குதல்களில் பலியானவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களின் உறவுகளுக்கும் கொடுக்கக்கூடிய கௌரவமாக அமையும் என்று பாதிக்கப்பட்டவர்கள் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

## பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

**(வர்த்தக வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு)**

# பதவி வெற்றிடம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01 பணிப்பாளர் நாயகம் பதவி (HM 2-1) – (01 பதவி)

**வேலை விவரம்:**

பணிப்பாளர் நாயகம் என்பவர் இந்த அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஆவார் பணிப்பாளர் சபையின் பொது வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் அதிகார சபையின் அனைத்து செயல்பாடுகள் மற்றும் நிர்வாக மற்றும் நிதி விவகாரங்களுக்கு பதிலளிக்கக் கூடியவர் மற்றும் பொறுப்பானவர் ஆவர். அவர் சபையினால் வழங்கப்படக்கூடிய சபையின் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் கடமைகளை செயல்படுத்தவும், மேற்கொள்ளவும் மற்றும் நிறைவேற்றவும் வேண்டும், மற்றும் சிறந்து விளங்குவதற்கு அதிகார சபையின் ஊழியர்களுக்கு தலைமை தாங்கி ஊக்கம் அளிக்க வேண்டும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், பொருளியல், வர்த்தகம், விஞ்ஞானம் (உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல், உயிரியல் விஞ்ஞானம்), விவசாயம், சட்டம் என்பவற்றில் இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

இயைபுடைய துறையில் முதுகலை பட்டம் அல்லது பதவிக்கு இயைபான விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் முகாமைத்துவ நிறுவனமொன்றின் கூட்டுவர்த்தக அங்கத்துவம்.

**மற்றும்**

முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினெட்டு (18) வருடகால அனுபவம் இதில் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருத்தல் வேண்டும் அத்துடன் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தின் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு

**அல்லது**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், பொருளியல், வர்த்தகம், விஞ்ஞானம் (உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல், உயிரியல் விஞ்ஞானம்), விவசாயம், சட்டம் என்பவற்றில் இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

இயைபுடைய துறையில் கலாநிதிப் (PhD) பட்டம்

**மற்றும்**

குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவம் அத்துடன் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தின் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு மற்றும் முகாமைத்துவ அனுபவம்

**உள்வாரி:**

பதவிக்குரித்தான விடயப்பரப்பில் சிரேஷ்ட முகாமைத்துவ வகுதிப் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் (05) திருப்திகரமாக சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

பல ஒழுக்காற்றுக் குழுக்களுக்கு தலைமை தாங்கும் மற்றும் வழிநடத்தும் நிரூபிக்கப்பட்ட ஆற்றல்.

மனித வளங்கள் மற்றும் ஏனைய வளங்களை முறையாக வரிசைப்படுத்தல் மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம்.

**வயது:**

35 வயதுக்கு குறையாமலும், 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**மேலதிகமாக**

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- பதவியின் கடமைகளைச் சிறப்பாகச் செய்ய உடல் மற்றும் உளத் தகுதியுடன் இருக்க வேண்டும் என்பதுடன் தீவின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்குத் தயாராகவிருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருக்க வேண்டும்.

**சம்பள அளவு** : HM 2-1: ரூபா (91,645- 12 x 2,700 – 124,045)

**போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு:**

PED 1/2015, PED 1/2015 (i) மற்றும் (ii) சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் 145 லீற்றர் எரிபொருள் கொடுப்பனவு மற்றும் 50,000.00 ரூபா மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான உரித்துடையவராகலாம்.

**தொழில்சார் கொடுப்பனவு:**

2017/05ஆம் இலக்க MSD சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் ஒரு தொழில்சார் கொடுப்பனவு வழங்கப்படும்

**ஏனைய கொடுப்பனவுகள்:**

சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் இயைபுடைய அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொருந்தக்கூடிய ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**நியமனத்தின் தன்மை:**

நிரந்தரமான நியமனத்துடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்பை பொறுப்பு நிதியம் உரித்துடையது.

**ஆட்சேர்ப்பில் சம்பளம்**

வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நபர்கள் சம்பள அளவின் ஆரம்ப நிலையில் அமர்த்தப்படுவார்கள் என்பதுடன் உள்வாரியாக ஆட்சேர்க்கப்படுவோரின் சம்பளம் தாபனக் விதி கோவையின் VII அத்தியாயத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**உறுதிப்படுத்துதல்:**

வெளிவாரியாக நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரர் மூன்று வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார். தகுதிகாண் காலத்தின்போது அவரின் செயற்றிறன் மற்றும் நடத்தை என்பன திருப்திகரமாக இருந்தால் அவர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்வாரியாக தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் ஒரு வருடம் செயல்பாட்டுக் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**பின்வரும் வகையில் நேர்முகத் தேர்விற்கு புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன:**

- தொடர்புடைய மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
- தொடர்புடைய மேலதிக கல்வி / தொழில்சார் தகைமைகள் - 30 புள்ளிகள்
- ஏனைய சாதனைகள் - 15 புள்ளிகள்
- நேர்முகத் தேர்வில் காட்டும் செயற்றிறன் - 25 புள்ளிகள்

மொத்தம் - 100 புள்ளிகள்

தகுதியான விண்ணப்பதாரர்கள் 2023-09-23ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறார்கள். விண்ணப்பத்துடன் தகைமைகளை உறுதி செய்வதற்காக இயைபுடைய சான்றிதழ்களின் நகல் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும். அரசாங்கத் துறையில் பணிபுரியும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பப்பட வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள், முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் தேதிக்குப் பின் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஆதரவு திரட்டுதல் தகுதியின்மையாகக் கருதப்படும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி பின்வருமாறு.

**செயலாளர்,**
**வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 492, ஆர். ஏ. த மெல் மாவத்தை, கொழும்பு-03.**

## சிலுமின செய்தி:... *(13ஆம் பக்கத் தொடர்)*

அத்துடன், விளையாட்டுத்துறை அமைச்சரால் நியமிக்கப்பட்ட குசலா சரோஜனி குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பில் அல்லது அந்த அறிக்கையின் முடிவுகள் தொடர்பில் முறைப்பாட்டுத் தரப்பினரால் எவ்வித நியாயமான தெளிவுபடுத்தல்களும் அளிக்கப்படவில்லை என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 14 வது பிரிவின்படி, பேச்சு சுதந்திரம் தொடர்பில் ஒரு பரந்த அணுகுமுறை வழங்கப்பட்டுள்ளதுடன், தகவல்களை அறிந்து கொள்வதற்காக மக்களின் உரிமை வலுவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியலமைப்பின் 14(1) வது பிரிவு மூலம் ஒவ்வொரு குடிமகனுக்கும் தகவல்களை அறிந்து கொள்ள அணுகுவதற்கான வாய்ப்பு மற்றும் அதற்குள்ள உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக குறித்த வழக்குத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தேசிய பாதுகாப்பு அல்லது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் மூலம் தவிர வேறு எந்த வழிமுறைகளாலும் தகவல் அறியும் உரிமைக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என்றும் இரண்டாவது பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக வழக்குத் தீர்ப்பின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நியாயமான மற்றும் சரியான தகவல்கள் மூலம் நியாயமான வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பதற்குள்ள உரிமைக்கு இடைக்காலத் தடை உத்தரவு மூலம் பேச்சுத் தடைகள் ஏற்பட முடியும் எனச் சுட்டிக்காட்டும் மாவட்ட நீதிபதி, முறைப்பாட்டாளர்கள் பிரதிவாதிகளால் தமக்கு அவதூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது என மாத்திரமின்றி பிரதிவாதிகள் தரப்பு அந்த அவதூற்றை மேற்கொள்வதற்காக நியாயமான மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பங்களிப்பைச் செய்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டும் என்றும் நீதிமன்ற ஒழுங்கமைப்புச் சட்டத்தின் 54ம் பிரிவினை மேற்கோள் காட்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் நியாயமான விசாரணை ஏற்படாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது இங்கிலாந்தில் "Bonnard எதிர் perryman வழக்குத் தீர்ப்பு" மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது என்றும் அந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கருத்து தெரிவிக்கும் உரிமை பொது நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், தவறான அல்லது குறுகிய நோக்கத்துடன் பயன்படுத்தக்கூடாது என்றும் இந்த தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடிமகனுக்கும் சரியான மற்றும் உண்மையான தகவல்களை அறிந்து கொள்வதற்காக உரிமை உள்ளது என்றும், ஊடகம் மற்றும் பத்திரிகைகள் தொடர்பில் இந்த உரிமை மிகவும் உறுதிப்படுத்தப்படுவதாகவும், இந்த உரிமையினை இடைக்காலத் தடை உத்தரவின் மூலம் தடுக்கக் கூடாது எனவும் நீதிபதி டெனிக்கினால் சண்டே டைம்ஸ் பத்திரிகை தொடர்பான வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் குறிப்பிடப்படுவதாகவும் இந்த வழக்குத் தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஒரு செய்தியினால் பாதிப்பு ஏற்பட்டாலும், அந்தச் செய்தியினால் மக்களுக்குப் பெரும் நீதியும், நன்மையும் ஏற்படுமானால் அவ்வாறான தகவல்கள் மற்றும் செய்திகள் வெளியிடப்படுவதைத் தடுக்கக் கூடாது என நீதிபதி டென்னிங் அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளதாக மாவட்ட நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் நலனுக்காக வெளியிடப்படும் பத்திரிகைச் செய்திகள் தொடர்பான சில நீதிமன்றத் தீர்ப்புகளை மேற்கோள்காட்டி, மக்களின் உண்மைத் தகவல்களை அறியும் உரிமையைப் பறிக்கும் வகையில் இடைக்கால உத்தரவுகளை நீதிமன்றம் பிறப்பிக்கக் கூடாது எனவும் மாவட்ட நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கில் பிரதிவாதிகளால் பிரசுரிக்கப்பட்ட செய்தி, விளையாட்டுத்துறை அமைச்சரால் நியமிக்கப்பட்ட குசலா சரோஜனி குழு அறிக்கையின் பரிந்துரைகளின்படியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையிலும் எழுதப்பட்டவையாகக் கருத முடியும் என மாவட்ட நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

முறைப்பாட்டாளர்களால் இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தவோ அல்லது குறைந்தது அந்த விசாரணைக் குழுக் கூட்டத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காததன் மூலம் பிரதிவாதிகள் நியாயமான கருத்தை முன்வைத்துள்ளதாக இந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்க, சில விடயங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் இந்த வழக்குத் தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதாவது, முறைப்பாட்டாளர் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நியாயமான காரணத்தை நிறுவ வேண்டும் என்றும், குறித்த செய்தி பிரசுரிக்கப்பட்டதால் எவருக்கேனும் பாதிப்பு ஏற்படுமா, அந்தப் பாதிப்பானது சம்பந்தப்பட்ட நபர்களுக்கு சிரமத்தை அல்லது அவமானத்தை அல்லது தாங்க முடியாத இழப்பை ஏற்படுத்துமா என்பது தொடர்பில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும், தடை உத்தரவைப் பெறுவதற்கு நீதிமன்றம் நம்பக்கூடிய வகையில் விடயங்களை முறைப்பாட்டாளர் தரப்பு முன்வைத்திருக்க வேண்டும் என்றும் இதன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று இடைக்கால தடை உத்தரவு ஒன்றைப் பெற்றுக் கொள்வதாயின் தமது சட்ட ரீதியான உரிமைகளுக்கும் பாதிப்பு ஏற்படும் மோசமான விடயங்கள் உள்ளதாக நீதிமன்றத்தில் உறுதிப்படுத்த வேண்டும் என்றும், அவ்வாறான உறுதிப்படுத்தல்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் இருப்பதாக "ரிச்சர்ட் பெரேரா எதிர் ஆல்பர்ட் பெரேரா" மற்றும் "கமகே எதிர் விவசாயம் மற்றும் காணி அமைச்சர்" ஆகிய வழக்கு தீர்ப்புக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக இந்தத் தீர்ப்பில் மாவட்ட நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு தீர்ப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இடைக்காலத் தடை உத்தரவைப் பெறுவதற்கு பல விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு, இந்த வழக்கில் முறைப்பாட்டாளர் தரப்பினரால் அவ்வாறான விடயங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என மாவட்ட நீதிபதியினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் முறைப்பாட்டாளர் தரப்பினால் கோரப்பட்ட இடைக்கால தடை உத்தரவு நிராகரிக்கப்படுவதோடு இதற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்குவதற்கு தீர்மானித்தார் என்று அந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வரலாற்று மரபுரிமை ஆதனங்களில் முதலீடு



பணிப்பாளர்
திரு. நிமேஷ் ஹேரத்

நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் திரு நிமேஷ் ஹேரத், நாட்டின் நகரப் பகுதியின் வரலாற்று ரீதியான ஆதனங்களின் புனரமைப்பு தொடர்பான அண்மைய மேம்பாடுகள் பற்றி பகிர்ந்துகொண்டார்.

தொல்பொருள் திணைக் களத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் பழமையான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களை நவீன வசதிகள் மற்றும் வசதிகளுடன் சேர்த்து அவற்றின் அசல் கட்டடக்கலை அம்சங்களைப் பாதுகாத்து வணிக வளாகங்கள் மற்றும் சுற்றுலா தொடர்பான செயற்பாடுகள் போன்ற பொருளாதார ரீதியான பாவனைக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை புனரமைப்புச் செய்ய ஆரம்பித்துள்ளது. இந்தத் தொகுதிகள் கடைகள், விருந்தோம்பல், ஓய்வு மற்றும் விளையாட்டு செயற்பாடுகளுக்கான பொது இடங்களாக செயற்படவுள்ளன.

குறித்த தளத்தின் அம்சங்களை மாற்றாமல் அந்த வசதிகளை நிறுவும்படி சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை வழங்கும் உலகப் புகழ்பெற்ற விருந்தோம்பல் துறையினர் நகர அபிவிருத்தி அதிகாரசபையை கோருவதாக திரு ஹேரத் குறிப்பிடுகிறார். வரலாற்று கட்டமைப்புகள் அதன் வரலாற்று ரீதியான முக்கியத்துவம் மற்றும் தனித்துவ அடையாளங்கள் காரணமாக சுற்றுலா பயணிகளிடம் பிரபலமானதாக உள்ளது.

கொழும்பு மற்றும் கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை போன்ற மற்ற பிரதான நகரங்களில் காலனித்துவ காலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வரலாற்று பெறுமதி மிக்க பல கட்டடங்களும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் (UDA) வழங்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் விளக்கினார். இந்த வரலாற்று ரீதியான கட்டடங்கள் பெரும்பாலும் தனித்துவமான மற்றும் வசீகரமான கட்டிடக்கலை அம்சங்களைக் கொண்டிருப்பதோடு, அவை மறுபயன்பாட்டு சந்தை மதிப்பைக் கொண்டுள்ளன. மேலும் அவற்றை உயர்நிலை விருந்தோம்பல் மற்றும் ஓய்வுநேர மேம்பாடுகளாக மாற்றி எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்க வேண்டியுள்ளது. காலப்போக்கில், இது சொத்து மதிப்பிற்கு வழிவகுப்பதோடு, சொத்தின் மதிப்பை அதிகரிக்கும். மேலும் வரலாற்று ஆதனங்களில் முதலீடு செய்வது முதலீட்டு துறையை பல்வகைப்படுத்த உதவும். மெய் ஆதன முதலீடுகள், குறிப்பாக தனித்துவமான மற்றும் வரலாற்று தளங்கள் நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து பாதுகாப்பதாக அமையும். அதனால், அரசின் நிதி உதவி இன்றி தனியார் துறை முதலீடுகளுடன் கூட்டிணைந்து பழைய பாழடைந்த காலனித்துவ கட்டடங்களை புனரமைப்பதில் பதிலீட்டு வாய்ப்புகளை ஆராய நகர அபிவிருத்தி அதிகாரசபை எதிர்பார்த்துள்ளது.

அதன்படி, நகர அபிவிருத்தி அதிகாரசபை 2023 செப்டெம்பர் 14 தொடக்கம் 2023 நவம்பர் 2 ஆம் திகதி வரை பின்வரும் ஆதனங்களுக்காக முன்மொழிவுக்கான கோரிக்கையை (RFP) வெளியிட்டுள்ளது. முதலீட்டாளர்கள் மற்றும் மேம்பாட்டாளர்கள் உட்பட சாத்தியமுடைய விலைமனுதாரர்கள், பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபையில் மெய் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவில் இருந்து RFP ஆவணங்களை பெற முடியும். மேலதிக விபரங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபை இணையதளத்தில் (https://www.uda.gov.lk/investment-potential.html) கிடைக்கப்பெறும்.

Tea Museum உடன் கலப்பு வர்த்தக அபிவிருத்த ஒன்றாக சேர் பரோன் ஜயதிலக்க மாவத்தை, பதிப்பீட்டு இல. 11 இல் அமைந்துள்ள கட்டடத்தின் புனரமைப்பு

குறிப்பிடத்தக்க திட்டம் ஒன்றாக இலக்கம் 11, சேர் பரோன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 01 இல் அமைந்திருக்கும் கட்டடம் ஒன்றின் புனரமைப்பு முன்னெடுக்கப்படுகிறது. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நகரில் வரலாற்று பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் பகுதியில் கொழும்பு நகரின் மத்திய வர்த்தக மாவட்டத்தின் வர்த்தக மையத்தில் அமைந்திருக்கும் இந்த காலனித்துவ கட்டடத்தை புதுப்பிப்பதன் மூலம் Tea Museum உடன் கலப்பு வர்த்தக அபிவிருத்தியை முன்னெடுக்க உள்நாட்டு அல்லது சர்வதேச முதலீட்டாளர்கள்/மேம்பாட்டாளர்களிடம் இருந்து முன்மொழிவுக்கான கோரிக்கைகளுக்கு (RFP) நகர அபிவிருத்தி அதிகாரசபை அழைப்பு விடுக்கிறது.

இந்த இரண்டு மாடி கட்டடம் 19ஆம் நூற்றாண்டில் வழக்கமான ஆங்கில கட்டுமான அம்சத்தை கொண்டிருப்பதோடு அது கொழும்பு மத்தியில் கோட்டை பிரின்ஸ் வீதியில் (சேர் பரோன் ஜயதிலக்க மாவத்தை) அமைந்துள்ளது. இது பிளாஸ்டர் மோல்டிங்ஸ் விரிவான வார்ப்பிரும்பு விவரங்கள் மற்றும் பிரிட்டிஷ் காலத்து வளைவுகள் கொண்டு பூர்த்தி செய்யப்பட்டதாகும். இதன் அளவை கருத்தில் கொள்ளும்போது வரலாற்று வீதிகளின் அம்சங்களை மெருகேற்றுவது மற்றும் அழகூட்டுவதாக உள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபை அதன் அசல் கட்டடக்கலை வடிவமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்யாமல் பகுதியாகப் பாதுகாக்கப்பட்ட கட்டமைப்பை வைத்திருக்கும். இந்த வரலாற்றுக் கட்டமைப்புக்கு அவசரமான ஆனால் கவனமாகப் பாதுகாக்கும் பணி தேவைப்படுகிறது, ஏனெனில் அதன் தற்போதைய நிலை அதன் இருப்புக்கு உகந்ததாக இல்லை.

1840இல் கொழும்பு கோட்டை வரைபடத்தில், இந்த இடம் வெற்று நிலமாகவும் 1867 வரை படத்தில் இது தபால் நிலையம் மற்றும் தந்தி அலுவலகமாகவும் உள்ளது. 1906இல் அது DPI அலுவலகம் மற்றும் நூலகமாக இருந்தது. தொடர்ந்து 1914இல் அது பொது நூலகமாக செயற்பட்டிருப்பதோடு 1948 இல் அரச அலுவலகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் 1970கள் மற்றும் 1980களின் ஆரம்பத்தில் அது தகவல் திணைக்களமாக இருந்துள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்படுவதற்கு முன்னர் இந்தக் கட்டடம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் ஊர்காவல்படை தலைமையகமாக இருந்துள்ளது.

இந்த அமைப்பு விக்டோரியன் கட்டடக்கலைக்கு பொதுவான அலங்கார அம்சங்கள் மற்றும் அலங்கார மோல்டிங்குகளைக் கொண்டுள்ளது. எளிமையான ஆனால் நேர்த்தியான பிளாஸ்டர் மோல்டிங்குகள் கட்டமைப்பிற்கு தனித்துவத்தை அளிக்கிறது. இந்த கட்டுமானம் கொழும்பு கோட்டையில் அருகில் உள்ள கட்டடங்களில் இருந்து பிரிந்து காண்பிப்பதாகவும் அங்குள்ள பெரும்பாலான கட்டிடங்களுக்கு நேர்மாறாக உள்ளது. ஒரு பக்கமான வீதி இருப்பதோடு அது பின்னர் உருவாக்கப்பட்ட திறந்த பகுதிக்கான நுழைவாயிலாக இருக்க வாய்ப்பு உள்ளது. வீதி முகப்பு மிகவும் அகலமாக இல்லாவிட்டாலும், வீதியில் உள்ள மற்ற கட்டடங்களில் அதன் இருப்பு மிகவும் கவனிக்கத்தக்கது மற்றும் பழங்கால அழகை சேர்க்கிறது. பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் வீதிகளில் உள்ள பொது கட்டமைப்புகளின் அடிப்படை அங்கமாக இருந்த ஒரு கொலோனேட் திறந்த ஆர்கேட் முன் முகப்பை உருவாக்குகிறது. திறந்த வளைவான கட்டட அம்சம் அழகு சேர்ப்பாத உள்ளது. கட்டிடத்தின் மூன்று பக்கங்களைச் சுற்றியுள்ள ஆர்கேட் ஒரு தனித்துவமான அம்சமாகும்.

இந்த இரண்டு மாடி கட்டடம் அழகான கட்டடக்கலை அம்சங்களைக் கொண்டதாக, வீதி காட்சிக்கு ஒரு தனித்துவமான தன்மையை சேர்ப்பதாக உள்ளது. இது 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்த வழக்கமான ஆங்கில கட்டடத்தின் நேர்த்தியை காண்பிக்கிறது. இந்த கட்டடத்தின் புனரமைப்பு வரலாற்று மற்றும் கட்டடக்கலை முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்களை கடந்த காலங்களிலிருந்து பாதுகாத்து அவற்றை மீண்டும் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை காண்பிப்பதாக அமையும். இப்படியாக கட்டுமானங்கள் பெரிதாக இல்லை குறிப்பாக கொழும்பில் காண முடிவதில்லை. அதனால், கவனமான மற்றும் செயல்திறனுடைய பராமரிப்பு மற்றும் புனரமைப்பு இந்த முயற்சியில் முக்கியத்துவத்தை காண்பிப்பதாக இருக்கும். இந்த மறுசீரமைப்பின் குறிக்கோள், கட்டடத்தின் வரலாற்று அம்சங்களைப் பாதுகாப்பது அல்லது தேவைப்பட்டால் அவற்றை மாற்றுவதாகும். முடிந்தவரை, அசல் கட்டடத்தின் பொருட்கள் அதே கருவிகள் மற்றும் நுட்பங்களுடன் பாதுகாப்பு செயல்பாட்டில் பயன்படுத்தப்படும். பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டும் உறுப்புகள் வெளிப்பட்டபோதும், கட்டடத்தின் கணிசமான பகுதி இன்னும் கட்டமைப்பு ரீதியாக சிறந்து காணப்படுகிறது. பெரும்பாலான கூரை மற்றும் ஏனைய கட்டடத்தின் மர பொருட்கள் மறுசீரமைப்புக்கு உட்படுத்த முடியுமானவையாக உள்ளன. முதலீட்டாளரின் பார்வையில், பிளாஸ்டர் வேலைகளைப் பாதுகாப்பதில் முதன்மை கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் அனைத்து அசல் அம்சங்களையும் எங்களால் முடிந்தவரை தக்க வைத்துக் கொள்ள நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்று அவர் இந்த ஆதனத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

இந்த கட்டடத்தை பாதுகாப்பது மாத்திரமன்றி நீண்டகால குத்தகை அடிப்படையில் வர்த்தக நோக்கத்திற்காக அதனை பயன்படுத்துவதற்கும் தனியார் துறை கூட்டாளர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை அழைப்பு விடுக்கிறது. இந்த கட்டுமானத்தின் பாதுகாப்பு மற்றும் புனரமைப்புக்காக தனியார் துறையிடம் இருந்து தேவைப்படும் மதிப்பிடப்பட்ட முதலீடு சுமார் ரூபா 500.00 தொடக்கம் 800.00 ஆகும்.

கொழும்பு 07, இன்டிபென்டன்ஸ் அவன்யூ, இல. 25 இல் High-end Boutique Hotel மேம்பாடு



1950களில் கட்டடத்தின் நிலை



கட்டத்தின் தற்போதைய நிலை

எமது முயற்சியின் மற்றொரு அற்புத திட்டமாக கொழும்பு 07, இன்டிபென்டன்ஸ் அவன்யு, இல. 25 இல் High-end Boutique Hotel மேம்பாட்டுத் திட்டம் உள்ளது.

அமைச்சரவை முடிவுக்கு அமைய, பொதுமக்களுக்கான வளவை திறக்கும் நோக்கில் இந்த ஆதனம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டது. கறுவாத் தோட்ட குடியிருப்பு பகுதியில் அமைந்திருக்கும் இந்தக் ஆதனம் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக்கு சான்றாக உள்ளது. பசுமையான புல்வெளிகளால் சூழப்பட்ட இது, ஒரு காலத்தில் இலங்கையில் உள்ள பிரித்தானிய நிர்வாக சமூகத்தால் பிரத்தியேகமாக பயன்படுத்தப்பட்டதோடு. இதன் கிளப் ஹவுஸ் இன்னும் முக்கியமாக சமூகத்தின் மேல்தட்டு மக்களால் ஆதரிக்கப்பட்டது.

இந்த ஆதனத்தில் முந்தைய நிலைமையை விளக்கிய திரு. ஹேரத், நகர அபிவிருத்தி அதிகாரசபையால் கையகப்படுத்தப்படுவதற்கு முன், 80 கிளப் பாரம்பரிய மேலாண்மை அமைப்பின் கீழ் இயங்கியது, இது நாட்டின் உயரடுக்கு என்று அழைக்கப்படுபவர்களிடையே தனித்துவத்தை ஊக்குவித்தது. அதன் குத்தகைதாரர்கள் மட்டுமே அவ்வப்போது மாறினார்கள். இதனால் அபிவிருத்தி திட்டத்தின் கட்டம் 1 இன் கீழ், கட்டடக்கலை வடிவமைப்பை பாதுகாக்க மொத்த 411.40 மில்லியன் ரூபா செலவில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த ஆதனம் புதுப்பிக்கப்பட்டது. விரிவான புதுப்பித்தல் மற்றும் புனரமைப்பு பணிக்கு பின் இந்த ஆதனம் இன்று ஆடம்பர மற்றும் அழகான தோற்றத்தை பெற்றுள்ளது.

புதுப்பித்தல் மற்றும் நிர்மாண பணிக்காக இலங்கை கடற்படை தமது தொழில்படை மூலம் பங்களிப்பு செய்ததோடு நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னுரிமை திட்டம் ஒன்றாக செயற்படுத்தி இருந்தது. இதில் மொத்தம் 14,200 சதுர அடி பகுதி புதுப்பிக்கப்பட்டது. இதில் 7,625 சதுர அடி தரைப் பகுதி மற்றும் 6,575 சதுர அடி பரப்பளவில் மேல் தளம், முன்புற தோட்டத்துடன் இணைந்து, அழகாக நிலப்பரப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தில் மினி திரையரங்கு, ஒரு பில்லியர்ட் அறை, கூட்டங்களுக்கான முழு அளவிலான சபை அறை மற்றும் ஆறு வெவ்வேறு அறைகளில் உணவு வசதிகள் உள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் செய்யப்பட்ட மொத்த முதலீட்டில் 125 மில்லியன் ரூபா பெறுமதியான சர்வதேச தரத்திலான சமையலறை உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் அடங்கும்.

RFP (ஆர்வ வெளிப்பாடு) மூலம் இந்த நிலைமாற்றத் திட்டத்தின் கட்டம் 02 இல் பங்கேற்பதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேசம் ஆகிய இரு தரப்பு சாத்திமுடைய முதலீட்டாளர்கள் மற்றும் மேம்பாட்டளர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் அழைப்பு விடுக்கிறார். இந்த கட்டம் 26 அறைகள், ஒரு குளம் மற்றும் மேம்பட்ட விருந்தோம்பல் அம்சங்களைக் கொண்ட ஒரு உயர்தர Boutique Hotel இனை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த Boutique Hotel நகரத்தின் பாரம்பரியத்தை காட்சிப்படுத்துவதோடு விருந்தினர்களுக்கு ஒரு தனித்துவமான மற்றும் அதிவேக கலாச்சார அனுபவத்தை வழங்குகிறது. காலனித்துவ காலத்து கட்டடக்கலை பொழும்பு 07இன் பல ஆதனங்களை மெருகேற்றுவதாக உள்ளது. அந்த கட்டடக்கலை கட்டமைப்பை பாதுகாப்பதன் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆதனத்தை புதுப்பித்துள்ளது. அதனால், ஒரு Boutique Hotel இனை உருவாக்குவது, இந்த வரலாற்று கட்டடங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புக்கு பங்களிக்கும், என்பதோடு இந்த பகுதியின் தோற்றத்தை மேம்படுத்துகிறது.

நகரின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கும், அதன் பாரம்பரியத்தைக் கொண்டாடுவதற்கும், குடியிருப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், அதன் கலாச்சார மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்பதற்கும் இந்தச் Boutique Hotel சாத்தியமாக்குகிறது. எனவே, கொழும்பு 07 மையத்தில் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களுக்கு இது ஒரு பெறுமதியான மற்றும் அரிய முதலீட்டு வாய்ப்பாகும்.



புதுப்பிப்பதற்கு முன் கட்டடத்தின் நிலை



கட்டடத்தின் தற்போதைய நிலை


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை

## முதலீட்டு முன்மொழிவுக்கான அழைப்பு

### கொழும்பு 01, சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, மதிப்பீட்டு இல. 11இல் கலப்பு அபிவிருத்தி திட்டம்

### கொழும்பு 07, இன்டிபென்டன்ஸ் அவன்யு, இல. 25 இல் Boutique Hotel திட்டம்



INVEST WITH UDA



காணி அளவு : 00A 00R 32.10P
விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு : 2023.10.04 அன்று மு.ப. 10.00
விலைமனு நிறைவு : 2023.11.21 அன்று பி.ப. 2.00

| | குத்தகைக் காலம் | 30 ஆண்டுகள் | 50 ஆண்டுகள் |
|---|---|---|---|
| முறை 01 | அடிப்படை பெறுமதி | ரூபா 226,900,000.00 | ரூபா 316,500,000.00 |
| முறை 02 | வருடாந்த குத்தகை வாடகை | உச்ச கூறுவிலை | உச்ச கூறுவிலை |
| | விலைமனு பிணை | ரூபா 2,500,000.00 | ரூபா 3,500,000.00 |

காணி அளவு : 01A 02R 22.50P
அடிப்படை பெறுமதி : ரூபா 3,161,800,000.00
விலைமனு பிணை : ரூபா 32,000,000.00
குத்தகை காலம் : 50 ஆண்டுகள்
விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு : 2023.10.03 அன்று மு.ப. 10.30
விலைமனு நிறைவு : 2023.11.21 அன்று பி.ப. 2.30

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு குறித்த விபரங்கள் அடங்கிய முதலீட்டு முன்மொழிவு அழைப்பு ஆவணத்தை மீளளிக்கப்படாத ரூபா 100,000/- தொகையை (வரி உட்பட) பத்தரமுல்லை, செத்சிறிபாய - கட்டம் I, 6ஆவது மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவுக்கு செலுத்தி செத்சிறிபாய - கட்டம் I, 8ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி பிரிவில் இருந்து 2023 செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் மாதம் 02 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மேல் குறிப்பிடப்பட்ட திகதிகள் மற்றும் நேரங்களில் செத்சிறிபாய - கட்டம் I, 9ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர்கூடத்தில் நடைபெறும்.

மேல் குறிப்பிட்டவாறு விலைமனுக் கோரல் நிறைவடையும் தருணத்திலேயே கிடைக்கப்பெற்றிருக்கும் தொழில்நுட்ப முன்மொழிவுகள் அப்போதே திறப்பது பத்தரமுல்லை செத்சிறிபாய - கட்டம் II, 12ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் மேற்கொள்ளப்படுவதோடு அதற்காக விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
பணிப்பாளர் (ஆதன அபிவிருத்தி),
ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி பிரிவு,
நகர அபிவிருத்தி அதிகாரசபை,
8ஆவது மாடி, செத்சிறிபாய - கட்டம் I,
பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம்:
011 2875921 அல்லது 011-2875916-20
நீடிப்பு: 2960-2967
தொலைநகல்: 011-2875900
மின்னஞ்சல் முகவரி:
diretorred@uda.gov.lk
இணையதளம்:
www.uda.gov.lk/investment-potential.html

தலைவர், அமைச்சரவையின் மூலம் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை குழு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
12ஆவது மாடி, "செத்சிறிபாய - கட்டம் II", பத்தரமுல்லை.

# இணையத்தில் பரப்பப்படும் பொய்யான தகவல்களுக்கு முட்டுக்கட்டை

## சட்டங்கள் ஒழுங்கு முறைகளை அறிமுகப்படுத்துவதை போல அவற்றை அமுல்படுத்தவும் வேண்டும்

அஸ்கிரி பீடத்தின் பதிவாளர் கலாநிதி மெதகம தம்மானந்த தேரர்



"தற்போது சமூக வலைத்தளங்கள் மூலம் பல்வேறு தரப்பினருக்கு அவதூறை ஏற்படுத்துவதைப் போன்று நியாயமற்ற முறையில் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவமானப்படுத்தும் முறையை நாம் காண்கிறோம். விசேடமாக சமய நல்லிணக்கத்திற்கு, சமய இருப்பை அவமதிக்கும் வகையிலும், பௌத்த தர்மம் மற்றும் பௌத்த கலாசார பாரம்பரியத்தை அவமதிக்கும் வகையிலும் செயற்படுவதைப் போன்று அதன் மரியாதையை கெடுக்கும் வகையிலும், பக்தியை குறைக்கும் வகையிலும் மிகவும் திட்டமிட்ட வகையில் செயல்படுவதை காணக் கூடியதாக உள்ளது.

கடந்த காலங்களினுள் இவ்வாறான செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட விதங்களை நாம் நன்கு அறிவோம். இது தொடர்பில் நன்றாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சட்டங்களை உருவாக்கும் நிறுவனம் என்ற வகையில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினரும் அவர்களுக்குள்ள சலுகைகளுக்குள் மறைந்து கொண்டு சில சில தேவைகளுக்காக வேண்டுமென்றே அவதூறு பரப்புதல் பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்துதல் போன்ற விடயங்களையும் நான் காண்கின்றேன். அவர்கள் சமூகத்திற்கு சட்டங்களையும் ஒழுங்குகளையும் அறிமுகப்படுத்துவதைப் போன்று அவர்களும் தம்மைத் திருந்திக் கொள்ள வேண்டும். மக்களுக்காகச் சட்டங்களைப் பிறப்பித்துவிட்டு அவர்கள் அந்தச் சட்டங்களைப் பொருட்படுத்தாமல் செயல்பட்டால் என்னாவது?

## இருக்கும் சட்டங்களை சரியாக நடைமுறைப்படுத்துங்கள்

அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்ஹம் நூரானி

ஒரு நாட்டில் இவ்வாறான சட்ட வரைவு கொண்டு வரப்பட்டால் முதலில் அந்நாட்டு மதகுருமார்கள், பொறுப்புள்ள தரப்பினரிடமும் மக்களிடமும் அதுபற்றி கேட்க வேண்டும். எனினும் நாம் எவரும் இது தொடர்பில் அறிந்திருக்கவில்லை.

இது ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடாகும். மக்கள் பிரதிநிதிகளாக அவர்கள் தான் பாராளுமன்றத்தில் சட்டங்களை இயற்றுவதாக அவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்று கூறுவதை ஏற்க முடியாது. இவ்வாறான நிலையில், ஏன் அவசர அவசரமாக இத்தகைய சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன என்பது எமக்குப் புரியவில்லை.

அதேநேரம் இனம், ஜாதி, சமய வேறுபாடுகளின்றி அனைவருக்கும் சமமாக சட்டம் பயன்படுத்தப்படுமானால் தற்போதுள்ள சட்டம் போதுமானது. 2012ம் ஆண்டிலிருந்து, இஸ்லாம் மதம் மற்றும் முஸ்லிம் மக்களைக் குறிவைத்து பல பொய்யான குற்றச்சாட்டுகள், வெறுப்புப் பேச்சுக்கள் மற்றும் பல்வேறு துன்புறுத்தல்கள் இடம்பெற்றன.

அதற்கான ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்திருக்கலாம். எனினும் அதற்காக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இணையத்தளங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் பொய்யான தகவல்களைப் பரப்புதல் மற்றும் வெறுக்கத்தக்க நடத்தைகள் மூலம் இடம்பெறும் பாதிப்புக்களிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் ஒன்லைன் முறைகளின் பாதுகாப்பு தொடர்பான சட்டமூலத்தை வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கும், நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும், பொதுப் பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை அமைச்சரவை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ள இந்த சட்ட நகலின் iiiம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் இந்த சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மூலம் தவறான முறையில் விளக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இலங்கையினுள் சம்பவங்களைப் பற்றிய பொய்யான தகவல்களை பரப்புவது, அவதூறுகளுக்கு காரணமாக அமையும் போலியான அறிக்கைகளை மேற்கொள்ளுதல், பொய்யான அறிக்கையின் மூலம் கலகம் மேற்கொள்வதற்கு தூண்டுதல், பொய்யான அறிக்கையின் மூலம் சமய கூட்டங்களுக்கு தடை ஏற்படுத்துதல், மத உணர்வுகளை இழிவுபடுத்தும் நோக்கத்துடன் தவறான அறிக்கையை வெளியிடுவது, மத உணர்வுகளை இழிவு படுத்தும் நோக்கத்துடன் அப்பட்டமான மற்றும் வெறுக்கத்தக்க வகையில் தவறான அறிக்கைகளைத் தொடர்பாடல் செய்தல், மோசடி செய்தல், ஆள்மாறாட்டம் மூலம் மோசடி செய்தல், அமைதியைச் சீர்குலைப்பதற்காக கோபமூட்டும் நோக்கில் பொய்யான தகவல் மூலம் வேண்டுமென்றே அவதூறு பரப்புதல், கிளர்ச்சியை அல்லது அரசுக்கு எதிரான குற்றங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடும் நோக்கத்துடன் தவறான அறிக்கையை பரப்புதல், துன்புறுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம், தவறான நோக்கத்துக்காக பதாகை ஒன்றைச் செய்தல், அல்லது மாற்றியமைத்தல் போன்றன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்போது சமூக வலைதளங்களில் இது குறித்து பரவலாகப் பேசப்பட்டு வரும் நிலையில், இது குறித்து மத தலைவர்கள் மற்றும் சிவில் ஆர்வலர்களிடம் கருத்து கேட்டோம்.

## சட்டங்களை நடைமுறைப்படுத்தாமையே இங்குள்ள பிரச்சினை

இலங்கை பௌத்த பல்கலைக்கழகத்தின் பௌத்த மற்றும் பாலி கற்கைகள் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் பானேகம ஞானீஸ்வர தேரர்



எமது நாட்டில் உள்ள பிரச்சினை சட்டத்தை போடுவது தொடர்பில் அல்ல. போடப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்தாமையே யாகும். அதேபோன்று பிரச்சினைகள் ஏற்படாதவாறு இவ்வாறான சட்டங்களை நடைமுறைப்படுத்துவது எல்லா பக்கங்களிலும் சிறந்ததாகும். அவதூறு சட்டம் கூட நீக்கப்பட்ட சூழ்நிலையில், மக்கள் எப்படிக் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். சமூக வலைத்தளங்களின் மூலம் எவருக்கேனும் அவதூறு ஏற்படுத்தப்படும் போது அதற்குரிய சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அது எவருக்கும் விரும்பியவாறு நடைமுறைப்படுத்தப்படக் கூடாது. எனவே இவ்வாறான சட்டங்கள் நிறைவேற்றப்படுவது நல்லது. பொது மக்களின் நலனுக்காக கொண்டு வரப்படும் எந்த ஒரு சட்டமும் நல்லதே. ஆனால் அவை எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன, அவை எவ்வாறு விளக்கப்படுகின்றன என்பதை அதனுள் உள்ளடக்குவது அவசியமாகும். நமது பிரச்சனைகள் சட்டங்களை இயற்றுவதில் இல்லை. சட்டங்களை முறையாக அமுல்படுத்தாதது தான்.

**தேசிய கத்தோலிக்க மக்கள் தொடர்பாடல் பணிப்பாளர் அருட் தந்தை ஜூட் கிறிசாந்த பெர்னாண்டோ.**

சமூக வலைத்தளங்கள் என்பது நவீன சமூகத்திற்கு மிகவும் பயனளிக்கும் ஒன்றாகும். அவற்றின் மூலம் கிடைக்கும் நன்மைகள் ஏராளமானவையாகும். இதன் மூலம் நாடு முழுவதிலும் நடக்கும் நல்ல, கெட்ட தகவல்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும். மோசமான விடயங்களாக ஒருவரின் தனிப்பட்ட பெயரை சேதப்படுத்துவது, வெறுப்பை விதைப்பது, இனம் மற்றும் மதங்களுக்கு இடையில் வேறுபாடுகளை உருவாக்குவது போன்ற மோசமான செயல்கள் செய்யப்படலாம். எனினும் இதற்கு மாற்றீடாக இவற்றைத் தடை செய்து அதற்காக புதிய சட்டங்களை இயற்றி தண்டனைகளை வழங்குவது சருயானதல்ல. இவ்வாறான விடயங்களைச் செய்பவர்களை இனம் கண்டு கொண்டு தற்போது இருக்கும் சட்டங்களின் கீழேயே அவர்களுக்குத் தண்டனைகளை வழங்க முடியும். புதிதாக சட்ட திட்டங்களை உருவாக்கி தடைகளைப் போடச் சென்றால் அதன் மூலம் வேறு நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும். உதாரணமாக, ஒருவர் ஒரு குறிப்பிட்ட நபருடன் கோபமாக இருந்தால், அந்த நபரை இதுபோன்ற விஷயங்களில் தந்திரமான முறையில் சிக்க வைத்து, தண்டித்து, அந்த நபரை இல்லாதொழிக்கும் அளவுக்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு உடந்தையாக இருப்பதற்கும் கூட இதனுடாக முடியும் எனவே புதிய சட்டங்கள் தேவையில்லை. தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் செயல்படுவதற்கு ஏராளமான ஏற்பாடுகள் உள்ளன.




## இந்துக்களையும் பௌத்தர்களையும் பிரிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றார்கள்

சர்வதேச இந்து சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ இராமச்சந்திரன் குருக்கள் பாபுசர்மா



நாடு மோசமான நிலையில் இருந்து தற்போது ஓரளவு சீரடைந்திருக்கிறது. தற்போது தான் மக்களால் சிறிது சிறிதாக தமது வாழ்க்கையை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு முடியுமான நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இதற்கு தடைகளை ஏற்படுத்தும் எந்த தவறான விடயமும் இடம் பெறுவது நல்லதல்ல. சிலர் இந்துக்களையும் பௌத்த மக்களையும் மீண்டும் பிரிப்பதற்கு முயற்சிக்கின்றார்கள். அமைதிச் சூழலை குலைப்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும். அதற்கு இடமளிக்கக்கூடாது. இந்த நாட்டை மீண்டும் பிளவுபடுத்த வெளிநாட்டு சக்திகள் முயற்சித்தால், அதற்காக பொய்ப் பிரசாரம் செய்தால், அதற்கு இடமளிக்கக் கூடாது. சிலர் தமது பாக்கெட்டுக்குள் கொஞ்சம் பணம் வருமாக இருந்தால் எதையும் செய்வார்கள். எனவே, இதுபோன்ற செயல்களைத் தடுக்க சில சட்டங்கள் கொண்டு வருவதில் தவறில்லை.

ரசிக கொட்டுதுரகே
தமிழில்: எம்.எஸ்.முஸப்பிர்

# நீர் முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் உணரப்படுவது எப்போது?

**இலங்கை கடந்த சில மாதங்களாக (2023) கடும் வரட்சி மற்றும் உஷ்ண காலநிலைக்கு முகம் கொடுத்தது. அதன் விளைவாக நீரேந்து பிரதேசங்களான குளங்கள், நீர்த்தேக்கங்கள், நீர்க்குட்டை–கள் உள்ளிட்ட அனைத்தினதும் தண்ணீர் நாளுக்கு நாள் குறைவடைந்து வந்ததோடு பல குளங்கள் வற்றி வரண்டு போயின.**

- மழை கிடைக்கப்பெறாதா என மனிதர்களும் ஏனைய உயிரினங்களும் ஏங்குமளவுக்கான கடும் வரட்சி
- ஐம்பதாயிரம் குளங்களில் 35 ஆயிரம் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- வருடத்திற்கு 130 பில்லியன் கியூபிக் மீற்றர் மழை–வீழ்ச்சியை பெற்றுக்கொள்ளும் நாடு
- எவ்வித பயன்பாட்டுக்கும் உட்படுத்தாத நிலையில் 50 பில்லியன் கியூபிக் மீற்றர் நீர் கடலில் கலக்கிறது
- குளங்கள், நீர்த்தேக்கங்களின் நீர்கொள்ளளவு திறன் 50 வீதம் வீழ்ச்சி



வடக்கு, கிழக்கு, வடமத்தி, வடமேல் உள்ளிட்ட மாகாணங்களும் ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, பதுளை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களும் இவ்வரட்சிக் காலநிலையின் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் பெரிதும் எதிர்கொண்டன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தரவுகளின் படி, இம்முறை இந்நாடு முகம் கொடுத்த வரட்சியினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் யாழ்ப்பாணமே முதலிடத்தைப் பிடித்திருந்தது.

இவ்வரட்சியினால் நாட்டில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நெற்செய்கை பாதிப்படைந்தது. நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் உப உணவுப் பயிர்ச் செய்கைகளும் அழிவடைந்தன. கமத்தொழில் அமைச்சு இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அத்தோடு தென்னை, தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்ட பயிர்ச்செய்கையிலும் இவ்வரட்சிக் காலநிலை தாக்கம் செலுத்தத் தவறவில்லை.

அதேநேரம் இவ்வரட்சிக் காலநிலையினால் ஏற்பட்ட தண்ணீர்ப் பற்றாக்குறையின் தாக்கங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் மனிதர்கள் உட்பட ஏனைய உயிரினங்களும் முகம் கொடுத்தன. குடிநீரைப் பெற்றுக்கொள்வதிலும் நெருக்கடிகள் ஏற்பட்டன. அதனால் அத்தியாவசியமற்ற தேவைகளுக்கு குடிநீரைப் பாவிக்க வேண்டாம் என்றும் குடிநீரை வீண் விரயம் செய்ய வேண்டாம் என்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மக்களிடம் வேண்டுகோள் விடுக்கும் அளவுக்கு நிலைமை மோசமானது.

இதேவேளை வனசீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரியொருவர் யால, வில்பத்து உட்பட நாட்டிலுள்ள வனாந்திரங்களில் காணப்படும் வனசீவராசிகள் உட்பட நாட்டில் சுமார் பத்து இலட்சம் உயிரினங்கள் தண்ணீரைத்தேடி அலைந்து திரியும் நிலை உருவாகியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.



இந்த சூழலில் பல வனசீவராசிகள் தண்ணீர் தேடி மக்கள் குடியிருப்புகளை நாடிவரும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தன. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வனசீவராசிகளுக்கு குடிநீர் வழங்கும் போர்வையில் தண்ணீரில் நஞ்சைக் கலந்து அவற்றை வேட்டையாடிய மனிதாபிமானமற்ற செயற்பாடுகளும் இடம்பெறவே செய்தன.

அதேவேளை தண்ணீர் தேடி அலைந்த வன விலங்குகள் உள்ளிட்ட ஏனைய உயிரினங்கள் பலவும் வீதிப் போக்குவரத்து வாகனங்களில் மோதுண்டும் அவற்றில் நசிபட்டும் உயிரிழக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு முகம் கொடுத்திருந்தன.

மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறாதா? என மனிதர்களும் ஏனைய உயிரினங்களும் ஏங்கித் தவிக்கும் அளவுக்கு இவ்வரட்சியின் தாக்கங்களும் பாதிப்புக்களும் அமைந்திருந்தன. இம்முறை மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாக ஏற்பட்ட வரட்சியினால் இவ்வாறான அசௌகரியங்களும் நெருக்கடிகளும் ஏற்பட்டன.

ஆனால் பருவபெயர்ச்சி மழைவீழ்ச்சி மூலம் வருடா வருடம் போதியளவு நீரைப் பெற்றுக்கொள்ளக் கூடியதொரு நாடாக இலங்கை விளங்குகிறது. தென்மேல், வடகீழ், இடைப்பருவ பெயர்ச்சி ஆகியவற்றின் மூலம் மழைவீழ்ச்சியை இந்நாடு பெற்றுக்கொள்கிறது.

அந்த வகையில் 'வருடமொன்றுக்கு 130 பில்லியன் கியூபிக் மீற்றர் மழை வீழ்ச்சியை இந்நாடு பெற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும் பூகற்பவியல் தொடர்பான சிரேஷ்ட பேராசிரியருமான அதுல சேனாரத்ன, இங்கு தண்ணீர் உரிய முறையில் முகாமைத்துவம் செய்து பயன்படுத்தாததன் விளைவாகவே வரட்சி போன்ற நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

உண்மையில் இலங்கையானது போதியளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் இடத்திலேயே புவியில் அமைந்திருக்கிறது. அதனால் நாடு பெற்றுக்கொள்ளும் மழைவீழ்ச்சியையும் சுற்றுச்சூழலையும் நன்கு ஆய்வு செய்த இந்நாட்டு முன்னோர்கள், எமக்குகிடைக்கப்பெறும் மழைநீர் வீண் விரயமாவதைத் தவிர்த்து அதனைச் சேமித்துப் பயன்படுத்தும் வகையில் குளங்களையும் நீர்த்தேக்கங்களையும் அமைத்தார்கள். அதன் ஊடாக தனித்துவமான நீர்வள நாகரிகமே உருவானது.

'இந்நாட்டுக்கு ஆகாயத்தில் இருந்து கிடைக்கப்பெறும் மழை நீரில் ஒரு துளியைக்கூட பயன்படுத்தப்படாது கடலில் கலக்க விடமாட்டேன்' என்று பராக்கிரம பாகு மன்னர் வெளிப்படையாகவே குறிப்பிட்டார்.

இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்நாட்டு மன்னர்களும் மக்களும் தண்ணீரின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் அறிந்திருந்தார்கள். அதற்கு பராக்கிரமபாகு மன்னரின் இக்கூற்று நல்ல எடுத்துக்காட்டாகும். அத்தோடு 65,610 சதுர கிலோ மீற்றர்கள் பரப்பளவைக் கொண்ட இந்நாட்டில் பெருந்தொகையான குளங்கள் அமைக்கப்பட்டிருப்பதும் அதற்கு வலு சேர்ப்பதாக உள்ளது.

நாடு பெற்றுக்கொள்ளும் தண்ணீரை சேமித்து பயிர்ச்செய்கைகளுக்கும் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தான் குளங்களும் நீர்த்தேக்கங்களும் இங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. பேராசிரியர் அதுல சேனாரட்னவின் தகவல்களின் படி, நாட்டில் 50 ஆயிரம் குளங்கள் இருந்துள்ளன. அவற்றில் 35 ஆயிரம் குளங்கள் இற்றைவரையும் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆனால் இந்தக் குளங்களில் 50 வீதமானவை தூர்ந்து போயும் சேறு, சகதி நிறைந்தும் காணப்படுகின்றன. அதனால் இக்குளங்களின் தண்ணீர் கொள்ளளவு 50 வீதம் குறைவடைந்துள்ளது.

ஆனால் இக்குளங்களை சேறுசகதிகளை ஒழுங்குமுறையாக அகற்றிப் புனரமைத்தால் இந்நாடு பெற்றுக்கொள்ளும் மழைநீரில் பெரும்பகுதியை சேமித்துக்கொள்ள முடியும். அதன் ஊடாக கடும் வரட்சி மற்றும் உஷ்ண காலநிலை ஏற்படுகின்ற போதிலும் அவற்றின் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் குறைத்து கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அதற்கான உட்கட்டமைப்பு வசதி நாட்டின் பல பிரதேசங்களிலும் உள்ளன.

இருந்த போதிலும் மழைவீழ்ச்சியின் மூலம் கிடைக்கப்பெறும் நீரை முகாமைத்துவம் செய்து கொள்வதில் அண்மைக் காலமாக நிலவும் பலவீனங்கள் தான் கடந்த வரட்சியின் தாக்கங்களுக்கு காரணமாக அமைந்திருந்தன.

இவ்வரட்சியின் தாக்கங்களும் பாதிப்புக்களும் நீடித்து வந்த சூழலில் கடந்த வாரம் முதல் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறத் தொடங்கியுள்ளது. மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் அடுத்துவரும் சில தினங்களுக்கு இம்மழைவீழ்ச்சி நீடிக்கும் என்று குறிப்பிட்டுள்ள வளிமண்டலவியல் திணைக்களம், ஏனைய பிரதேசங்களில் மாலை வேளையிலோ இரவு வேளையிலோ மழை பெய்யும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்கேற்ப மேல் மாகாணம் உள்ளிட்ட பல பிரதேசங்கள் தற்போதைய நாட்களில் அதிக மழைவீழ்ச்சியைப் பெற்றுக்கொள்கின்றன. அதேநேரம் இன்னும் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறாத பிரதேசங்களும் இருக்கவே செய்கின்றன. என்றாலும் தற்போதைய மழைவீழ்ச்சியின் ஊடாக வரட்சியின் தாக்கங்களும் பாதிப்புகளும் பெரும்பாலான பிரதேசங்களில் நீங்கியுள்ளன.

ஆனால் தண்ணீருக்காக நாடே ஏங்கி தவிக்கும் வரட்சிக்கு முகம் கொடுத்த போதிலும் இம்மழைக் காலநிலை ஆரம்பமானதும் நீரின் முக்கியத்துவம் உணரப்படாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. தற்போதைய மழைவீழ்ச்சி மூலம் கிடைக்கப்பெறும் பெரும்பகுதி நீர் எவ்வித பயன்பாட்டுக்கும் உட்படுத்தப்படாத நிலையில் ஆறுகள், கங்கைகள் ஊடாக கடலில் கலப்பது இதற்கு நல்ல உதாரணமாக உள்ளது.

ஆனால் வரட்சிக் காலத்தில் தண்ணீருக்காக முகம் கொடுத்த அசௌரியங்களையும் நெருக்கடிகளையும் சரியாகப் புரிந்து கொண்ட எவரும் நீர் பயன்படுத்தப்படாது கடலில் கலப்பதை ஏற்றுக் கொள்ளவே மாட்டார்.

முன்பு ஒவ்வொரு பருவப்பெயர்ச்சி காலநிலையிலும் மூன்று, நான்கு மாதங்களாக கிடைக்கப்பெற்று வந்த மழைவீழ்ச்சி நீர், தற்போது இரண்டொரு மாதங்களிலேயே கிடைத்து விடுகிறது. இது பூகோளத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தின் வெளிப்பாடே அன்றி வேறில்லை. அதனால் குறுகிய காலப்பகுதிக்குள் அதிகளவு மழைநீர் கிடைக்கப்பெறுவதால் அதனை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது. அதேநேரம் அந்நீரை முழுமையாக உறிஞ்சிக்கொள்ள முடியாத நிலைமையும் நிலத்தில் காணப்படுகிறது. அதனால் கிடைக்கப்பெறும் மழைநீரில் பெரும்பகுதி நீர்த்தேக்கங்களுக்கும் குளங்களுக்கும் செல்கின்ற போதிலும் அவற்றின் நீர்க்கொள்ளளவு 50 வீதம் வரை வீழ்ச்சி அடைந்து காணப்படுவதால் வருடம் முழுவதற்கும் பயிர்ச்செய்கைக்கு தேவையான தண்ணீரை குளங்களில் தேக்கி வைத்துக்கொள்ள முடியாதுள்ளது. அதன் விளைவாக பெரும்பகுதி மழைநீர், குறிப்பாக சுமார் 50 பில்லியன் கியூபிக் மீற்றர் மழை நீர் எவ்வித பயன்பாட்டுக்கும் உட்படுத்தப்படாத நிலையில் கடலில் கலக்கின்றது என்கிறார் பேராசிரியர் சேனாரட்ன.

ஆகவே இந்நிலைமையைத் தவிர்த்து பருவபெயர்ச்சி மழைவீழ்ச்சி மூலம் கிடைக்கப்பெறும் நீரை உச்சளவில் முகாமைத்துவம் செய்து வருடம் முழுவதும் பயன்படுத்திக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். அது இப்போதைய முன்னுரிமைத் தேவையாகும். அப்போது வரட்சி காலநிலைகளின் போது அதன் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.



மர்லின் மரிக்கார்

## 'லய சமர்ப்பணம்' மிருதங்க அரகேற்றம்



'மிருதங்க வித்துவான்', 'சங்கீத ரத்தினம்', 'வாழ்நாள் சாதனையாளர்' ஸ்ரீ அம்பலவாணர் ரகுநாதனின் மாணவனும் வைத்திய கலாநிதி நிரோஷ் சுப்பிரமணியம் மற்றும் திருமதி நளினி நிரோஷ் ஆகியோரின் புதல்வனுமான செல்வன் ஜொஹான் பிரவீன் சுப்ரமணியனின் மிருதங்க அரகேற்றம் 'லய சமர்ப்பணம்' இன்று 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6,30 க்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுற்கு கல்கிசை பரி தோமாவின் கல்லூரி அதிபர் அருட் திரு மார்க் பிலிமோரியா பிரதம விருந்தினராக கலந்துக் கொள்ளவுள்ளதுடன் பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் சி,பிரசாந்தன், கல்கிசை பரி தோமாவின் கல்லூரி பிரதி அதிபர் அசங்க எஸ், பெரேரா ஆகியோர் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வுக்கான சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு, மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நீதியரசர் பா.சசிமகேந்திரன், அம்பாறை கிழக்கு மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி நீதி அரசர் தி.யோ.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 79

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | 08 | 09 | 10 |
| 11 | 12 | | 13 | | 14 |
| | 15 | 16 | | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 22 | |
| | | 23 | 24 | 25 | 26 |

பெயர் ..............................................
வகுப்பு ..............................................
தொலைபேசி இல ..............................................
பாடசாலை பெயர் ..............................................
வதிவிட முகவரி ..............................................
..............................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) கடலில் வாழ்கின்ற உயிரினம். இப்பிராணி இனப்பெருக்கத்துக்காக கரைக்கு வந்து முட்டையிட்டு, அம்முட்டைகளை மணலால் மூடிவிட்டுச் செல்லும். சில காலத்தின் பின்னர் முட்டைகளிலிருந்து வெளிவரும் குஞ்சுகள் தரையில் ஊர்ந்து சென்று கடலை அடைந்து அங்கு நீர்ச்சூழலில் வாழத் தொடங்குகின்றன.
(7) ஊடகத்துக்காக செய்திகளை திரட்டித் தருபவர் இவர். ஒவ்வொரு ஊடகத்துக்கும் பிரதேசங்கள் தோறும் இவ்வாறான செய்தியாளர்கள் உள்ளனர்.
(11) பாலூட்டி விலங்குகளில் பெரும்பாலானவற்றின் உடலின் பின்பகுதியில் அமைந்துள்ள சிறப்பான, நீளமான அங்கம் இது.
(15) செம்மஞ்சள் நிறத்தை ஒத்த ஒரு நிறம் இது. இந்து, பௌத்த துறவிகள் அணிகின்ற சீருடையின் நிறம் இது. (தலைகீழான சொல்)
(17) மனிதரில் வாழ்கின்ற ஒட்டுண்ணிப் பூச்சி இது. பெரும்பாலும் பெண்கள் பலரின் தலைமயிரில் குடிகொண்டு இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து வாழும்.
(19) வீட்டுக்கு உள்ளே அவசியமற்றவர்கள் பிரவேசிக்காதவாறு நுழைவாயிலாக அமைக்கப்படுவது. நாம் வெளியே செல்லும் போது பூட்டிவிட்டுச் சென்றால் உடைமைகளுக்குப் பாதுகாப்பு. (தலைகீழான சொல்)
(23) பெண்கள் மாத்திரமன்றி, ஆண்களில் பலரும் கைவிரலில் அணிகின்ற ஆபரணம். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) இலங்கையில் விளைகின்ற உலகப்புகழ் மிகுந்த வாசனைத்திரவியங்களில் ஒன்று இது. உணவுக்கு சுவையூட்டியாகவும், மணமூட்டியாகவும் சேர்க்கப்படுகின்றது.
(3) புவியின் உபகோள் இது. இதன் தென்துருவப் பகுதியில் சந்திராயன்_ 3 என்ற விண்கலத்தை சமீபத்தில் தரையிறக்கியதன் மூலம் உலகஅரங்கில் இந்தியா சாதனை நிலைநாட்டியுள்ளது. (தலைகீழான சொல்)
(4) இருளான நிறம் இது. (தலைகீழான சொல்)
(5) பாரதக்கதையில் இவன் கொடைவள்ளல். இல்லாதோருக்கு வாரிவழங்குகின்ற மன்னன்.
(12) தோல்வாத்தியக் கருவி இது. (தலைகீழான சொல்)
(16) எமது நாட்டில் எங்குமே தாராளமாகக் காணக் கூடிய பறவை.
(17) பாட்டனுக்கும், பாட்டிக்கும் இவள் செல்லப்பிள்ளை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 78

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சூறாவளி 08. பாரி 10. யன்னல்
15. அன்னம் 22. உளி 24. மிளகு

**மேலிருந்து கீழ்**

01. சூரியன் 03. வதனம் 05. கீரி
13. மின்னல் 18. அழகு 19. உடு

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 77

### பாராட்டு பெறுவோர்

**1. கோ. ஜெரிஷ்**
தரம் 05E, கமு/ கார்மேல் பற்றிமா பாடசாலை,
இல. 209/1, மார்க்கண்டு வீதி, பாண்டிருப்பு, கல்முனை

**2. எம். ஆயிஷா இஸ்மா**
தரம் 06A க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 233C, புளுகஹதென்ன, அக்குரனை.

**3. அனீஸ் பாத்திமா அப்லா**
தரம் 07, அல் - அமான் மு.ம.வித்தியாலயம்,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**4. வண. எம். ஆர்யசாந்த**
தரம் 05, தர்மபால பிரிவென,
பெல்லன, அகலவத்தை.

**5. ஸீனத் தஹானி சாட்**
தரம் 11B, பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி.

**6. பஹ்மா ருஷ்டி**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவத்துறை, கம்பளை.

**7. எம்.ஏ. பாத்திமா சனா**
தரம் 03, தி/ கிண்ணியா மு.ம. வித்தியாலயம்,
இல. 112, நகர சபை வீதி, கிண்ணியா.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 79
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**இனியவை கூறல்: அல்லவை தேய அறம்பெருகும்**
**நல்லவை நாடி இனிய சொலின்**

***தெளிவுரை :***
*பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடையச் சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய அறம் வளர்ந்து பெருகும்.*

## இவ்வார மழலை



ஆர். கிஷாந்தன்



# சொர்க்கமும் நரகமும்

ஒரு ஊரில் ஒரு கருமி வாழ்ந்து வந்தான். அவன் மிகப்பெரிய பணக்காரன். ஆனால், யாருக்கும் உதவி செய்ய மாட்டான்.

அவனுக்கு சொர்க்கத்தையும் நரகத்தையும் காண ஆசை வந்தது. ஒருநாள் அவனது கனவில் ஒரு பெரியவர் தோன்றினார். அவனை சொர்க்கத்துக்குக் கூட்டிச் செல்வதாகக் கூறினார். அவனும் அவருடன் சென்றான்.

முதலில் அவனை நரகத்துக்குக் கூட்டிச் சென்றார். அங்கு உணவு நேரத்தில் பெரிய பெரிய அண்டாக்களில் சாதம், குழம்பு மற்றும் சுவைமிக்க உணவுகளும் இருந்தன. அவரவர்களுக்கு தட்டுகள் கொடுக்கப்பட்டு சுவைமிக்க உணவு பரிமாறப்பட்டது.

எல்லோருக்கும் நாவில் எச்சில் ஊறியது. ஆனால்... அந்தோ பரிதாபம்! அனைவராலும் கையை நீட்டி உணவுப் பொருளை எடுக்க முடிந்ததே தவிர, கையை மடக்கி, வாய்க்கு அந்த உணவைக் கொண்டு செல்ல முடியவில்லை. அறுசுவை உணவு எதிரே இருந்தும் அவர்களால் உண்ண முடியவில்லை. அவர்களுக்குப் பசியோடு ஆத்திரமும் சேர்ந்து கொண்டது.

அனைத்து அண்டாக்களையும் கீழே தள்ளிவிட்டு, அவற்றிலுள்ள உணவை வீணாக்கினர். பின்னர் தாங்க முடியாத பசியால் உட்கார்ந்து அழுது கொண்டே இருந்தனர்.

பின்னர் அந்தப் பெரியவர் அந்தக் கருமியை சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கும் அதேபோல் அண்டாக்கள் நிறைய அருமையான சாப்பாடு வைக்கப்பட்டிருந்தது.

அங்கு இருந்தவர்களுக்கும் கையை நீட்ட முடிந்தது. ஆனால் தங்கள் வாய்க்கருகே கொண்டு செல்ல கையை மடக்க முடியவில்லை.

ஆனால், அவர்களில் ஒருவர் தனது நீட்டிய கையினால் இனிப்பு வகைகளை எடுத்து எதிரே இருந்தவர் வாயருகில் நீட்டினார். மடக்கத்தானே முடியாது? கையை நீட்டி எதிரே இருப்பவரின் வாயில் ஊட்ட முடியுமல்லவா?

இப்படியே அனைவரும் ஒருவருக்கொருவர் ஊட்டி மகிழ்ந்தனர். அனைவரின் வயிறும் நிரம்பியது.

கருமி கனவிலிருந்து மீண்டான். ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதே சொர்க்கம் என்பதை அவன் புரிந்து கொண்டான். தான் மட்டும் சுகமாய் வாழ நினைப்பது நரகம் என்பதை உணர்ந்தான்.

அன்றிலிருந்து அவன் அனைவருக்கும் உதவிகள் பல புரிந்து நல்வாழ்வு வாழ்ந்தான்.



முள்ளம் பன்றியின் உடலில் சுமார் 30 ஆயிரம் முட்கள் இருக்கும்.

# எறும்புகளின் வரிசை பயணம்?



கூட்டமாக கூடி வாழும் தேனீக்களுக்கும் எறும்புகளுக்கும் வாசனைகளை அறிந்து கொள்வதற்கான திறமை மிகவும் அதிகம். ஒரே கூட்டின் உறுப்பினர்களான எறும்புகள், ஒன்றை ஒன்று வாசனையை வைத்துத்தான் அடையாளம் காண்கின்றன. சரியான வாசனை இல்லாத எறும்பை மற்ற எறும்புகள் தங்கள் வசிப்பிடத்தில் அனுமதிப்பதில்லை. வாசனையை இனங்காணும் இந்த அறிவு, அவற்றிற்கு உணவு தேடுவதற்காகத்தான் பெரிதும் உதவுகின்றன.

சாதாரண எறும்புகள் உணவு இருக்கும் இடத்தை தேடிக் கண்டுபிடித்தவுடன் வசிப்பிடத்திற்கு திரும்புகின்றன. திரும்பும்போது இவை சும்மா திரும்பாது. வழி முழுவதும் வேதிப்பொருளைக் கசியவிட்டுக் கொண்டுதான் வரும். இந்த வேதிப்பொருளின் பெயர் பெரோமோன். எறும்புகளின் வயிற்றில் பெரோமோன் சுறக்கிறது. இதுதான் மற்ற எறும்புகளுக்கு வழிகாட்டுகிறது. எறும்புகள் பெரோமோன் என்ற வேதிப்பொருளைச் சுரக்கின்றன. இந்த வேதிப்பொருளைக் கொண்டு தேய்த்து வரைந்த கோட்டில் மட்டுமே எறும்புகள் செல்வதால் தான் அவை வரிசையாகச் செல்கின்றன.

வாசனையையும் சுவையையும் தங்களின் ஒரே உறுப்பால்தான் அறிந்துகொள்கின்றன. வண்ணத்துப் பூச்சிகள், தேனீக்கள் ஆகியவையும் தங்கள் உடலில் சுரக்கும் வேதிப்பொருளைப் பயன்படுத்தி தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்கின்றன.

சில இனத்தைச் சேர்ந்த எறும்புகள் அடையாளங்களை நினைவு வைத்துக்கொண்டுதான் வழியை கண்டுபிடிக்கின்றன. அவ்வகையான எறும்புகள் சுற்றுப் பகுதியில் ஓடியலைந்து தேடித்தான் உணவைக் கண்டுபிடிக்கும்.

## ஆமை பயிரைக் காத்திடும்

சட்டி போன்ற உடல்களும்
கட்டை யான கால்களும்
மெல்ல மெல்ல நடந்திடும்
அன்பு மிக்க ஆமையே

சின்னஞ் சிறிய ஓடையில்
குஞ்சு மீனைப் போலவே
நீந்திப் பவனி வருகிறார்
நாமும் பார்த்து வருவோமே

வளர்ப்பு மீன் தொட்டியிலே
ஆமையினைப் பிடித்து வந்து
கூட்டில் இட்டு வளர்ப்போமே
மனம் மகிழப் பார்த்திடலாம்.

அச்ச மின்றி வாழலாம்
கவச மான ஓட்டினால்
யார் தீண்டி னாலுமே
தயக்க மின்றி செல்லலாம்

சோதனைகள் வந் தாலே
பொறுமை க்கு மகுடமாய்
வழி காட்டும் ஆமைமேல்
பாசத்தை அள்ளிக் கொட்டுவோம்.

உறுதி யான ஓட்டிலே
வீட்டை ஒன்றைக் கட்டுவோம்
நமது குடும்பம் யாவரும்
அதினில் சுற்றுலா செல்லுவோம்

விரை வான சமையலுக்கு
உணவைத் தேடும் உலகிலே
பாரம்பரிய உணவு மீது
அன்பு காட்டுவதைப் போலவே

தேவையான இட மிருந்தால்
வீட்டுத் தோட்டம் செய்வோமே
ஆமை பயிரைக் காத்திடும்
எங்கும் சுற்றி வருவோமே



இக்பால் அலி...




நி. ஷைனி,
தரம் 02B, சைவமங்கையர் வித்தியாலயம்,
வெள்ளவத்தை.

# மிக நீளமான தொங்கு பாலம்
## ஸ்கை பிரிட்ஜ்

உலகிலேயே மிக நீளமாக கட்டப்பட்டுள்ள இந்த தொங்கு பாலம், சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் கவர்ந்து வருகிறது.

ஐரோப்பிய நாடான செக் குடியரசின் டோல்னி மோரோவா கிராமத்தில், 'ரெசோர்ட்' எனப்படும், ஒரு சொகுசு விடுதி அமைந்துள்ளது. இங்கு, சுற்றுலா பயணியரை ஈர்க்கும் விதமாக, ஸ்லாம்னிக் மலையையும், கிலம் மலையையும் இணைக்கும் வகையில், பிரமாண்டமான தொங்கு நடைப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தொங்கு பாலம் உலகிலேயே மிகப் பெரியதாகும்.

'ஸ்கை பிரிட்ஜ் 721' என, பெயரிடப்பட்டுள்ள இந்த நடைபாலம், 65 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. 312 அடி உயரத்தில், 2,365 அடி நீளம் மற்றும் 4 அடி அகலத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த பாலம், உலகின் மிகப்பெரிய தொங்கு நடைபாலமாகும்.

இதற்கு முன், நேபாளத்தில், 1,860 அடி நீளமுடைய பாங்லங் பார்பத் தொங்கு நடைபாலம், உலகின் மிகப்பெரிய தொங்கு நடைபாலமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.



# சிறுவர்கள் விரும்பும் சுயிங்கம்

## கண்டுபிடிப்பாளர்கள்

சுயிங்கத்தை இவர்தான் கண்டுபிடித்தார் என்று எளிதில் சொல்லிவிட முடியாது. சுமார் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புதிய கற்காலத்திலேயே மனிதர்கள் சுயிங்கம் போன்ற பொருளைப் பயன்படுத்தியதற்கான ஆதாரம் பின்லாந்தில் கிடைத்திருக்கிறது. மாயன், அஸ்டெக் இன மக்களும் மரப்பிசினைப் பயன்படுத்தி சுயிங்கம் போன்ற ஒரு பொருளை உருவாக்கி, மென்று இருக்கிறார்கள். பற்களைச் சுத்தம் செய்வதற்கும் வாயிலிருந்து துர்நாற்றம் வராமல் இருப்பதற்கும் இந்தச் சுயிங்கத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். கிரேக்கர்களும் மரத்திலிருந்து கிடைக்கும் பிசினைக் கொண்டு, சுயிங்கம் போன்ற பொருளை, பற்களின் நலத்துக்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

பூர்வகுடி அமெரிக்கர்களிடமிருந்து கற்றுக்கொண்டு, சில விஷயங்களில் மாற்றம் செய்து நவீன சுயிங்கத்தை 1848ஆம் ஆண்டு ஜான் பி. கர்டிஸ் உருவாக்கினார். 1850ஆம் ஆண்டு பாரஃபின் மெழுகைக் கொண்டு சுயிங்கம் தயாரிக்கப்பட்டு, பிரபலமானது.

நறுமணத்துடன் கூடிய சுயிங்கத்தை, 1860ஆம்ஆண்டு ஜான் கோல்கன் முதன் முதலில் உருவாக்கினார். இனிப்புச் சுவையுடைய சுயிங்கத்தைத் தயாரித்து, 1869ஆம் ஆண்டு வில்லியம் செம்பிள் முதல் முறை காப்புரிமைப் பெற்றார்.

1884ஆம் ஆண்டு ப்ளாக் ஜாக் என்பவர் இனிப்பும் குளிர்ச்சித் தன்மையும் கொண்ட அதிமதுரத்தை வைத்து சுயிங்கத்தை உருவாக்கினார்.

1899ஆம் ஆண்டு ரிக்ளேஸ் ஸ்பியர்மின்ட் கம் வெகு வேகமாகப் பிரபலமானது. இது இன்றுவரை பயன்பாட்டில் இருந்துவருகிறது.

1960ஆம் ஆண்டு சிந்தடிக் இரப்பரைப் பயன்படுத்தி சுயிங்கம் தயாரிக்கப்பட்டது. இது செலவு குறைவு என்பதால் பலரும் இந்த நுட்பத்தில் சுயிங்கத்தைத் தயாரித்து வருகின்றனர்.





மஞ்சரி விளையாட்டு

# ஆசிய கிண்ணம்: முடிவை தீர்மானிக்கும் மழை

ஆசிய கிண்ண போட்டி இப்போது இறுதிக் கட்டத்தை எட்டி இருக்கிறது. சுப்பர் போஃர் சுற்றின் எஞ்சிய நான்கு போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டியே மிச்சம். அதிலும் இன்று (10) பரபரப்பான இந்திய–பாகிஸ்தான் போட்டி நடைபெறுகிறது.

யார் ஆசிய கிண்ணத்தை வெல்வார்கள், எந்த அணி சிறப்பாக செயற்படுகிறது, எந்த அணி தடுமாறுகிறது என்ற கதைகள் ஒரு பக்கம் இருக்க மழையின் ஆட்டம் பற்றிய கவலை தான் இப்போது எல்லோருக்கும் பெரிதாக தெரிகிறது.

ஆசிய கிண்ணத்தின் எஞ்சிய போட்டிகள் அனைத்தும் கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் தான் நடைபெறப்போகிறது. கொழும்பு மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் அடுத்த 10 நாட்களுக்கு மழையுடன் கூடிய காலநிலை தான் நிலவும் என்று காலநிலை அவதான நிலையம் தெளிவாகச் சொல்லிவிட்டது.

என்றாலும் போட்டிகளை திட்டமிட்டபடி கொழும்பிலேயே தொடர்வதற்கு பிரதானமாக ஆசிய கிரிக்கெட் கௌன்சில் தீர்மானித்துவிட்டது. எனவே, போட்டியின் தலைவிதி என்பது முழுக்க முழுக்க மழையின் கையிலேயே தங்கியிருக்கிறது.

இம்முறை ஆசிய கிண்ணப் போட்டியை நடத்துவதற்கு பாகிஸ்தான் தேர்வு செய்யப்பட்டது தொடக்கம் இருந்து வந்த பனிப் போரின் உச்சம் தான் இந்த மழையா? கிரிக்கெட்டா? என்ற போட்டிக்குக் காரணம்.

ஆரம்ப சுற்றில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போட்டியை பார்த்து மழை பெய்ய காலநிலை பற்றிய கவலை எல்லோருக்கும் எழுந்தது.

கண்டி, பல்லேகலவில் செப்டெம்பர் 2 ஆம் திகதி நடைபெற்ற அந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸ் நன்றாகத்தான் இருந்தது. இந்தியா 267 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்த நிலையில் அந்த ஆடு களத்தில் அது ஒரு சரிசமமான வெற்றி இலக்காக இருந்ததால் போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

என்றாலும் இடைவிடாது பெய்த மழையால் பாகிஸ்தானால் துடுப்பெடுத்தாடவே முடியாமல் போனது. அதாவது சுமார் நான்கு ஆண்டுகளின் பின் ஒருநாள் சர்வதேச போட்டி ஒன்றில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் எதிர்த்தாடிய போட்டி இப்படி வீணானது என்பது பெருத்த ஏமாற்றம்.

தொடர்ந்து இந்தியா மற்றும் நேபாள அணிகளுக்கு இடையிலான போட்டியிலும் மழை தலைகாட்டிவிட்டு சென்றது. ஓவர்கள் குறைக்கப்பட்டு போட்டி தப்பித்துக் கொண்டது.

இத்தனை காலமும் வெய்யில் சுட்டெரித்த நிலையில் எப்போது ஆசிய கிண்ணம் ஆரம்பித்ததோ அப்போது இலங்கையின் பல பகுதிகளில் மழை கொட்டுகிறது. அதிலும் கொழும்பில் ஒரு வாரத்திற்கு முன் இருட்டிய வானம் இன்னும் முழுமையாக விடியவில்லை. கடந்த வாரம் பெய்த கனத்த மழையால் கொழும்பின் சில பகுதிகளில் மழை நீர் தேங்கி முழங்காலுக்கு மேலே வெள்ளம் ஏற்பட்டது. அதுவும் ஆசிய கிண்ணப் போட்டியின் இறுதிக் கட்ட ஆட்டங்கள் நடைபெறும் ஆர். பிரேமதாச மைதானத்திற்கு அருகில் தான் பாதிப்பு அதிகம்.

ஆசியக் கிண்ணத் தொடரை கலப்பு முறையில் நடத்தி அதன் பெரும்பாலான போட்டிகளை இலங்கைக்கு மாற்றியது பற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முழு திருப்தி அடையவில்லை. இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததை அடுத்தே போட்டிகள் இலங்கை பக்கம் திரும்பியது.

ஆசிய கிண்ணத்தை நடத்தும் நாடாக பாகிஸ்தான் இருந்தபோதும் அங்கே நான்கு போட்டிகள் மாத்திரமே ஒதுக்கப்பட்டன. எஞ்சிய போட்டிகள் அனைத்தும் இலங்கையில் நடைபெறுகின்றன.

இந்த முடிவுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் செல்வாக்கு மிக முக்கிய பங்கு வகிப்பது தெளிவானது.






கலப்பு முறையில் நடத்துவதாக இருந்தால் போட்டிகளை டுபாய்க்கு கொண்டு செல்ல பாகிஸ்தான் பரிந்துரைத்தபோதும் ஆசிய கிரிக்கெட் கௌன்சில் சம்மதிக்கவில்லை. செப்டெம்பரில் டுபாயில் அதிக வெப்பமாக இருக்கும் என்பது தான் அதனை மறுப்பதற்கு கூறப்பட்ட பிரதான காரணம்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் செயலாளர் ஜெய் ஷா தான், ஆசிய கிரிக்கெட் கௌன்ஸின் தலைவராகவும் இருக்கிறார் என்ற பின்னணியில் பெரும் இழுபறிக்குப் பின்னர் தான் போட்டிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன.

என்றாலும் இலங்கையில் மழை பெய்வதை பார்த்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏமாற்றத்தை வெளியிட்டதோடு, போட்டிகளின் இடங்களை மாற்றவும், ஏன் போட்டிகளை இலங்கையில் இருந்து வெளியே கொண்டு செல்லவும் கடந்த சில நாட்களாக முயன்றது.

இலங்கையில் வடகிழக்கு பருவமழை பொதுவாக ஒக்டோபர் மாதத்திலேயே உருவாகும் என்றபோதும் அதனை ஒட்டிய செப்டெம்பர் மாதம் என்பது உண்மையில் நிச்சயமற்ற காலப்பகுதி தான்.




பொதுவாக ஒகஸ்ட், செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்கள் என்பது மழை எப்போது பெய்யும், எப்போது நிற்கும் என்று தெரியாத காலம்.

என்றாலும் அண்மைய ஆண்டுகளில் செப்டெம்பர் மாதங்களில் ஆர். பிரேமதாச அரங்கில் நடைபெற்ற ஆட்டங்கள் முழுமை பெற்றிருக்கின்றமை ஆறுதல் செய்தி. அதாவது 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்து டி20 சர்வதேச போட்டிகள் மற்றும் நான்கு ஒருநாள் சர்வதேச போட்டிகள் இடம்பெற்றிருக்கின்றன. இதில் இரண்டு போட்டிகள் மழையால் ஓவர்கள் குறைக்கப்பட்டபோதும் அனைத்து போட்டிகளும் முழுமையாக நடைபெற்றிருக்கின்றன.

காலநிலையை பொறுத்தவரை இப்படியான புள்ளிவிபரங்கள் என்பது பொத்தாம் பொதுவானது. கடந்த எட்டு ஆண்டுகளில் எத்தனை செப்டெம்பர் மாதங்களில் கிரிக்கெட் போட்டிகள் கொழும்பில் நடைபெற்றிருக்கின்றன? என்று கேள்வி எழுப்பினால் புள்ளிவிபரம் பொய்த்துவிடும்.

2002 செப்டெம்பர் மாதம் இலங்கையில் நடந்த சம்பியன்ஸ் கிண்ணப் போட்டி நல்ல உதாரணம். ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டி இரண்டு நாட்கள் நடத்தப்பட்டன. என்றாலும் இரண்டு நாட்களும் மழை குறுக்கிட்டதால் கிண்ணத்தை இரு அணிகளும் பகிர்ந்துகொள்ள வேண்டி ஏற்பட்டது.

2012 செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர்மாதத்தில்இலங்கையில்டி20 உலகக் கிண்ணம் நடைபெற்றபோது கூட சில போட்டிகளுக்கு மழை தடங்கலாக இருந்தது. என்றாலும் கூறுகிய கால போட்டி என்பதால் ஆட்டத்தை அது பெரிதாகப் பாதிக்கவில்லை.

எனவே செப்டெம்பர் மாதத்தில் கொழும்பில் போட்டிகளை நடத்துவது என்பது மழையால் இடையூறு ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம் இருப்பதாக அர்த்தம். கண்டி பல்லேகலவிலும் இதே நிலைமை தான். மாற்றாக தம்புள்ளை மற்றும் ஹம்பாந்தோட்டை இருக்கின்றன, ஆனால் அதிலும் எத்தனையோ நடைமுறை சிக்கல்கள்.

உண்மையில் சுப்பர் போர் போட்டிகளை கொழும்புக்கு வெளியில் நடத்துவதற்கு கடந்த சில நாட்கள் தீவிர பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. ஒரு கட்டத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும் ஆசிய கிரிக்கெட் கௌன்சிலுக்கும் போட்டியை ஹம்பாந்தோட்டைக்கு மாற்றுவதற்கு இணக்கமும் எட்டப்பட்டது. என்றாலும் கடைசி நேரத்தில் ஆசிய கிரிக்கெட் கௌன்சில் தனது முடிவை மாற்றிக் கொண்டது பாகிஸ்தானுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் கடந்த திங்கட்கிழமை (04) வழங்கிய முன்னறிவித்தலில் அடுத்த பத்து நாட்களுக்கு கொழும்பில் மழை பெய்வதாக கூறி இருந்தது. திங்கட்கிழமை மாலையாகும்போது போட்டியை ஹம்பாந்தோட்டைக்கு மாற்றுவது கிட்டத்தட்ட நிச்சயமாகி இருந்தது.

என்றாலும் அடுத்த நாள் நண்பகல் தாண்டும்போது ஆசிய கிரிக்கெட் கௌன்சிலின் நிலைப்பாட்டில் திடீர் மாற்றம் ஏற்பட்டது. உறுப்பு நாடுகளுக்கு அது அனுப்பிய மின்னஞ்சலில் போட்டிகள் திட்டமிட்டபடி கொழும்பிலேயே நடைபெறும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்த முடிவு பாகிஸ்தானுக்கு தலைகால் புரியவில்லை. முடிவு எடுக்கப்படும் முன் அது பற்றி போட்டியை நடத்தும் நாடு என்ற வாகையில் பாகிஸ்தானுடன் ஆலோசிக்கப்படவில்லை.

முடிவை எதிர்த்து ஜெய் ஷாவுக்கு கடிதம் அனுப்பிய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, ஆசிய கிரிக்கெட் கௌன்சிலின் அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தது. என்றாலும் இது தொடர்பில் பாகிஸ்தான் எதிர்ப்புக் காட்ட முடியுமான வரம்பு என்பது மிக மட்டுப்படுத்தப்பட்டது. போட்டிகளில் இருந்து வெளியேறுவது போன்ற தீவிர முடிவுகளுக்கு செல்ல முடியது. எனவே, அது இந்த முடிவையும் ஏற்றது எதிர்பார்த்ததே.

உண்மையில் ஹம்பாந்தோட்டை மற்றும் தம்புள்ளையில் போட்டியை நடத்துவது இந்தக் காலப்பகுதியில் பொருத்தமானது. அதிலும் தம்புள்ளை உலர் வலயத்தில் இருப்பதால் மழை பற்றி பயப்படத் தேவையில்லை. ஆனால் தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் மின் விளக்கு என்பது இரவில் விளையாடுவதற்கு போதுமான வெளிச்சம் தருவதாக இல்லை. இங்கு பகலிரவு போட்டி ஒன்று நடத்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகிறது. மின் விளக்குகளை மேம்படுத்தும் பணிகளை இலங்கை கிரிக்கெட் சபை தற்போது செய்து வருகிறது.

மற்றது உலர் வலயத்திற்கு அருகில் இருக்கும் ஹம்பாந்தோட்டை. இங்கே காட்டுப் பகுதி ஒன்றை அண்டிய சூரியவெவ சிறு நகரிலேயே மஹிந்த ராஜபக்ஷ கிரிக்கெட் மைதானம் இருக்கிறது. மைதானத்திற்கு அருகில் நட்சத்திர ஹோட்டல் வசதிகள் இல்லை. அதற்கு கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் வரை பயணிக்க வேண்டி இருக்கும்.



எனவே திடுதிடுப்பென்று போட்டியை ஹம்பாந்தோட்டைக்கு மாற்றுவது என்பது சாத்தியம் குறைவு. முதலில் கிரிக்கெட் வீரர்கள், அதிகாரிகள், வர்ணனையாளர்கள் மற்றும் ஒளிபரப்பு பணியாளர்களுக்கு தங்குவதற்கு வசதி இருக்க வேண்டும். முன்பதிவு இன்றி ஹோட்டல்களில் இட வசதி தேடுவது கடினமானது. அதேபோன்று ஒளிபரப்பாளர்கள் அதற்கான சாதனங்களை எடுத்துச் செல்வது, வைத்திருப்பது என்று எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன.

மற்ற மிகப்பெரிய பிரச்சியை ரசிகர்கள். வெளிநாட்டில் இருந்து போட்டியை பார்க்க வந்த ரசிகர்கள். ஏற்கனவே கொழும்பில் போட்டியை பார்ப்பதற்கு ரசிகர்கள் தயாராகிவிட்டார்கள். இந்த நிலையில் அதனை வேறு இடத்திற்கு மாற்றுவது என்பது அவர்களுக்கும் சிரமத்தை ஏற்படுத்தும்.

எனவே, ஆசிய கிரிக்கெட் கௌன்ஸில் எடுத்த முடிவின் நடைமுறை சாத்தியம் புரிந்துகொள்ளக் கூடியதாகவே இருக்கிறது.

என்றாலும் கிரிக்கெட் போட்டிகள் என்று வரும்போது மழை என்பது அதிகம் தாக்கம் செலுத்தும் ஒன்று. அடிப்படையில் மழை பெய்யும் போது கிரிக்கெட் ஆட முடியாது. முதலில் வீரர்களின் பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தலானது. மைதானம் ஈரலிப்பாவதால் களத்தடுப்பில் ஈடுபடும் வீரர்கள் மற்றும் துடுப்பெடுத்தாடும் வீரர்கள் ஓடும்போது வழுக்கி விழும் ஆபத்து இருக்கிறது. மற்றது மழையால் ஆடுகளம் சேதமடைவது முழு போட்டி முடிவிலும் பாதிப்பு செலுத்தும் ஒன்று.

ஹம்பாந்தோட்டை மற்றும் தம்புள்ளை போன்ற பகுதிகளில் சர்வதேச மைதானங்கள் கட்டப்பட்டது இந்தப் பிரச்சினைக்கு தீர்வாகவே பார்க்கப்பட்டது. என்றாலும் இந்த மைதானங்கள் அதன் முழுப் பயனையும் பெறாமல் இருப்பது யாருடைய தவறு என்று புரியவில்லை.

ஆரம்பத்தில் இருந்தே இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலான அரசியல் குழப்பம் இம்முறை ஆசிய கிண்ணத்தை முழுமையாக குழப்பிவிட்டது. இந்தியா பாகிஸ்தான் செல்ல மறுத்தது தொடக்கம் இப்போது மழை குறுக்கிடும் வரை விடாப்பிடி முடிவுகளும், அவசரத் தீர்வுகளும் போட்டியை பாதித்திருக்கிறது.

பாகிஸ்தானில் நிலவும் பாதுகாப்பு மற்றும் பொருளாதார பிரச்சினைகளே கலப்பு முறையில் போட்டியை நடத்துவதற்கு காரணம் என்று ஜெய்ஷா குறிப்பிடுகிறார். என்றாலும் இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் 2019 தொடக்கம் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் ஆடுகின்றன.

அதேபோன்று இம்முறை ஆசிய கிண்ண தொடரின் நான்கு போட்டிகள் பாகிஸ்தானில் நடந்தபோது எந்த பிரச்சினையும் ஏற்பட்டதாக தெரியவில்லை. அது பற்றி அங்கு சென்ற அணிகளும் எதுவும் கூறவில்லை.

ஆசிய கிண்ண தொடரில் கலந்திருக்கும் அரசியல் இப்போது போட்டி முடிவுகளையும் பாதிக்கும் அளவுக்கு மாறிவிட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# காலம் தப்பிக் கூவும் குயில்



நான் எங்கேயிருக்கின்றேன்?

என் கண்களுக்குள் கருவிழிகள் "உருளுவதை உணர்கிறேன். ஆயினும் இமைகளைத் திறக்க முடியவில்லை. விழிக்கோடியின் இருபுறமிருந்து சூடாக ஏதோ வழிகிறது. கண்ணீரா? தொட்டுப் பார்க்க நினைத்தாலும் கைகள் இசைந்து கொடுக்கவில்லை. உடல் இந்தக் கனம் கனக்கிறதே. என்னதான் நடந்திருக்கிறது எனக்கு? என்னைச் சுற்றிலும் ஊசலாட்டங்கள். யார் யாரோ குசுகுசுப்பதைப் போல... 'கீங்.. கீங்..' என்று ஏதேதோ இயந்திரங்கள் சிணுங்குவதைப் போல... தண்ணீர் சொட்டுவது போல... என்னென்னவோ... சன்னமான அரவங்கள்... எல்லாம் உணர்கிறேன். ஆனால் உணர்வற்றுக் கிடக்கிறேன்.

என்னருகேயிருந்து சிலர் பேசுகின்றார்கள். யாருடையதோ ஒரு கை என் இடது கையில் நாடியைப் பற்றுகிறது. என்னிமைகள் திறவாமல் துடிப்பதை, கண்கள் கண்ணீர் வடிப்பதைக் கண்டு விட்டார்களோ?

'லெடாட்ட சிஹிய எவில்லா வாகே....'

(நோயாளிக்கு நினைவு திரும்பிவிட்டது போல...)

என் கண்ணிமைகளை விரல்களால் விரித்து வெளிச்சம் பாய்ச்சிப் பார்க்கிறார்கள். அவர்கள் கைவிட, அது மீண்டும் மூடிக்கொள்கிறது. ஏற்கனவே பற்றிய இடது கையை ஏதோ கொண்டு அழுத்துகிறார்கள். அது 'டிக் டிக்' சத்தத்தை அதிகரிக்கின்றது. என்னைப்பற்றி என்னென்னவோ சொல்வது விளங்குகின்றது. ஆனால் எதுவும் விளக்கும்படியாக இல்லை.

மெல்ல... மெல்ல... அட... இதோ என் கண்கள் இலேசாகத் திறந்து கொள்கின்றனவே. சிரமப்பட்டுப் பார்க்க முற்படுகிறேன். எனது இருப்பைச் சுற்றி யாரோவெல்லாம் நிற்கின்றார்கள். இது என்ன கட்டிலா? சின்னச்சின்னப் பெட்டிகளுடன் வயர்கள் குழாய்கள் என்று ஏகப்பட்ட விவகாரங்களுக்கிடையில் நான் சிக்கிக் கொண்டிருக்கின்றேனா? என் பார்வை இடைக்கிடை மங்குகிறது. ஆயினும் என்னைச் சூழ்ந்திருப்போரை நான் ஊடுருவுகின்றேன். வெள்ளை, வெளிர்நீல ஆடைகளில் அழகிய தேவதைகள் கண்ணுக்குள் உலவுகின்றார்கள். மற்றும் சிலர் என்னைச் சூழ விருந்து உசாவுகின்றார்கள்.

எனது கமராக் கண்களுக்குள் ஓர் உருவம் சிக்குகின்றது. 'யார்... யாரிது?.. எங்கோ கண்டு பரிச்சயமான முகமாக இருக்கிறதே... நீ... நீங்...' உதடுகளை அசைக்க முயன்று தோற்றுப் போகிறேன். மீண்டும் மீண்டும் அந்த முகத்தையே வைத்தகண் வாங்காது நோக்க, இளமைக்கால என் சாயலில் என்னெதிரே நானே இருப்பது போன்று புதுமை மேலிடுகிறது.

'ஆன்ரீ...'

என்ன ஆச்சரியம்? அந்த உருவம் செல்லமாக என்னை விளித்து என் கன்னத்தின் மீது மெதுவாகத் தட்டுகிறது. 'கண்ண நல்லாத் தொறங்க பாப்பம்' கழுத்தில் தொங்கிய ஸ்டெதஸ்கோப்பை எடுத்துக் காதுகளில் செருகி என்னைப் பரிசோதித்துக் கொண்டே 'யூ ஆர் ஓல்ரைட் நவ்' என்றது. நானும் பேச முயற்சிக்கிறேன். தோற்றுப் போகிறேன்.

இரவுகள் பகல்கள் என்று எத்தனை கடந்தனவோ? என்னைக் கிடத்தியிருந்த கட்டிலும் இடமும் மாற்றப்பட்டிருந்தன. என்னில் மாட்டப்பட்டிருந்த தளைகளிலிருந்தெல்லாம் விடுதலையாகியிருக்கின்றேன். சிறிய யானையின் தும்பிக்கை போன்று மூக்கில் மட்டும் தொங்கும் ஒரு குழாய் சற்று அசௌகரியத்தைத் தருகின்றது. இப்போதெல்லாம் என்னால் உடலை அங்குமிங்கும் அசைக்க முடிகிறது. ஆனால் என் வலது பக்க அவயவங்கள் இரண்டும் தூக்கவே முடியாமல் இரும்பாய்க் கனக்கிறது. நாவிலிருந்து வரும் பேச்சும் குளறலாக வெளிப்படுகிறது.

அதோ... அதோ... என் கண்களுக்குள் ஆழப்பதிந்த டாக்டர் மங்கை என்னை நோக்கி வருகிறாள்.. வந்துவிட்டாள்.!

'ஹவ் ஆர் யூ ஆன்ரீ'

என் இடது கையால் அவளது விரலொன்றைப் பற்றிக் கொள்கிறேன். சந்தோஷத்தில் பேச முயற்சிக்கிறேன். மெல்ல வெற்றி காண்கிறேன்.

'நீ... நீங்... நீங்...' சைகையால் யாரென்று கேட்கிறேன்.

மெலிந்த உடல்வாகு, வசீகரமுகம் ஒரு பக்கக் கன்னத்தில் குழிவிழச் சிரிக்கும் போது அழகாக இருக்கின்றது.

'நானா? நான் தான் ஒங்களப் பாக்குற டொக்டர்...'

எனக்குச் சலிப்பாகிவிட்டது. இந்தப்பதிலை நான் எதிர்பார்க்கவில்லையே... நான் விடவில்லை.

'நீங்... ஒங்கட... வாப்பு... வாப்பு...'

இதழோரம் முறுவலித்த புன்னகை மாறாமல் ஸ்டெதஸ்கோப்பினால் பரிசோதித்தபடியே சொல்கிறாள்.

'நான் ஆன்ரி... ஒங்கட ரிலேஷன் தான்... ஒங்கட மச்சானோட டோட்டர்... ரினோஸியா... நினைவிருக்குதா..?'

ஓராயிரம் மின்னல் ஒரேநேரத்தில் பளீரிட்டு உலகையே பிரகாசிக்க வைத்த பிரமை எனக்குள்...

மச்சான் ருஸான்... என் தந்தையின் தங்கை மகன். நான் அந்த மாமியின் அச்சில் வார்த்த சாயல் என்று குடும்பத்தில் பலரும் சொல்வார்கள். ருஸானும் நானும் சிறுபாராயத்திலிருந்தே ஒன்றாகச் சேர்ந்து விளையாடி, சண்டைபிடித்து சமாதானமாகி... கள்ளங்கபடமின்றி பேசிக்களித்தவர்கள். வளர்ந்து பருவப்பட்ட பின்பும் கூட எங்கள் பால்யசினேகம் மாறாமலேயிருந்தது. வீட்டிலிருந்து ஒன்றாகவே பள்ளிப்பாடங்கள் செய்வோம். படிப்பு எனக்கு நன்றாக இஷ்டப்பட்டது. ஆனால் ருஸானின் மூளைக்கேற படிப்பு கஷ்டப்பட்டது. காலம் எம்மை முன்னோக்கித் தள்ள நாங்களும் வாழ்க்கையில் முன்னேறினோம். மச்சான் சாதாரண தரப் பரீட்சையோடு கல்விக்கு முழுக்குப் போட்டான். நானோ மிகச்சிறந்த பெறுபேறுகளை எல்லாப் பரீட்சைகளிலும் பெற்றுக் கொண்டே பல்கலைக்கழகம் நுழைந்து வணிகத்துறையில் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினேன். என் தகைமைக்கேற்றாற்போல அரசதுறையில் முகாமைத்துவப் பணிப்பாளராகப் பணியாற்ற வாய்ப்பும் அமைந்தது.

குடும்பத்தில் முதன்முதலாக பல்கலைக்கழகம் சென்று பட்டத்துடன் வெளியேறியவள் என்ற பெருமிதத்தோடு, 'நன்றாகப் படித்தவள்' என்ற கர்வமும் அறிந்தோ அறியாமலோ என் அகத்தில் அரியாசனம் போட்டு அமர்ந்து விட்டது. எனது பெற்றோருக்கு நான் ஒரே பிள்ளை. அவர்களது கவலை அவர்களுக்கு. எனக்குத் திருமணம் பேசத் தொடங்கினார்கள். வந்த வரன்களெல்லாம் என் தகுதிக்குச் சரியென்று படவில்லை. பலகாலமாக அவர்களது தேடல்கள் தொடர்ந்ததனால் அவர்கள் களைத்துப் போனார்கள். இப்படியொரு சந்தர்ப்பத்தில் தான் என் மாமி, 'மதினீ...' என்றழைத்தபடி வீட்டுப் படியேறினார். உற்ற உறவு என்பதனால் மிக்க மகிழ்ச்சியோடு அளவளாவினோம். நான் ருஸான் பற்றி விசாரித்தேன். அவர் ஆயிரம் விளக்குப் பிரகாசத்துடன் மகனின் புகழ்பாடினார்.

'ருஸானுக்கென்ன மகள்... ராஜாவாட்டம் வாழுறான். சின்னதாயிருந்த அவர்ட சில்லறக்கட இப்ப பெரிய புட் சென்டரா மாறீக்கிது. நல்ல வருமானம். தங்கச்சிமார் ரெண்டு பேரயும் நல்ல எடத்துல முடிச்சுக் குடுத்துட்டு ஊடுவாசல், வாகன வசதியோட நல்லாயீக்கிறான். அவனுக்கு ஒரு கொறச்சலுமில்ல..'

'அப்பிடியா மாமி... ருஸானக் கண்டும் மிச்ச நாள் தான்.' என்றேன் நான். தொடர்ந்த உரையாடல் மெல்ல மெல்ல என் திருமணம் பக்கம் சார்ந்து வந்தது.

'ஏன் மதினி.. மகளுக்கு விஷயம் ஒண்டும் பாக்கலயா?'

'பாக்கிற தான் மதினீ...' உம்மா உப்புச்சப்பின்றி பதிலளித்தார்.

'அப்ப... எங்கட ருஸானுக்குப் பேசி முடிச்சுடுவோமா..?'

உம்மாவின் முக பாவனையில் அச்சம் கலந்தது.

'மகளோட பேசித்தான் முடிவு சொல்லேலும்...'

'எங்கட புள்ள தானே... நானே பேசிடுறேன்.' 'ஏம் மக... நீங்க விருப்பம் தானே. ருஸானும் நீங்களும் சின்னப்புள்ள காலத்துலேந்து பழகினவங்க தானே.

நான் வாயைத் திறந்தேன்.

'அந்தப் பழக்கம் வேற மாமி. அதுக்காக கலியாணமெல்லாம் பண்ணிக்கேலுமா? அது போக... ருஸான் என்னத்த படிச்சீக்கின்னு எனக்கு முடிச்சு வக்கப் பாக்குறீங்க..? என்னதான் வாக்கு வசதியிருந்தாலும் படிப்புல கொஞ்சம் கூடக் கொறய என்றிருந்தா வாழ்க்கையில பிரச்சினை தான் மிஞ்சுற. அதனால எனக்குப் பாக்குற மாப்புள... படிப்புல ஒசத்தியானவரா தான் இருக்கோணும். உம்மா... ஒங்களுக்கும் தான் சொல்றன். சும்மா இந்த சில்லறயாவாரி, பொடவக் கடக்காரன் என்டெல்லாம் பேசிவாறது எனக்கு சுத்தமா புடிக்கல.'

உம்மாவின் முகம் வெளிறிப்போனது. தலையைக் குனிந்துகொண்டார்.

மாமியின் மூக்குத்தி முகம் செக்கச் சிவந்தது. அதில் கோபம் கொந்தளித்தது.

'உள்ளதொரு புள்ளன்டு அளவுக்கதிமா செல்லம் குடுத்து வளத்தா இப்படித்தான். எங்கட நானாவ சொல்லோணும். பொம்புளப் புள்ளக்கி சுதந்திரம் குடுத்து குட்டிச் சுவராக்கிட்டார். எங்கட குடும்பங்கள்ல பொம்புலப் புள்ளயள யாரும் பெரிய படிப்பு படிக்க உடுறல்ல. இந்த கம்பஸ் பம்பஸ் என்று படிச்சுட்டு வந்த கொழுப்பு தான் ஒங்கட மக இப்பிடி பேசுறா... நல்லாயில்ல.. எப்பிடியோ போங்க... எம் மவனுக்கு பொண்ணுக்குப் பஞ்சமில்ல..'

பொரிந்து தள்ளிவிட்டு வெடுக்கென எழுந்து போய்விட்டார். வீட்டில் மயான அமைதி. உம்மாவின் கேவல் சத்தம் மட்டும் கேட்டது. எனக்கும் உள்ளம் குடைந்தது. 'நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாதோ..? நான் அப்படிப் பேசாமல் மௌனியாக இருந்திருந்தால் என் நெடுநாளைய இலட்சியம் என்னாவது? என் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் உரிமை எனக்கில்லையா? உயர்படிப்பு படித்த ஒரு பெண். ஒரு படித்தவனையே வாழ்க்கைத் துணையாக வரித்துக் கொள்ள விரும்புவதில் என்ன தப்பு இருக்கிறது?'

என் சுயவிசாரணை எனக்குச் சார்பாகவே தீர்வைத் தந்தது.

சொன்னாற் போலவே ருஸானுக்கு பணக்கார இடத்தில் ஊரே பேசுமளவுக்குத் திருமணம் செய்து வைத்தார் மாமி. ரினோஸியாவும் பிறந்து வளர்ந்து பெரியவளாகி விட்டாள். எனக்கான வரன் இன்னும் கிட்டவில்லை. எனது பெற்றோரும் சலிப்படைந்து துயரமே தமக்குச் சொந்தம் என்று காலத்தைக் கடத்தினார்கள். என் தலைக்கனமும் பிடிவாதமும் அவர்களைச் சிறுகச் சிறுகச் சாகடித்ததோ?, இருவருமே ஆறுமாத இடைவெளிக்குள் என்னை வேண்டாமென்று கண்களை மூடிக்கொண்டார்கள்.

நாற்பது வயதும் தாண்டி முதிர்கன்னியாய் என் வாழ்க்கை தொடர்ந்த போது சற்றுக் கடினமானதாகத் தானிருந்தது. 'படித்தவள் என்ற ஆவணத்தினால் பெற்றோரைக் கொலை செய்தவள்' என்ற பார்வை என்னைப் பார்க்கும் எல்லோர் கண்களிலும் தெரிவதாக எனக்குத் தெரிந்தது. இந்தப் பாதகமான பார்வையிலிருந்து எனக்கு விடுதலை வேண்டும். எனக்கிப்போது மனஅமைதி மிகத் தேவையாக இருந்தது. இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தேன். எனக்கான வீடு காணியை விற்று, புதிய பணிமனை கிடைத்த, எனக்கு யாரும் சம்பந்தமில்லாத வேற்றூரில் சின்னதாக ஒரு வீடு வாங்கிக் குடியமர்ந்தேன். எனக்கு ஒத்தாசைக்காக ஆள் தேடிய போது... ஆபிதா கிடைத்தாள்.

ஆபிதாவைக் கண்டதும் எனக்கும் பிடித்துப்போனது. கணவனால் கைவிடப்பட்ட நிலையில் இரு பிள்ளைகளுடன் வாழ்வாதாரத்துக்காக அவதிப்பட்ட நிலையில், என் மிச்சமிச்சம் மீதியுள்ள காலத்தை அர்த்தமுள்ளதாக்க இவளுக்காகவும் இரு பிள்ளைகளுக்காகவும் அர்ப்பணிக்கலாம் என்று தோன்றியது. பிள்ளைகளின் பிற செலவுகளுக்காக ஆபிதாவுக்கு படியளந்தாலும், அவளை என் சகோதரியாகவே உள்ளத்தில் வரித்துக் கொண்டேன். 'பெரியும்மா.. பெரியும்மா..' என்று பிள்ளைகளும், 'தாத்தா' என்று ஆபிதாவும் என்னுடன் தங்கியிருந்து என்மீது அன்பைப் பொழிந்தார்கள்.

எனக்கு வயதாகிவிட்டது. கூடவே சிற்சில உபாதைகளும் என்னைத் தழுவிக் கொண்டிருந்தன. பணியிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில் ஆபிதா என்னை நன்றாகவே கவனித்துக் கொண்டாள். கொஞ்ச நாட்களாகவே என் உடம்புக்குள் ஏதோவொரு அசதி. விபரிக்க முடியாத படி என் மனவெளிக்குள் ஒரு வெறுமை ஊஞ்சல் கட்டி ஆடியது. என் அழகு, என் படிப்பு, என் செல்வம்.....? 'என்ன இது..? இப்படியொரு தலைவலி என் வாழ்நாளிலேயே வந்ததில்லையே..' பின் மண்டைக்குள்ளால் நரம்பு 'விண்விண்' என்றிருந்தது. ஆபிதா என்னென்னவோ வைத்தியமெல்லாம் செய்து பார்த்தாள். தலை முழுக்க தைலம் தேய்த்து பிடித்தும் விட்டாள். ஆனால்... ஆனால்... எப்போதோ மண்டைக்குள் புகுந்து ஒளிந்து கொண்டிருந்த என் வாழ்க்கை பற்றிய அழுத்தம்... எனையறியாமலேயே விஸ்வரூபம் எடுத்து தன் கைவினையைக் காட்டிவிட்டிருக்க வேண்டும். கையும் காலும் இழுத்த நிலையில் சரியப்போன என்னை ஆபிதா தாங்கியது மட்டும் நினைவிருக்கிறது.

பக்கத்தில் டாக்டர் ரினோஸியா வந்தது கூடத் தெரியவில்லை.

'ஆன்ரீ...' என்றழைத்த அவளை ஏறிட்டுப் பார்க்கிறேன்.

அன்று ருஸானை நான் மணமுடித்திருந்தால்... இந்தப் பொன் மகள் என் வயிற்றிலல்லவா பிறந்திருப்பாள்?

'ஆன்ரீ... ஒங்கள டிஸ்டார்ஜ் பண்ணிட்டாங்க. வாப்பா வந்து வெயிட் பண்றாங்க. ஒங்கள எங்கட ஊட்டுக்கு கூட்டிப் போவ...'

நான் ரினோஸியாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

**மஸீதா புன்னியாமீன்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 86



திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..........................................
..........................................
..........................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 86
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 86

### இடமிருந்து வலம்

1. ஒரு கருமத்தை செய்யும்படி விடுக்கப்படும் கட்டளை
4. திறப்பு
6. பாதத்தின் பின்பகுதி
7. நிசப்தம்
8. குரங்கு ( குழம்பியுள்ளது)
10. தொடக்கம்
11. வகைப்படுத்தப்பட்ட பகுப்பு அல்லது பிரிவு
12. இரத்தம்
13. பாம்பை மயக்கும் இசை
16. விலங்குகளின் பின்பக்கத்தில் காணப்படும் உறுப்பு
17. ஒன்றுக்கு மேற்பட்டவை
18. துணிவுமிகு அறைகூவல்
20. நெல் பயிரிடப்படும் இடம் (திரும்பியுள்ளது)
21. விருந்தினர் திரும்பி விட்டார்
22. மனதை வருந்தச் செய்யும் உணர்வு (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. ஒரு தானியம்
2. ஒரு பணிக்குப் பொருத்தமானவர் என்பதற்கான முன்னனுபவம் அல்லது அறிவு
3. மன்மதன் மனைவி
4. இதுவும் ஒருவகைத் தானியம்
5. முன்கூட்டியே வகுக்கப்பட்ட இறை நியதி
7. எதிர்பாராத நேரத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை
9. இருப்பது வெளியே தெரியாத நிலை
10. யாகம் செய்யும்போது தீயில் இடப்படும் பொருள் (குழம்பியுள்ளது)
12. பனை யோலைப் பை. இப்போது இது பாவனையில் இல்லை.
14. ஆண், பெண் பிள்ளைகள் இணைந்து படிக்கும் பாடசாலையை இப்படிச் சொல்வர்.
15. உடற்சோர்வு
16. ஓர் இனிப்புப் பண்டம் (தலைகீழ்)
17. அச்சம்
19. நீதிமன்றில் வழக்குத் தொடுப்பவர்.
20. ஓர் உள்ளுறுப்பு (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 85

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. குதூகலம்
5. ஆவி
7. சண்டை
8. விடுதலை
10. தகனம்
11. காரம்
14. கும்மி
15. சிவப்பு
17. கல்வி
18. வேட்கை
20. மீன்
21. புகார்
23. புயல்
24. வீறு

**மேலிருந்து கீழ்**

1. குசலம்
2. தூண்
3. கடை
4. விதம்
5. ஆதனம்
6. விலை
9. கடுகு
12. ரசிகன்
13. காவல்
16. வியப்பு
18. வேர்
19. கைமாறு
20. மீசை
22. கால்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 85

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **ஆர். இஷால் ஹன்னா**<br>இல 117, அண்ணல் வீதி,<br>மாஞ்சோலைச் சேனை,<br>கிண்ணியா 3 | **எஸ் சிந்துஜா,**<br>36 1/1<br>கொட்டாஞ்சேனை வீதி,<br>கொழும்பு 13 | **எம்.ஏ. நுஹா,**<br>39/4 ஓவத்தை,<br>ஹிங்குல |

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.எம்.எம் நிஸாம்** காலி
2. **சோபியா உசைர்** கெகுனுகொல்ல
3. **எஸ். கிதுர்ஷா,** தலவாக்கலை
4. **எம். எம். ஷசாத்** மருதமுனை
5. **ஏ.எச்.எம். அத்தாஸ்** வெலிப்பண்ணை
6. **ஏ.எல்.ஏ. அஸீஸ்** தெஹிவளை
7. **த. நாகையா** கல்முனை
8. **கே.எம்.எம் பாரூக்** மாத்தளை
9. **கே. தர்மரட்னம்** கரடியனாறு
10. **எஸ். சிவஞானம்** மட்டக்களப்பு

# Edge Nutritionஆல் MUSCLE EDGE மீள அறிமுகம்




உயர் தரம் வாய்ந்த Whey Protein தயாரிப்பை Edge Nutrition அண்மையில் சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. அனைவராலும் இலகுவாக கொள்வனவு செய்யக்கூடிய வகையில் இந்த தயாரிப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

Edge Nutrition முகாமைத்துவ பணிப்பாளரும் Power World Gyms ஸ்தாபகருமான தலவு அலைலாமா கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையர்களின் உணவு வேளைகளில் போதியளவு புரதம் இன்மை என்பது போஷாக்கு பற்றாக்குறைக்கான பிரதான காரணியாக அமைந்துள்ளதுடன், எமது சிறுவர்களின் உடல் வளர்ச்சிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதுடன், அவர்களின் ஆற்றலை மேம்படுத்திக் கொள்ள முடியாத தன்மையை தோற்றுவித்துள்ளதுடன், பல தசாப்த காலமாக விளையாட்டு திறமையை கட்டியெழுப்பிக் கொள்ள முடியாத நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனால் அவர்களில் முழுமையான திறனை வெளிப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது." என்றார்.

Whey Protein என்பது புரதத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த மூலமாகும். அதியுயர் அகத்துறிஞ்சல் வீதத்தை கொண்டுள்ளதுடன், MUSCLE EDGE இன் பிரதான சேர்மானமாகவும் உள்ளது. ஒரு தடவை அருந்துவதனூடாக 70 சதவீதம் தசை மாற்றல் திறனை கொண்டிருக்கும்.

MUSCLE EDGE இல் காணப்படும் புரதத்தினூடாக, தசை வளர்ச்சிக்கு அவசியமான போஷாக்குகள் வழங்கப்படுவதுடன், நோய் எதிர்ப்பு கட்டமைப்பை கட்டியெழுப்ப பெரிதும் உதவுகின்றது.

# பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட சேகரிப்புகளை ஒன்லைனில் வெளியிட்டுள்ள ராஜா ஜுவலர்ஸ்




இலங்கையின் தங்கநகை உலகின் முடிசூடா மன்னனாக விளங்கும் ராஜா ஜுவலர்ஸ், இளைஞர்களின் இதயங்களைக் கவரும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட, நேர்த்தியான தயாரிப்புகளுக்கான ஒன்லைன் பிரிவை அண்மையில் வெளியிட்டது.

இதன் மூலம், தொழில்துறையில் 95 ஆண்டுகளுக்கும் மேலான நீடித்த பாரம்பரியத்துடனும், பெருமையுடனும் நவீன தலைமுறையின் மாறும் இரசனைகளை வெளிப்படுத்தும், கவர்ச்சியான சேகரிப்பை ராஜா ஜுவலர்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த ஒன்லைன் சேகரிப்பின் வெளியீடானது, இளைஞர்களின் அபிலாஷைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதோடு. அவர்களை டிஜிட்டல் வெளியில் இருப்பதற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், நாகரீகமான நகைகள் மற்றும் சமீபத்திய போக்குடனான வடிவமைப்புகள் மீதான ஆர்வத்தையும் அவர்களுக்கு ஏற்படுத்துகிறது.

ராஜா ஜுவலர்ஸ் காட்சியறைகளில் கிடைக்கக்கூடிய தெரிவு செய்யப்பட்ட வடிவமைப்புகளில், முதன்மையாக ஒன்லைனில் கிடைக்கும் இந்த தயாரிப்புகளானவை, சர்வதேச அளவில் ஈர்க்கப்பட்ட, சர்வதேச பூர்த்தியில் அமைந்த நவநாகரீக நகைகளை காட்சிப்படுத்துகிறது.

தரக் கட்டுப்பாடு, கைவினைத்திறன் மற்றும் அதிநவீன தொழில்நுட்பம் ஆகியவற்றின் மூலமான ராஜா ஜுவலர்ஸின் சுமார் நூற்றாண்டு கால அர்ப்பணிப்பானது, அதன் நம்பகத்தன்மையை கோடிட்டுக் காட்டுகிறது.

# உரிமைப் பங்கு வழங்கல்: காலவரையறையை அறிவித்துள்ள அமானா வங்கி



அமானா வங்கி தனது எதிர்வரும் உரிமைப் பங்கு வழங்கல் தொடர்பான திகதிகளை கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு அறிவித்துள்ளது. அதன் பிரகாரம், 2023 செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள விசேட பொதுக்கூட்டத்தின் போது 1:1 விகிதாசார உரிமைப் பங்கு வழங்கல் தொடர்பில் பங்குதாரர்களின் ஏற்பளிப்பை பெற்றுக் கொள்வதற்கு வங்கி எதிர்பார்த்துள்ளது. செப்டெம்பர் 22ஆம் திகதிக்கு XR திகதியானது நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், பதிவு செய்தல் மற்றும் தற்காலிக ஒதுக்கீடுக்கான திகதியாக செப்டெம்பர் 26ஆம் திகதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்காலிக ஒதுக்கீடு பற்றிய கடிதங்களை ஒக்டோபர் 5ஆம் திகதியளவில் அனுப்பி வைப்பதற்கு வங்கி எதிர்பார்த்துள்ளது. உரிமைப் பங்கு வழங்கல் வியாபாரம் ஒக்டோபர் 11 ஆம் திகதிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், CDS க்கு அதிகாரத்துறப்புக்கான இறுதித் திகதி ஒக்டோபர் 18 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உரிமைப் பங்கு வழங்கலுக்கான ஏற்றுக் கொள்ளல் மற்றும் கொடுப்பனவுகளை ஒக்டோபர் 24 வரை ஏற்றுக் கொள்ளும். இந்த உரிமைப் பங்கு வழங்கலினூடாக ரூ. 6.7 பில்லியனை பங்கு மூலதனமாக திரட்டுவதற்கு அமானா வங்கி எதிர்பார்த்துள்ளது.

வங்கியின் அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக இது அமைந்துள்ளது. பங்கொன்றுக்கு ரூ. 2.30 வீதம், மொத்தமாக 2,902,267,365 சாதாரண வாக்குரிமை பங்குகளை வங்கி வழங்க எதிர்பார்த்துள்ளது.



CocaColaவின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'The Legend Hariharan – Live In Colombo' பிரமாண்டமான இசை நிகழ்ச்சி இசை ரசிகர்களின் மனதைவிட்டு நீங்காதுள்ளது. உணர்வுகளைத் தூண்டி எழுப்பும் Hariharanஇன் இனிமையான குரல் போலவே உலகப் புகழ்பெற்ற கீபோர்ட் கலைஞர் Stephen Devassy, பின்னணிப் பாடகியும் நடிகையுமான Sivaangi, புகழ்பெற்ற பாடகி Srinisha மற்றும் தென்னிந்திய பிரபல தொலைக்காட்சி தொகுப்பாளரான Ma Ka Pa Anand ஆகியோரின் தனித்துவமான நிகழ்ச்சி நாடு முழுவதிலுமுள்ள ஆயிரக்கணக்கான ரசிகர்களை கவர்ந்திழுத்துள்ளது.

# SpeedStar 2; வேடிக்கையும் வேகமும் கொண்ட மற்றொரு அனுபவம்




Port City Colombo SpeedBay இல் அண்மையில் நடைபெற்ற SpeedStar 2023; இன் இரண்டாவது சுற்றானது மீண்டும் ஒரு முறை வேடிக்கை மற்றும் வேகம் நிறைந்த கார்ட்டிங் அனுபவத்தைப் பார்வையாளர்களுக்கும், பந்தயத்தில் கலந்துகொண்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் வழங்கும் வகையில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது.

SpeedBay Sh Port City Colomboஆல் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் பந்தய நிகழ்வான SpeedBay Sh Port City Colombo, சிலோன் மோட்டார் ஸ்போர்ட்ஸ்கிளப்புடன்இணைந்துநடத்தப்பட்டதுடன் இதன் முதலாவது சுற்றுப் போட்டிகள் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றன. ஒவ்வொரு அமர்விலும் மூன்று வெற்றியாளர்களுடன், SpeedStarதேர்ந்தெடுக்கப்பட்டதுடன், இந்தச் சுற்று பரப்பான போட்டிகள் நிறைந்ததாகக் காணப்பட்டது. டேவிட் பீரிஸ் குழுமத்தின் மோட்டார் விளையாட்டுப் பிரிவான டேவிட் பீரிஸ் ரேசிங் அன்ட் லெஷர் (பிரைவட்) லிமிடட் நிறுவனத்தின் உபநிறுவனமான டேவிட் பீரிஸ் சிட்டி டெவலப்மன்ட் (பிரைவட்) லிமிடட் நிறுவனத்துக்குச் சொந்தமான, அதனால் பராமரிக்கப்படுகின்றன SpeedBay Sh Port City Colombo கார்ட்டிங் தளத்தில் நடத்தப்பட்ட இந்தப் போடிகளைப் பார்வையிட போட்டியில் பங்குபற்றியவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் நிரம்பியிருந்தனர்.

# பயனுள்ள Air Conditioning Tips களை வழங்கும் Samsung பொறியிலாளர்கள்



பருவகாலநிலை மாற்றத்தினால் தூண்டப்படும் உலகளாவிய வெப்ப அலைகள் மிகத் தீவிரமடைந்து வரும் ஓர் சூழ்நிலையில், Samsung Electronics இன் Engineer கள், Samsung இன் பாவனையாளர்கள் தமது Air Conditioning System என்பன இன்னும் அதிக பயன்தரக் கூடிய வகையில் உபயோகிக்க பல பயனுள்ள தீர்வுகளை வழங்குகின்றனர். இந்நடைமுறை நுண்ணறிவு, energy efficiency, Wind –Free cooling மற்றும் Effective dehumidification போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றது.

அதிகரித்து வரும் வெப்ப நிலையை மேற்கொள்ளவும் மற்றும் Energy தொடர்பான செலவீனங்களை நிர்வகிப்பதற்கான ஒரு Powerful Toolkitயே Samsung உருவாக்குகின்றது.

வெப்பநிலையின் உயர்வு காரணமாக ஈரப்பதம் அதிகரிக்கும் போது நாம் அசௌகரியத்தினை இடைவிடாமல் உணர முடியும். இச்சவாலை எதிர்கொள்ள, Samsung Engineer கள் உங்களின் Air Conditioner களின் தன்மைகளை உங்களின் உடனடிச் சூழலுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்க பரிந்துரைகளை முன்வைக்கின்றனர். Air Solution R&D Group இன் Jun Hwang எனும் உத்தியோகத்தர் கூறுகிறார், "உங்கள் வீட்டின் சூழ்நிலைகளுக்கு ஏற்ற விதமாக நடைமுறைப் பயனை தெரிவு செய்யவும், Cooling மற்றும் Dry Mode ஒரே மாதிரியாகத் தோன்றினாலும், அவை ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட நோக்கங்களுக்காக தொழில்படுகின்றன".

# கண்டியில் Hafele இன் அதிநவீன காட்சியறை



ஒரு சகாப்தகாலத்துக்கு மேல் பரந்து விரிந்த புகழ்பெற்ற மரபைக் கொண்ட உள்ளக வடிவமைப்புத் தீர்வுகளில் முன்னணி நாமமான Hafele இணையற்ற உள்ளக வடிவமைப்பின் புத்தாக்கத்தை வழங்குவதில் தனது அர்ப்பணிப்பை குறிப்பிடும் விதமாக அதிநவீன காட்சியறையை கண்டியில் பெருமையுடன் திறந்து வைத்துள்ளது.

இங்கு அனுபவிக்கக் கூடிய ஊடாட்டம் நிறைந்த காட்சிப்படுத்தல் காரணமாக சர்வதேச மட்டத்திலான உள்ளக வடிவமைப்புக்களுடன் இணைத்து, தமது சொந்த கற்பனையுடன் கூடிய வடிவமைப்பை யதார்த்தமாக்குவதற்கு 2,000 சதுர அடிகொண்ட இந்த விசேட காட்சியறைக்குள் வாய்ப்புக் கிடைக்கிறது.

பல்வேறு நிர்மானத் திட்டங்களில் கவனம் செலுத்துவதால் அதற்கான ஆரம்பத்தைக் குறிக்கும் வகையில் Hafele ஆனது அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் தனது விநியோக வலையமைப்பை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் முகமாகக் கொழும்பு மற்றும் மொரட்டுவை பிரதேசங்களில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய காட்சியறைகளைத் திறந்துவைத்துள்ளது.

இதன் மற்றுமொரு நீட்சியாக இலங்கையின் மத்திய மாகாணத்தின் நிர்வாக நகரமாகவும், அண்மித்த பிரதேசங்களின் கேந்திர நிலையமாகவும், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடத்திற்கான முக்கிய வழியாகவும் காணப்படும் கண்டி நகரை மையமாகக் கொண்டு தனது மற்றுமொரு காட்சியறையை இங்கு திறந்துள்ளது.

# மறக்க முடியாத அனுபவங்களைக் கொண்டாடும் Le Grand Galle




ஜப்பானுக்குச் சொந்தமான, மிகப் புகழ்பெற்ற சொகுசு ஹோட்டலான Le Grand Galle, தனது 5ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், அண்மையில் ஒரு கோலாகல நிகழ்வை நடாத்தியிருந்தது. தனது நேர்த்தியான சேவைக்காகவும், காலி கோட்டை மற்றும் அதைச் சுற்றியுள்ள கடற்கரையின் கவர்ச்சிகரமான காட்சிகளுக்காகவும் இது பிரபலமாக விளங்குகிறது.

இந்த 5 வருட நிறைவுக் கொண்டாட்டமானது, Le Grand Galle இன் சிறந்த அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக அமைந்ததோடு, மகிழ்ச்சி, நன்றியுணர்வு மற்றும் கொண்டாட்டம் ஆகியவற்றால் நிரம்பிய மாலைப் பொழுதாக அது அமைந்தது. பிரயாணத் துறை, பெருநிறுவனத் துறை மற்றும் மதிப்பு மிக்க தனிநபர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

Le Grand Galle பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், அவை அனைத்தையும் கடந்து 2018 முதல் ஐந்து வருடங்களாக செயற்பட்டு வருகிறது. ஈடு இணையற்ற விருந்தோம்பல் அனுபவங்களை வழங்குவதில் அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பே ஹோட்டல் வலுவாக உள்ளமைக்கு முக்கிய காரணமாகும்.

Le Grand Galle ஆனது, எல்லையற்ற ஆடம்பர வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குகிறது. இதன் மூலம் மறக்க முடியாத ஒரு இடமாக அது தன்னை மாற்றுகிறது.

# புதுமையான முயற்சிகள் மூலம் ஊக்கமளிக்கும் CSAS



கல்வித்துறையில் முன்னோடியான Colombo School of Arts and Sciences (CSAS) ஆனது முழுமையான கற்றல் மற்றும் சிறந்த சாதனைகளின் கலங்கரை விளக்கமாக திகழ்கின்றது. இப்பள்ளியின் அதிபர் ஷலீகா ஜயலத்தின் வழிகாட்டுதலின் கீழ், CSAS ஆனது மாணவர்களின் தனிப்பட்ட முன்னேற்றத்தை ஊக்குவிப்பதில் அர்ப்பணிப்போடு செயல்படுவது மட்டுமல்லாது, மிகச்சிறந்த தேர்வு முடிவுகளை பெறும் புதுமையான அணுகுமுறைகளையும் முன்னோடியாகச் செயல்படுத்தியுள்ளது.

மாணவர்கள் அறிவைப் பெறுபவர்கள் மட்டுமல்ல, அவர்களின் சொந்த கல்விப் பயணங்களில் தீவிரமாகப் பங்கேற்பவர்களாகவும் இருக்கும் சூழலை உருவாக்க வேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே CSAS இயங்குகின்றது. இந்த தத்துவத்தின் வெற்றியானது சமீபத்தில் ஜூன் 2023 Cambridge Assessment International Education (CAIE) தேர்வுகளில் CSAS மாணவர்கள் அடைந்த சிறந்த முடிவுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்வுகளை எழுதி, தேர்ச்சி பெற்ற ஒவ்வொரு மாணவரும், CSAS இன் உள்ளடக்கிய மற்றும் பலப்படுத்தும் கற்றல் சூழலின் வெற்றிக்கு சான்றளிக்கின்றனர். அதன் அடிப்படையில், IGCSE முதல் GCEAS மற்றும் GCEA வரை, பெரும்பாலான மாணவர்கள் சிறப்பான முறையில் தேர்ச்சியடைந்துள்ளனர்.

# களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

## பல்கலைக்கழகப் பிரவேசம் – 2022/ 2023
## தகுதிகாண் பரீட்சை

1. நிதியியல் பொறியியலிலான வணிக முகாமைத்துவ இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி
2. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கல்வி இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி
3. முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (MIT)/ தகவல் தொழில்நுட்பம் (IT) தொடர்பான விஞ்ஞானமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி
4. பேச்சு மற்றும் செவிப்புலன் கற்கையிலான விஞ்ஞானமாணி விசேட பட்டக் கற்கை நெறி
5. மொழிபெயர்ப்புக் கல்வி கலை இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி
6. விளையாட்டுத்துறைக் கல்வி விஞ்ஞானமாணி சிறப்பு பட்டக் கற்கை றெறி

களனி பல்கலைக்கழகத்தில் மேற்படி பட்டக் கற்கை நெறிகளுக்காக 2022/2023 கல்வி வருடத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இலங்கையில் பல்கலைக்கழக இளமாணி பட்டப்படிப்புகளுக்கான அனுமதி பற்றிய கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் அனைத்து விண்ணப்பதாரர்களும் மேற்கண்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மேற்படி தகுதிகாண் பரீட்சைகளை எதிர்கொள்வதன் மூலம் உயர் நிபுணத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும். குறிப்பிடப்பட்ட தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள நிகழ்நிலை (online) விண்ணப்பத்துடன் மேற்கூறப்பட்ட அந்தந்த தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இது கட்டாயமாகும்.

### (1) நிதியியல் பொறியியலிலான வணிக முகாமைத்துவ இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி

(அ) 2022/2023ஆம் வருடத்தில் க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் பொருளியல், கணக்கியல் மற்றும் கீழே தரப்பட்டுள்ள பாடங்களில் ஒரு பாடத்திற்கு ஆகக் குறைந்தது சாதாரண (S) சித்தியடைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- வியாபாரப் கல்வி
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- வியாபார புள்ளிவிபரவியல்
- விவசாய விஞ்ஞானம்
- புவியியல்
- இணைந்த கணிதம்
- வரலாறு
- அரசறிவியல்
- பௌதீகவியல்
- தர்க்கவியல் மற்றும் விஞ்ஞான ரீதியான முறை

தகுதிகாண் பரீட்சையின் நோக்கம் அபேட்சகர்களின் கணித்தல், ஆங்கிலத் தேர்ச்சி, பொது அறிவு மற்றும் பகுப்பாய்வு ஆற்றல் தொடர்பான தேர்ச்சியை மதிப்பிடுவதாகும். தகுதிகாண் பரீட்சை ஆங்கில மொழிமூலத்தில் நடாத்தப்படும்.

### (2) திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கல்வி இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி

(அ) 2022/2023ஆம் வருடத்தில் க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் ஆகக் குறைந்தது சாதாரண (S) சித்தியடைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண் பரீட்சை பிரதான இரு பகுதிகளின் கீழ் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

01. எழுத்து மூலப் பரீட்சை

எழுத்து மூலப் தகுதிகாண் பரீட்சையில் சினிமா மற்றும் தொலைக்காட்சி பாடம், பொது அறிவு மற்றும் வடிவமைப்பு தொடர்பான தேர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. சிங்கள மொழி மூலம் பரீட்சை இடம்பெறும்.

02. வாய்மூலப் பரீட்சை

எழுத்துமூலப் பரீட்சையில் அதிகூடிய திறமையைக் காட்டிய அபேட்சகர்களுக்கிடையில் சினிமா மற்றும் தொலைக்காட்சி துறையில் உள்ள விருப்பம் மற்றும் செயல்முறையில் அவர்களிடமுள்ள வெளிப்படுத்தும் திறமை தொடர்பில் தேடிப்பார்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த பரீட்சையை பல்கலைக்கழகத்திற்கு வருகை தருவதன் மூலம் அல்லது நிகழ்நிலை முறை ஊடாக நடாத்தப்படும்.

### (3) முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (MIT)/ தகவல் தொழில்நுட்பம் (IT) தொடர்பான விஞ்ஞானமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி

2022/2023ஆம் வருடத்தில் க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் உயர் கணிதம், இணைந்த கணிதம், கணிதம் மற்றும் பௌதீகவியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச் சித்தி (C) சகிதம்

(i) க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் உயிரியல் பாடப்பரப்பில் அல்லது பௌதீகவியல் பாடப்பரப்பில் தோற்றி மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

(ii) க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் உயிரியல் பாடப்பரப்பில் அல்லது பௌதீகவியல் பாடப்பரப்பில் இரண்டு பாடங்களிலும் மற்றும் மூன்றாம் பாடமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் (ICT) பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பும் விண்ணப்பப் படிவத்தில் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (MIT) / தகவல் தொழில்நுட்பம் (IT) தொடர்பான விஞ்ஞாமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறியில் அதிகூடிய திறமையை வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும். பரீட்சை ஆங்கில மொழி மூலத்தில் நடாத்தப்படும்.

### (4) பேச்சு மற்றும் செவிப்புலன் கற்கையிலான விஞ்ஞானமாணி (விசேட) பட்டக் கற்கை நெறி

(1) 2022/2023ஆம் வருடத்தின் க.பொ.த. (உ/தரப்) பரீட்சையில் உயிரியல் பாடப்பரப்பு, பௌதீகவியல் பாடப்பரப்பு அல்லது இலங்கை பல்கலைக்கழக பிரவேசக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கலை பாடப்பரப்பில் அனுமதிக்கப்பட்ட ஏதாவது மூன்று பாடத்தில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியைப் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

களனிப் பல்கலைக்கழத்தின் மருத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் இந்தக் கற்கை நெறியின் விசேட விடயத்துறையானது பேச்சு மற்றும் மொழி சிகிச்சை மற்றும் செவிப்புலனாகும். க.பொ.த. (உ/தரப்) பரீட்சையில் பௌதீகவியல் பாடத்திற்கு தோற்றிய மாணவர்கள் மட்டுமே செவிப்புலன் விசேட கற்கைநெறியைக் கற்கலாம்.

(2) இந்த தகுதிகாண் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

### (5) மொழிபெயர்ப்புக் கல்வி கலை இளமாணி சிறப்பு பட்டக் கற்கை நெறி

(1) 2022/2023ஆம் வருடத்தில் க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் ஆகக் குறைந்தது சாதாரண (S) சித்தியடைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) இந்தப் பரீட்சையின் நோக்கம் அபேட்சகரின் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சியை மதிப்பிடுவதாகும். அதனால் இந்த தகுதிகாண் பரீட்சை சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

### (6) விளையாட்டுத்துறைக் கல்வி விஞ்ஞானமாணி சிறப்பு பட்டக் கற்கை றெநி

(1) 2022/2023ஆம் வருடத்தில் க.பொ.த (உ/தரப்) பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் ஆகக் குறைந்தது சாதாரண (S) சித்தியடைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) தகுதிகாண் பரீட்சை பிரதான இரு பகுதிகளின் கீழ் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ) எழுத்து மூலப் பரீட்சை

எழுத்து மூலப் தகுதிகாண் பரீட்சையின் நோக்கம் அபேட்சகர்களின் அடிப்படை கணிதம், விஞ்ஞானம், விளையாட்டுத்துறையில் பொது அறிவு மற்றும் பகுப்பாய்வு ஆற்றல் தொடர்பான தேர்ச்சியை மதிப்பிடுவதாகும். தகுதிகாண் பரீட்சை ஆங்கில மொழிமூலத்தின் நடாத்தப்படும்.

(ஆ) செயல்முறை மற்றும் நேர்முகப் பரீட்சை

இந்தப் பரீட்சையின் நோக்கம் அபேட்சகர்களின் செயல்முறைத் தகுதி, விளையாட்டுத் திறன் மற்றும் திறமைகளை மதிப்பிடுவதாகும். செயல்முறைப் பரீட்சையில் அபேட்சகர்களின் செயல்முறை தகுதியை மதிப்பிடுதல் மற்றும் நேர்முகப் பரீட்சையில் அபேட்சகர்களில் மாகாண, தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகப் பெற்றுள்ள விளையாட்டுத் திறமைகளை உறுதி செய்து கொள்ளல் மற்றும் மதிப்படுதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை**

1. விண்ணப்பிப்பதற்கு ஆர்வம் காட்டும் அபேட்சகர்கள் மக்கள் வங்கியின் களனி கிளையில் 055-1001-40009867 எனும் கணக்கிலக்கத்திற்கு 1600.00 ரூபா வரவாகும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மென் பிரதியுடன் (Soft copy/Scan Image) நிகழ்நிலை (online) முறை ஊடாக மட்டும் இங்கு காட்டப்பட்டுள்ள குறிப்பீட்டிலக்கம் (https./aptitude.kln.lk) ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் போது செயல்நிலையிலுள்ள மின்னஞ்சல் முகவரியை (e-mail) பயன்படுத்துதல் கட்டாயமாகும். பற்றுச்சீட்டை நிரப்ப வேண்டிய விதம் கீழே தரப்பட்டுள்ளது.




2. அதேபோல் CDM இயந்திரத்தைப் பயன்படுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் விண்ணப்பதாரிகள் இயந்திரத்தினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டில் தமது பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் கட்டாயம் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

3. மேற்படி (1)ஆம் (2)ஆம் இலக்கத்திற்குப் புறம்பாக நிகழ்நிலை கொடுப்பனவு முறையாக (online payment) கடன் அட்டை (Credit Card) அல்லது பற்று அட்டை (Debit Card) என்பவற்றைப் பயன்படுத்தி மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.

வங்கிப் பற்றுச்சீட்டை (வங்கிக் கிளையில் அல்லது CDM இயந்திரத்தில் பெற்றுக்கொண்ட) பரீட்சை நடைபெறும் நாளில் கட்டாயம் கொண்டுவருதல் வேண்டும் என்பதுடன் அதை பரீட்சை நிலையத்திற்கு முன்னாலுள்ள கருமபீடத்தில் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு செய்யாமல் விட்டால் பரீட்சைக்குத் தோற்றினாலும் பெறுபேறுகள் வழங்கப்படமாட்டாது.

மேற்படி ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்தில் தமது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வேறுபாடுகள் ஏற்பட்டால் அந்தப் பெயர்களில் குறிப்பிடப்படும் நபர் ஒருவர்தான் என்பதை உறுதி செய்யும் சத்தியக் கடதாசி ஒன்றை இயைபுடைய கருமபீடத்திற்கு மேற்படி ஆவணங்களின் சகிதம் ஒப்படைத்தல் வேண்டும்.

பரீட்சை அனுமதி அட்டையை (Admission card) பதிவிறக்கம் (Download) செய்துகொள்வதற்காக இயைபுடைய இணைப்பு (link) உங்களது மின்னஞ்சல் முகவரிக்கு (e-mail) அல்லது கையடக்கத் தொலைபேசிக்கு குறுஞ் செய்தியாக (SMS) அனுப்பப்படும் என்பதுடன் அதன் அச்சுப் பிரதியொன்றை நீங்கள் பரீட்சைக்கு வரும்போது கொண்டு வருதல் வேண்டும்.

இந்த தகுதிகாண் பரீட்சைக்கு உங்களது பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்டை நடைபெறும் தினத்தில் பரீட்சை ஆரம்பிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னரே நீங்கள் இயைபுடைய பரீட்சை நிலையத்திற்கு சமுகம் தந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள் 2023 செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதியாகும். மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இலக்கம்: 011-2903112/114

**பதிவாளர்,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**களனி.**
**2023 செப்டெம்பர் 07.**




## மேஷம்

(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

பாக்கிய விரயாதிபதி குரு 12.09.2023 வக்கிரமாகப் போகிறார். வருமானத்தில் வேறுபாடு இருக்காது. சுக்கிரனும் சனியும் கூட வக்கிரகதியில் இருக்கிறார்கள். பாதகாதிபதி சனி வக்கிரமடைவது நல்லது தான். செவ்வாய் 6இல் இருப்பதால் பகைவர்கள் விலகுவர். தைரியம் ஏற்படும். பூர்வ புண்ணிய பலன்கள் செயல்பட ஆரம்பிக்கும். சனிக்கு 8இல் சூரியன் இருப்பதால் சனி தோஷங்கள் கொஞ்சம் கட்டுப்படுத்தப்படும். இராசிநாதன் செவ்வாய் 8ஆம் பார்வையாக இராசியைப் பார்ப்பதும் சில எதிர்விளைவுகளை கட்டுப்படுத்தும். செயல்களை கவனத்தோடும் வேகத்தோடும் செய்ய வைக்கும். வழக்கம் போல் குரு 5ஆம் இடத்தையும் 7ஆம் இடத்தையும் பார்ப்பதும் மனோரதங்களை நிறைவேற்றும்.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)

எத்தனை சறுக்கல்கள் பிரச்சினைகள் வந்தாலும் அதையும் மீறி ஜெயிக்கக் கூடிய ஆற்றல் உங்களுக்கு உண்டு. இராசிநாதன் 3இல் வக்கிரமடைந்திருக்கிறார். சனியின் வக்கிரம் சில நன்மைகளைச் சேர்க்கும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மேலதிகாரிகள் துணை செய்வார்கள். போட்டிகளைச் சமாளிப்பீர்கள். சுக்கிரன் 3இல் செல்வதால் பணம் நெருக்கடிகள் தீரும். கலைத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். முயற்சி பலிக்கும். வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டுதல் போன்ற செயல்கள் சாதகமாக இருக்கும். இராசிநாதன் சுக்கிரன் 3 இல் வக்கிரமடைவதால் சில நன்மைகள் உண்டு. மறைமுக குதர்க்க பேச்சு செய்ய வேண்டாம்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

கன்னிச் செவ்வாயால் நிலம் வீடு விற்பனை வாங்கல் நன்றாக இருக்கும். லாபமும் கிடைக்கும். கடன்கள் குறைய ஆரம்பிக்கும். அதிகாரிகள் உற்சாகமும் தைரியமும் கொடுப்பார்கள். புதன் வக்கிர நிலையில் இருப்பது நல்லது தான். யோகங்கள் அதிகரிக்கும். சனியின் கெடு பலனைக் குறைக்கும். கவலைகள் குறைய ஆரம்பிக்கும். சூரியன் 3ஆம் வீட்டில் ஆட்சியில் இருப்பதால் அரசாங்கம் உதவி சகாயம் உண்டு. கணவன் மனைவி தகராறு தீரும். குரு சுக்கிர நிலைகள் உங்கள் செயல்களில் வேகத்தைக் கூட்டும். கலை தொழிலில் உள்ளவர்களுக்கு மரியாதை கிடைக்கும்.

## கடகம்

( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

பொது வாழ்வில் ஈடுபடுபவர்களுக்கு நல்ல வாய்ப்பு உண்டு. வெளியூர் பயணங்கள் ஏற்படும். சுக்கிரன் இராசியில் இருப்பதால் சில யோகங்கள் உண்டு. தாய் உடல் நிலை சீராகும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் ஏற்படும். சொத்துப் பிரச்சினை தீரும். வெளிநாட்டு முயற்சி வெற்றிகரமாக நடைபெறும். இளைய சகோதரர்களால் உதவி உண்டு. இதற்கு வெற்றிஸ்தானத்தில் அதாவது 3ஆம் இடத்தில் இருக்கும் செவ்வாயும் உதவும். பகை விலகும். புதன் சாதகமாக இருக்கிறார். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அஞ்ச வேண்டாம். அவர்கள் படிப்பு ஆர்வம் அதிகரிக்கும். கண்டகச் சனி நடப்பதால் வணிகம் தொழிலில் பெரிய முன்னேற்றங்கள் இப்பொழுது நடப்பதற்கு இல்லை.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

பொது வாழ்வில் உள்ளோர் உயர்வைச் சந்திப்பார்கள். இராசிநாதன் பலமாக இருக்கிறார். ஆட்சியில் இருக்கிறார். அவர் உங்களுக்கு அனைத்து தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் தருவார். கௌரவம் புகழ் அதிகரிக்கும். எதிர்பாராத உதவி கிடைக்கும். புதனும் சாதகமாக இருக்கிறார். வாடகை வீட்டில் இருப்பவர்கள் புது வீடு பற்றி யோசிப்பீர்கள். வீட்டை விஸ்தரிப்பீர்கள். செவ்வாய் கன்னியில் இருக்கிறார். அது 2ஆம் இடம். பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும். பூர்வீக வில்லங்கங்கள் விலகும். பழைய கடன் பிரச்சினைகள் மட்டுப்படும். 6ஆம் இடத்தில் வரும் சனி இதுவரை வந்த தாமதங்களைச் சரி செய்யும். குரு வக்கிர பார்வையாக இருந்தாலும் நன்மைகளை அதிகரிக்கும். சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வேறு ஊருக்குச் சென்று பணிபுரிய நேரும்.

## கன்னி

(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் பாதம்)

இராசிநாதன் புதன் சாதகமான நட்சத்திர தாரைகளில் உலவுகிறார். கவலைகள் வந்தாலும் உடனுக்குடன் சமாளித்து விடுவீர்கள். பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் திறன் அதிகரிக்கும். சுக்கிரன் 11இல் இருப்பதால் பொருளாதாரத்தில் வெற்றி ஏற்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எந்தக் காரியத்தை நீங்கள் நினைத்தாலும் ஏதோ ஒரு வழியில் நிறைவேறிவிடும். எதிர்பாராத அதிர்ஷ்டங்கள் உண்டு. வாகன யோகம் ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். அரசு அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். வியாபாரம், புதிய முயற்சிகள் வெற்றி பெறும். சுக்கிரன் வக்கிரத்தில் இருக்கிறார். கலைத்துறையில் சில ஏமாற்றங்கள் ஏற்படலாம். கடைசி நேரத்தில் வாய்ப்புகள் நழுவும்.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதம்)

புதன் சாதகமாக இருக்கிறார். புத்திசாலித்தனத்தோடு செயல்பட வைப்பார். சாதுரியத்தால் வெற்றி பெறுவீர்கள். நல்லவர்களின் பாராட்டும் நட்பும் கிடைக்கும். குருவின் 7ஆம் பார்வை கணவன் மனைவி கருத்து வேற்றுமைகளை போக்கும். வாழ்க்கைத் துணையால் சில ஆதாயங்கள் உண்டு. மூத்த சகோதரர்கள் உதவும் வாய்ப்பு உண்டு. தடைப்பட்ட சுப காரியங்கள் நடக்கும். கணவன் மனைவி பிணக்குகள் தீரும். சுக்கிரனால் புதிய வாய்ப்புகள் உண்டு. முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். விலை உயர்ந்த பொருள் வாங்கும் யோகம் உண்டு. எதிலும் அகலக்கால் வைக்க வேண்டாம். பெரும் செலவுகளுக்கு தூண்டப்படுவீர்கள்.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

சூரியன் 10இல் பலம் பெற்று இருக்கிறார். தொழில் முயற்சிகள் சிறப்பாகும். புதிய முயற்சிகளை நோக்கி நகர்வீர்கள். குடும்பத்தில் அமைதி தழைக்கும். பூமி வீடு யோகம் உண்டு. பாக்கியஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால் புதிய ஒப்பந்தங்கள் ஏற்படும். சிறு முயற்சியில் காரிய பலிதம் ஏற்படும். உத்தியோகத்தில் பதவி உயர்வு மற்றும் பொருளாதார நிறைவு உண்டு. சோர்வு நீங்கி பழைய சுறுசுறுப்பு ஏற்படும். சகோதரர் ஒற்றுமை ஓங்கும். குரு வக்கிரமாக இருப்பதால் எச்சரிக்கையோடு இருக்கவும். ஆறில் குருவும் ராகுவும் இருக்கிறார்கள். தேவையற்ற பிரச்சினைகள் வரும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

பாக்கியஸ்தானத்தில் சூரியன் ஆட்சி பலத்தோடு இருக்கிறார். அவர் உங்கள் 3ஆம் இடத்தைப் பார்ப்பதால் தைரிய வீரிய ஸ்தானம் பலமடைகிறது. எனவே எதையும் சமாளிக்கும் துணிச்சல் ஏற்படும். கடினமான சவாலான வேலைகளை ஏற்றுக் கொள்வீர்கள். திட்டமிட்ட வேலைகள் நிறைவேறும். கடன்களில் ஒரு பகுதி அடையும். சுக்கிரனுக்கு இராஜயோகம் விபரீதமாக செயல்பட்டு நன்மையை தரும். வீடு கட்டும் முயற்சிகள் வெற்றி பெறும். ஆடை ஆபரணச் சேர்க்கைகள் ஏற்படும். உறவும் நட்பும் கை கொடுக்கும். உத்தியோக மாற்றமும் ஏற்றமும் உண்டு. செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் இருப்பதால் வேலைவாய்ப்புகளில் நல்ல மாற்றம் ஏற்படும்.

## மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

சுக்கிரன் 7இல் (கடகத்தில்) வக்கிரமாகியிருக்கிறார். ஆயினும் அவருடைய ஸ்தான பலமும் பார்வை பலனும் நன்மை செய்யும். குருவின் பார்வையாலும் சில நன்மைகள் உண்டு. வருமானம் குறையாது. வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருக்கும். ஆனால் சேமிப்புக்கு வழியில்லை. பாக்கியஸ்தானத்தில் செவ்வாய் பலம் பெற்று இருப்பதால் தைரியமும் மனோபலமும் ஏற்படும். சகோதரர்கள் உதவி செய்வார்கள். உத்தியோகம் உயர்வு உண்டு. இடையூறுகள் அகலும். குரு விரைவில் வக்கிரம் அடைய மேற்படி நன்மைகள் கூடும். எல்லா காரியங்களிலும் சிற்சில இடையூறுகள் இருந்து கொண்டே இருக்கும்.

## கும்பம்

(அவிட்டம் 3ஆம் 4ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்) இதுவரை கொஞ்சம் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த ஜென்ம சனி நாலு மாதங்கள் உங்களை விட்டு சற்று விலகி மூச்சு விட வைக்கிறது. இதனால் சில அனுகூலங்கள் உண்டு. ஆரோக்கியத்தில் முன்னேற்றம் இருக்கும். எதிலும் தைரியமும் நம்பிக்கையும் பிறக்கும். அலுவலக சூழல் நன்றாக இருக்கும். வக்கிர சனியால் தொழில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளால் நன்மை உண்டு. பூர்வீக சொத்து பிரச்சினைகள் சாதகமாகும். இடமாற்றம் உண்டு. வழக்குகள் தாமதமாகும். வரவுக்கு மீறிய செலவுகள் நீடிக்கும். சுக்கிரன் 6ஆம் இடம் செல்வதால் யாரிடமும் பகை வேண்டாம்.

## மீனம்

(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

நன்மை தீமைகளைச்சரி பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள். தனஸ்தான குரு வலுவாக இருப்பதால் பணப்பிரச்சினை இல்லாமல் பார்த்துக் கொள்வார். குடும்பத்தில் ஒற்றுமையும் நிம்மதியும் நிலவும். சூரியன் ஆட்சி பெற்றிருப்பதாலும் தன் குடும்ப செவ்வாய் ஏழிலிருந்து மீன இராசியைப் பார்ப்பதாலும், தன் இராசியை எட்டாம் பார்வையாகப் பார்ப்பதாலும் நன்மை அதிகரிக்கும். சகோதர உதவிகள் உண்டு. பூமி லாபம் உண்டு. வீடு கட்டும் யோகம் உண்டு. போட்டிகள் குறையும். புதிய முயற்சிகள் பலன் அளிக்கும். ஊதிய உயர்வுகள், பதவி உயர்வுகள் கிடைக்கும்.

பொது வாழ்வில் உள்ளவர்கள் கெட்ட பெயர் சம்பாதித்து கொள்ளும் சூழல்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் கருத்து வேறுபாடுகள் உங்களை அலைக்கழிக்கும்.

# தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 03







# பார்க்கும் இடமெல்லாம் உயர்ந்த கட்டடங்கள்

### கோலாலம்பூர் பன்னாட்டு விமான நிலையம்

எனது வெளிநாட்டு பிரயாண அனுபவத்தில் இரண்டாவது முறையாக இந்த விமான நிலையத்திற்கு வருகை தருகிறேன். 2018ம் வருடம் கம்போடியா, அங்கோர்வாட்டில் இடம்பெற்ற உலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்க நானும் நண்பர் வே.இராமரும் அப் பயணத்தில் இணைந்திருந்தோம். பொதுவாக பல பன்னாட்டு ஆய்வரங்குகளில் இலங்கை, மலையகத்தின் அடையாளங்களாக வே. இராமர், அ.லெட்சுமணன் ஆகிய நாங்கள் இரட்டையர்களாகவே அறிமுகமாவது வழமையாகும். 2011ஆம் ஆண்டு சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் நடாத்திய 'சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாடு' கொழும்புத் தமிழ்ச் சங்கம் 2012ல் நடத்திய 'உலகத் தமிழ் இலக்கிய மாநாடு' 2016இல் பிரான்சில் இடம்பெற்ற 'முதலாவது உலகத் தமிழ் நாடக விழா'வுக்கு நிகர் சமூக கலை இலக்கிய அரங்க உறுப்பினர்களாக அழைக்கப்பட்டிருந்தும் வீசா மறுப்பின் காரணமாக வாய்ப்பை தவறவிட்டோம். இலங்கையில் இருந்து அழைக்கப்பட்ட மற்றுமொரு அணியாக பேராசிரியர் மௌனகுருவின் அணி என்பது குறிப்பிடத்தக்கது. இவ் அணிக்கும் இவ்வாறான நிலை ஏற்பட்டமை துரதிர்ஷ்டவசமானது. இருந்த போதிலும் 'மலையக நாடகத்துறை' முன்னெடுப்புகளை ஆவணப்படுத்தும் வகையில் 'நிகர்' ஆவண சிறப்பிதழை வெளியிட்டோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2017ம் ஆண்டு 47 ஆவது இலக்கிய சந்திப்பு – பன்னாட்டு கருத்தரங்கம், காமன் கூத்து ஆற்றுகையுடன் ஆய்வுக் கட்டுரைகளையும் முன்வைத்தோம். 2017ஆம் ஆண்டு இந்தியா, திண்டுக்கல் காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகம் நடத்திய 'மலையக இலக்கியம் பன்னாட்டு ஆய்வரங்கம்' நிகழ்விலும் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பின் தலைமையில் ஆய்வாளர்களாக பங்கேற்றோம். மதுரை'உலகத்தமிழ்ச்சங்கம்'நடத்திய மலையக இலக்கியம் சர்வதேச மாநாட்டில் இருவருமாக பங்கேற்றமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே உள்நாட்டிலும், இணைய வழியிலும் பல ஆய்வரங்கங்களில் இருவரும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந் நினைவுகளை மீட்டிப்பாரக்கிறேன். இந் நிகழ்வுக்கு அவரால் தவிர்க்க முடியாத காரணத்தால் பங்கேற்க இயலாமல் போனமை வருந்தத்தக்கது.

தென்கிழக்காசியாவின் மிக முக்கிய விமான நிலையத்தில் இருக்கிறோம். கோலாலம்பூர் பன்னாட்டு வானூர்தி நிலையம். இலங்கையை விட 2.30 மணித்தியாலம் முன்னதாகவே நேரம் நகர்கிறது. இந்த நேர மாற்றத்தை தெளிவாக இலங்கை நேரத்தையும், கோலாலம்பூர் நேரத்தையும் கையடக்க தொலைபேசிகள் காட்டுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டு நேரங்களும் விமான நிலையத்தை அண்மித்த இடம் வரை செயலில் இருக்கும் என்பதும் கவனிக்கதக்கது. 2018ஆம் ஆண்டு கம்போடியா சென்ற போது இவ் விமான நிலையத்திற்கு 'மலேசியா ஏர்லைன்ஸ்' விமானத்தில் இலங்கையில் சென்று மீளவும் இவ் விமான நிலையத்திலிருந்து கம்போடியா 'சியாம் ரீப்' விமான நிலையம் நோக்கி நகர்ந்தோம். அவ்வாறே மீளவும் நாடு திரும்பும் போதும் 'சியாம் ரீப்' விமான நிலையத்தில் இருந்து 'கோலாலம்பூர்' விமான நிலையத்தில் இறங்கி பத்து மணித்தியாலம் காத்திருந்து மீளவும் விமானத்தில் ஏறி இலங்கை' கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தோம். பத்து மணித்தியாலம் 'கோலாலம்பூர் விமான நிலையத்தை சுற்றிப் பார்த்த நினைவும் அனுபவமும் மனதில் ஊசலாடியது.

மலேசியா சிலாங்கூர் மாநிலத்தின் மாநகரங்களில் ஒன்றாகவும், மலேசிய நாட்டின் தலைநகராகவும் 'கோலாலம்பூர்' விளங்குகிறது. இதனால் மத்திய அரசும், சிலாங்கூர் மாநில அரசும் இணைந்து கூட்டரசாக தொழிற்படுகின்றமையும் சிறப்பம்சமாகும். இவ்வாறே லபுவான், புத்ரஜாயா ஆகிய மாநகரங்களும் கூட்டரசுகளாக நிர்வகிக்கப்படுகின்றன. கிளாந்தன், கெடா, சபா, சரவாக், சிலாங்கூர், ஜொகூர், திராங்கானு, நெகிரி செம்பிலான், பகாங், பினாங்கு, பெரிலிங், பேராக், மலாக்கா ஆகிய மாநிலங்களின் ஆட்சியோடும் மலேசியாவின் பொதுநிர்வாகம் விளங்குகின்றமையும் கவனிக்கதக்கது. 'கூட்டரசு பிரதேச கோலாலம்பூர்' என்றே உத்தியோகபூர்வமாக அழைக்கப்படுகிறது. பேச்சுவழக்கில் கே.எல் என அழைக்கப்படும் இப் பெரு நகரம் 243 சதுர கிலோ மீற்றர் பரப்பையுடையது. 1.8 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் தொகையினர் வாழும் நகரமாக இது விளங்குகிறது. உலக மாநகர தரவரிசையில் 48வது இடத்தில் பாரின் பாலிசி நிறுவனம் தரப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

1850களுக்கு பின்னர் கோலாலம்பூர் உருவெடுத்ததாக வரலாற்று ஆசிரியர்கள் வரையறுப்பார்கள். இக் காலத்தில் கிள்ளானில் ஆட்சி செய்த மன்னரான ராஜா அப்துல்லா வெள்ளிச் சுரங்கங்களை அமைக்கும் பணிக்காக சீனத் தொழிலாளர்களை அழைத்து வந்ததன் பின்னரே கோலாலம்பூரின் வரலாறு முனைப்பு பெறுகிறது. இத் தொழிலாளர்கள் கோப்பாங் ஆறு, கிள்ளான் ஆறு ஆகிய ஆறுகள் கலக்கும் இடத்திற்கு அருகில் தங்கியுள்ளார்கள். பெரும் வணிக மையங்களாக மாறிய நிலையே பெரு நகரமாக உருவாக வழிகோலியது எனலாம். தொடர்ந்து அதிகாரங்களை உருவகித்துக்கொள்ள ஹை சான், கீ ஹின் ஆகிய சாரார்களுக்கிடையே போர் மூண்டமையும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து சீனர்களின் ஆதிக்கத்தோடு மேற்கைத்தேயரின் ஆட்சிக்குட்பட்டும் 1942 சனவரி 11ஆம் திகதி இரண்டாம் உலக யுத்தத்தினால் ஜப்பான் நாட்டின் வசமானது. புத்ரஜாயா நிர்வாக தலைநகராக இருக்கின்ற அதேவேளை தேசிய தலைநகராகவே கோலாலம்பூர் விளங்குகின்றது. இவ்வாறே லபுவான் மாநகரம் கடல் சார் அனைத்துலக நிதி மையமாக முக்கியத்துவம் பெறுகிறது.

விமான நிலையத்தில் உள்ளக நடைமுறைகளை நிறைவு செய்து வெளியேறுகிறோம். எம்மை அழைத்துச் செல்வதற்காக '11ம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு' என்ற தலைப்போடு அட்டையை பிடித்துக் கொண்டு இரண்டு நபர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் சீக்கியராகவும் மற்றையவர் மலாய் மொழி உச்சரிப்பைக் கலந்த ஆங்கிலத்தை பேசியவராக எம்மை அடையாளம் கண்டுக்கொண்டார்கள். எம்மை அழைத்து செல்வதற்கு தமிழர்கள்தான் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் இருந்த எமக்கு இவர்களைப் பார்த்ததும் மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. பிறகுதான் ஒருவாறு ஊகித்துக்கொண்டோம் இவர்கள் க்கையிட் (வழி காட்டிகள்).

மலேசிய வளர்ச்சியில் சுற்றுலாத்துறை மிகுந்த பங்களிப்பிற்குரிய துறையாக விளங்குகிறது. அத்துறையின் மிக முக்கியமான அங்கமாக, பிரயாண வழிகாட்டிகள் விளங்குகிறார்கள். இப் பயணத்தில் அவர்களோடு பழகியது மிக சுவாரஸ்யமான அனுபவங்களைத் தந்தது. அவற்றை அவ்வப்போது இப் பதிவுகளோடு இணைத்துக்கொள்வேன். ஆம் எங்களை அழைத்து செல்வதற்கு வந்தவர் போல். சிரித்த முகத்தோடு குட் மோர்னிங் என்ற வார்த்தை மொழிந்தவாறு நெருங்கியவர் தனது பொறுப்பில் இருந்த பஸ்ஸில் ஏறுமாறு அழைப்புவிடுத்தார். எம்மோடு இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த பேராளர்களும் இணைந்து கொண்டார்கள். சமயத் தலைவர்களும் தங்களுக்குரிய அடையாளத்துடனேயே வருகை தந்திருந்தார்கள். இந்திய நண்பர்களுடனான அறிமுக உரையாடல்களுடன் எமக்கெனத் தயார்படுத்தியிருந்த பஸ்ஸில் ஏறினோம். பஸ் எமக்காக முன் பதிவு செய்யப்பட்டிருந்த விடுதி நோக்கி விரைந்தது.

முதல் முறையாக மலேசியா, கோலாலம்பூர் நகரை பஸ் யன்னல் ஊடாக பார்த்த வண்ணமாக பயணிக்கிறோம். பார்க்கும் இடமெல்லாம் உயர்ந்த கட்டடங்கள். அதிவேக நெடுஞ்சாலை ஊடாக விரைந்த பயணம். உயர்ந்த கட்டடங்கள் நிறைந்திருந்த போதும் பார்க்கும் இடமெல்லாம் மரங்களின் ஆதிக்கம் களைகட்டிய வண்ணமாகவே காட்சியளித்தது. இயற்கை நேசிப்பின் முக்கியத்துவத்தை இந்த மண் உணர்ந்திருந்தது. காடுகளை அண்மித்த பயணத்தின் போது காடுகளும் இவர்களால் நேசிக்கப்படுவதை தெட்டத்தெளிவாக காணக்கூடியதாக இருந்தது. உற்பத்தி பொறிமுறைக்குள் வேறு அரசியல் இருக்கலாம். ஆனால் விவசாய நடவடிக்கையின் மூலமான வருவாயை உறுதிப்படுத்தி காட்சியளித்துக்கொண்டிருந்தது. இயற்கை வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் மலேசியா முன்மாதிரியான அணுகுமுறைகளை பின்பற்றுவது தொடர்பில் அறிந்திருந்தேன்.

நாட்டின் தேசிய வருவாயை உறுதிப்படுத்தும் ஓர் நடவடிக்கையாக, 'சுற்றுலாத்துறை'க்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தின் அடையாளங்களையும் உணர முடிந்தது. ஆசியாவின் மிக முக்கிய சுற்றுலாத்துறை கேந்திரமாக, இலங்கை முன்னணியில் திகழ்ந்தமைக்கான வரலாற்று ஆதாரங்கள் நிறையவே உள்ளன. இங்கு பிரஜைகளுடன் இரண்டற கலந்திருக்கும் இனவன்ம நடைமுறைகள், இலங்கையின் சுற்றுலாத்துறையில் மிகுந்த தாக்கத்தை செலுத்தியுள்ளமையை அறிவோம். இலங்கையில் இடம்பெற்ற முப்பது வருடகால உள்நாட்டு யுத்தம், தொடரும் இனப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளற்ற தன்மைகள் எல்லாம் தேசியத்தில், தேச அபிவிருத்தியில் பெரும் தாக்கத்தை செலுத்தி வருகின்றமை கவனிக்கதக்கது. பஸ்ஸில் சிறிது கண்ணயர்ந்து எழுந்ததும் பஸ் பயணம் நிறைவு பெற்றதை உணர்ந்தோம். நாம் தங்கப்போகும் விடுதிக்கு வந்துவிட்டோம். பஸ்ஸில் இருந்து இறங்குமாறு எமது பயண வழிகாட்டியால் அறிவுறுத்தப்பட்டது.

(பயணம் தொடரும்)



Senthooram
செந்தூரம்
2023 செப்டெம்பர் 10 ஞாயிற்றுக்கிழமை

விஜேய் – தாரணி

# நீளமான ‘முல்லட்’ முடி

அமெரிக்கப் பெண் ஒருவர் தமது தலையின் பின் புறத்தில் மிக நீளமான முடி வளர்த்து உலக சாதனை படைத்திருக்கிறார்.

தலையின் பின்புறத்தில் மட்டும் சற்று நீளமாக முடி வளர்க்கும் சிகை அலங்காரத்திற்குப் பெயர் ‘முல்லட்’. தலையின் மற்ற பகுதிகளில் முடி கட்டையாகவே இருக் கும்.

டென்னசீ மாநிலத்தைச் சேர்ந்த டாமி மனிஸின் முல்லட் சுமார் 172 சென்டிமீற்றர் நீளம். அது கிட்டத் தட்ட சராசரி மனிதனின் உயரம். தாதியாகப் பணிபுரி யும் மனிஸ் 1980களிலிருந்து முல்லட் வைத்திருக்கி றார். அவர் 33 ஆண்டுகளாக தமது முல்லட் முடியை வெட்டவில்லை.

முடி இவ்வளவு நீளம் வளர்ந்ததற்கு தமது மரபணு வும் ஓர்கன் எண்ணெயுமே காரணம் என்று மனிஸ் சொல்கிறார்.

முடி தம்மைவிட நீளமாக இருப்பதால் பெரும்பாலும் அதைக் கட்டியே வைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.





# ஜோயிடாவுக்கு என்ன ஆனது?



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

பொலினேசியன் தீவு நாடான சமோவாவின் அபியா துறைமுகத்தில் இருந்து 1955 ஒக்டோபர் 3 ஆம் திகதி அதிகாலை ஐந்து மணிக்கு எம்.வி ஜொயிடா என்ற படகு சுமார் 270 மைல் தொலைவில் இருக் கும் டகேலவ் தீவுகளை நோக்கி புறப்பட்டது.

படகிலோ பதினாறு ஊழி யர்கள் மற்றும் ஒன்பது பய ணிகள் இருந்தார்கள். படகிலே மருந்துப் பொருட்கள், மரங்கள், 45 வெற்று கலன்களும் இருந்தன.

இந்தப் பயணத்திற்கான காலம் 40 தொடக்கம் 41 மணி நேரங்கள் எடுக்கும். அதன்படி ஜொயிடா ஒக்டோபர் 5 ஆம் திகதி வாக்கில் தனது பயண இலக்கை அடைந்திருக்க வேண்டும். ஆனால் ஒக்டோபர் 6 ஆம் திகதியாகியும் படகை காணவில்லை. இத்தனைக்கும் படகில் இருந்து எந்த அபாய அழைப்பும் வரவும் இல்லை.

கடைசியில் மீட்பு மற்றும் தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தத் தேடுதல் ஒரு வாரங்கள் நீடித்தபோதும் படகு இருப்பதற்கான எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. சுமார் 100,000 சதுர மைல் பகுதியில் தேடுதல் நடந்தபோதும் படகு பற்றியோ படகில் இருந்தவர்கள் பற்றியோ எந்த தடயமும் இல்லை.

ஐந்து வாரங்களின் பின் அதாவது நவம் பர் 10ஆம் திகதி எம்.வி ஜொயிடா பயணப் பாதையில் இருந்து விலகி சுமார் 600 மைல் தொலைவில் அந்தப் படகு பாதி மூழ்கி யவாறு கடலில் மிதந்து கொண்டிருப்பது வர்த்தகக் கப்பல் ஒன்றினால் கண்டுபிடிக் கப்பட்டது.

படகுக்குள் சென்று பார்த்தால் அங்கு ஆட்களோ, கொண்டு சென்ற சரக்குகளோ எதுவும் இருக்கவில்லை. ரேடியோ சமிக் ஞையும் சர்வதேச அலைவரிசை ஒன்றில் திருப்பப்பட்டிருந்தது.

பின்னர் இந்தப் படகுக்கு என்ன ஆனது என்று தீவிர விசாரணை ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. அதிலே படகு மோசமான நிலை யிலேயே அதன் பயணத்தை மேற்கொண் டிருப்பதாக கூறப்பட்டது. ஆனால் படகில் இருந்த பயணிகள் மற்றும் பணியாளர்க ளுக்கு என்ன ஆனது என்பது உறுதி செய் யப்படவில்லை.

படகில் இருந்தவர்கள் கடல் கொள் ளையர்களால் கடத்தப்பட்டிருக்கலாம், காப்புறுதி மோசடியாக இருக்கக் கூடும் என்று பல காரணங்கள் கூறப்பட்டபோ தும் படகில் இருந்த பயணிகளுக்கு என்ன ஆனது என்பது இன்றுவரை விடுவிக்கப்ப டாத மர்மம்.

# மர்மப் பாறை

டிக்டன் பாறை என்பது அமெரிக்காவில் இன்றுவரை விடுவிக்கப்படாத ஒரு கதை. பிசிசுட்ஸில் இருக்கும் டோன்டன் ஆற்றுப்ப டுகையில் கண்டுபிடிக்கப்பட்ட பாறைதான் இந்த டிக்டன் பாறை. 40 தொன் எடை கொண்ட பாறையிலேயே கல்வெட்டுகள் இருக்கின்றன.

கல்வெட்டுகள் என்றால் வரலாற்றாய் வாளர்களால் கண்டுபிடிக்க முடியுமானது தான். தீவிரமாக ஆய்வு செய்தால் எப்போது, யாரால் எழுதப்பட்டது, என்ன எழுதி இருக்கி றது என்று முழு ஜாதகத்தையும் சொல்லி விடலாம். ஆனால் இந்த டிக்டன் பாறையில் என்ன எழுதி இருக்கிறது என்று யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்காக அதனை வெறும் கிறுக்கல் என்று ஒதுக்கி விட முடியாது. அந்த எழுத்துகளில் ஏதோ ஓர் ஒழுங்கு இருப்பதாக ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். உலகெங்கும் இருக்கும் பலரும் கல்லில் என்ன இருக்கிறது என்ற புதிரை விடுவிக்க முயன்று தோற்றிருக்கி றார்கள்.

இந்த டிக்டன் பாறை பற்றிய பதிவு 1630 ஆம் ஆண்டிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிலர் இது அமெரிக்க பூர்வீகக் குடிக ளால் எழுதப்பட்டது என்று கூறுகி றார்கள். ஆனால் மேலும் சிலரோ வேற்றுக்கிரகவாசிகள் எழுதியது என்று புதிர் போடுகிறார்கள்.

எது எப்படியோ 1963 ஆம் ஆண்டு கொப்பர் அணை கட்டப் படும்போது அந்தப் பாறை அகற் றப்பட்டு அருகில் சிறிய அருங் காட்சியம் ஒன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. இன்றும் அங்கு தான் அந்தப் பாறை இருக்கிறது. ஆனால், அதன் மர்மம் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

# காரில் செல்லும் காளை




அமெரிக்காவின் நெப்ரஸ்கா மாநிலத்தைச் சேர்ந்த பொலிஸாருக்கு அபூர்வமான அவசர அழைப்பு ஒன்று கிடைத்தது. காளை மாடு ஒன்று கார் வண்டியின் முன் இருக்கையில் நின்றுகொண்டு வீதியில் செல்வதாக மறுபக்கம் அழைத்தவர் குறிப்பிட்டார்.

அவசரமாக செயற்பட்ட பொலிஸார் அந்த கார் வண்டியை பிடித் தார்கள். அதுவும் அந்த வண்டி அதிவேகப்பாதையில் சென்று கொண்டிருந்தது. “நாம் அந்த காட்சியை பார்க்கும்வரை எம்மால் அந்த அவசர அழைப்பை புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது” என்கிறார் நோர்போர்க் பொலிஸ் அதிகாரி சாட் ரீமன்.

ஆனால் இராட்சத கொம்புகளை உடைய அந்த காளை மாட்டின் உரிமையாளர் லீ மேயர் அதனுடன் பல ஆண்டுகளாக கார் வண் டியில் இவ்வாறு பவனி வருவது அப்போதுதான் பொலிஸாருக்கு தெரிந்தது. காரின் ஒருபக்க இருக்கை மற்றும் கூரை அகற்றப் பட்டு ஓரத்தில் இரும்பு வேலி அமைத்து அந்த காளை பயணிப்ப தற்கு போதுமான வசதி செய்யப்பட்டிருந்தது.

கேட்டால் அந்த காளை தமது குடும்பத்தின் ஒருவராக மாறிவிட்ட தாக மேயர் சொல்கிறார். என்றாலும் அவர் போக்குவரத்து விதியை மீறி இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. பொலிஸார் அவரை கடுமையாக எச்சரித்துவிட்டு அனுப்பிவைத்தனர்.



அதிகாரி : அந்த விமான விபத்து எப்படி நடந்தது ?

பைலட் : யாரோ ஒரு பாராசூட் வீரர், விமானம் பறந்துகிட்டு இருந்தப்ப குறுக்க நின்னு லி∴ப்ட் கேட்–பாராம் .. .



காவலாளி: இந்த குளத்தில் குளிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

பெண்: ஆடை அவிழ்ப்பதற்கு முன்னே சொல்லியிருக்க கூடாதா?

காவலாளி: அதை தடுக்க எந்த சட்டமும் இங்கு இல்லை



ஆசிரியர் : உங்க அப்பா ராத்திரி படுக்கிறப்ப சட்டை பாக்கெட்ல நூறு ரூபா வைக்கிறாரு. காலையில பார்க்கிறப்ப நூறு ரூபா அப்படியே இருக்கு. இதுல இருந்து என்ன தெரியுது ?

மாணவன் : எங்க அம்மா ஊர்ல இல்லேன்னு தெரியுது சார்........



தொண்டர்1 : எலெக்ஷன்ல ஜெயிக்கலைன்னா ஒரு பக்க மீசையை எடுத்துக்க–றேன்னு தலைவர் சொல்றாரே.. ஜெயிச்சுட்டார்னா ?

தொண்டர்2 : ஜனங்களை மொட்டை அடிச்சு–டுவார்



நண்பர் 1 : டி.வி–க்கு கொடுக்கணும்ங்கற எண்ணத்துலயே அந்த டைரக்டர் சினிமா படம் எடுக்கறாரு போலிருக்கு...

நண்பர் 2 : எப்படி சொல்றீங்க..?

நண்பர் 1 : படத்து நடுநடுவிலே நிறைய விளம்பரப் படமும்
எடுத்திருக்காரே



முட்டாள் 1 : ஏன் இத்தனை அவசரம் அவசரமாகப் பெயிண்ட் அடிக்கிறாய்?

முட்டாள் 2 : பெயிண்ட் தீர்ந்து விடுவதற்குள் அடித்துவிட வேண்டும் என்பதற்காகத்தான்.



ராணி : டாக்டர்.. என் கணவருக்கு சில நேரம் என்னை அடையாளம் தெரிய மாட்டேங்குது..

டாக்டர் : எப்படி சொல்றீங்க?

ராணி : சில நேரம் என்னைப் பார்த்தா பயப்பட மாட்டேங்கிறாரு டாக்டர்..



மனைவி: டாக்டர்! என் கணவர் ஒரு பேனாவை விழுங்கி விட்டார்.

டாக்டர்: இன்னும் சில நிமிஷத்தில் வந்து விடுகிறேன்

மனைவி: அதுவரை நான் என்ன செய்வது?

டாக்டர்: பென்சிலை உபயோகியுங்கள்.



பெண்: என்னை கல்யாணம் பண்ணிகிட்டா உங்களோட எல்லா துக்கத்துலயும் நான் பங்கெடுத்துகுவேன்!

ஆண்: சந்தோசம், ஆனா எனக்கு ஒரு பிரச்சனையும் இப்ப இல்லையே!

பெண்: என்னை நீங்க இன்னும் கல்யாணம் பண்ணிக்கவே இல்லையே!



வேணி : குடும்பத் துக்கு விளக்கேற்றி வைக்கப் பொண்ணு வேணும்னு சொல்லி என் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணி னது தப்பா போச்சு..

ராணி : ஏன்?

வேணி : என் மருமகள் விளக்கேத்தறதைத் தவிர வேற எந்த வேலையும் செய்ய மாட்டேங்கிறா..

வேலு : நாங்கள் ஏழு பேர்கள் ஒரே குடையின் கீழ் நடந்து சென்றோம். ஆனால், ஒருவர் கூட நனையவில்லை.

ரமனன் : அதெப்படி?

வேலு : மழையே பெய்யவில்லையே!



நண்பர் : திரும்ப வாங்க முடியாத கடன் கோடிக்கணக்குல இருக்கறதால உங்க பாங்க்குக்கு எதிர்கா–லமே இருக்காதுன்னு சொல்லிக்கறாங்களே?

அதிகாரி : நீங்க வேறே.. எதிர்காலத்–துல எங்க பாங்கே இருக்காதுங்கறதுதான் உண்மை.



ஒருவர்: நீங்க யாரு என்ன சொன்னாலும் ஆமான்னு சொல்லுவீங்களா ?

மற்றவர்: ஆமா!



பாபு : நம்ம ∴பைனான்ஸ் கம்பெனி முதலாளிக்கு பத்மஸ்ரீ பட்டம் தரப்போறாங்களாமே...

வேலு : நிஜமாவா?

பாபு : ஆமாம்... குல்லா போடாம எல்லோருடைய பணத்தையும் வட்டியோட திருப்பித் தர்றாரே.. சும்மாவா

# விவேகம் கல்வியகத்தின் கணிதத் திருவிழா





கொழும்பில் கொட்டாஞ்சேனையிலும் முகத்துவாரத்திலும் சிறப்பாக இயங்கி வரும் விவேகம் கல்வியகமானது, தனது தரம் 6 முதல் க.பொ.த. (சா/த) வரையிலான மாணவர்களின் கணிதத் திறமையை வெளிக்காட்டுதவற்காக கடந்த பௌர்ணமி தினத்தன்று (30.8.2023) கொட்டாஞ்சேனையில் தனது கல்வி நிறுவனத்தில் 'கணிதத் திருவிழா' எனும் பெயருடன் கணிதக் கண்காட்சி நிகழ்வொன்றை இனிதாக நடாத்தியது. இதில் பங்கேற்ற மாணவர்கள்தமிழ் இலக்கியங்களில் கணிதம்,தமிழர்களின் கணிதக் கண்டுபிடிப்புகள், எண்கள் உருவாகி உருமாறி வந்த விதங்கள், கணிதக் குறியீடுகளின் தோற்றம் என பல விடயங்களை சுவாரஸ்யமாக அறியத் தந்தனர். எண்களைப் பயன்படுத்தி பல வியக்கத்தகு விளையாட்டுகளை உருவாக்கி பார்வையாளர்களுடன் விளையாடினர். கண்காட்சியினை காண்பதற்கு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கணித விரும்பிகள் என பலர் வருகை தந்தனர். அனைவரும் இந்நிகழ்வில் பங்கேற்ற அனைத்து மாணவர்களையும் இந்நிகழ்வை ஏற்பாடு செய்த விவேகம் கல்வியகத்தையும் பாராட்டி வாழ்த்தி மகிழ்ந்தனர்.






கொழும்பு விவேகானந்த சபையின் 120 வது ஆண்டு விழாவை முன்னிட்டு நூல் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் (02) வெகு சிறப்பாக நடைபெற்றது. விவேகானந்த சபையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி டாக்டர் எம். ஆர். ராஜமோகன், விவேகானந்த சபையின் நிர்வாக குழுவினர், பெற்றோர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

படங்கள். எம்.நசார்

# "தென்றல்" சஞ்சிகையின் ௬௦ ஆவது இதழ் வெளியீடும், கலைஞர் கௌரவிப்பும்!









மட்டக்களப்பு கல்லடியிலிருந்து கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வெளிவந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கும் "தென்றல்" சஞ்சிகையின் 60 ஆவது இதழ் வெளியீடும், 50 கலைஞர்கள் கௌரவிப்பும் (02) மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியில் இடம்பெற்றது. "தென்றல்" சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர். இதன்போது "தென்றல்" சஞ்சிகையின் 60 ஆவது மலரின் முதல் பிரதியினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும் சமூக சேவையாளருமாகிய விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி நூலாசிரியரின் கரங்களில் இருந்து பெற்றுக் கொண்டுள்ளார். 60 ஆவது மலர் தொடர்பான அறிமுகவுரையினை "தென்றல்" சஞ்சிகையின் ஆசிரியர்பீட உறுப்பினர் இ.கோபாலபிள்ளை நிகழ்த்தியிருந்தார். இதன்போது நாடளாவிய ரீதியாகத் "தென்றல்" சஞ்சிகையின் வளர்ச்சிக்குத் தமது பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருக்கும் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், பாடகர்கள், இசையமைப்பாளர்கள், ஓவியர்கள், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் என 50 பேர் "வீசுதென்றல் விருது" மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் மங்கள விளக்கேற்றப்பட்டு, "தென்றல்" கொடியேற்றப்பட்டதனைத் தொடர்ந்து "தென்றல்" கீதம் இசைத்தலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது. மாணவர்களது கண்கவர் நடனங்கள் இதன்போது அரங்கை அலங்கரித்ததுடன், அதிதிகளின் உரைகளில் 16 வருடங்களை தொட்டுள்ள "தென்றல்" சஞ்சிகையினையும் அதன் ஆசிரியரையும் அனைவரும் பாராட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



Divith



காளி


K. மோகனேஸ்


Mohamed Faizel


R. கிஷாந்தன் குடும்பம்


ஊவா சுரேன்


Gibbons Band


Arunthavam Aruna


மாணிக்கம் காளி


Balendran JP


துரைராசா சுரேஸ்


சங்கர்

## சிவனைப் பார்த்து வீரமுழக்கமிட்ட நக்கீரனை முன்னிறுத்தி

# தனது பெயரை 'இளங்கீரன்' சுபைர் என வைத்துக் கொண்ட இலக்கியவாதி முகம்மது கலீல்

## சுபைர் இளங்கீரனின் மனைவியும் மகனும் செந்தூரம் இதழுக்கு கூறிய கருத்துக்கள்

இந்தியாவில் 27 புத்தகங்ளையும், இலங்கையில் 15 நூல்களையும் எழுதி வெளியிட்ட மிகவும் பிரபலமான இலக்கியவாதி இளங்கீரன் சுபைர். இவரது மனைவியை காணக்கூடிய வாய்ப்பு அண்மையில் கிட்டியது. அது பற்றிய விவரம் வருமாறு,

அன்றொருநாள் எதிர்பாராத விதமாக அழகிய மூதாட்டி ஒருவரை சந்திக்க நேர்ந்தது.

வானத்து நிலா தரையிறங்கியது போன்ற வதனம்.

தாம்பூலம் தரித்த புன்னகைத்த முகம்.

கண்டதும் அளவில்லா மகிழ்ச்சி என்னை வருடியது.

என்னிதயம் அருகில் சென்று பேசத் துடித்தது.

நானும் புன்னகையுடன்

அந்த மூதாட்டி அருகே சென்று "வணக்கம் அம்மா" என்றதும் மிகவும் மகிழ்வுடன்

பதில் வணக்கம் கூறிவிட்டு, "உள்ளே வா பிள்ளை" என்றார். அந்தத் தொனி என் மகிழ்வை இரட்டிப்பாக்கியது.

வயதான அந்த அழகிய மூதாட்டியைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அப்படியொரு மென்மையான பெண். அன்பு பாசம். அத்தனைக்கும் சொந்தக்காரியாக, அடக்கமான பண்பு என்று எல்லாமே நிறைந்தவொரு பூரண சந்திரன் என்றே சொல்லலாம்.

மேலும் சிலவற்றை அறிந்து கொள்ள ஆசைப்பட்ட என் மனம் சில கேள்விகளைக் கேட்கத் தூண்டியது.

அம்மா தங்களின் பெயர் என்ன? என் பெயர் சபியா

தங்களின் வயது? எண்பத்தொன்பது (89)

எண்பத்தொன்பது வயதிலும் தங்களின் அழகின் ரகசியம்?



அல்லாஹ் கொடுத்த கொடை என்று மீண்டும் புன்னகை தவழ்ந்தது...

தங்களின் பூர்வீகம்? சோனகத்தெரு, யாழ்ப்பாணம்

தங்களின் கணவரின் பெயர்? இளங்கீரன் சுபைர்

இளங்கீரன் சுபைர் என்பவர் மாபெரும் எழுத்தாளர் அல்லவா?

ஆமாம்; அவர் எழுத்தாளர்தான்.

அவரது இயற்பெயர் சுபைர் தானா? இல்லை,

எழுத்தாளருக்கு அமையப்பட்ட பெயரே இளங்கீரன் சுபைர்.

இப்போ அவர் காலமாகி 27 வருடங்களாகப் போகிறது என்றதும் சிறு மௌனம் நிலவியது...



(அவரின் நூல்களை வாசிகசாலைகளில் நான் வாசித்தது ஞாபகத்தில் வந்தது)

மிகவும் அருமை அம்மா. மாபெரும் எழுத்தாளரின் மனைவி என்பதால் அவரைப்பற்றிய சில விவரங்களை அறிந்து கொள்ள விரும்புகிறேன். காரணம் நானுமொரு எழுத்தாளர் என்ற முறையில்.

"கேளுங்க மகள்" என்றவரின் முகத்தில் புன்னகையே பொன்னகையாய் பூத்தது.

தங்களின் கணவர் பிறந்த இடம்?

யாழ்ப்பாணம் சோனகத் தெருவில் .

தங்கள் கணவரின் வாழ்க்கை வரலாற்றைக் கேட்பதற்கு மிகவும் ஆவலுடன் இருக்கிறேன் சற்றுச்

சுருக்கமாகக் கூற முடியுமா?

ஆம்

அவர் பிறந்தது யாழ்ப்பாணம்.

படித்தது யாழ். இந்துக் கல்லூரிக்கும் பின்புறம் இருந்த

கில்னர் கல்லூரி ஆங்கிலப் பாடசாலையில்.

என் கணவரின் தந்தை பெயர் சுல்தான். அவர் பெண்களின் ஆடை வடிவமைப்பில் தேர்ச்சி பெற்றிருந்ததால் அவரை 'லேடி சுல்தான்' என்று அழைப்பது வழக்கம்.

(சிறிது தடுமாற்றம் அவரைச் சூழ்ந்தது)

மீண்டும் தொடர்ந்தேன்..

அம்மா தங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?

எனக்கு ஆறு (6) பிள்ளைகள். இரண்டு ஆண்கள், நான்கு பெண்கள்.

அவர்களும் எழுத்தாளர்களா?

என் கணவர் முழுநேர எழுத்தாளர். மகன்மார் வேறு துறைகளுக்குப் போய்விட்டனர். மூத்தவரை எழுத்தாளர், நாடக ஆசிரியர் என்று கூற முடியும். நான் உட்பட எல்லோரும் நல்ல வாசிப்பாளர்கள். கணவர் இறக்கும்வரை வீட்டில் பெரிய லைபேரியே இருந்தது.

எனது கணவர் இளங்கீரன் சுபைரின் விபரத்தை அறிய



இவ்வளவு ஆவலாக இருக்கிறீர், மிகவும் மகிழ்ச்சி மகளே. சற்றுப் பொறுங்கள் என் மூத்தமகனை அழைக்கிறேன். அவரிடம் தந்தையைப் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ளலாம் என்று அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளத் தயாரானதும், நான் மேலும் உற்சாகமானேன்.

(தாயின் அழைப்பை ஏற்ற மூத்தமகன் மறுநாள் மதிய நேரத்தில் அம்மா இருக்கும் வீட்டுக்கு வந்தார். பார்வைக்கு ஒரு பல்கலைக்கழகமாகவே இருந்தார். வணக்கத்துடன் வாருங்கள் என்றேன். பதில் வணக்கத்துடன் அமர்ந்தார்)

தங்களின் பெயர்? நான் மீலாத்கீரன்

தங்கள் தந்தை மாபெரும் எழுத்தாளர், பேச்சாளர் என்பதை நானறிவேன். அவரைப்பற்றி முறையாக அறிந்து கொள்வது

என்னார்வம். தங்களால் முடிந்தவரை கூறமுடியுமா?

ஆம், எனது வாப்பா பிரபல்யமான எழுத்தாளர், மேடைப் பேச்சாளர் என்பது தமிழுலகம் குறிப்பாக, முன்னைய தலைமுறை அறிந்த உண்மை.

எனது தந்தை, அவரது தந்தையுடன் 1947ம் ஆண்டு மலேயா (மலேசியா) பயணமானார். ஆனால் சூழ்நிலை காரணமாக 1951ம் ஆண்டுவரை அங்கு இருக்க வேண்டிய அவசிய நிலை ஏற்பட்டது.

இக்கால கட்டத்தில் அங்கே இலக்கிய, அரசியல் ஈடுபாடு இவரை மேலோங்க வைத்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்திற்கு எதிரான போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். 'நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என சிவனைப் பார்த்து வீரமுழக்கமிட்ட நக்கீரனை முன்னிறுத்தி தனது பெயரை 'இளங்கீரன்' என பொதுத்தளத்தில் அறிமுகப் படுத்தினார்.

மேலும், அப்போது "இனமணி" என்ற தமிழ்ப் பத்திரிகைக்கு ஆசிரியராக தெரிவானார். அதில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஏராளமான எழுச்சிக் கட்டுரைகளைத் தொடராக எழுதி வந்ததுடன் அரசியல் மேடைகளிலும் வீரமுழக்கமிட்டார்.

இதனால் வெள்ளைக்கார அரசு இவரை 24 மணித்தியாலத்தில் நாட்டைவிட்டு வெளியேற்றியது.

தந்தையைத் தன்னுடன் கூட்டிவர முடியாத நிலையில் தனியாக 1951ல் விசாகப்பட்டினம் வந்திறங்கினார்.

அங்கிருந்து சென்னை வந்து தனது எழுத்தைத் தொடர்ந்தார் அவை நாவல்கள் வடிவத்தில் வெளிவந்தன.

அது வாப்பாவுக்குப் பலத்த அறிமுகத்தையும், கூடவே வயிறு நிரம்பச் சோற்றையும் (வருமானம்) போட்டது.

(7 ஆம் பக்கத் தொடர்)

ஒரு பக்கத்திற்கு ஐந்து ரூபா என நிர்ணயமும் செய்ய வைத்தது. எழுத்தின் காரணமாக அவரை திராவிடக் கழகத்திலும் இணைத்தது. அப்போது சென்னை திருவல்லிக் கேணியில் நண்பர் ஒருவரின் வீட்டு மொட்டை மாடியிலிருந்த ஓலைக் குடிசையில் இலக்கிய அரசியல் கூடல்கள் இடம்பெற்று வந்தன. இங்கு வசித்துவந்த வாப்பாவும் இதில் இணைந்து கொள்வது வழமையாகி விட்டது. கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன் , அறிஞர் அண்ணா, ஜெயகாந்தன், அசோகமித்திரன் பாஸ்கரன் போன்றோரும் அடிக்கடி வந்து போவதால் இவர்களுடனான அறிமுகம் ஏற்பட்டு நட்பாகவும் பரிணமித்தது. குடிசை ஒன்றுகூடல் பின்னர் 'மரீனா' கடற்கரைவரை நீண்டது.

ஒருகட்டத்தில் அந்தக் குடிசை தீப்பிடித்ததால் மலேசியாவிலிருந்து கொண்டுவந்த அவரது புத்தகச் சேகரிப்பு அனைத்தும் கருகிவிட்டன.

அதன்பின் திராவிடம் பிடிக்காமல் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்.

ப. ஜீவானந்தம் நல்லகண்ணு, ஜெயகாந்தன் போன்றவர்களுடன் அரசியல் மேடைகளில் தோன்ற ஆரம்பித்தார்.

அங்கிருந்து இலங்கை வந்த வாப்பா 1952 ல் உறவு முறையான உம்மாவைக் கரம்பிடித்தார்.



நான் பிறந்து ஆறு மாதங்களில் மீண்டும் குடும்பத்தோடு சென்னை பயணமானார்.

1956ல் தனது நாவலான 'கலாராணி'யை சேலம் மொடேர்ன் தியேட்டர்ஸ் படமாக்க விரும்புவதாக கலைஞர் கருணாநிதி கூற, அவரது ஏற்பாட்டில் சேலம் சென்று ஹோட்டலில் ரூம் போட்டு மூன்று மாதங்களாக திரைக்கதை, வசனம் எழுதுவதில் மும்முரமானார்.

உம்மாவுக்குச் சென்னை வாழ்க்கை பிடிக்காததால் 1956ல் மீண்டும் குடும்பத்துடன் இலங்கை திரும்பினார்.

இலங்கை திரும்பியதும், ஏற்கனவே நண்பரும், தினகரன் பிரதம ஆசிரியருமான க. கைலாசபதியின் வேண்டுகோளுக்கிணங்க தினகரனில் ஆஸ்தான நாவலாசிரியர்



என்று சொல்லும் அளவுக்கு தொடர் நாவல்களை எழுதினார். நீதியே நீகேள், தென்றலும் புயலும், புயல் அடங்குமா

போன்ற புகழ்மிக்க தொடர் நாவல்கள் பிரசுரமாகின.

இதைவிட சுவாரசியச் செய்தியாக நீதியே நீகேள் எனும் தொடர்நாவல் , 'மறுநாள் முடிவடையும்' என முதல்நாள் பத்திரிகையில் அறிவிப்பு வந்தது தான் வந்தது நாவலில் கடைசியில் கதாநாயகி பத்மினி விபத்தில் இறப்பதை விரும்பாத வாசகர்கள் 'பத்மினி சாகக் கூடாது' என்று கூறி நூற்றுக்கணக்கான தந்திச் செய்திகளை தினகரன் காரியாலயத்திற்கு அனுப்பியதைக் கண்டு தான் மலைத்துவிட்டதாக பிரதம ஆசிரியர் கைலாசபதி 'நீதியே நீ கேள்' என்ற நாவலின் முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார். அந்தளவுக்கு வாசகர்கள் கதையுடனும், கதாமாந்தர்களுடனும் தமது சொந்தப் பிணைப்பாக ஒன்றித்துப் போனார்கள். இக்காலகட்டத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கட்சியின் 'தேசாபிமானி' வாரப் பத்திரிகையினதும் பின்னர் 'தொழிலாளி' வாரப் பத்திரிகையி னதும் ஆசிரியரானார்.

கட்சிப்பணி காரணமாக 1965ல் எழுத்துத்துறைக்கு தற்காலிக முற்றுபுள்ளி வைத்து, இலக்கியப் பணியைத் தாமதமாக்கினார்.

சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் கிழக்கு மாகாண அமைப்பாளராக இருக்கும்படி கட்சி கேட்டுக் கொண்டதற்கிணங்க, கல்முனை மருதமுனைக்குக் குடும்பதுடன் குடிபெயர்ந்தார். அங்கே ஏராளமான வாசகர்கள் எழுத்தாளர்கள் அபிமானிகள் கேட்டுக்கொண்டதால் இவ்விடத் தெரிவு இடம்பெற்றது.

அவர் எழுதிய புத்தகங்களை 1971 காலப்பகுதியில் ஜே வி பியின் ஆயுதக் கிளர்ச்சி காரணமாக ஏராளமான கட்சி மற்றும் புரட்சிகர நூல்கள் அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்த நேர்ந்தது.

இக்காலகட்டத்தில் அப்போதைய வீரகேசரி பிரதம ஆசிரியராக இருந்த சிவப்பிரகாசத்தின் வேண்டுகோளுக்கிணங்க 'அவளுக்கு ஒரு வேலை வேண்டும் ' என்ற தொடர் நாவலை எழுதினார்.

பின்னர், கட்சியின் இயக்கத்தில் பின்னடைவு ஏற்பட்டதால் , மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்த வேளையில், சுனேத்ரா பண்டாரநாயக்க கலாநிதி குமார் ரூபசிங்க தலைமையில் இயங்கிய முற்போக்கு இயக்கமான 'ஜனவேகய' வின் தமிழ்ப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருக்கும்படி வாப்பாவின் நெருங்கிய நண்பர்கள் கூறியதன் பேரில் 'ஜனவேகம்' பத்திரிகைக்கு ஆசிரியரானார். இதன் காரணமாக நாங்கள் குடும்பத்துடன் கொழும்புக்கு நிரந்தரமாக குடிபெயரவேண்டி ஏற்பட்டது. இக்காலகட்டத்தில், பத்திரிகை ஆசிரியர் பணியுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை, முஸ்லிம் சேவை, கல்விச் சேவைகளில் தொடராக வானொலி நாடகங்கள், சிறுகதைகள் ,உரைச்சித்திரங்கள், பேச்சுக்கள் போன்ற பல்வகை ஒலிபரப்புகளில் தனது பங்களிப்பைச் செய்துள்ளார்.

இலங்கை எழுத்தாளர்களான கைலாசபதி, பிரேம்ஜி ஞானசுந்தரம், ஈழத்துச் சோமு, செ. கணேசலிங்கன், கே. டானியல், கனக செந்தில்நாதன், செ. யோகநாதன், செங்கை ஆழியன், சில்லையூர் செல்வராஜன், காவலூர் ராஜதுரை, நீர்வை பொன்னையன் போன்றோருடன் சேர்ந்து 'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கினார். "இவ்வாறு மேலும் சொல்லிக் கொண்டே போகலாம். நான் பிறப்பதற்கு முன்பு நடந்தவற்றை எனக்கு விபரம் தெரிந்த பின் வாப்பா கூறியதையும், நான் பெரியவனாகி அறிவைத் தொட்டதும் நடந்தவற்றை நான் நேரில் கண்டதையுமே இங்கே அறியத் தந்திருக்கிறேன்" என்று கூறியவாறு, அருகிலிருந்த தாயாரைத் தழுவினார். அவருக்குத் தந்தையை வர்ணித்தது மிகவும் பரவசமாக இருந்தது.

இளங்கீரன் சுபைர் என்பது தங்கள் தந்தையின் புனைப் பெயர் அல்லவா? இயற்பெயரைக் கூற முடியுமா?

அவரின் பெயர் முகம்மது கலீல்

அவரின் மரணம் பற்றிக் கூற முடியுமா?

சுகயீனம் காரணமாக நீர்கொழும்பு AVE Maria வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வாப்பா மூன்று நாட்களின் பின்னர் 1996/09/ 12ல் இறையடி சேர்ந்தார். (கண்களில் நீர் கசிந்ததைக் காணமுடிந்தது)

பேட்டி கண்டவர்
**வாசுகி பி வாசு**
கொழும்பு



# 'புதுமைப்பித்தன்' நூலக அரங்குத் திறப்பு விழா! - அரங்கத்தை சீரமைத்துக் கொடுத்த முனைவர் குமார் ராஜேந்திரனுக்கு பாராட்டு

செப்டம்பர் 2ம் திகதி மாலை சென்னை அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டடத்தில் புனரமைக்கப்பட்ட புதுமைப்பித்தன் பெயரிலான அரங்கு திறந்து வைக்கப்பட்டது.

இதனை திறந்து வைத்தவர் தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சரான அன்பில் மகேஷ் பொய்யாமொழி.புதுமைப்பித்தன்பெயரிலான இந்த அரங்கை மிகக் குறுகிய காலத்தில் புனரமைத்து கொடுத்ததோடு அதை இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப நவீன வசதிகளுடன் சீரமைத்துக் கொடுத்தவர் வழக்கறிஞரும் சென்னை ராஜா அண்ணாமலை புறத்தில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். – ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தலைவரும் சென்னை ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை லெஜெண்ட்சின் தலைவருமான முனைவர் குமார் ராஜேந்திரன். இந்த அரங்கை மிகச் சிறப்பாக சீரமைத்துக் கொடுத்த முனைவர் குமார் ராஜேந்திரனை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெகுவாகப் பாராட்டினார். சென்னை மாநகர நூலக ஆணைக் குழுத் தலைவரான கவிஞர்





மனுஷ்ய புத்திரனும் குமார் ராஜேந்திரன் அவர்களுடைய பங்களிப்பின் சிறப்பைப் பற்றி பேசினார். விழாவில் முனைவர் ராஜேந்திரனை வாழ்த்தி பொன்னாடை அணிவித்து கௌரவித்தார் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி. விழாவில் பங்கேற்றுப் பேசிய எழுத்தாளரும் எமரால்டு பதிப்பக உரிமையாளருமான ஒளிவண்ணன், சீரமைப்புப் பணியை பாராட்டினார். அவரைத் தொடர்ந்து பேசிய முனைவர் குமார் ராஜேந்திரன், தான் சென்னை ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை லெஜென்ட்சின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு நூலக ஆணைக்குழுத் தலைவரான கவிஞர் மனுஷ்யபுத்திரன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இரண்டு மாதங்களில் இந்த அரங்கத்தை புனரமைத்துக் கொடுத்ததாகவும், இதேபோல் சென்னையில் உள்ள பல நூலகங்களை புனரமைத்துக் கொடுக்க உள்ளதாகவும் கூறினார். நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்ட நிலையில் கிடந்த அரங்கை புதுப்பித்து தற்காலத்துக்கு ஏற்றபடி நவீன வடிவத்தில் மாற்றியமைத்துக் கொடுத்த அந்த அரங்கில் இனி பரவலாக இலக்கியக் கூட்டங்கள் நடக்கும் என்று எதிர்பார்க்கலாம். சென்னை மாநகருக்கு மத்தியில் இந்த மாதிரியான ஒரு அரங்கு புனரமைக்கப்பட்டிருப்பது இலக்கியவாதிகளுக்கு மட்டுமல்ல பலரையும் ஈர்க்கக்கூடிய ஒரு அம்சமாகும்.



# கங்குலியின் வாழ்க்கை படமாகிறது

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சவுரவ் கங்குலிக்கு ஏராளமான ரசிகர்கள் உள்ளனர். 'கொல்கத்தா தாதா' என்று ரசிகர்கள் செல்லமாக அழைப்பதும் உண்டு. கிரிக்கெட்டில் பல சாதனைகளை தனதாக்கிய சவுரவ் கங்குலியின் வாழ்க்கை திரைப்படமாக எடுக்கப்பட இருக்கிறது. ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா இயக்குகிறார். சவுரவ் கங்குலி கதாபாத்திரத்தில் பாலிவுட் நடிகர் ஆயுஷ்மான் குரானா நடிக்கிறார்.

இந்த படத்துக்காக ஆயுஷ்மான் குரானா, ஓரிரு மாதங்கள் கிரிக்கெட் பயிற்சி எடுத்துக்கொள்ள இருக்கிறார். படத்துக்காக கங்குலி போல சில ஷாட்களை அடித்து ஆட கற்றுக்கொள்ள இருப்பதாகவும் ஆயுஷ்மான் குரானா தெரிவித்துள்ளார்.

ஐஸ்வர்யா ரஜினிகாந்த் தலைமையிலான படக்குழுவினர் சமீபத்தில் சவுரவ் கங்குலியை சந்தித்து, அவரது வாழ்க்கையை படமாக எடுப்பது குறித்த அனுமதியை பெற்றுள்ளனர். மேலும் சவுரவ் கங்குலியை சந்தித்து அவரது எழுச்சி மற்றும் சோதனை காலங்கள் குறித்த விவரங்களை நடிகர் ஆயுஷ்மான் குரானாவும் கேட்டு தெரிந்து கொள்ள இருக்கிறாராம். இதர நடிகர்நடிகைகள் தேர்வு நடந்து வரும் நிலையில், புதிய படத்தின் படப்பிடிப்பு டிசம்பர் மாதம் தொடங்க இருக்கிறது. ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கியுள்ள 'லால் சலாம்' படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது. இதில் முக்கிய கதாபாத்திரத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ளார் என்பது குறி ப்பிடத்தக்கது.



ராஷி கன்னா

# பெண்களை மிக எளிதாக அங்கீகரிக்கமாட்டார்கள்

நடிப்பு தவிர வேறு எந்த எண்ணமும் எனக்கு இல்லை. நான் விதியை நம்புகிறேன். நமது தலையில் எழுதி வைத்தது தான் நடைபெறும் என்பது எனது நம்பிக்கை.

நடிப்பு என்றாலே ரிஸ்க் தான். ஒரு காண்டிராக்டில் கையெழுத்து போடும்போது அந்தப் படம் ஓடுமா?, இல்லையா? என்பது தெரியாது. வெற்றி, தோல்வி என்பது ரசிகர்கள் கையில். ஒரு படத்தின் வெற்றிக்கு பல காரணங்கள் இருப்பது போலவே, தோல்விக்கும் பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு படம் தோல்வி அடையும் போது அதில் நடித்த நடிகைகளின் எதிர்காலம் அதிகமாக பாதிக்கப்படுகிறது.

எல்லா தொழிலிலும் பெண்களுக்கு இந்தப் பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. சினிமா ஒரு கிளாமர் உலகம். அனைவரின் பார்வையும் இந்தத் துறை மீது அதிகமாக இருக்கும். எனவே இங்கு நடைபெறும் சின்ன விஷயங்களைக் கூட பூதக்கண்ணாடி வைத்து பார்க்கிறார்கள். இப்போது எல்லாம் பெண்களுக்கும் தங்களை எப்படி தற்காத்துக் கொள்ள வேண்டும்? என்பது மிக நன்றாகவே தெரிந்திருக்கிறது. எங்களுக்கும் அப்படித்தான். எல்லா இடத்திலும் பெண்களை கொஞ்சம் குறைத்து தான் பார்க்கிறார்கள். பெண்களை உயர்ந்த இடங்களில் அவ்வளவு சீக்கிரமாக அங்கீகரிக்க மாட்டார்கள். உயர்ந்த இடத்திற்குச் செல்வதற்காக பெண்கள் மிகவும் போராட வேண்டி இருக்கிறது. மனிதர்களுக்குள் தலைமுறை தலைமுறையாக ஊறிப்போன ஆண்பெண் வித்தியாசம் அவ்வளவு சீக்கிரம் அவர்களை விட்டு விலகாது.

நான் மிகவும் திருப்தியாக இருக்கிறேன். சாதாரணமாக நான் கடந்த காலத்தையும், வருங்காலத்தையும் நினைத்துக் கொண்டு வாழ மாட்டேன். தற்பொழுது எப்படி இருக்கிறோம்? என்பதை பற்றி மட்டுமே யோசிப்பேன். அதனால் எனக்கு அதிருப்தி இருக்காது. எப்பொழுதும் நான் ஆனந்தமாகவே இருப்பேன். சில ஆண்டுகளாக எல்லோரும் இதே கேள்வியைத் தான் கேட்கிறார்கள்? இப்போது என் இலக்கு சினிமாப் பயணத்தின் மீது தான் உள்ளது. திருமண விஷயத்தில் எனக்கு இன்னும் தெளிவு வரவில்லை. அது வந்த பிறகு முடிவு எடுப்பேன். ஒரு காலத்தில் திருமணமான ஹீரோயின்களுக்கு சினிமா பயணமே முடிந்துவிடும். ஆனால் இப்போது அப்படி அல்ல. திருமணமான பிறகு கூட வாய்ப்புகள் வருகின்றன. 'வேர்ல்டு பேமஸ் லவ்வர்' படத்தில் யாமினி கதாபாத்திரம் தான். அது மிகவும் சவாலான கதாபாத்திரம். அந்த கதாபாத்திரத்தில் நான் வாழ்ந்து காட்டினேன் என்று அனைவரும் சொன்னார்கள். படப்பிடிப்பு முடிந்த பிறகும் கூட நீண்ட காலம் இந்த கதாபாத்திரம் என்னை 'டிஸ்டர்ப்' செய்தது என்றார்.





# தேடி வந்த சந்திரமுகி வாய்ப்பை தவறவிட்ட நடன சூறாவளி

தவளை தன் வாயால் கெடும்.. கங்கனாவுக்கு முன் சந்திரமுகி வாய்ப்பை இழந்த நடன சூறாவளிவீடுசூப்பர் ஸ்டார் நடிப்பில் பிளாக் பஸ்டர் ஹிட் கொடுத்த சந்திரமுகி தற்போது இரண்டாம் பாகமாக உருவாகி இருக்கிறது. பி வாசு இயக்கத்தில் ராகவா லாரன்ஸ் நடித்துள்ள இப்படத்தின் ட்ரெய்லர் வெளியாகி வரவேற்பை பெற்ற நிலையில் படத்தின் ரிலீஸை எதிர்நோக்கி ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் சந்திரமுகி கேரக்டரில் கங்கனாவுக்கு முன் யார் நடிக்க இருந்தது என்ற தகவல் வெளியாகி உள்ளது. முதல் பாகத்தில் சந்திரமுகியால் பாதிக்கப்படுபவராக ஜோதிகா மிரட்டி இருப்பார். கண்ணை உருட்டிக்கொண்டு அவர் நடித்த நடிப்பு இன்று வரை யாராலும் மறக்க முடியாது.

அது மட்டுமல்லாமல் ஜோதிகாவுக்கு அந்த கேரக்டர் இன்றுவரை பெயர் சொல்லும் படியாக இருக்கிறது. அப்படி ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க வந்த வாய்ப்பை நழுவ விட்டது வேறு யாரும் கிடையாது நடன சூறாவளியான சாய்பல்லவிதான். அதற்கான காரணம் தான் தற்போது பலருக்கும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது.

அதாவது முதலில் இந்த கதாபாத்திரத்தை பற்றி சாய்பல்லவியிடம் தான் பி. வாசு விளக்கமாக கூறியிருக்கிறார். கதையைக் கேட்டு விட்டு உடனே சந்தோஷமாக நடிக்க ஒப்புக்கொண்ட சாய்பல்லவி கிளைமாக்ஸ் காட்சியில் சிறு மாறுதல்களை சொல்லி இருக்கிறார்.

இது இயக்குனருக்கு கடும் கோபத்தை கொடுத்திருக்கிறது. நடிக்க கூப்பிட்டால் டைரக்சன் வேலையையும் சேர்த்து பார்ப்பீர்களோ என்று கடுப்பான பி வாசு, சாய் பல்லவியை ரிஜெக்ட் செய்திருக்கிறார். அதன் பிறகு தான் கங்கனா அந்த கதாபாத்திரத்தில் நடிக்க தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவ்வாறு தவளை தன் வாயால் கெடும் என்பது போல் வீடு தேடி வந்த வாய்ப்பை சாய் பல்லவி தவற விட்டிருக்கிறார். ஒரு வேலை அவர் மட்டும் அந்த கதாபாத்திரத்தில் நடித்திருந்தால் நிச்சயம் வேறு மாதிரி வரவேற்பு கிடைத்திருக்கும். இருப்பினும் கங்கனா ஜோதிகாவின் நடிப்பை ஓரம் கட்டி சந்திரமுகியாக நிலைத்து நிற்பாரா என்பதை படம் ரிலீஸ் ஆனவுடன் நாம் தெரிந்து கொள்ளலாம்.



# திருமண பந்தம் மீது நம்பிக்கை



நடிகை தமன்னா இந்தி நடிகர் விஜய் வர்மாவை காதலித்து வருகிறார். இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து இருப்பதாக தகவல்கள் பரவி வருகின்றன. ஐதராபாத்தில் தமன்னா அளித்த பேட்டியில் கூறும்போது, "இப்போது எனது சினிமா வாழ்க்கை நன்றாக போய்க்கொண்டு இருக்கிறது. கடந்த ஐந்து மாதங்களில் எனது நடிப்பில் திரைப்படம், வெப் தொடர் என்று ஆறு படங்கள் வெளிவந்தன. ரசிகர்கள் என் மீது அதிக அன்பு காட்டுகிறார்கள். ரசிகர்களுக்காக என் சக்தியை மீறி உழைக்க தயாராக இருக்கிறேன். ஒரு நடிகையாக தற்போது உயர்வான இடத்தில் இருக்கிறேன். வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடிக்க வாய்ப்புகள் வருகின்றன. திருமண அமைப்பின் மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. திருமணம் என்பது முக்கிய பொறுப்பு. அதற்கு நான் தயாரானதும் திருமணம் செய்து கொள்வேன். இப்போதைக்கு திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லை. எனக்குள் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளது. முன்பை விட தெளிவாக பேச கற்றுக்கொண்டேன். முன்பெல்லாம் இப்படி பேசினால் தவறாக நினைத்துக்கொள்வார்களோ என்ற பயம் இருந்தது. இப்போது அது இல்லை" என்றார்.



# டைரக்டராக விரும்பும் விஜய் தேவரகொண்டா

தெலுங்கில் வசூல் சாதனை நிகழ்த்திய அர்ஜுன் ரெட்டி படத்தில் நடித்து பிரபலமான விஜய் தேவரகொண்டாவுக்கு படங்கள் குவிந்தன. தற்போது முன்னணி கதாநாயகனாக உயர்ந்துள்ளார். தமிழில் நோட்டா படத்தில் நடித்துள்ளார். சமந்தாவுடன் நடித்துள்ள குஷி படம் தமிழ், தெலுங்கு மொழிகளில் வந்துள்ளது. இந்த நிலையில் விஜய் தேவரகொண்டா ரசிகர்கள் கேள்விகளுக்கு பதில் அளித்துள்ளார். அப்போது அவர் கூறும்போது, "எனக்கு டைரக்டர் ஆக வேண்டும் என்ற விருப்பம் உள்ளது. நடிப்பதை கொஞ்ச நாட்கள் ஒதுக்கி வைத்து விட்டு ஏதாவது ஒரு படத்தை இயக்க வேண்டும் என்று ஆசையாக உள்ளது. இளம் வயதில் இருப்பதால் நடிகனாக என்னால் முடிந்தவரை உழைப்பேன். அதன்பிறகு நிச்சயம் இயக்குனராவேன். ஹாலிவுட்டில் கிளாடியேட்டர், தெலுங்கில் போக்கிரி எனக்கு மிகவும் பிடித்த படங்கள். எப்போது திருமணம் செய்து கொள்ள தோன்றுகிறதோ அப்போது செய்து கொள்வேன். எனக்கு மனைவியாக வருபவர் புத்திசாலியாக இருக்க வேண்டும்" என்றார்.



ஓவியா

# நிறைய ரிலேஷன்ஷிப் இருந்தும் செட் ஆகல

பல படங்களில் நடித்திருந்தாலும் பிக்பாஸ் நிகழ்ச்சி தான் ஓவியாவுக்கு இன்று வரை மிகப்பெரும் அடையாளமாக இருக்கிறது. மனதில் பட்டதை பளிச் சென்று பேசக்கூடிய குணமும், துறுதுறு பேச்சும் இவரை ரசிகர்கள் மத்தியில் வெகு சீக்கிரமாகவே கொண்டு சேர்த்து விட்டது. அதன் காரணமாகவே இவருக்கு ஒரு தனி ஆர்மியை தொடங்கி அட்ராசிட்டி செய்த சம்பவமும் நடந்தது. அதை அடுத்து ஒரு சில படங்களில் நடித்த ஓவியா இப்போது சிறு இடைவெளிக்கு பிறகு மீண்டும் தமிழில் சம்பவம், ராஜபீமா, பூமர் அங்கிள் உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில் சமீபத்தில் இவர் அளித்த ஒரு பேட்டியில் தன் வாழ்க்கையில் நடந்த பல விஷயங்கள் குறித்து வெளிப்படையாக தெரிவித்துள்ளார். அதில் தனக்கு இருந்த ரிலேஷன்ஷிப், ஏமாற்றம், அட்ஜஸ்ட்மெண்ட் உள்ளிட்ட பல விஷயங்கள் குறித்தும் அவர் மனம் திறந்து பேசி இருந்தார். அந்த வகையில் ஓவியாவுக்கு ஏகப்பட்ட ரிலேஷன்ஷிப் இருந்ததாம். ஆனால் அதில் ஒன்று கூட எனக்கு செட் ஆகவில்லை என்று அவர் ரொம்பவும் கூலாக கூச்சமே இல்லாமல் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்லாமல் தன்னை நிறைய பேர் யூஸ் செய்து கொண்டார்கள் என்றும் கூறி பகீர் கிளப்பியுள்ளார். அதற்கான காரணத்தையும் அவர் தெரிவித்துள்ளார். அதாவது ஓவியாவிடம் சில பேர் நன்றாக பழகி விட்டு பிறகு பணத்தை வாங்கிக் கொண்டு ஏமாற்றி விடுவார்களாம். அப்படி பண விஷயத்தில் அவர் நிறையவே ஏமாந்து விட்டதாக கூறியுள்ளார். ஆனால் இது எல்லாம் வாழ்க்கையில் நடப்பது தான் என்று அலட்டிக் கொள்ளாமல் கேஷுவலாகவும் பேசி இருக்கிறார். மேலும் சினிமாவில் நடக்கும் அட்ஜஸ்ட்மெண்ட் பற்றி அனைவரும் வெளியில் சொல்ல வேண்டும். பெண்கள் தைரியமாக இருக்க வேண்டும் என்ற அறிவுரையையும் அவர் கொடுத்துள்ளார். இவ்வாறாக தனக்கு இருந்த ரிலேஷன்ஷிப் பற்றி ஓவியா வெளிப்படையாக தெரிவித்துள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

# விஷாலின் 'மார்க் ஆண்டனி'

விஷால் நடித்துள்ள 'மார்க் ஆண்டனி' திரைப்படத்தின் டிரைலர் வெளியாகும் தேதி அறிவிக்கப்பட்டு உள்ளது. சென்னை, திரிஷா இல்லனா நயன்தாரா, அன்பானவன் அசராதவன் அடங்காதவன் போன்ற படங்களை இயக்கிய ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் விஷால் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'மார்க் ஆண்டனி'. இந்த படத்தின் நாயகியாக ரித்து வர்மா நடித்துள்ளார். மேலும் எஸ்.ஜே.சூர்யா, சுனில், செல்வராகவன் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ள இப்படம் செப்டம்பர் 15ம் தேதி திரையரங்குகளில் வெளியாக இருக்கிறது. இந்த படத்தில் விஷால் இரட்டை வேடத்தில் நடித்து இருக்கிறார். இந்த படத்தின் மூன்று பாடல்கள் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றன. இந்த நிலையில் இந்த படத்தின் டிரைலர் வெளியாகும் தேதியை படக்குழு அறிவித்து உள்ளது. அதன்படி 'மார்க் ஆண்டனி' படத்தின் டிரைலர் நாளை (செப்டம்பர் 3) வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனை போஸ்டர் ஒன்றை வெளியிட்டு படக்குழு அறிவித்து உள்ளது.



# மன அழுத்தத்தால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே!

மன அழுத்தம் என்பது நாம் செய்யும் செயல்களை சரியாக செய்வதற்கான மனைநிலையிலிருந்து எம்மை விலகவைத்து தீர்வுகளை சரியாக எடுக்கு முடியாமல் திண்டாட வைக்கும் ஒரு நிலையேயாகும். இந்த மனநிலை பாதிப்புக்கு பெண்களே அதிகமாக உள்ளாகுகின்றனர். இதனால் அன்றாட செயல்கள் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க நேரிடுகிறது.

மன அழுத்தம் இல்லாத வாழ்வை கற்பனை செய்தும் பார்க்க இயலாது. ஒரு அளவு வரை மன அழுத்தம் இருப்பது சீரான வளர்ச்சிக்குத் தேவைப்படவும் கூடும். எனினும், அழுத்தம் அதிகமானால் மனநோயை தூண்டி மன உளைச்சலை அதிகரிக்கும். குறிப்பிட்ட காரணங்கள் அறியப்படாவிட்டாலும், மன அழுத்தத்திற்கும் மன நோய்க்கும் முக்கிய சம்பந்தம் இருப்பது உண்மையே. அநேகமான குறைபாடுகள் மற்றும் பதட்டம் ஆகியவை ஏற்பட மன அழுத்தம் ஒரு காரணமாக விளங்குகிறது. சிக்கலான சமூக, குடும்ப மற்றும் உயிரியல் காரணிகளால் உண்டாகும் பாலியல் தொல்லைகள், உடலியல் தொல்லைகள், மனோரீதியான தாக்கங்கள், குடும்பத்தில் வன்முறை, தாக்குதல்கள் போன்ற குழந்தை அல்லது பதின்பருவங்களில் ஏற்படும் கோளாறுகளும், மன நோய் ஏற்படவும் காரணங்களாகின்றன. இத்தகைய காலப்போக்கிலான அனுபவங்களின் கூட்டு விளைவால் அதிக வாய்ப்புகள் ஏற்பட்டாலும், ஒரேயொரு பெரிய அதிர்ச்சியாலும் மன நோய்கள் ஏற்படக்கூடும். இதற்கெதிரான தாங்குதிறன் நபர்களை பொறுத்து மாறுகிறது. பரம்பரை பாதிப்புகள், குணாதிசயங்கள், எண்ணங்கள், பிற அனுபவங்கள் ஆகியவை காரணமாக தாங்குதிறன் வேறுபடுகிறது.



**வாழ்வியல் அழுத்தம்**

வாழ்வியல் அழுத்தம் என்கிற போது முன்னைய காலங்களில் பெண்களுக்கு திருமணத்திற்கு பின்னரான விடயங்களே சவாலாக இருந்தன. ஆனால் இன்று சிறு பிள்ளைக்குக் கூட மன அழுத்தம் தரக்கூடிய விடயங்கள் நடைபெறுகின்றன. இதற்கு மிகப் பெரிய காரணமாக அமைபவர்கள் பெற்றோரே. ஆம்!

பெற்றோர் பக்கத்துக்கு வீடு அயல் வீடுகளில் உள்ள குழந்தைகளைப் பார்த்து ஒப்பிட்டு தங்கள் பிள்ளைகளை வளர்க்க ஆரம்பிக்கும் போது அந்த சுமை பிள்ளைகள் தலையிலும் விழுகிறது.

பக்கத்துக்கு வீடோ எதிர் வீடோ உங்கள் குழந்தைகளாக கூட இருக்கலாம். அவர்கள் மனநிலை ஆடல் பாடல் சிரிப்பு, விளையாட்டு என்கிற குழந்தைத்தனமான நிலையிலே இருக்கும். பெற்றோர் தான் குழந்தைகளை ஒப்பிட்டு பார்த்து அவர்களை சிற்பிகள் போல செதுக்க முனையும் போது உடைந்து விடுகிறார்கள். இங்கு குழந்தையின் மனநிலை பாதிப்புக்கு உள்ளாகிறது. பெற்றோர் எதிர்பார்க்கும் நிலையில் பிள்ளைகள் இல்லையெனின் பெற்றோரின் மனநிலையும் பாதிக்கப்படுவதுடன் அது அவர்களின் கௌரவப் பிரச்சினையாகவும் உருமாறுகிறது .

அதேபோல படிக்கும் பிள்ளைகளுக்கு எதுவும் இலகுவாக கிடைக்க வேண்டும் என்கிற குணாதிசயம், பரீட்சை தோல்விகளை தாங்கிக் கொள்ள முடியாமை, நினைத்த பெறுபேறுகள் இல்லாமை என்பன அவர்களை மனநோயில் தள்ளுகிறது. குறிப்பாக பெண் பிள்ளைகளே அதிகளவு பாதிக்கப்படுகின்றனர்.

திருமணம் என்கிற நிலைக்குள் காலடி வைக்கும் நேரங்களில் அநேக பெண்களின் வாழ்க்கையில் மனநிலை தளம்பல் அடையும் சந்தர்ப்பம் அதிகமாக இருக்கிறது. அதாவது அங்கும் எதிர்பார்ப்புகள் ஏமாற்றம் கொடுக்கும் போது அல்லது அவர்கள் நினைத்த மாதிரி இல்லாமை, புதிய மனிதர்கள், யாரை நம்புவதென தெரியாத குழப்பம், பொருளாதாரம், செலவுகள் அப்பப்பா .......கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோல மனம் அல்லாடிப் போகிறது. மனநிலை பாதிப்புக்கு இதுவும் மிகப் பெரிய காரணமாகும்.

**தொடரும் ....**



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

## பெண்கள் அலங்காரம் செய்வது ஆண்களைக் கவர்வதற்காகவா?

"அலங்காரச் சாதனங்களுக்காகப் பெண்கள் செலவு செய்யும் தொகையைக் கண்டு ஆண்கள் மிரண்டு போகிறார்கள். பெண்கள் தங்கள் அழகுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்? ஆண்களைக் கவர்வதற்காக அவர்கள் இதைச் செய்வது ஒருவிதத்தில் தங்களையே தாழ்த்திக் கொள்ளும் செயல் அல்லவா?"

ஒரு பெண் தன்னை அழகாகக் காட்டிக் கொள்ள விரும்புவது அவளுடன் பிறந்த குணம். அவளுடைய அந்தச் சுதந்திரமான ஆசை, கலாச்சாரத்தின் ஓர் அம்சமாகி விட்டது. செல்வம் படைத்த ஆணையே பெண் விரும்பி மதிக்கிறாள். எழில் மிகுந்த பெண்ணையே ஆண் விரும்பி ரசிக்கிறான்.

இனப்பெருக்கம் நிகழ்வதற்காக இயற்கை சில தந்திரங்களைச் செய்திருக்கிறது. பூக்கள்கூட



தங்களை வண்ணமயமாக அழகுபடுத்திக் கொள்வதால்தான் தேனீக்களைக் கவர்ந்திழுக்கின்றன. மிருக இனத்திலும் பறவை இனத்திலும் கூட இது பரவலாகக் காணப்படுகிறது.

மனிதர்கள் இந்த விஷயத்தில் வேறுபட்டவர்கள்.

ஓர் ஆண் தன்னை வீரியம் மிக்கவனாகக் காட்டிக் கொள்ள விரும்புகிறான். அந்தச் சக்தி உடல் பலமாகவும் இருக்கலாம்; பண பலமாகவும் இருக்கலாம்.

ஆண்களுக்குப் பணம் என்னவெல்லாம் செய்யுமோ, அதைப் பெண்களுக்கு அழகு செய்து தரும். பணம் படைத்த ஆணிற்கு தடை என்பது பெரும்பான்மையாக இருப்பதில்லை. எங்கு வேண்டுமானாலும் அவனால் தடையின்றிப் போக முடியும். அழகுமிக்க பெண்ணிற்கோ, பணம் தேவையில்லை. அந்த அழகே போதுமானது. உலகில் பெரும்பான்மையான கதவுகள் அவளுக்காகத் திறந்து நிற்கும்.

செல்வம் படைத்த ஆணையே பெண் விரும்பி மதிக்கிறாள். எழில் மிகுந்த பெண்ணையே ஆண் விரும்பி ரசிக்கிறான்.

அன்றாட வாழ்வியலில் இதுவே நடைமுறை என்பதால், பெண்கள் தங்களை அழகாகக் காண்பிக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். இது இயல்பானதுதான்!

**சத்குரு**

# பெண்கள் விரும்பும் ஆடை வடிவமைப்பு

ஆடைகளை வடிவமைப்பது ஒரு நுட்பமான பணியாகும். போதிய பயிற்சி அனுபவம் இல்லாதோர் இத்தொழிலில் ஈடுபட இயலாது. இதற்கென முறையாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் படித்து, பயிற்சி பெற்றவர்களால் மட்டுமே இத்தொழிலில் ஈடுபட முடியும். மக்களால் விரும்பி அணியும் ஆடைகளை வடிவமைக்கும் அனுபவம் மிக்க தொழில்நுட்ப பணியாளர்களுக்கு இன்று உலக அளவில் அதிக வரவேற்பு உள்ளது.

நாகரிகம் வளர்ச்சி அடைவதற்கு ஏற்றவாறு அவ்வப்போது புதிய டிசைன்களை உருவாக்குவது ஆடைகள் வடிவமைப்புத் தொழிலின் முக்கிய அம்சமாகும். ஒரே டிசைனில் அமைந்த ஆடைகளை தொடர்ச்சியாக பல ஆண்டுகள் மக்கள் அணிய விரும்புவதில்லை. வெளிநாடுகளில் ஆடைகள் வடிவமைப்பில் அவ்வப்போது புதிய டிசைன்கள் உருவாகிறது. இதுபோன்று புதிய டிசைன்களை உருவாக்க குறைந்தது 5 அல்லது 10 ஆண்டுகளாகிறது. உதாரணமாக தமிழர்கள் பல நூற்றாண்டு காலமாக சேலைதான் பெண்கள் விரும்பி அணியும் ஆடையாக இருந்தது. பல ஆண்டுகளுக்கு பின் சுடிதார், சல்வார் கமிஸ் போன்ற ஆடைகள் உருவாக்கப்பட்டு தற்போது பெண்களால் விரும்பி அணியும் ஆடையாகத் திகழ்கிறது. ஆடைகள் வடிவமைப்பு தொழிலில் ஆடைகள் மட்டுமின்றி வீட்டிற்கு தேவைப்படும் அலங்காரப்பொருட்கள், படுக்கை அறை, சமையல் கூடத்திற்கு தேவைப்படும் பொருட்களும் அடங்கும்.துணிகளை வடிவமைத்தல், எம்பிராய்டரி போடுதல், தைத்தல், பல்வேறு நாடுகளுக்கும் துணிகளை அனுப்புதல் போன்ற பணிகளில் பலர் ஈடுபடுவதால் ஆடைகள் வடிவமைப்புத் தொழில் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் தொழிலாகவும் திகழ்கிறது.

ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, கவர்ச்சியான வகையில் ஆடைகளை வடிவமைப்பதே ஆடைகள் வடிவமைப்புத் தொழிலாகும். மற்ற தொழில்களை காட்டிலும் ஆடைகள் வடிவமைப்புத் தொழில் முற்றிலும் மாறுபட்டதாகும். ஆடைகள் வடிவமைப்புத் தொழிலானது காலத்திற்கு ஏற்றவாறும், நாகரிகம் வளர, வளரவும் மாறும் தன்மையைக் கொண்டது.














திக்குவெல்லை மௌலானா மௌலவி செய்யது இஸ்மாயில் இமாம் எழுதிய இலங்கையில் தௌஹீத் பிரசாரப்பணி தோற்றமும் வீழ்ச்சியும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் திக்குவெல்லை மின்ஹாத் தேசிய பாடசாலையில் நடைபெற்றது. தென் மாகாண தமிழ் மொழி பாடசாலை பிரதி கல்விப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மஷாயிம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஹமீத் அல் ஹுஸைனியா அதிபர் எம்.ரீ.எம். ரிஸ்கி வரவேற்புரை நிகழ்த்தியதோடு மௌலவி எம்.எஸ்.எம்.பாயிஸ்(இஸ்ஹானி) ஓய்வு பெற்ற முன்னாள் தென்மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.எம். மொஹமட் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் தேர்தல் அதிகாரி எம்.ஆர்.எம். நிஸ்தார் ஆகியோர் கருத்துரையாற்றினர். யோனகபுர ஹம்ஸாவின் கவிவாழ்த்தும் இடம்பெற்ற அதே வேளை நூல் ஆய்வுரையை மௌலானா மௌலவி ஜெ. அப்துல் மஜீத் பாகவீ (பிரதம கதீப், நாகோர் மஸ்ஜித். மலேசியா) நிகழ்த்தினார். சிறப்புரையை திக்குவெல்லை கமால் நிகழ்த்தினார். இந்த நிகழ்வின் போது டமௌலானா மௌலவி செய்யது இஸ்மாயில் இமாம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இதன் போது பிடிக்கப்பட்ட படங்கள்.

# ''தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்'' இன்னிசை மாலை



மீண்டுமொரு இதமான பழைய இடைக்கால முத்தான பாடல்களின் கோர்வையில் Colombo Commodities pvt ltd பிரதான அனுசரணையில் கவிக்கமல் , பாசில், ரஜினி இணைந்து வழங்கும் "அக்ஷரா" "வீனஸ்" இசைக்குழுவினர்களின்" இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக பாடகிகளான கவிக்கமல், பாசில், மொரின் ஜெனற் ,கோபி, கீதா, லோகநாதன், கலந்து சிறப்பிக்கும் "தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் " இன்னிசை மாலை எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிறு மாலை 5.00 மணிக்கு கொழும்பு 07. பொது நூலகத்தில் அமைந்துள்ள பொது நூலக மண்டபத்தில் மிக கோலாகலமாக நடைபெறவுள்ளது.

இலக்கியங்களின் அடைக்கலம் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை அதிதியாக சிறப்பிக்கும இந்நிகழ்விற்கு முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினரும் சமூக சேவையாளருமான எம் எஸ் எம் பைரூஸ் தலைமை தாங்குகிறார்.

பிரதம அதிதியாக சமூக சேவையாளரும் , தொழிலதிபருமான டாக்டர் எம் சீ பஹாரதீன் ஹாஜியார் கலந்து சிறப்பிக்கிறார்.

விஷேட அதிதியாக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் கலந்து கொள்ளும் இந்நிகழ்விற்கு

ஐ டி எம் நேஷன்ஸ் கெம்பஸ் சர்வதேச செயற்பாடுகளுக்கான சமூக நலத்துறையின் தலைவருமான அதி வணக்கத்திற்குரிய பிதா அருட்கலாநிதி எஸ் சந்துரு பெர்ணான்டோ கௌரவ அழைப்பில் வருகைத் தரவிருக்கிறார்.

அதிதிகளாக கொழும்பு முன்னாள் பிரதிமேயர் எம் ரி எம் இக்பால் . S.H.Colour House உரிமையாளரும், சமூகசேவையாளருமான ஜனாப் சாஜஹான், தொழிலதிபர் ரமீஸ் ஹாஜி, திரைப்பட நடிகரும், நடன கலைஞரும், அரசியல் பிரமுகருமான DISCO RAJA எம். எப் .நய்சர் conso பீ. எம் ரமீஸ் மொஹமட், சமூக சேவையாளர் எம் என் எம் ஹிமாஸ், சமூக சேவையாளர் மொஹமட் நிஜாம், கொழும்பு நகரசபை உறுப்பினர் , கலைஞர் எம். என் நசார், தொழிலதிபர் எம் என் எம் ரபீக், சமூக சேவையாளர் மொஹமட் ஹமீட், கொழும்பு நகரசபையின் முன்னாள் உறுப்பினர் எம். பி சுதர்சன், மௌசூம் ஜிபரி, டச் என் டச் சேதுராஜா , சமூகசேவையாளர் சமன்குமார், வசந்தம் எப். எம். முகாமையாளர் லெட்சுமணன் கிருபாகரன். கலைஞர் நந்தகுமார் கலந்து கொள்கிறார்கள். சிறப்பு அதிதிகளாக மொஹமட் சிறாஜ், கலைஞர் ஏ ரவீந்திரன், தொழிலதிபர் அர்சாத் பாரி, திருமதி கௌசலாதேவி கோவிந்தபிள்ளை, கவிஞர் திலகம் பிரேமராஜ், தொழிலதிபர் இராமசாமி சதானந்தன், குருசாமி பிச்சைக்கிருஷ்ணா, கலைஞர் சண்மு, ஓவியநாதன், எஸ். எம். வாஜிட் அலி, கலைஞர் , கவிஞர் தனபாலன், கவிஞர் கலாநிதி ஜனாப் அப்துல் அஸீஸ், மற்றும் தெகிவளை நகர சபை உறுப்பினர் முஸ்தபா ஷரீனா கலந்து கொள்கிறார்கள்.

கலை அதிதிகளாக கலைஞர் ராதாமேத்தா, கலாநிதி சண்முக சர்மா ஜெயபிரகாஷ், கலைஞர் இளங்கோ, இசையமைப்பாளர் பசால் ஜின்னாஹ், இளநெஞ்சன் முர்சிதீன், கலாபூசணம் மொஹமட் அலி, இசையமைப்பாளர் எம் ரி தவராசா, பாடகர் இசையமைப்பாளர் முபாறக் இல்யாஸ், சிரேஷ்ட ஊடகவியலாளர் கே ஈஸ்வரலிங்கம் , கவிஞர் ஈழ கணேஸ், கவிமணி நஜ்முல் ஹுசைன், இளநெஞ்சன முர்சிதீன், கவிஞர் முஸம்மில், யாழ் அசீம், தமிழ் தென்றல் அலிஅகபர் மற்றும் கிரிஸ்டி ரோஸ், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ எல் எம் உவைஸ், கெப்பிட்டல் எப் எம் அலைவரிசை பிரதானி ஷியா உல் ஹசன் உட்பட ஆளுமைகள், கவிஞர்கள் , அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், தொழில் அதிபர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வை இலவசமாக கண்டுகளிக்க அன்புடன் அழைக்கிறார்கள் விழா ஏற்பாட்டாளர்கள். நிகழ்ச்சி தொகுப்பு சிரேஷ்ட கலைஞர் இராமன் கேதீஸ்வரன். இந்நிகழ்ச்சியில் கலைஞர்களை ஊக்குவிக்கும் "உழைப்பால் உயர்ந்தவர்கள்" வரிசையில் இம்முறை நான்கு அனுசரணையாளர்கள் சமூக சேவையாளரகள், கௌரவிக்கப் படவிருக்கிறார்கள்.

அந்த வரிசையில் தேசமான்ய ,தேச சக்தி, லங்காபுத்ர முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் கலைஞர் ஜோசப் பெரண்னான்டோ, தேச சக்தி சமாதான நீதவான் நடேசன் புவனேஸ்வரன், சமூக சேவையாளர் சமாதான நீதவான் மக்கள் நலன் சம்மேளனத்தின் தவிசாளர் அஸீஸ் லக்கானா, இலங்கை கிரிக்கட் சபை பயிற்றுவிப்பாளர் விஷ்வ கீரத்தி ஜே எம் எம் ரிஸ்வான் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். இந் நிகழ்ச்சிக்கான பிரதான ஊடக அனுசரணை தினகரன் பத்திரிகை, கெப்பிட்டல் எப். எம். , மொஹபத் tv , அக்ஷரா தமிழ் ஆகியன வழங்குகின்றன.

## என்னில் கோபுரக் கலசமாய்

உன் விழியில்
விழுந்த நொடி
உன் ஒற்றைப்
பார்வையில் மனம்
பித்தாகி நான் மயங்க
தூக்கம் தொலைத்த
கண்கள் தூர்ந்தே
போனதடி
நெற்றிப் புரளுமுந்தன்
கற்றைக் குழலினில்
தூளி கட்டியாடத்
துடிக்குதெந்தன் மனது.

## காடுகள்

காடுகள் – நம்
வாழ்விடத்தின் கடைகால்கள்
ஆனால்... நாம்
தகர்த்துக் கொண்டிருக்கிறோம்.
காடுகள் – நம்
உயிர்வளி சேமிப்பகங்கள்
ஆனால்... நாம்
செலவழித்து கொண்டிருக்கிறோம்.

## வாழ்க மகளீரே

கதம்பத்தின் திருமகளே
பெண்ணியத்தின் நிறமகளே
கண்ணியத்தின் நிறைமகளே
தாய்மையின் கருமகளே
வாய்மையின் உருமகளே
பெண்மையின் பெருமகளே
தண்மையின் உறைமகளே
குழந்தையின் கருமகளே
சலங்கையின் ஒலிமகளே
கணவனின் மெய்மகளே
கருத்தினில் மறைமகளே
விழிகளின் கயல்மகளே
விருந்துகளின் சுவைமகளே
விம்பத்தின் நிலமகளே
விருட்சத்தில் நிழல்மகளே
உலகத்தின் மென்மலரே
உயிர்களின் மூச்சிவளே
வாழ்க வாழ்க மகளீரே
வாழ்த்துகின்றேன் மனங்குளிர...

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்



## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## நேரத்தைக் குறித்துக்காட்டுங்கள்







# நமக்குள் மறைந்திருக்கும் நிந்தவூர் கலைஞன் எம்.ஐ. உஸனார் ஸலீம்

நிகழ்கால இலக்கியத்தளத்தில் வளர்ந்து வரும் கலைஞர்கள் தமக்கு முன்னின்ற கலைஞர்களுக்கான உரிய இடத்தை வழங்கிட முன் வராத காரணங்களால் நமது பல நல்ல கலைஞர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிறந்தகத்திலே மறைந்த முகங்களாகவே பார்க்கப் படுகின்றனர்.

இருப்பினும் அவர்களின் சிறந்த எழுத்துக்களுக்கு எங்கேயோ ஒரு வாசகன் இல்லாமல் இருந்ததில்லை.

அந்த வகையில் நிந்தவூரில் 1963/04/20 இல் பிறந்து அவ்வூரிலே வாழ்ந்து வரும் பல்துறை கலைஞர் என்று சொல்லலாம். அவர்தான் நிந்தவூர் எம். ஐ. உஸனார் ஸலீம். அவரைப் பற்றிய நேர்காணலின் தொகுப்பைத் தருகிறேன்.

1975 காலப் பகுதியில் இலங்கை வானொலி தேசிய சேவையில் 'பாராளுமன்றத்தில இன்று ' எனும் நிகழ்ச்சியை அதன் தொகுப்பாளர் 'அண்டனி ராசைய்யா' தொகுத்து வழங்கி வந்தார். அந்நிகழ்வினை பாராட்டி 'நேயர் கடிதம் ' ஒன்றை இலங்கை வானொலிக்கு அனுப்பி வைத்தேன். அடுத்த கிழமை அந்தக் கடிதம் வாசிக்கப்பட்டது. இதுவே எழுதுவதற்கான ஆர்வத்தை எனக்குள் ஏற்படுத்தியது.



அதனைத் தொடர்ந்து இலங்கை வானொலி முஸ்லிம் சேவையிலும் வர்த்தக சேவையிலும் நாடகம், சிறுகதை, கட்டுரை என்னால் பிரதிகள் எழுதப் பட்டு அது ஒலிபரப்பபப்பட்டது.

ஓலி மஞ்சரி, வாலிப வட்டம், ஆடவர் அரங்கு, இளைஞர் இதயம், இளைஞர் மன்றம், போன்ற வானொலி நிகழ்ச்சிகளுக்கு ஆக்கங்கள் எழுதியதோடு மட்டுமல்ல இவர் இந்நிகழ்ச்சிகளில் நேரடியாகவும் பங்கு பற்றியுள்ளார்.

மேலும் இவர் 1985 ஆம் ஆண்டு 'புன்னகை' எனும் ரோணியோ சஞ்சிகை இதழை வெளியீடு செய்துள்ளார். அச்சஞ்சிகை மட்டக்களப்பு சர்வோதயம் நடாத்திய அகில இலங்கை மட்டத்திலான இலக்கிய புத்தக கண்காட்சியில் ரோனியோ சஞ்சிகை இதழுக்காக இரண்டாமிடம் பெற்று பரிசினைப் பெற்றுக்கொண்டது தனக்கு சந்தோஷம் தருவதாக கலைஞர் உஸனார் ஸலீம் குறிப்பிடுகிறார்.

அதனைத் தொடர்ந்து "தேன்மழை" என்ற கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தேன். பின்னர் அப் பத்திரிகையை நிந்தவூர் எழுத்தாளர் சங்க வெளியீடாக தேன் மழை வலம் வந்தது என்பதையும் எம். ஐ.உஸனார் ஸலீம் ஞாபகப்படுத்தினார்.

இவர் 350 மெல்லிசைப் பாடல்களை எழுதியுள்ளார். அதில் 300 பாடல்கள் இலங்கை வானொலி தேசிய சேவையிலும் மற்றும் முஸ்லிம் சேவையிலும் ஒலிபரப்பப் பட்டது.



நூர்ஜஹான் மர்சூக்,நிசார் ரஹிம்,எம். எச். பெளசூல் அமீர்,கலாவதி சின்னச்சாமி,முத்தழகு,எஸ். கணேஷ்வரன் போன்ற சிரேஷ்ட அறிவிப்பாளர்கள்,பாடகர்கள் இவரெழுதிய பாடல்களை பாடியுள்ளார்கள். அந்த வகையில் இவரொரு பாடலாசிரியராகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது பாராட்ட வேண்டிய தருணமாகும்.

கண்ணுக்குள் ஒரு வெள்ளை நிலா பெரு
மின்னலிட்டுச் சிரிக்குதடா..!



கன்னங்களில் இரு பள்ளநிலா என்னை
கண்ணமிட்டே வதைக்குதடா ..!

என்ற பாடலை அறிவிப்பாளரும் பாடகருமான எஸ். கணேஷ்வரன் வர்த்தகசேவை முத்து விதான நிகழ்ச்சியில் இப்பாடலை பாடியபோது பலரது உள்ளங்களை கவர்ந்ததுடன் பாடலும் பிரபலமானது. அதே நிகழ்ச்சியில் சிரேஷ்ட அறிவிப்பாளராக இருந்த கே.ஜெயகிருஷ்ணா அவர்கள் இப்பாடலை பாடிய பாடகர் எஸ். கணேஷ்வரனை 10 நிமிடங்கள் இப் பாடல் பற்றி நேர்காணல் செய்தார்.

அக்காலத்தில் மேற் சொல்லிய பாடல் பிரபல்யமடைந்ததன் காரணமாக இப்பாடல் பின்னர் தொலைக் காட்சியிலும் ஒளிபரப்பப் பட்டது.

முதன் முதலில் இலங்கை வானொலி ஒலிபரப்புத் கூட்டுத் தாபனத்தில் கணனி மூலம் இசையமைக் கப்பட்ட பாடலாகவும் இது அமைகிறது. இசையமைத்தவர் இசையமைப்பாளர் திரு.சரத் விக்ரமசிங்க என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொலைக்காட்சியில் இவரது மூன்று நாடகங்கள் ஒளிபரப்பப்பட்டன. அதில் இரண்டு நாடகங்கள் "மபாஹிர் மௌலானாவின்" தயாரிப்பில் ஒளிபரப்பப் பட்டது என பெருமையாக கூறிக் கொண்டார்.

பத்திரிகைத்துறையை பொருத்த வரை இவர் தினகரன் நாளிதழ், தினகரன் வாரமஞ்சரி, சிந்தாமணி,தினபதி, வீரகேசரி, சூடாமணி, சுடர்ஒளி, மித்திரன் வாரமலர், ஜனனி, விடிவெள்ளி, மற்றும் சஞ்சிகைகளுக்கும் பல்வேறு ஆக்கங்கள் எழுதியுள்ளார்.

பத்திரிகையில் தனது முதல் ஆக்கம் தினகரன் பத்திரிகையில் கல்விப்பகுதியில் "கல்வி வளர்ச்சியில் பெரியோர்களின் பங்களிப்பு" என்ற கட்டுரையின் மூலமே அறிமுகமானதாகவும் அப்போது தான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலம் எனவும் கலைஞர் உஸனார் ஸலீம் குறிப்பிடுகிறார்.

இவர் எழுதிய பாடல்கள் தொலைக் காட்சியிலும் ஒளிபரப்பப் பட்டுள்ளது. அந்தப் பாடல் வரிகளை பகிர்ந்து கொண்டபோது

குயிலே உன் பாட்டுக்கு அர்த்தம் என்ன?
கூவென்று இசைபாடும் ஏற்கமென்ன?
வயலோரச் சோலையில் அலைவதென்ன
வண்ண மாங்குயிலின் சேதியென்ன?

இப்பாடலை கலாவதி சின்னச்சாமி அவர்கள் பாடியிருந்தார் என்று அப் பாடகரையும் நினைவு கூர்ந்தார்.

1997 இல் இலங்கை ஒலிபரப்புத் கூட்டுத்தாபனமும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சும் இணைந்து நடாத்திய நாடகப் பிரதி எழுதும் போட்டியில் இரண்டாமிடம் பெற்றதாகவும் அதில் இலங்கை நாடகத் துறையின்



தந்தை என அழைக்கப் படும் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை முதலாம் இடம் பெற்ற தகவலையும் எம். ஐ. உஸனார் ஸலீம் கூறிக்கொண்டார்.

இவர் தமிழ் தினப் போட்டிகளில் மற்றும் இலக்கிய போட்டிகளில் நடுவராக கலந்து கொண்டுள்ளார். வானொலி,பத்திரிகை, தொலைக்காட்சிகளின் கலை இலக்கிய பங்களிப்புக்காக கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலக கலாசார பிரிவும் சேர்ந்து வாழ்நாள் சாதனையாளர் விருதும் மற்றும் கலைஞர் சுவந்தம் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பதையும் அறியத் தந்தார்.

இவர் அரசினர் கலவன் முஸ்லிம் பாடசாலை மற்றும் நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை,சம்மாந்துறை தொழிற்நுட்ப கல்லூரி என்பவற்றின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் எழுதி வைத்திருக்கும் பிரதிகள் நூலாக வெளிவர ஒத்துழைப்பு வழங்கி இவரது கலை இலக்கிய சேவைகள் தொடர வாழ்த்துவோம்.

கவிச்சுடர்
**ஏ.எம். கஸ்புள்ளா**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

# புதுநானூறு

மஹாகவி: ஈழத்தில் இந்தச் சொல்லின் தொடர்ச்சி து.உருத்திர மூர்த்தி.நவீன கவிதையின்

வீச்சமாய் வெளிப்பட்டவர்;பேச்சோசைப்–பண்பை சொற்களில் மிதக்க

விட்டவர்;தமிழ்க்கவிதையின் இன்னொரு பாய்ச்சல் மஹாகவி.

ஈழத்தின் நவீன தமிழ்க்கவிதை மூல–வர்களுள் முதன்மையானவர் மஹாகவி

து.உருத்திரமூர்த்தி.உருவத்தில் புதுமை புகுத்தியவர்:

உள்ளடக்கத்தில் யதார்த்தம் கைக்–கொண்டவர்'இன்னவைதாம் கவி எழுத ஏற்ற பொருள் என்று

பிறர் சொன்னவற்றை நீர் திரும்பச் சொல்லாதீர்,சோலை,கடல்,மின்னல்,மு–கில்,தென்றலினை

மறவுங்கள்,மீந்திருக்கும் இன்னல்,–உழைப்பு,ஏழ்மை,உயர்வு என்பவற்றைப் பாடுங்கள்'இந்தத்

தொனியே மஹாகவியியலின் ஆதாரம்.

இன்றைய கவிதையில்'இன்றைய காலத் திருக்கும் மனிதர்கள் இன்றைய காலத்தியங்கும்

நோக்குகள் இன்றைய காலத் திழுப்புகள் எதிர்ப்புகள் இன்றைய காலத் திக்கட்டுக்–கள்'எனக்

கவிதையை இற்றைப்படுத்தியவர் மஹாகவி.

மஹாகவி எழுத்துக்களை ஒன்று சேர்க்கிறபோது இந்தக்குரல் மேலெழுந்து நிற்பதைக்

காணலாம்.

குறும்பா,நவீன கவிதை,பாநாடகம்,நவீன காவியம் என எழுத்தில் ஆழ வேரூன்றி நின்றவர்

இவர்.

தமிழ் நவீன கவிதையில் மஹாகவி–யின் இப்பெறுமானம் முக்கியமானது.'பா–ரதி வளர்த்த சில

கவிதைப் பண்புகளில் தோல்வியே பிச்–சமூர்த்தி என்றால் அத்தோல்வி நிகழாமல் கவிதையை

இன்னொரு கட்டத்துக்கு உயர்த்திய வெற்றியே மஹாகவி'என்கிற சண்முகம் சிவலிங்கம் கூற்று

மனங்கொள்ளத்தக்கது.பிச்சமூர்த்தியி–லிருந்து சமூகத்தளத்தில் கவிதையை முன்னெடுத்த

முகிழ்ப்பு மஹாகவி.

இவரது கவிதைகள் உணர்வில் இயங்குபவை.பெரும்பாலும் முற்றுருவத்தில் விரிபவை.

'தேரும் திங்களும்' தமிழர் வாழ்வியலின்' குணாம்சத்தை தோலுரித்த கவிதை; பேச்சோசைக்குள்

மானுட உணர்வைப்பாய்ச்சிய படைப்பு.

'ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிற–தே;வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை' என்று

வந்தான் ஒருவன்.வயிற்றில் உலகத்தாய் நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்வதற்–காய் பெற்ற

மகனே அவனும்,

பெருந்தோளும் கைகளும்,கண்ணில் ஒளியும்,கவலையிடை உய்ய விழையும் உளமும்

உடையவன் தான்.

வந்தான்,அவன் ஓர் இளைஞன் ;மனிதன் தான்.

சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து வானத்தே முந்த நாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு

மீண்டவனின் தம்பி

மிகுந்த உழைப்பாளி!

'ஈண்டு நாம் யாரும் இசைந்தொன்றி நின்றிடுதல் வேண்டும்' எனும் ஓர் இனிய விருப்போடு

வந்தான் குனிந்து வணங்கி வடம் பிடிக்க நில்!' என்றான் ஓராள்

'நிறுத்து!'என்றான் மற்றோராள்

புல்' என்றான் ஓராள்

'புலை' என்றான் இன்னோராள்

'கொல் 'என்றான் ஓராள் 'கொளுத்து'–என்றான் வேறோராள்.

கல்லொன்று வீழ்ந்து

கழுத்தொன்று வெட்டுண்டு

பல்லோடு உதடு பறந்து சிதறுண்டு

சில்லென்று செந்நீர் தெறித்து

நிலம் சிவந்து மல் லொன்று நேர்ந்து மனிசர் கொலையுண்டார்.

ஊரெல்லாம் கூடி இழுக்க உகந்த தேர்

வேர் கொண்டது போல வெடுக்கென்று நின்றுவிடப் பாரெல்லாம் அன்று படைத்–தளித்த

அன்னையோ உட்கார்ந் திருந்துவிட்டாள் ஊமையாய்த் தான் பெற்ற மக்களுடைய

மதத்தினைக் கண்டபடி.

முந்தநாள் வான முழுநிலவைத் தொட்டு விட்டு வந்தவனின் சுற்றம் அதோ

மண்ணில் புரள்கிறது!

மகாகவியின் தேரும் திங்களும் தலைபொரு குறியீட்டுப் பெறுமானம்.

தேர் நிலத்திழுப்பு;ஒற்றுமையின் சின்–னம்;பக்திமையின் செயல் வடிவம்.திங்கள் வானத்தின்

உயர்வு;அறிவு மேம்பாட்டான் உயர்நிலை.

தேர் பண்பாடு: திங்கள் அறிவியல். அறிவியலுக்கும் பண்பாட்டுக்குமிடையி–லான மனாத

முரணை கவிதைவழி காட்சிரூபமாக்கு–கிறார் கவி.

மதத்தின் பெயரால் நம் தேசத்தில் நிகழ்ந்த தீண்டாமைக் கொடுமையை



கப்புலக்காட்சியாக்குகிறார் மஹாகவி.

இந்தக்கவிதையில் மானுட நேயத்தையும் சமூக ஒருங்கிசைவையும் வலியுறுத்தும் பாங்கும்;அது

எதிர்கொள்ளும் சவாலும் நுண்ணு–ணர்வும் வாசக மனசைப்பிராண்டுகின்றன.

கவிதையின் கதையில் 'வந்தான் ஒரு–வன்'அவன் யார்?

வடம் பிடிக்க வந்தவன்;

மனித நேயன்;சமூக உணர்வாளன்;ஒற்–றுமை அழைப்பாளன்.அதனால் அவன்'–வயிற்றில்

உலகத்தாய் நொந்து சுமந்திங்கு நூறாண்டு வாழ்வதற்காய் பெற்ற மகனே'

அத்தகைய மானுட நேயன். வீரன்;–தீட்சண்யம் மிக்கவன்;ஆயிரந் துயரையும் மிஞ்சும் நெஞ்சுரம்

கொண்ட இளையவன்.

சமூக மனிதனை அறிமுகப்படுத்தும் விதம் மஹாகவியின் சொல்லாற்றல் வல்–லமைதான்.

'முழு நிலவைத்தொட்டு விட்டு மீண்டவ–னின் தம்பி'என்பதனூடாக அறிவியலில் மட்டுமல்ல

பண்பாட்டிலும் நமது சமூகம் மேம்பாடு–டையது என இளைஞனை முன்வைத்துப் பேசுகிறார்.

மஹாகவி காட்டும் பொதுமைப்பண்பு இக்கவிதையின் உயிரோட்டம்.'ஈண்டு நாம்

யாரும்இசைந்தொன்றி நின்றிடு–தல் வேண்டும்'எனும் இனிய விருப்பை விதைக்கிறார்.

அஆனாலும் அத்தகயை நல்லுணர்–வின் வாழ்தல் கணம்தான்.கதையில் வரும் உயர்சாதித்திமிர்

'நில்,நிறுத்து,புல்,புலை,கொல்,கொளுத்–து,நிகழும் வெறியாட்டம் சினத்தின் உச்ச உடர்வை

வாசகரில் பற்ற வைக்கிறது.ஆவேசத்–தின் சொற்களை ஓசையுணர்வில் பாய்ச்–சுகிறான் கவிஞன்.

மஹாகவியின் ஆத்திரம் பொங்குகிறது'

மனிசர் கொலையுண்டார்'என்று சொல்–லுகிறபோது வெளிப்படும்

வெறுப்பு,கோபம்,ஆதங்கம்,கையறுநி–லை,இந்நிலையில் தான் உலகத்தாய்

மனிதரின் வாழ்க்கை ?

மதத்தை மீறிய மதம் கொண்டோர் இழி–நிலையை என்னவென்பது.

கவிதை முடிகிற இடத்தில் மஹாகவி எழுப்பும் கேள்வியின் அதிர்வானது.

'முந்த நாள் முழுநிலவைத் தொட்டு விட்டு வந்தவனின் சுற்றம்

அதோ மண்ணில் புரள்கிறது'

அறிவியலில் உயர்ந்த மனிதர் பண்–பாட்டில் வீழ்ந்து கிடக்கின்றனர் 'தேரும் திங்களுமாக

# புத்தகத் திருவிழாவைக் கொண்டாடுதல்

புத்தகங்கள் உற்சாகத்தின் விதையி டங்கள்; வாசிப்பின் மகிழ் பொழுது கள்; தேடலின் தெவிட்டாத கனிவு மையங்கள்.

புத்தகத்தேடல் அறிவின் விருட் சிப்பு மட்டுமல்ல பெரும் மானுடப் பண்பாட்டின் அடையாளமும்தான். புத்தகங்களைக் கொண்டாடுதல் சிந்த னைப் பண்பாட்டுச்சமூகத்தின்

குணாம்சம்.

இன்று எண்மவெளியின் வியாப கம் கணிணி மையச்செயலூக்கத்தை இளஞ்சமூகத்தில்

உட்புகுத்திய சூழலில் புத்தகத்திரு விழாக்களின் பெறுமானம் கேள்விக் குள்ளாகிற சூழலில் புத்தகத் திருவி ழாக்கள் தேசிய ரீதியிலும் பிராந்திய அளவிலும் முகிழ்ப்புறுகிறது.



வாசிப்பைக்கருக விடாமல் அதன் அரும்புநிலையை மேம்படு த்தக்க வகையில் பாடசாலைகளும் பல்க லைக்கழகங்களும் இவாசிப்பின் கனதியணர்ந்து புத்தகத் திருவிழாக் களைக் கொண்டாட வேண்டும். இதற்கென இவற்றின் நூலகங்கள் உயிர்ப்புற வேண்டும். மாணவர்களை ஆற்றுப்படுத்தும் வகையில் தேசிய வாசிப்பு மாதத்தின்

செயற்றிட்டங்கள் முனைப்புற வேண்டும்

எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பரந்தளவான நூல் கொள் வனவுகளை நிதியங்கள் முன்னெ டுக்கவும் வேண்டும். மறுமுனையில் பாடசாலை நூலகங்களை புத்தக

அன்பளிப்புகளால் நிறைவு படுத்தி வாசிப்பின் பெறுமானத்தை

இற்றைப்படுத்துவதும் அவசியமா கும்.




# ஔவன் கவிதை



ஔவன் கவிதை
+
பறத்தலெனும் இருத்தல்

நான் சொற்களில் பறவை நெய்கிறேன்
பறத்தலென்பது
உயிர்த்தல்
இறகுகளை அளவெடுத்து வார்க்கிறேன்
இறகின் நரம்புகளில் வீரியத்தைப் பெய்கிறேன்
வர்ணங்களின் கலவையை சிறகுகளின் மேல் பூசுகிறேன்
அதன் சிலிர்ப்பில் கொட்டுண்ட நிறத்துளிகளால்
முகத்திரண்டு விழி வரைகிறேன்
பறத்தல் விதியென்கிறது சொல்
சொல்லுதலை
எழுதுகிறது சிறகு

# காவத்தையூர் பழனியாண்டி கனகராஜாவின் எண்ணங்களின் வண்ணங்கள் நூல் வெளியீடு







# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்—24

ஜெயிலிலிருந்து விடுதலை பெற்று வந்த எம்.ஆர்.ராதாவுக்கு நாடகங்களில், சினிமாவிலும் நடிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. எம்.ஆர் ராதாவுக்கு இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. வேதனையால் வெந்து கொண்டிருந்த எம்.ஆர். ராதா தனது குடும்பத்திலுள்ள ஒரு முக்கியமான நபர் மூலம் முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் உதவி கேட்டு அனுப்பினார். உதவி என்றால் பணம் அல்ல. மீண்டும் சினிமாவில் நடிக்க தனக்கு வாய்ப்பு அளிக்கும்படி சினிமா தயாரிப்பாளர்களிடம் சொன்னால் போதும். இந்த தகவலை எம்.ஆர்.ராதாவின் குடும்பத்திலுள்ள முக்கியமான நபர் எம்.ஜி.ஆரை நேரில் சந்தித்து சொன்னார்.இதைக் கேட்ட எம்.ஜி.ஆர் எம்.ஆர் ராதாவுக்காக வந்த நபரிடம் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சற்று நேரம் மௌனமாக இருந்து விட்டு பேச தொடங்கினார். “ஐயா” ராதா அண்ணன் ஒரு பெரிய கொலை குற்றவாளி என்று குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்த பிறகு விடுதலையாகி வந்துள்ள செய்தி இந்தியா முழுவதும் நன்கு தெரிந்த விடயம். அவர் ஒரு கொலை குற்றவாளி, நான் ஒரு முதலமைச்சராக இருக்கிறேன். இந்த சூழ்நிலையில் நான் எப்படி உதவி செய்ய முடியும். உதவி செய்யலாமா? நான் ராதா அண்ணனுக்கு உதவி செய்தால் மற்றைய அரசியல் வாதிகளும், பொது மக்களும் என்ன நினைப்பார்கள். நான் ராதா அண்ணனுக்கு எந்த உதவியும் செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன். அதற்காக வருத்தமடைகிறேன் என்று ராதா அண்ணனுக்கு சொல்லி விடுங்கள் ஐயா” என்று கூறி ராதாவுக்காக வந்த நபரை வழியனுப்பி வைத்தார்.



எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் இணைந்து நடித்த அடிமைப்பெண் படப்பிடிப்பு ஜெய்ப்பூர் அரண்மனையில் நடைபெற்றபோது, ராஜஸ்தான் முதலமைச்சராகவிருந்த மோகன்லால் சுகாதியா எம்.ஜி.ஆரையும் ஜானகியையும் அழைத்து தனது மாளிகையில் அருமையான விருந்து கொடுத்தார். எம்.ஜி.ஆர் விருந்தை சாப்பிட்டு விட்டு விடை பெறும்போது முதல்வர் சுகாதியா ஒரு பரிசு கொடுத்தார். உடனே இது என்ன பரிசு? என்று கேட்டார். அதற்கு முதல்வர் பெட்டியை திறந்து பாருங்கள் என்றதும், பெட்டியை திறந்து பார்த்த எம்.ஜி.ஆருக்கு ஆச்சரியமாக இருந்தது. அதற்குள் ஒரு தொப்பி இருந்ததை பாரத்துத்தான் ஆச்சரியப்பட்டார். உடனே அந்த தொப்பியை எடுத்து புரட்டி, புரட்டி பார்த்தார். அடுத்த கணம் எம்.ஜி.ஆர் அந்த தொப்பியை சுகாதியிடமே கொடுத்து, என் தலையில் தொப்பியை நீங்களே வைத்து விடுங்கள் என்றதும் உடனே அவர் தொப்பியை எம்.ஜி.ஆரிடம் இப்பொழுது நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள் என்றதும் எம்.ஜி.ஆருக்கு மிகவும் மகிழ்ச்சியாகி விட்டது. முதல்வருக்கு நன்றி கூறி விட்டு எம்.ஜி.ஆர் புறப்பட்டார். காரில் போய்க் கொண்டிருக்கும் போது எம்.ஜி.ஆர் ஜானகியிடம், என்ன ஜானு தொப்பி எனக்கு நன்றாக இருக்கிறதா என்று கேட்டதும், ஜானகி எம்.ஜி.ஆரிடம், உங்கள் தலையில் இந்த தொப்பியை வைத்தவர் ஒரு நாட்டின் முதலமைச்சர், அவரே உங்கள் அழகை புகழ்ந்துள்ளார். இதற்கு மேல் நான் வேறு சொல்ல வேண்டுமா, சரி இப்பொது நீங்கள் பொக்கெட்டில் வைத்திருக்கம் கறுப்பு கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொள்ளுங்கள், இன்னும் அழகாக இருப்பீர்கள் என்றதும் உடனே எம்.ஜி.ஆர் கறுப்புக் கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டார். தொப்பி, கறுப்புக் கண்ணாடியுடன் பார்த்த ஜானகி எம்.ஜி.ஆரிடம் மிகப் பெருமையுடன் அழகுக்கு மேல் அழகு, அத்தோடு ஒரு அந்தஸ்து இருக்கிறதுங்க. இனிமேல் நீங்கள் இப்படியே தொப்பி, கறுப்புக் கண்ணாடி அணிந்து செல்லுங்கள். அனைவரும் ஆச்சரியமாகப் பார்ப்பார்கள் என்றார்.அடுத்த நாள் காலையில் அடிமைப் பெண் படப்பிடிப்பிற்கு புதிய இடம் பார்ப்பதற்காக செல்லும் போது எம்.ஜி.ஆர் வேட்டி, ஜிப்பா, தொப்பி, கறுப்புக் கண்ணாடியுடன் சென்றார். எம்.ஜி.ஆரைப் பார்த்த இயக்குநர் கே.சங்கர், ஒளிப் பதிவாளர் இராமமூர்ததி, புகைப்பட கலைஞர் நாகராஜ ராவ், ஆர். எம்.வீரப்பன் ஆகியோர் ஆச்சரியப்பட்டனர். என்ன இப்படி திடீரென்று தொப்பி போட்டுக் கொண்டீங்க என்று இயக்குநர் சங்கர் கேட்க. கல கலவென்று சிரித்துக் கொண்டு எம்.ஜி.ஆர், எப்படி இருக்கு என்று கேட்டதும் ஆஹா! மிகவும் பிரம்மாதமாக இருக்கிறது. இதையே நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று நால்வரும் கூறினர்.

எம்.ஜி.ஆர் தொப்பி அணிவதற்கு முன்பு கறுப்புக் கண்ணாடி மட்டும் அணிந்து செல்லும் வழக்கம் இருந்தது. பின்பு கறுப்புக் கண்ணாடியுடன் தொப்பியும் அணிந்து எம்.ஜி.ஆர் மக்கள் முன்னிலையில் தோன்றினார். எம்.ஜி.ஆரின் அழகு கூடியது கண்டு மக்கள் சொக்கித்துப் போனார்கள். பார்த்தவர்கள் எல்லோரும் நீங்கள் நல்லா இருக்கிறீங்க என்று சொன்னதால் எம்.ஜி.ஆர் தொப்பி, கறுப்புக் கண்ணடி!யுடன் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டார். தொப்பி. கறுப்புக் கண்ணாடி அணிய ஆரம்பிக்கும் போது எம்.ஜி.ஆருக்கு வயது 51 ஆகும். எம்.ஜி.ஆரின் நெருங்கிய நண்பர்களும் , அரசியல் தலைவர்களும், தொப்பி ஏன் அணிய ஆரம்பித்தீர்கள் என்று அவர்கள் கேட்க, எம்.ஜி.ஆர் விளக்கம் சொல்வது வழக்கமாகிவிட்டது. தொப்பியும் பழையதாகிவிட்டது. எனவே தனக்கு உடை தைக்கும் எம்.ஜி.நாயுடுவிடம் தொப்பி பழையதாகிவிட்டது, புதிய தொப்பி செய்ய வேண்டும் என்று எம்.ஜி.ஆர் கூற. எம்.ஜி.நாயுடு திருவல்லிக்கேணி ஜாம்பஜாரில் உள்ள தொப்பி தைக்கும் முஸ்லிம் ஒருவரை அழைத்து வந்து எம்.ஜி.ஆருக்கு அறிமுகம் செய்தார். எம்.ஜி.ஆர் தொப்பி தைக்கும் முஸ்லிமிடம் பழைய தொப்பியைக் காட்டி இது போலவே நிறம். அமைப்பு இருக்கனும். ஆட்டுமுடியில் செய்ய வேண்டும். கொஞ்சம் கூட மாற்றம் இருக்கக் கூடாது. இந்தத் தொப்பியை எனக்குதான் செய்கிறீர்கள் என்று தயவுசெய்து யாருக்கும் தெரிவிக்கக் கூடாது. (தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# மஞ்சுளா விஜயகுமாரை மணந்த கதை

நடிகர் விஜயகுமார் புகழின் உச்சியில் இருந்தபோது நடிகை மஞ்சுளாவை திடீர் திருமணம் செய்து கொண்டார்.

விஜயகுமார், அப்போது மிகவும் `பிசி' யான நட்சத்திரம். இரவும் பகலுமாக படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். சில நாட்கள் வீட்டுக்கே போக முடியாத அளவுக்கு ஸ்டூடியோவிலேயே குட்டித் தூக்கம் போட்டு விட்டு, அடுத்த படப்பிடிப்புக்கு போய் விடுவார்.

சொந்த ஊரில் இருந்து மனைவி முத்துக்கண்ணுவை அழைத்து வந்து விட்டார். 1970ல் மகள் கவிதா, 1973ல் அடுத்த மகள் அனிதா, 1976ல் மகன் அருண்குமார் என மூன்று வாரிசுகள்.

1976ல் ஏ.பீம்சிங் டைரக்ஷனில் “உன்னிடம் மயங்குகிறேன்' படத்தில் நடித்த போதுதான் நடிகை மஞ்சுளாவையும் திருமணம் செய்து கொண்டார். அந்தப் படத்தில் நடிகை மஞ்சுளா விஜயகுமாரின் ஜோடியாக நடித்தார். படப்பிடிப்பு இடைவேளையில் அவர்கள் பொதுவான விஷயங்கள் பேசிக் கொண்டிருந்தபோதுதான் எதிர்பாராமல் நிகழ்ந்தது அந்த கல்யாணத் திருப்பம்.

அதுபற்றி விஜயகுமார் முன்பு கூறிய கருத்து,

“தயாரிப்பாளர் ராஜ்கண்ணுவின் சகோதரர்தான் “உன்னிடம் மயங்குகிறேன்” படத்தின் தயாரிப்பாளர். இவர் ஏற்கனவே “ஆசை 60 நாள்” படத்தை தயாரித்தவர். “உன்னிடம் மயங்குகிறேன்” படத்தின் கதாநாயகியாக மஞ்சுளாவை `புக்' செய்திருந்தார். நான் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தேன்.





மஞ்சுளா அப்போது தெலுங்கிலும் பிரபலமாக இருந்தார். தெலுங்கின் முன்னணி நடிகர்கள் நாகேஸ்வர ராவ், என்.டி.ராமராவ், சோபன்பாபு என மாற்றி மாற்றி நடித்துக் கொண்டிருந்தார். தமிழில் இந்தப் படத்தில் நடித்தபோது `லஞ்ச் பிரேக்'கில், சின்னச்சின்ன இடைவேளைகளில் ஏதாவது பேசிக்கொண்டிருப்போம். பேச்சு பொதுவாக இருக்கும். பல நேரங்களில் சுவராசியமாக எங்கள் உரையாடல் போய்க் கொண்டிருக்கும்.

இப்படித்தான் ஒரு நாள் பேசிக் கொண்டிருக்கும் போது, திடீரென மஞ்சுளாவிடம், “மஞ்சு! உங்களை நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். நீங்க என்ன சொல்கிறீங்க?” என்று கேட்டு விட்டேன்.

எதிர்பாராத அந்தக் கேள்வியில், மஞ்சுளாவும் திடுக்கிட்டுப் போனது அவரது முகபாவத்தில் தெரிந்தது.

பொதுவாகவே, உள்மனதின் ஆழத்தில் நம்மையும் அறியாமல் சில விஷயங்கள் புதையுண்டு போயிருக்கும். மஞ்சுளாவிடம் பேசிப்பழக ஆரம்பித்த இந்த சில நாட்களில் அவரைப் பற்றி எண்ணங்கள் காதலாக மாறியிருந்தன.

அதுதான் சட்டென வார்த்தைகளில் வெளிப்பட்டு விட்டது.

என் கேள்விக்கு பதிலை மஞ்சுளாவின் அதிர்ச்சி முகமே எனக்கு சொல்லிவிட்டது. அவர் பதிலாகக் கூட எதுவும் சொல்லவில்லை.

மறுநாள் எனக்கு மதியம் 2 மணிக்குத்தான் படப்பிடிப்பு. செட்டுக்கு வந்த போது அங்கே மஞ்சுளா ஒரு காட்சியில் நடித்துக் கொண்டிருந்தார். காட்சியை முடித்து விட்டு வந்தவரிடம் “நேற்று நான் சொன்னதை யோசித்தீர்களா? பதில் ஒன்றும் சொல்ல வில்லையே” என்றேன் மறுபடியும்.

இப்போது மஞ்சுளாவின் முகம் எனக்கு பதில் சொல்லத் தயங்கும் `தர்மசங்கடமான' நிலையை உணர்த்தியது. மெதுவாக என்னைப் பார்த்தவர், “யோசித்து சொல்கிறேன்” என்றார். பிறகு அவரே, “இந்த விஷயத்தில் நானாக எந்த முடிவும் எடுக்க முடியாது. அப்பா அம்மாவிடமும் கலந்து பேச வேண்டும்” என்றார்.

அடுத்தடுத்து வந்த இரண்டொரு நாட்களில் மஞ்சுளாவின் பெற்றோரை சந்தித்தேன். அவர்களோ, “எங்கள் பெண் விருப்பம் எதுவோ, அதுவே எங்கள் விருப்பமும். உங்கள் விருப்பம் பற்றி மஞ்சுளா எங்களிடம் சொன்னாள். மனதில் உள்ளதை வெளிப்படையாக பேசியது எங்களுக்கும் பிடித்திருக்கிறது. எனவே திருமண விஷயத்தில் எங்களுக்கும் சம்மதமே” என்றனர்.

திருமணத்தை எளிமையாக நடத்தினோம். திருமணத்துக்கு பிறகு படங்களில் நடிப்பதை படிப்படியாக குறைத்துக் கொண்டார் மஞ்சுளா.

இவ்வாறு விஜயகுமார் கூறினார்.

படங்களில் நடிப்பது தொடர்ந்தாலும், ஒரே மாதிரியான கதைகள் விஜயகுமாரை சற்று யோசிக்க வைத்தது. அதனால் வித்தியாசமான கதைகளைத் தேட ஆரம்பித்தார்.

இந்த சமயத்தில் வில்லனாக நடிக்கவும் அழைப்புக்கள் வந்தன. கதாநாயகனாக ரஜினி நடிப்பில் முன்னணியில் இருந்த நேரத்தில் அவரது படங்களில் கூட வில்லனாக? நடித்தார், விஜயகுமார்.

தயாரிப்பாளரும் நடிகருமான கே.பாலாஜியின் “சவால்”, “தியாகி” போன்ற படங்களிலும் வில்லனாக நடிப்பதைத் தொடர்ந்தார்.

இப்படி வில்லன் நடிப்பில் பிஸியாக இருந்த நேரத்தில் மதுரையில் நடந்த ஒரு விழாவுக்கு விஜயகுமார் போனார். அப்போது சில ரசிகர்கள் அவரிடம், “ஹீரோவாக நடித்து எங்களை சந்தோஷப்படுத்திய நீங்கள், இப்போது வில்லனாக நடிப்பது எங்களுக்கு வேதனை தருகிறது” என்று சொல்ல, ரசிகர்களின் ஒட்டுமொத்த உணர்வாக அதை எடுத்துக் கொண்டு நடிப்பதையே நிறுத்தி விட்டார், விஜயகுமார்.

மூன்றாண்டுகள் இந்த நிலை நீடித்தது. மறுபடியும் விஜயகுமார் நடிக்க ஆரம்பித்தது குணசித்ர வேடங்களில்.

அதற்கான வாய்ப்பு, `ஜீ.வி.' பட நிறுவனம் மூலம் வந்தது.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# சாய்ந்தமருதில் இடம்பெற்ற கலைக் கதம்பம்







கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அதிகார சபை ஆகியன இணைந்து வழங்கிய கலைஞர்களின் கலைக் கதம்பம் நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் (24) சிறப்பாக இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீக்கா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சுரேஷ் குமார், முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி எம்.ஐ. ஜப்பார், முன்னாள் அதிபர் எம்.எம். இஸ்மாயில், எம்.சீ.ஏ.மாஹிர், நிந்தவூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அஷ்ரப், சிரேஷ்ட கவிஞர் கே.எம்.ஏ. அஸீஸ், முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கவிதாயினி சுஹைல் அஸீஸ் மற்றும் சாய்ந்தமருதில் செயற்படுகின்ற பிரதான கலைமன்றங்களான முஹம்மதிய்யா கலை மன்றம், தக்வா கோலாட்டக் குழு, மருதம் கலைக்கூடல் மன்றம், நியூ வெண்ணிலா இசைக்குழு ஆகிய கலை மன்றங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட மூத்த கலைஞர்கள், மன்ற உறுப்பினர்கள், பொல்லடிக் கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

இதன்போது மூத்த கலைஞர்களின் திறமைகள் மேடையேற்றப்பட்டு, நான்கு கலைமன்றங்களுக்கும் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி அதிதிகளால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் முஹம்மதிய்யா கலைமன்றம் மற்றும் தக்வா கோலாட்டக்குழு மாணவர்களின் கோலாட்டம் எனப்படும் பொல்லடி நிகழ்வு மேடையில் அரங்கேற்றப்பட்டதோடு, அதில் பங்குபற்றிய அனைத்து மாணவர்கள் மற்றும் அண்ணாவிமார்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மருதம் கலைக்கூடல் மன்றக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகம் சபையோரால் பாராட்டி சிலாகித்து பேசப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

எம்.எஸ்.எம்.ஸாகிர்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.